# ரூத்தின் வாழ்க்கை

எச். எல். ஹாய்கூப்



## இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய *7* ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் *200* ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக *(E-Books)* **இலவசமாக (மத்தேயு *10:8*)** உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் *(Download)* செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: *www.WordOfGod.in*

*95* சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் *(E-Book)* வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய *WhatsApp* எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ *(Email)* எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணையதளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

*WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599*

*Email: wordofgod@wordofgod.in*

## *Wishing you in the mighty name of Jesus Christ*

*We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely **free of cost (Matt 10:8)** forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.*

*95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.*

*WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599*

*Email: wordofgod@wordofgod.in*

# ரூத்தின் புத்தகம்

## (ஓர் ஆய்வு)

எழுதினவர் : H. L. Heijkoop

விசுவாசிகள் ஐக்கியம்
ரூம் எண் A-20, மூன்றாம் மாடி
சிவசக்தி அப்பார்ட்மெண்ட்
யசோதாநகர், தானா (மஹாராஷ்டிரா)

**WORDS OF LIFE TRUST**
P.O. Box: 26744, Khar
Mumbai 400 052

Copyright © Tamil Edition : Ronny Fernandes 1998

**THE BOOK OF RUTH**
Originally written in English by H.L. Heijkoop
1st Tamil Edition in 1998 : No. of copies 3000
Basse-Druck GmbH, D-5800 Hagen 7 (Haspe)

Printed and Published by Mr. Ronny Fernandes
WORDS OF LIFE TRUST
P.O. Box: 26744, Khar, Mumbai 400 052, India
Printed by Mr. Alan Alphonso at
ALPHONSO PRINTERS, Sion (E), Mumbai 400 022

Copies available at:

**CHRISTIAN MEETING HALL**
Room No.10, Madura Nivas, 3rd Floor
Kishan Nagar No.3
Road No.16, Wagle Estate
Thane 400 604, (Maharashtra)

# உள்ளடக்கம்

பேஜ் எண்


| | | |
|---|---|---|
| முன்னுரை | | 1 |
| அத்தியாயம் 1 | முதல் வாக்கியம் | 3 |
| அத்தியாயம் 2 | முதல் வசனத்தின் முக்கியத்துவம் | 44 |
| அத்தியாயம் 3 | வாற்கோதுமை, கோதுமை திராட்சைக் குலைகள் அறுவடைகள் | 92 |
| அத்தியாயம் 4 | பட்டண வாசல்களும், பத்து மூப்பர்களும் | 126 |

# முன்னுரை

பெண்மணிகளின் பெயரைத் தாங்கிய இரு நூல்கள் வேதாகமத்தில் உண்டு. அவை ரூத், எஸ்தர் என்பனவாகும். ரூத் ஒரு மோவாபிய ஸ்திரி. ஆனால் எஸ்தரோ ஒரு யூதப்பெண்மணி. இருவரும் அவரது சூழ்நிலைகளில் தேவனுக்கு உண்மையுள்ளவர்களாயிருந்து தங்களது பக்தியையும், சமர்ப்பணத்தையும் வெளிப்படுத்தினார்.

ரூத்தின் புஸ்தகத்திலே 'ரூத்' எனும் பெயர் பன்னிரண்டு முறை வருகிறது. அது மட்டுமின்றி வேதாகமத்தின் மிக முக்கியமான பகுதியாகிய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வம்ச வரலாற்றில் ரூத்தின் பெயர் இடம் பெற்றுள்ளது. (மத்தேயு *1:5*).

பரிசுத்த ஆவியானவர் குடும்பத்தின் சூழ்நிலைகளை தொகுத்தெடுத்து வழங்கும் போது நமது மனதையும் நினைவையும் எவ்வாறு சத்தியத்திற்கு நேராக நடத்துகிறார் என்பதற்கு ரூத்தின் புத்தகம் ஒரு சான்றாகும். இங்கே ஆவியானவர் நமது கவனத்தை மீட்பவராகிய யேசு கிறிஸ்துவிற்கு நேராக திருப்புகிறார். கோயெல் (Goel) எனும் எபிரேய வார்த்தை இப்புத்தகத்தில் ஒன்பது முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. இப்பதம் ஏசாயா தீர்க்கதரிசியின் புத்தகத்திலும் வேதாகமத்திலுள்ள இதர சில புத்தகங்களிலும் பயன்படுத்தப்பட்டிருப்பதைக் காணலாம். உறவின் முறைக்கு ஏற்றபடி இப்பதத்தை 'இனத்தான்' 'வம்சத்தான்' 'உறவின் முறையான்' 'சுதந்திரவாளி' 'மீட்டுக்கொள்பவன்' என்று பலவிதங்களில் மொழி பெயர்க்கலாம். தேவனுடைய மனிதர் ஒருவர் குறிப்பிட்டபடி இப்புத்தகத்தை ஆராயும் ஒரு ஆய்வு தேவை!

இச்சிறு நூல் நியாதிபதிகளின் புத்தகத்திற்கும் சாமுவேலுக்கும் இடையில் அமைந்திருப்பதும் முக்கியத்துவம் வாய்ந்தது தான். கானானிலும் அதைச் சுற்றிலுமுள்ள நாடுகளிலும் பேய் வணக்கமும் விக்கிரக ஆராதனையும் நிறைந்திருந்தன. அவர்களுக்கிடையே வாழ்ந்த இஸ்ரவேலர் எவ்வாறு ஆவிக்குரிய வாழ்வில் தோல்வியடைந்து தேவனுடைய ஜனங்களாக வாழாமல்

சாட்சியிழந்து விழுந்து போனார்கள் என்று நியாதிபதிகளின் புத்தகம் விளக்கிக் கூறுகிறது. அவர்களுடைய சத்துருக்கள் அவர்களை மேற்கொள்ளவும் தேவன் அனுமதித்திருந்தார். (நியாயாதிபதிகள் 2:6-23) ஆனால் தேவன் கிருபை நிறைந்தவராக அடிக்கடி நியாயாதிபதிகளை எழுப்பி அவர்களது சத்துருக்களின் கைக்கு அவர்களை நீங்கலாக்கினார். ஆனால் ஒரு நியாயாதிபதியாலும் அவர்களுக்கு தேவன் அருளிய முழுமையான சுதந்திரத்தைத்தர இயலவில்லை. நியாயாதிபதிகளின் சில செயல்களும் சூழ்நிலைகளும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மாதிரியாக அமைந்திருப்பினும் கிதியோன், சிம்சோன் போன்றவர்கள் தங்கள் பாவங்களின் மூலம் தங்களை வழி விலகப்பண்ணினர்.

ரூத்தின் புஸ்தகத்திலுள்ள ஆரம்பவாக்கியமே அதை நியாயாதிபதிகளின் புத்தகத்தோடு தொடர்பு படுத்துகிறது. அவ்வாக்கியம் "நியாயாதிபதிகள் நியாயம் விசாரித்துவரும் நாட்களில்... எந்பதாகும்.

எப்படி இருப்பினும் இப்புத்தகத்தில் முற்றிலும் சிறந்த மீட்பனாக போவாஸை காண்கிறோம். போவாஸ் எனும் பதத்திற்கு "அவரில் பலம் உண்டு" (என்னைப் பலப்படுத்துகிறவர்) என்று பொருள். அவன் மிகுந்த ஆஸ்திகாரன். (ரூத். 2:1) உரிமையில்லாத தேவனுக்குச் சத்துருவான மோவாபிய ஸ்திரியாகிய ரூத்தை முழுமையாக அனுபவிக்கத்தக்க ''வித்தை'' எழும்பப் பண்ணினவனும் அவனே. இங்கே நமது கவனம் தாவீதுக்கு நேராகத்திருத்தப் படுகிறது. ராஜ்யத்தை தனது வல்லமையால் நிலை நிறுத்தி ஜனங்களுக்கு இளைப்பாறுதல் தந்து முழுமையான சுதந்திரத்தை அவர்கள் அனுபவிக்கும்படி செய்யப்போகிறவன் அவனல்லவா? இவ்வுண்மை நம்மை சாமுவேலின் புத்தகத்திற்கு நேராக நடத்தி விடுகிறது!

மேலும் ரூத்தின் புத்தகம் வாக்குத் தத்த தேசத்தை விட்டுப்போகும், எலிமெலேக்குடன் தொடங்கி தேவனுடைய இருதயத்திற்கு ஏற்றவனாகிய தாவீதோடு முடிவடைகிறது. மெய்யாகவே இது நியாயாதிபதிகளின் புத்தகத்தையும் சாமுவேலின் புத்தகத்தையும் இணைக்கும் கண்ணியாகும்.

நியாயாதிபதிகள் விழுந்துபோய் தேசத்தின் ஆவிக்குரிய நிலைமை கேடுற்ற போதிலும் தேவன் அவர்கள் அறியாத விதத்தில் கிருபையால் தமது ஆலோசனைகளைச் செயல்படுத்தும் விதத்தை இது காட்டுகிறது ஆபிரகாமின் சந்ததியின் மூலம் ஜாதிகளுக்கு

ஆசீர்வாதத்தை நல்கும்படியாகவே அப்படிச்செய்தார்.

சந்தேகத்திற்கிடமின்றி இந்நூல்களில் இஸ்ரவேல் சரித்திரத்தின் ஒரு மாதிரியைக் காண்கிறோம். நியாயாதிபதிகளின் புத்தகத்தில் நாம் அழிவின் முழுமையையும், ஆவிக்குரிய வாழ்வின் வீழ்ச்சியையும் காணலாம். ''அந்நாட்களிலே இஸ்ரவேலில் ராஜா இல்லை அவனவன் தன் தன் பார்வைக்குச் சரிப்போனபடி செய்து வந்தான்'' (நியாயாதிபதிகள் 21:25) அவர்கள் உன்னைத் தள்ளவில்லை. நான் அவர்களை ஆளாதபடிக்கு என்னைத்தான் தள்ளினார்கள் (1 சாமுவேல் 8:7).

ரூத்தின் புத்தகத்தில் இஸ்ரவேலில் 'மீந்திருக்கிறவர்களை' மீட்டு அவர்களை ஆதிநிலைக்குக் கொண்டுவரும் மீட்பராகிய கிறிஸ்துவைக் காண்கிறோம். ரூத் 'மீந்திருக்கிறவர்களுக்கு' மாதிரியாக இருக்கிறாள். தேவனுடைய சிட்சிக்கும் கரத்தின் கீழில் சகலவற்றையும் இழந்து எல்லாராலும் கைவிடப்பட்ட தேசத்தோடு (ரூத்) இணைந்து அவள் இறுதியில் போவாஸின் மனைவியாகினாள்.

ஆனால் இஸ்ரவேலுக்கு சம்பவித்தது அனைத்தும் நமது படிப்பினைக்காக அல்லவா? உலகத்தின் முடிவுகாலத்தில் உள்ள நமக்கு எச்சரிப்புண்டாகும் படி இவைகளெல்லாம் எழுதப்பட்டும் இருக்கிறதல்லவா? (1 கொரிந்தியர் 10:11) இஸ்ரவேல் தேசத்தின் அழிவிற்கு காரணமாயிருந்த அதே காரியங்கள் இன்று சபையிலும் வெளிப்படவில்லையா? அன்று செய்தது போலவே தேவன் இன்றும் கிருபையாக சபையில் செயல்படவில்லையா? நியாயதிபதிகளின் புத்தகத்திலும், 1 சாமுவேல் முதல் ஏழு அதிகாரங்களிலும் கூறப்பட்டுள்ள அதே காரியங்களை வெளிப்படுத்தினவிசேஷம் 2 ஆம் 3ஆம் அதிகாரங்களில் ஆவியானவர் வெளிப்படுத்துவதை நமது உள்ளம் பகுத்தறிய மறுக்கிறதா?

ரூத்தின் புத்தகத்திலுள்ள காரியங்கள் பிலதெல்பியா சபைக்கு இணையாக இல்லையா? (வெளிப்பாடு 3:7-14). இக்குறிப்புகளின் அடிப்படையில் ரூத்தின் புத்தகத்தின் மூலமாக தேவன் நம்மோடு பேசுவாராக! தேவன் நமக்கென்று நியமித்திருக்கும் நிலைகளையும், பதவிகளையும் விட்டு விலகும் போது உண்டாகும் விளைவுகளையும் ஆபத்துகளையும் குறித்து நம் மனச்சாட்சியோடு பேசுவாராக! நமது ''போவாஸின்'' எல்லையற்ற நற்பண்புகளையும் கைவிடாத அன்பையும் குறித்து நாம் தியானிக்கும்போது இப்புத்தகம் நம் உள்ளத்தோடும் பேசட்டும்.

# அத்தியாயம் 1

## முதல் வாக்கியம்

"நியாயாதிபதிகள் நியாயம் விசாரித்து வரும்நாட்களில்" ரூத்தின் சரித்திரம் இடம் பெற்ற காலத்தைக் குறித்து இச்சொற்களுடன் பேசுகிறது. நியாயாதிபதிகளின் காலம் நீண்ட ஒரு காலமாகும். யோசுவா மரித்த பிறகு இக்காலம் தொடங்குகிறது (நியாயாதிபதிகள் 2:6-23). அது இஸ்ரவேல் மக்கள் தங்களுக்கென்று ஒரு ராஜா வேண்டும் என்று அடம் பிடிக்கும் காலமாகிய சாமுவேலின் இறுதி நாட்கள் வரை நீண்டு நின்றது. (1 சாமுவேல் 8) சரியான கால அளவை நாம் வரையறுக்க முடியா விட்டாலும் அந்நாட்களில் இஸ்ரவேல் மக்களின் சூழ்நிலை எப்படிப்பட்டதாக இருந்தது என்று நாம் எளிதாக அறிந்து கொள்ளலாம்.

பின் மாற்றம்: வரலாற்று வரிசைப்படி நாம் நியாயாதிபதிகளின் புத்தகத்தைப் படிப்போமேயாயின் அது 16-ஆம் அத்தியாயத்தோடு முடிவடைந்து விடுகிறது. 17 முதல் 21 வரையுள்ள அதிகாரங்களில் இரு நிகழ்ச்சிகள் வருணிக்கப்பட்டுள்ளன. விபச்சாரமும், விக்கிரக ஆராதனையும் இஸ்ரவேலை ஆட்டிப்படைப்பதை அவை எடுத்துக்காட்டுகின்றன.

இச்சூழ்நிலை, நியாயாதிபதிகளின் இறுதிக்காலத்தில் அல்ல, யோசுவாவும், மூப்பர்களும் மரித்தவுடனே நிலவத்தொடங்குகிறது. எதிரிகளால் நெருக்கப்பட்டபோதல்ல அவர்கள் கேடுபாடுள் ளவர்களானது, என எடுத்துக்காட்ட தேவன் மறக்கவில்லை. ஆவிக் குரிய வீழ்ச்சி சாதாரண மக்களுக்கிடையில் மட்டுமன்றி, சர்வ வியாபகமான ஒன்றாக இருந்தது. நியாயாதிபதிகள் 17, 18 ஆம் அதிகாரங்களில் குறிப்பிடப்பட்டுள்ள லேவியன் மோசேயின் பேரனாகும். (மனாசே என்பதற்குப் பதிலாக மோசே என வாசிக்கவும்) LXX & Co. மனாசே எனக்குறிப்பிடும்போது ஜெரோமைத் தொடர்ந்து வரும் யூதவேத அறிஞர்கள் இவ்வசனத்திலுள்ள பெயர்ச்சொல் கையெழுத்துப்பிரதிகளை நகல்

எடுக்கும்போது மாற்றப்பட்டு விட்டதாகக்கருத்து தெரிவிக்கின்றனர் (NKJV மொழிப்பெயர்ப்பு அடிக்குறிப்பு காண்க பக்கம் 24) தாண் கோத்திரத்தில் விக்கிரக ஆராதனையை அவன் அறிமுகம் செய்து வைக்கிறான். ஆறு நூற்றாண்டுகளுக்கும் பிறகு பத்து கோத்திரங்களும் சிறையிருப்புக்குப்போகும் வரை விக்கிரக ஆராதனை நிலை நின்றது.

நியாயாதிபதிகள் 19 முதல் 21ஆம் அதிகாரங்களில் கூறப்பட்டிருக்கும் சம்பவம் ஆரோனின் பேரனாகிய பினெகாஸ் பிரதான ஆசாரியனாக இருந்தபோது சம்பவித்தது. வனாந்தரத்தில் கர்த்தருக்காக அவன் காட்டிய வைராக்கியம் இப்போது எங்கே? (எண்ணாகமம் 25:1-13) இப்பெயர்களோடு இணைக்கப்பட்டுள்ள சம்பவங்கள் நியாயாதிபதிகளின் காலத்தின் தொடக்கத்தில் சம்பவித்தவையாகும். நியாயாதிபதிகளின் புத்தகத்தின் இறுதி ஐந்து அத்தியாயங்களில் நான்குமுறை "அந்நாட்களிலே இஸ்ரவேலிலே ராஜா இல்லை" எனக்குறிப்பிடப்பட்டுள்ளது. (நியாயாதிபதிகள் 17:6, 18:1, 19:1, 21:25) மேலும் இருமுறை "அவனவன் தன்தன் பார்வைக்கு சரிபோனபடி செய்தான்" என்றும் எழுதப்பட்டுள்ளது.

## தேவனுடைய ஆளுகையும் சிட்சையும்

அந்நாட்களிலே பஞ்சமுண்டாயிற்று என வாசிக்கும்போது நமக்கு வியப்பு மேலிடவில்லை. பஞ்சம்! அது சாதாரணமான ஒரு நிகழ்ச்சியா? ஏன்? தேவன் அவர்களுக்குத்தந்த தேசம் "பாலும் தேனும் ஓடும்" தேசமல்லவா "அது தாழ்ச்சியில்லாமல் அப்பம் புசிக்கத்தக்க தேசமல்லவா? அது வானத்தின் மழைத்தண்ணீரைக் குடிக்கும்" தேசமல்லவா? "வருஷத்தின் துவக்கம் முதல் வருஷத்தின் முடிவு மட்டும் எப்பொழுதும் தேவனாகிய கர்த்தரின் கண்கள் அதின் மேல் வைக்கப்பட்டிருக்குமல்லவா? (உபாகமம் 6:3, 8:9, 11:11-12) ஆனால் தேவன் அதே அதிகாரத்திலும் வேறுசில அதிகாரங்களிலும் இஸ்ரவேல் மக்கள் அவரை விட்டு விலகுவார்களேயாயின் அவர் "மழை பெய்யாமற் போகவும் தே"சம் தன் பலனைக்கொடாமலிருக்கவும் வானத்தை அடைத்துப் போடுவார். என்றும் கூறியிருக்கிறார். (உபாகமம் 11:17) அந்நிய தேவர்களை ஆராதிக்கும்படி தன்னை விட்டு விலகியவர்களை அவர் தம்முடைய நீதியுள்ள ஆட்சியின்படி பஞ்சத்தை அனுப்பி சிட்சியாமலிருப்பாரா? அவர்களுடைய மனச்சாட்சியை உயிர்ப்பித்து அவர்கள் தம்மண்டைக்கு திரும்பும்படியே அவ்வாறு செய்தார்.

அந்நாட்களிலே யூதாவிலுள்ள பெத்லகேமிலே ஒரு குடும்பம் வாழ்ந்து வந்தது. அவர்கள் எப்பிராத்தியர் எலிமலேக்கும் நவோமியும் அவர்களுடைய மக்களாகிய மக்லோனும், கிலியோனுமே. அக்குடும்பத்தினர் இந்நால்வருடைய பெயரும் வேதாகமத்தில் வேறு எங்குமே குறிப்பிடப்படவில்லை.

## பெயரும் பொருளும்

வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பெயர்களுக்கும் அவற்றின்பொருள்களுக்கும் முக்கியத்துவமும், தெய்வீக நோக்கமும் உண்டென்று எபிரேயர் 7 ஆம் அதிகாரத்திலிருந்து அறிந்து கொள்கிறோம். "பெத்லகேம் என்றால் அப்பத்தின் வீடு" என்றும் "யூதா" என்றால் "துதி" அல்லது அவர் துதிக்கப்படுவாராக என்றும் பொருள்படும். அவ்வாறே 'எலிமெலேக்கு' என்றால் "என் தேவன் என் ராஜர் என்றும் நகோமி என்றால் 'என் பிரியமே' அல்லது 'என் மகிழ்ச்சி' என்றும் பொருள்படும்.

## பெத்லகேம் விசுவாசிகளின் ஐக்கியம்

தேவன் தமது ஜனங்களுக்கு அருளிய ஆசீர்வாதங்களை இப்பெயர்கள் வெளிப்படுத்தவில்லையா? இஸ்ரவேலுக்கும், சபையாகிய சரீரத்திற்கும் அருளிய ஆசீர்வாதங்கள் இவைகளல்லவா? ஒரு இடமுண்டு. அங்கே அப்பத்தின் திரட்சி உண்டு. அவரது பண்டகசாலையும் அங்கேதான் (மீகா 5:2 யோவான் 6:32-58) அது அவரை ஆராதிக்கும் இடமும் கூட! துதியையும் கனத்தையும், மகிமையையும் அவருக்கு செலுத்த வேண்டிய இடமும் அதுவே அங்குத்திரளான கனிகளும் உண்டு. இஸ்ரவேல் தேவனை ராஜாவாக இராதபடி தள்ளிவிட்ட அந்நாட்களிலே 1 (சாமுவேல் 8:7) தேவன் என்னுடைய ராஜா என்று தன் பெயரின் மூலமாக எலிமெலேக்கு அறிக்கை செய்து கொண்டிருக்கிறான் அங்கே தேவனுடைய மனமகிழ்ச்சி அல்லது தேவனுக்குப்பிரியமானவள் என்று தன் பெயரின் மூலமாக நகோமியும் அறிக்கை பண்ணிக்கொண்டிருக்கிறாள்.

எவ்வளவு அற்புதமான இடம் அது என்று உங்களால் புரிந்து கொள்ள முடிகிறதா? அங்கே ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து தம்முடையவர்களைத்தம்மைச் சுற்றிலும் கூட்டிச்சேர்க்கிறார் (மத்தேயு 18.20) நம்முடைய ஆத்துமாக்கள் அவரில் புசித்துத் திருப்தியடையும்படியான அப்பத்தின் வீடு அங்கேயுண்டு. அவரை

அங்கே ஆராதித்து நாம் அவருக்குத் துதியையும் நன்றியையும் ஏறெடுக்கலாம். தன்னைக் கர்த்தர் என்று அறிக்கை பண்ணு கிறவர்கள் நடுவிலே அவர் இருக்கிறார் (ரோமர் 10:9) முழு மனதோடு அவ்வாறு கூடுகிறவர்கள் அவருக்கு எப்படிப்பட்டவர்கள் தெரியுமா? அவர்களே அவருக்குப் பிரியமானவர்கள்! என் பிரியமே? என்றழைக்கப்படுகிறவர்கள் அவர்களே!!

ஆனால் நாம் உள்ளத்திலே உண்மையுள்ளவர்களாக இருக்க வேண்டுமென்று தேவன் விரும்புகிறார். ஆசீர்வதிக்கப்பட்ட அவ்விடத்தில் நாம் கூடி அவரைப்பாடி துதித்து நன்றி செலுத்தும்போது நம் இருதயங்களின் நிலையையே அவர் நோக்கிப் பார்க்கிறார். உதட்டின் சொற்களுக்கு உகந்ததாக உள்ளம் இருக்கிறதா என்றே அவர் ஆராய்கிறார். மாறாக இருப்பின் அவர் பஞ்சத்தை அனுப்பி நம்மை நாமே நியாயம் தீர்த்து அவரோடு நெருங்கிச் சேரும்படி செய்கிறார்.

நமது வாழ்வில் நாம் இதை அனுபவித்திருக்கிறோம் இல்லையா? அப்பத்தின் வீடாகிய பெத்லகேமில் வசிப்பவர்கள் திருப்தியற்றுப் பசியடைந்து இருப்பார்களாயின் அது சாதாரணமான ஒரு நிகழ்ச்சியா? அவரைச் சுற்றிலும் கூடிவரும் விசுவாசிகள் ஆவிக்குரிய வாழ்வில் நலிந்திருப்பதற்கான காரணத்தை அறிய நாம் முற்பட்டிருக்கிறோமா? நமது இதயம் அவரைவிட்டு விலகினபடியால் அவர் அளிக்கும் பரலோக அப்பம் நம்மைப்பரவசப்படுத்தவில்லை. இல்லையேல் நாமனைவரும் அவரைவிட்டு விலகினபடியாலே அவர் ”அப்பம் எனும் ஆதரவுகோலை முறித்துப்“ போட்டிருக்கிறார் அவரது ஆளுகை நீதியுள்ளதல்லவா?

## தன் பிழைகளை உணருகிறவன் யார்?

தேவன் என்னுடைய ராஜா எனும் பெயரைத்தரித்துக்கொண்டு மனம்போன போக்கின்படி நடந்த எலிமெலேக்கைப்போல நாம் நடந்து கொள்வதால் அப்படியாயிற்றோ? அவன் அப்பக்குறைவு உண்டானபோது அப்பத்தின் வீட்டை விட்டே ஓடி விடுகிறான். ஏன் அப்பக்குறைவு உண்டாயிற்று என்று எண்ணிப்பார்க்கவில்லை. சோதனைவரும்போது அவனது அறிக்கை அர்த்தமற்றதாகி விடுகிறது! தேவசித்தத்தை அறிந்துகொள்ளாமல், சுயசித்தத்தின்படி சுவையான உணவை நாடி ஓடி விடுகிறான்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து எங்களது எஜமான், கர்த்தர் என்று அறிக்கைப்பண்ணுவதும் அவரது நாமத்தில்தான் நாங்கள் கூடி வருகிறோம். அவரே எங்கள் ஐக்கியத்தின் அதிபதி, என்றெல்லாம் பெருமை பாராட்டுவதும் எளிது. ஆயினும் அது உண்மையா அவரை நம் தனிப்பட்ட வாழ்விலும் சபையாககூடி வரும் சமயங்களிலும் கர்த்தராக எஜமானாக ராஜாவாக வைத்திருக்கிறோமா? "ஆண்டவரே நான் என்ன செய்யச் சித்தமாயிருக்கிறீர்" என்று நாம் அவரோடு ஆலோசனைக் கேட்கிறோமா? அவர் சொல்லுவதை மட்டுமே நாம் செய்கிறோமா? நம் உள்ளத்தில் உண்மையும் சத்தியமும் உண்டா? என்றே அவர் பார்க்கிறார்.

எலிமெலேக்கின் வாழ்வில் ஏதோ ஒரு குறை உண்டென்று தேவன் கண்டிருந்தார். ஆவிக்குரிய முதிர்ச்சி உள்ள இஸ்ரவேலரும் கண்டிருப்பார்கள். தன் மக்களுக்கு மக்லோன் வியாதி என்றும் கிலியோன் இளைத்துப் போகிறவன் என்றும் அவன் ஏன் பேரிடவேண்டும்? அவனுடைய விசுவாசம் செத்த விசுவாசமாகும்.

நமது குடும்பச்சூழ்நிலைகளிலும் இவ்வாறு தவறுகள் ஏற்பட வாய்ப்புண்டு. பிள்ளைகளை தங்கள் விருப்பப்படி போக அனுமதிக்கும்போது பொதுவான வீழ்ச்சி தொடங்குகிறது. அதற்கு முதற்காரணம் பெற்றோர்களே! எண்ணாகமம் 11:10 ஐ இத்துடன் ஒப்பிட்டுப்பாருங்கள். அந்தந்த வம்சங்களை (குடும்பங்களை) சேர்ந்த ஜனங்கள் தங்கள் தங்கள் கூடார வாசலில் நின்று அழுகிறதை மோசே கேட்டான்.

### சில சாக்குப் போக்குகள்

தேவன் சோதித்த போது எலிமெலேக்கு ஆராதனையும் செழிப்பும் நிறைந்த அப்பத்தின் வீட்டை விட்டு ஓடுகிறான். தேவன் என் ராஜா எனும் பெயருக்கிணங்க அவன் செயல்படவில்லை.

ஒருவேளை அவன் பின்வருமாறு சாக்குபோக்குகளை கூறியிருக்கலாம், மோசேயின் பேரனான யூதாவிலுள்ள பெத்லெகேம் ஊரானாகிய லேவியன் பெத்லெகேமை விட்டுப்போய் விட்டானே! (நியாயாதிபதிகள் 17:8) மோசேயின் பேரனும் லேவியனுமாகிய அவனே அப்படிச்செய்தானே? விசுவாசியின் தகப்பனாகிய ஆபிரகாம் எகிப்துக்குப் போகவில்லையா?" (ஆதியாகமம் 12:10).

ஆனால் லோத்துக்கும் ஆபிரகாமிற்கும் ஏற்பட்ட ஆபத்துக்களைக்குறித்து அவன் கூறவில்லை பாருங்கள். அவன் எகிப்திற்கல்ல, பெத்லகேமிலிருந்து 20 அல்லது 25 மைல் தூரத்திலிருக்கும் மோவாபின் வயல்களுக்கல்லவா போகிறான்! மோவாப் இஸ்ரவேலின் தூரத்து உறவினன் அல்லவா! மோவாபின் வயல்கள் ஆசீர்வதிக்கப்பட்டவைகளல்லவா? மோவாபின் வயல் பகுதிகளில் இஸ்ரவேலர் கூடாரத்திலிருந்த போதல்லவா பிலேயாம் அவர்களைக்குறித்து ஆவியால் நிறைந்தவனாய் ஆசீர்வாத மொழிகளைக்கூறினான். யாக்கோபே உன் கூடாரங்களும் இஸ்ரவேலே உன் வாசஸ்தலங்களும் எவ்வளவு அழகானவைகள்! அவைகள் பரவிப்போகிற ஆறுகளைப்போலவும் நதியோரத்திலுள்ள தோட்டங்களைப்போலவும் கர்த்தர் நாட்டின சந்தன மரங்களைப்போலவும், தண்ணீர் அருகேயுள்ள கேதுரு விருட்சங்களைப்போலவும் இருக்கிறது. அவர்களுடைய தேவனாகிய கர்த்தர் அவர்களோடே இருக்கிறார் ராஜாவின் ஜெயகெம்பீரம் அவர்களுக்குள்ளே இருக்கிறது (எண்ணாகமம் 24:5.6 23:21). எண்ணாகமத்தின் இறுதிப்பகுதியிலுள்ள உபதேசங்களையும் உபாகமம் முழுவதையும் மோசே மோவாபின் வயல்பகுதியிலிருந்தல்லவா உபதேசித்தார்! பெத்லகேமிலிருந்து மோவாவிற்கு போவது வேறொரு நன்மையைப் பெற்றுக்கொள்வதற்காக அல்ல. பஞ்சம் மாறும் வரை மோவாபியரோடு கலக்காமல் சில நாட்கள் தங்கப்போகிறான் அவ்வளவே! பிறகு பெத்லகேமிற்கு திரும்பி வந்து விடலாம்!

### மோவாவின் மெய்யான நிலைமை

மேற்கூறிய சாக்கு போக்குகள் உண்மையாக இருக்கலாம். தேவசித்தத்தை அறிந்திருந்தால் அவன் பெத்லகேமை விட்டு போகவேமாட்டான். என்றென்றைக்கும் அவர்கள் தங்கும்படியாக அத்தேசத்தை தேவன் அவர்களுக்கு தந்ததை அவன் மறந்து விட்டான்.

மோவாப் பெத்லகேமிற்கு அருகே இருந்தாலும் இவ்விரண்டிற்குமிடையே யோர்தான் நதி இருந்தது. கானானிலுள்ள பெத்லெகேமிற்கு வர யோர்தானைக்கடக்க வேண்டும் கிறிஸ்துவோடு மரித்து உயிர்த்தெழுந்ததற்கான அடையாளம் அது! ஆனால் யோர்தானைக்கடக்காமலேயே மோவாபிற்கு போகமுடியும். ஜென்ம சுபாவமுள்ள மனிதன் தான் இருக்கும் வண்ணமாகவே மோவாபிற்குள் போக முடியும். மோவாபின் தாயும் தகப்பனும்

இஸ்ரவேலுக்கு உறவினர்கள் தாம். ஆனால் குடி வெறியும் தவறான உறவும் அவனது பிறப்பிற்கு காரணமாயின. (ஆதியாகமம் 19:30-38).

மோவாபின் தெய்வமாகிய கேமோஷ் (எரேமியா 48:13) யெகோவா அல்ல. மோவாப் என்றால் "பிதாவிற்கு உரியவன் என்று பொருள் ஆனால் எந்த பிதாவிற்கு உரியவன். தேவனாகிய கர்த்தர் அவனை வெறுத்தபடியால் மோவாபியன் சபைக்கு உட்படலாகாது என்று கூறியிருந்தார் (உபாகமம் 23:3-8) ஒருவேளை ஒரு இஸ்ரவேலனை மோவாபியர் வரவேற்றாலும் அவர்கள் தேவனுடைய ஜனங்களின் மிகப்பெரிய விரோதிகளே! அவர்கள் இஸ்ரவேலரை விக்கிரக ஆராதனை, விபச்சாரம், குறிசொல்லுதல், யுத்தம் இவைகள் மூலம் அழிக்க முற்படவில்லையா? (எண்ணாகமம் 22.25 நியாயாதிபதிகள் 3:12.14) சங்கீதம் 83ல் மோவாப் பின் வருமாறு கூறும் நாடுகளில் ஒன்றாக உள்ளது. அவர்கள் இனி ஒரு ஜாதியாக இராமலும் இஸ்ரவேலின் பேர் இனி நினைக்கப்படாமலும் போவதற்காக அவர்களை அதம்பண்ணுவோம் வாருங்கள் (வசனம் 4) இன்றைக்கும் அரபுநாடுகள் அவ்விதமாக அல்லவா கூறிக்கொண்டு நடக்கின்றன?

எனவே தேவன் "நீ உன் ஆயுள்நாட்கள் உள்ளளவும் அவர்கள் சமாதானத்தையும் நன்மையையும் தேடாதே" என்றார் (உபாகமம் 23:6) மோவாப் ஆசீர்வதிக்கப்பட்ட இடமாக ஒரு காலத்தில் இருந்தது உண்மைதான். ஆனால் தேவன் தமது ஜனங்களுக்கென்று வைத்திருந்த சுதந்திர வீதத்திற்குள் இஸ்ரவேலரைக்கொண்டுவந்து விட்டார் இனி பழைய காரியங்களுக்கு திரும்பிப்போவது தேவனுடைய அன்பையும் கிருபையையும் பரிகாசிப்பது போலாகும் ஆகையால் கிறிஸ்துவைப் பற்றிச் சொல்லியமூல உபதேச வசனங்களை நாம் விட்டு.... பூரணராகும்படி கடந்து போவோமாக (எபிரேயர் 6:1,2).

நாம் எலிமெலேக்கை விட நல்லவர்களா? தேவன் நமக்குத் தந்த 'பதவியையும்' 'நிலைமையையும்' விட்டு விலக நாமும் இது போன்ற அநேகம் காரணங்களைக் கூறலாம். அவை தேவனுடைய சாட்சி போலத்தோற்றமளிப்பனவே அன்றி வேறல்ல. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவிற்கு பூரண அதிகாரம் இருப்பதுபோல சில சபையினர் கூறினும் மெய்யாகவே அங்கே அவருக்கு இடமில்லை. தேவன் வெறுக்கும் செயல் இதுதான்.

## எலிமெலேக்கின் விசுவாசம் எப்படிப்பட்டது?

தேவனுடைய கட்டளையும், ஆணையுமேயன்றி வேறொரு காரணமும் அவருக்கு முன் விலையுள்ளதல்ல. எலிமெலேக்கு தேவனுடைய கிருபையிலும் அவரைக்குறித்த அறிவிலும் வளரும்படியாக மோவாபிற்குப் போகவில்லை. சடங்குகளிலும், பாரம்பரியங்களும் நிறைந்த இடத்தில் அவரை மகிமைப்படுத்தவும் போகவில்லை. தன்னுடைய சுய இச்சைகளைத் திருப்தி செய்யும் படியாகவே அங்கே போனான்.

நமது உள்நோக்கங்களை நாம் தேவனுக்குமுன்பாக நிறுத்திப் பார்ப்பின் அவை வெளிப்படாமல் போகாது. தேவனுக்கு கீழ்ப்படிகிறோமோ இல்லையா என்பது அப்போது விளங்கும். தன்னை கனம் பண்ணாதபடியால் பெத்லெகேமில் மழை பெய்யாமல் தடைசெய்து தேவன் மோவாபில் அவனை ஆசீர்வதிப்பாரா? மோவாபியர் அவரை கனம் பண்ணுகிறார்களா? பஞ்சம் எலி மெலேக்கிற்கு தன் விசுவாசத்தைக் கிரியைகளால் வெளிப்படுத்த தேவன் அருளின ஒரு சந்தர்ப்பமாயிருந்தது (யாக்கோபு 2:18)

தேவனுடைய கற்பனைகளிலும், நியாயப்பிரமாணத்திலும் (உபாகமம் 15:7.1; 24:12) எலிமெலேக்கின் குடும்பத்தாருக்கு உதவி செய்ய "தனம் பெருத்தவனாய்" போவாஸ் அங்கே இருந்தான். அவனைக்குறித்து அவர்களுக்கு நன்றாகத்தெரியும். நகோமி கர்த்தரால் சிட்சிக்கப்பட்டபின் பெத்லெகேமிற்கு திரும்பிவந்தபோது போவாஸின் பெயர் அவளது உள்ளத்தில் உருவாக்கிய விளைவுகளை நாமறிவோம். ஆனால் அப்பொழுது அவனைக்குறித்து அவர்கள் எண்ணவோ அவன்மேல் நம்பிக்கை வைக்கவோ மனதற்றவர்களாயிருந்தார்கள்.

## கிரியை இல்லாத விசுவாசம்

நகோமியும் எலிமெலேக்கும் ஏன் மோவாபிற்குப் போனார்கள்? சூழ்நிலைகளுக்கு மேலாக அவர்களது விசுவாசம் கிரியை செய்ய மறுத்துவிட்டது. இரட்சிப்பிற்காக தேவனை விசுவாசிக்கும் பலரும் குடும்பத்தில் சிக்கல்கள் ஏற்படும் போது அவரை விசுவாசிக்க முடியாமல் திணறுகின்றனர்" நான் உன்னை விட்டு விலகுவது மில்லை உன்னைக் கைவிடுவதும் இல்லை" எனக்கூறியவர் அப்போது மட்டும் இல்லாமற்போய்விட்டாரா?

இவ்வுலகத்தின் பொருட்களை நாடி மீட்பராகிய தேவனை மறந்து விடும்போது நாம் எவ்வளவு அறிவற்றவர்களாக மாறியிருக்கிறோம்.

எலிமெலேக்கிற்கு தேவனுடைய உதவிதான் தேவை. நமக்கும் அப்படித்தான் ஒரு வேளை மோவாபிலே உணவு இருக்கலாம். ஆனால் ஜீவனும் சுவாசமும் அவர் கையிலல்லவா? அவரைப்புறக்கணித்து உணவிற்காக ஜீவனையும் சுவாசத்தையும் இழப்பது மடமையல்லவா? ஆனாலும் எலிமெலேக்கு அதைத்தான் தெரிந்துகொண்டான். அநேகர் இன்று அவ்வழியாய் தான் செல்கின்றனர். அவன் மோவாபின் வயல் வெளிகளில் பரதேசியாய்ச் சஞ்சரிக்கும் படிதான் போனான். ஆனால் அங்கே அவன் மரித்தபிறகு அவனுடைய இரு மகன்களும் மோவாபிய பெண்களைத் திருமணம் செய்து கொண்ட பிறகு நிரந்தரமாகத் தங்கிவிடுகின்றனர். தகப்பனாகிய எலிமெலேக்கு உலகத்தின் காரியங்களில் அன்பு கூர்ந்தான். ஆனால் பிள்ளைகளோ உலகத்தையே நேசிக்கத்தொடங்கிவிட்டனர். ஆனால் மரணம் அவர்களது திட்டங்களைத் தகர்த்தது. இவை போன்ற சம்பவங்களை நாமும் கண்டிருக்கிறோமல்லவா? “மனுஷனுக்குச் செம்மையாக தோன்றுகிற வழி உண்டு. அதின் முடிவோ மரண வழிகள் *(நீதிமொழிகள் 14:12:16:25)* இஸ்ரவேல் புத்திரர் எண்ணாகமம் *9:15-23ல்* செய்தபடி செய்வோமானால் நமது வாழ்க்கை எவ்வளவு வேறு பட்டதாக இருக்கும்.

## விழித்திராவிட்டால்

எலிமெலேக்கு கர்த்தருடைய சிட்சையிலிருந்து ஓடி ஒளிக்க முயன்றபோது சாத்தானின் வலையில்போய் சிக்குண்டான். தேவன் ஒருமுறை இஸ்ரவேலோடு பின் வருமாறு கூறினார். சிங்கத்துக்குத் தப்பினவனுக்குக் கரடி எதிர்பட்டது போலவும் அல்லது வீட்டுக்குள்ளே வந்து சுவரின்மேல் தன் கையை வைத்தபோது பாம்பு அவனைக் கடித்தது போலவும் இருக்கும் (ஆமோஸ் *5:19*).

சுய சித்தத்தின்படி நாம் நடப்போமேயாகில் ”மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான் தன் மாம்சத்திற்கென்று விதைக்கிறவன் மாம்சத்தினால் அழிவை அறுப்பான். ஆவிக்கென்று விதைக்கிறவன் ஆவியினாலே நித்திய ஜீவனை அறுப்பான். *(கலாத்தியர் 6:7.8)*.

எலிமெலேக்கு ஜீவ ஊற்றைப் புறக்கணித்து விட்டுத் தானே ஆயத்தம்பண்ணின மரணத்தின் பாத்திரத்திலுள்ள வண்டல்களை உறிஞ்சிக் குடித்தான். யோனாவும் ஒருமுறை இப்படிப்பட்ட அனுபவத்திற்குள்ளாக கடந்து போனாரே! சுய இஷ்டத்தின்படி நடந்து கொண்டு தான் தேவனோடு ஐக்கியம் கொண்டிருப்பதாக எண்ணுவது எவ்வளவு மடமை" வஞ்சிக்கப்படாதிருங்கள். தேவன் தம்மைப் பரியாசம் பண்ணவொட்டார்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வார்த்தை இதற்கு எவ்வளவு மாறுபட்டது என்று பாருங்கள் அனைவருக்கும் பசி உண்டானபோது எலிமெலேக்கைப் போலத் தன் விருப்பப்படி செயல்படும்படி சாத்தான், அவரைத்தூண்டிவிடுகிறான். "இந்தக் கல்லுகள் அப்பங்களாகும்படி சொல்லும்" என்கிறான் ஆனால் அவரது மறுமொழி என்ன? ''மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே! (மத்தேயு 4:4 உபாகமம் 8:3) மோசேயினால் பேசப்பட்ட அவ்வார்த்தைகளை எலிமெலேக்கு மறந்தது எப்படி? நாமும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் அடிச்சுவடுகளைப்பின்பற்ற வேண்டியவர்களல்லவா? (1 பேதுரு 2:21).

## மோவாபைக் குறித்த மற்றுமோர் ஓவியம்

மோவாபில் அப்பம் உண்டு; திராட்ச ரசமும் உண்டு. (ஏசாயா 16; எரேமியா 48) மகிழ்ச்சியின் சின்னம் அது. திரளான கால்நடைகள் உண்டு. (2 ராஜாக்கள் 3:4) புல் வெளிகளும் வயல்களும், திராட்சைத் தோட்டங்களும் உண்டு. மிகப்பெரிய திராட்சைக் குலைகள் (உபாகமம் 11:10.15 எண்ணாகமம் 13:23) விளையும் பாலும், தேனும் ஓடுகிற கானானைப்போலவே அதுவும் தோன்றவில்லையா?

ஆனால் மோவாபியர் பெருமையும், மேட்டிமையும் நிறைந்தவர்கள். பெருமை பாராட்ட அவர்களுக்கு வாய்ப்பிருந்தது ஏனெனில் அவர்கள் யாருக்கும் அடிமைப்பட்டதுமில்லை சிறையிருப்புக்குப் போனதுமில்லை. மோவாப் தன் சிறுவயது முதல் சுகமாய் வாழ்ந்தது அது ஒரு பாத்திரத்திலிருந்து மறுபாத்திரத்தில் வார்க்கப்படாமலும் அதின் வண்டல்களின் மேல் அசையாமலும் இருந்தது. அது சிறையிருப்புக்குப் போனதில்லை ஆகலால் அதின் ருசி அதில் நிலைத்திருந்தது. அதின் வாசனை வேறுபடவுமில்லை. (ஏசாயா 16:6; எரேமியா 48:11).

தேவனோடு இணைந்திருக்காத இதயம் விசுவாசத்தின் பரீட்சைகளை விரும்புவதில்லை அது அமைதியையும் ஓய்வையுமே விரும்பும் ஆனால் தேவனுடைய திட்டம் அதுவல்ல!! "என் மகனே கர்த்தருடைய சிட்சையை அற்பமாக எண்ணாதே.... கர்த்தர் எவனிடத்தில் அன்பு கூறுகிறாரோ அவனை அவர் சிட்சித்துச்சேர்த்துக் கொள்கிற எந்த மகனையும் தாம் தண்டிக்கிறார். எல்லாருக்கும் கிடைக்கும் சிட்சை உங்களுக்கு கிடையாதிருந்தால் நீங்கள் புத்திரராய் இராமல் வேசிப்பிள்ளைகளாயிருப்பீர்களே (எபிரேயர் 12:5-11) ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் நாம் கூடிச்சேரும் சபையில் தானே நமக்கு அநேக சோதனைகளும் பரீட்சைகளும் நேரிடுகின்றன.

## சத்திய சபைக்குள் மோவாபிற்கு இடமில்லை

மனிதனுடைய கற்பனைகளின்படி மனிதரால் எழுதிவைக்கப்பட்ட ஆராதனை முறைகளை பின்பற்றும்போது தேவ கற்பனைகளுக்கு புறம்பே அநேகச் சட்டங்களையும், ஒழுங்கையும் பின்பற்ற நேரிடுகிறது. ஆனால் அவருடைய அதிகாரத்திற்கு மட்டும் கீழ்ப்படிந்து அவருடைய நாமத்தில் மட்டும் கூடிவரும்போது "ஆண்டவரே நாங்கள் என்னச்செய்யச்சித்தமாயிருக்கிறீர்?" என்றே கேட்க நேரிடும். நாம் எடுக்கும் ஒவ்வொரு தீர்மானமும் தேவசித்தத்தின் வியாக்கியானமாக இருக்கும். தனி நபரின் கருத்தைத் திணிக்குமளவிற்கு அது தரம் தாழ்ந்து விடாது ஒருமித்து அனைவருமாக தேவசித்தத்தை அறிந்து செயல்பட அது வாய்ப்பளிக்கிறது. நமது எண்ணங்களை எடுத்துக்கூறாமல் அக்குறிப்பிட்டக் காரியத்தைக் குறித்து தேவனுடைய நினைவு என்ன என்றறிவதற்கு அது ஏதுவாகும். அனுபவம் நிறைந்த சபையின் மூப்பர்கள் சபையையும், ஆராதனையையும் குறித்துச் சிலத்தீர் மானங்கள் எடுக்கும்போது பிரச்னைகள் எழாமலிருப்பதில்லை ஆனால் ஆவியானவர் நம்மை வழிநடத்துவாராயின் உள்ளத்தில் தேவனுக்கு முதலிடம் கொடுக்கும் செயல் தொடங்கிவிடும்.

ஒரு சகோதரர் பரிசுத்த ஆவியின் நடத்துதலின்படிதான் செயல்படுகிறார் எனச் சபையார் அறிந்துகொள்வது எப்படி? அதை அறிந்து கொள்ள நாம் தேவனோடு நெருங்கி வாழ்பவர்களாக இருக்கவேண்டும். ஆவிக்குரியவர்கள் மட்டுமே பரிசுத்த ஆவியானவரின் நடத்துதலைக்குறித்து அறிந்துகொள்ளமுடியும்.

மாம்சம் வெளிப்படும்போது சபையார் எவ்வாறு செயல்பட

வேண்டும்? பரிசுத்த ஆவியானவருக்கு முதலிடம் கொடுக்க வாஞ்சிக்கும் இடத்தில்தான் மாம்சமும் தன் கைவரிசையைக் காட்ட முயற்சிக்கும் "ஆண்டவருக்கு மட்டும் தான் இங்கே அதிகாரம் உண்டு" என உரிமை பாராட்டும் இடத்தில் தான் சாத்தான் ஊடுருவப்பார்க்கிறான். நாம் அவருடைய நாமத்தில் கூடிவந்தாலும் இவ்வுலகத்தில் தானே வாழ்கிறோம்! மாம்சத்துக்குரியவைகளில் அவர்களும் சில வேளைகளில் செயல்பட்டு விடுகின்றனர். சாத்தானும் ஒளியின் தூதனுடைய வேஷத்தைத்தரித்துக்கொண்டு உட்புகுவதுபோல, பரிசுத்தவான்களுக்கிடையிலும் அவனுடைய கையாட்கள் புகுந்து விடுகின்றனர்.

ஒரு சகோதரனின் வாழ்வில் அறியாமை கிரியை செய்கிறதா? அல்லது பலவீனமோ, சுயத்தின் கிரியைகளோ எது வெளிப்படுகிறதென்று அறிந்து கொள்வது எப்படி? இதற்கும் தேவனோடு இணைந்த வாழ்வே தேவை! பலவீனமோ, அறியாமையோ கிரியைச் செய்யும்போது பொறுமையோடு அன்புடன் உபதேசிக்க வேண்டும். சுயசித்தத்தை சகித்துக்கொள்ள வேண்டியதில்லை எனினும் ஆவிக்குரிய முறையில் அச்சகோதரனை சீர்பொருந்தச் செய்யவேண்டும். எவ்வளவு காலம் பொறுமையோடு இருக்க வேண்டும்? எப்போது கனவீனமான பாத்திரங்களை நம்மை விட்டு அகற்றவேண்டும் என்பதற்கு தேவனோடு இணைந்த நடையும், விசுவாச வாழ்வுமே விடை கூறவியலும்.

யூதேயாவிலுள்ள பெத்லெகேமாகிய தேவசபையில் இப்படிப்பட்ட விசுவாச வாழ்வும் தேவனோடு இணைந்த நடையும் தேவை. அப்படி செய்ய தேவனும் சித்தம் கொண்டிருக்கிறார். சுதந்திரத்தை அதிகமாக விரும்பும் நமது இருதயம் முட்டாள்தனமானது என்பதையும் அவர் அறிவார். எனவேதான் ஒவ்வொரு சூழ்நிலையிலும் எப்படியெல்லாம் நடந்து கொள்ளவேண்டும் என அறிவிக்கும் ஒரு புத்தகத்தை அவர் தரவில்லை. புதிய ஏற்பாட்டில் ஒழுக்கமுறை விதிகள் மட்டுமே உண்டு. எந்த சூழ்நிலைக்கும் பொருந்தக்கூடிய அடிப்படைக்கோட்பாடுகளை அதிலே காணலாம். ஒவ்வொரு தனிப்பட்ட விசுவாசியிலும் சபையிலும் ஆவியானவர் வசிப்பதால் தெய்வீகமான, தெளிவான விடைகளைப் பெற்றுக்கொள்வது எளிதாகிறது. ஆனால் அவரது மென்மையான சப்தத்திற்கு நமது செவிகள் திறந்திருக்க வேண்டும்.

**மறைவான** பாவங்களும், துணிவான மீறுதல்களும்

இல்லாதவர்களாய் அவரோடு இணைந்து வாழும்போது இது சாத்தியமாகும். ஆனால் மோவாபில் இந்த நிலை நிலவவில்லை. "மோவாப் சிறு வயது முதல் சுகமாய் வாழ்ந்தது. அது அதின் வண்டல்களின் மேல் அசையாமல் இருந்தது." ஜென்ம சுபாவமான மனிதன் இப்படிப்பட்ட சுகபோகமான அமைதியான வாழ்வையே விரும்புவான். ஆவிக்குரிய போராட்டம் அதிகரித்துக் களைப்படையும் போது உள்ளம் விரும்புவது இதைதான்.

## பின் மாற்றத்தால் உண்டான பின் விளைவுகள்

எலிமெலேக்கு துன்பங்களிலிருந்து விடுதலைப் பெறும்படி அப்பமும், திராட்சைரசமும், பாலும் நிறைந்த மோவாபிற்குப் போனான். ஆனால் அங்கே தேவன் அருளும் புது திராட்சை ரசமும், எண்ணையும் கிடையாது. (உபாகமம் 11:14) பேய் கொம்மட்டிக்காய்கள் உணவுக்காகப் பயன்படுத்தப்பட்டாலும் அவை மரணத்தையே உண்டாக்கும். (2 ராஜாக்கள் 4:38-40) அது மனிதனுக்கு உள்ளான மனிதனுக்குத் தேவையான போஜனம் மோவாபில் இல்லை. யோர்தானைக் கடக்காத ஜென்ம சுபாவமுள்ள பழைய மனிதனுக்கு ஏற்ற போஜனம் மோவாபில் உண்டு. கிறிஸ்துவோடே மரித்து உயிர்த்தெழுந்த புது மனிதனுக்கு வேறொரு போஜனம் தேவை. வானத்தின் தண்ணீரைக் குடித்து வளர்ந்த 'தானியம்' தான் அவனுக்குத்தேவை! பரிசுத்த ஆவியானவராகிய பின் மழை விளையச் செய்த வசனமாகிய அழிவற்ற வித்தாகிய தானியம் தான் அவனுக்குத் தேவை (உபாகமம் 11:11.14) (யோசுவா 5:2.12), (2 ராஜாக்கள் 4.41) மோவாபின் அப்பத்திற்கும், பெத்லெகேமின் அப்பத்திற்கும் இடையே உள்ள வேறுபாட்டை கவனிக்கத் தவறிவிட்டான். எலிமெலேக்கு தேவனை நோக்கி பார்க்காத கண்ணிற்கு அவ்வேறு பாடு தெரியாது தான். நமது சரீரம் முழுவதும் வெளிச்சமாயிருக்கும் போது அது விளங்கும். இவைகளெல்லாம் நமக்கு எச்சரிப் புண்டாகும்படி எழுதப்பட்டிருக்கின்றன அல்லவா? (1 கொரிந்தியர் 10:11) (சூழ்நிலை) வேதாகமத்தில் 'பெண்கள்' நிலைமைக்கு சூழ்நிலை மாதிரியாகவும் ஆண்கள் விசுவாசத்தின் வீழ்ச்சி அல்லது பெலத்திற்கு மாதிரியாகவும் அமைந்துள்ளனர் வேறு விதமாகக்கூறினால் ஆண்களின் வாழ்வில் ஒரு குறிப்பிட்ட நிலைமையில் வெளிப்படும் செயல்முறையில் வாழ்க்கை நிலையைக் காண்கிறோம்.

எலிமெலேக்கு நகோமி இருவரது வாழ்விலும் இது வெளிப்படுகிறது. எலிமெலேக்கு 'என் தேவன் என்

ராஜாவாயிருக்கிறார்' எனும் அறிக்கைக்கு உத்தரவு தர வேண்டியவன் அவன் இறக்கிறான். அதற்கு முன்னரே அவ்வறிக்கையும் இறந்து விடுகிறது. தேவன் நம்மை வைத்திருக்கும் நிலைமையை உதறிவிட்டு வெளியாங்கமாய் பக்தி வேடம் பூண்டு நடப்பதற்கான வாய்ப்புண்டு. ஆனால் இறுதியில் தேவன் நம்மைத்தடுத்து தம்மண்டைக்கு மறுபடியும் திருப்பிக்கொள்ளாமற் போவாரானால் நமது முடிவு என்னவாகும்.

பின் மாற்றத்தின் முதற்படி சிறிதளவில் வழிதப்பிப் போவதாக இருக்கும். நமது கடின இருதயம் அதைக் கவனிப்பதுமில்லை. ஆனால் அதற்குள் தேவனோடுள்ள உறவு முறிந்திருக்கும். தேவன் தடுத்தாட்கொள்ளாவிடின் முடிவென்ன? நித்திய நரகம்!

மோவாபின் அப்பத்தால் நம்மைத் திருப்திபடுத்திக்கொள்ள முயலும் போது நமது சாட்சி பயனற்ற சாட்சியாகி விடுகிறது. பயனற்று செயலற்று இறுதியில் அது இல்லாமற் போய்விடுகிறது. எஞ்சி நிற்பது என்ன? நம்பிக்கையற்ற விதவையின் நிலைமை! பெத்லெகேமின் உண்மையான தன்மை என்ன? தேவனுடைய அதிகாரத்திற்கு சாட்சியாக நிற்கும் அப்பத்தின் வீடு! அங்கு ஆராதனை உண்டு! இஸ்ரவேலிலே ராஜா இல்லாமல் அவனவன் தன்தன் பார்வைக்குச் சரிபோனபடி செய்து கொண்டிருக்கும் சூழ்நிலையிலும் அது அவ்வாறு இருக்கவேண்டும்.

நகோமி பொதுவான சூழ்நிலைக்கு மாதிரியான சின்னமாக விளங்கினாள். அவள் நகோமியாக என் மகிழ்ச்சியாக இருந்தவள்! ஆனால் அவள் "மாரா" வாக கசப்பாக மாறி விட்டாள்.

ஏன் இந்தக் கவர்ச்சி

மோவாபிற்கு நேராக ஒவ்வொரு விசுவாசியும் இழுக்கப்படுகிறான்! என்னை அதிகம் சிந்திக்க வைத்த ஒரு சம்பவத்தை ஒரு ஆட்டிடையன் என்னோடு பகிர்ந்து கொண்டான். ஏதாவது ஒரு வெள்ளாடு கத்தினால் அவனது மந்தையிலுள்ள செம்மறியாடு அதை நோக்கி ஓடிப்போகுமாம். ஏனெனில் குட்டியாக இருந்தபோது தாயில்லாத செம்மறியாட்டை ஒரு வெள்ளாடு பாலூட்டி வளர்த்ததாம் நம்முடைய வாழ்க்கையும் அப்படித்தானே?

பரம மேய்ப்பனின் மந்தையிலிருந்து ஓடிப்போகாத மனதை அவர் நமக்குத் தந்தருளுவாராக! மெய்யான ஒரு விசுவாசி தேவனை

விட்டு விலகினாலும் அவன் மறுபடியும் வந்து விடுவான். எனினும் அதினால் அவனுக்கும், அவனை நேசிப்பவர்களுக்கும் அவன் உண்டாக்கிய நஷ்டத்திற்கு அளவில்லை. ஆதியாகமம் 12ஆம் அதிகாரத்தில் ஆபிரகாமைப் பாருங்கள். அவன் ஒரு பொய்யன். பார்வோன் நிச்சயமாகவே அவனுக்கு உதவமுடியாது நம்பிக்கைக்குப் பாத்திரமற்றவனாக அவன் மாறியதன் மூலம் "ஆபிரகாமின் தேவனுக்கு" அவன் உண்டாக்கிய சாட்சிக் கேடான நிலைமையைப் பாருங்கள்.

அவன் லோத்துவை எகிப்திற்கு அழைத்துச் சென்றதால் தான் லோத்து சோதோம், கொமோராவைத் தெரிந்துகொண்டான் எனக்கூறினால் அது மிகையாகாது. யோர்தான் நதிக்கு அருகான சமபூமி கர்த்தருடைய தோட்டத்தைப் போலவும் எகிப்து தேசத்தைப் போலவும் இருப்பதாக அவன் காண்கிறான் (ஆதியாகமம் 13:10).

ஆகார் மூலம் இஸ்மவேல் உருவான சம்பவம் ஆபிரகாம் எகிப்திற்குப் போனதாலும் பார்வோனோடு பொய் சொன்னதாலும் வந்த வினையல்லவா? இன்றும் ஆபிரகாம் செய்த தவறின் பின்விளைவுகளை யூதர்கள் அனுபவிக்கின்றனரே? தவறான வழியில் நடக்கும்போது அதின் பின் விளைவுகளைக் குறித்துச் சிந்திக்க மறந்து விடுகிறோம். விசுவாசிகளான பெற்றோர்கள், பின்மாறினாலும் திரும்பவந்து விடுகின்றனர். ஆனால் அவர்களது பிள்ளைகள் திரும்பி வருவது அசாத்தியமான செயலாகிவிடுகிறது.

எலிமெலேக்கு மோவாபில் சஞ்சரிக்கும்படி போனான் அவனுடைய ஆண் மக்கள் இருவரும் அங்கே நிரந்தரமாக தங்கிவிட்டனர். ஒரு வேளை அவர்களுக்கும் பிள்ளைகள் பிறந்திருந்தாலோ? (தேவன் அதைத்தடைபண்ணினார் அவர்கள் தேவமக்களுடைய எதிரிகளாக மோவாபியராக இருப்பார்கள்! ஏனெனில் பத்தாம் தலைமுறைவரை மோவாபியர் தேவனுடைய சபைக்கு உட்படலாகாது (நெகேமியா 13) அவ்வண்ணமாக எலிமெலேக்கின் மக்கள் தங்களது சுதந்திரத்தையும் அசட்டை பண்ணினர்.

## மாயக்காரரே உங்களுக்கு ஐயோ

சிலருக்கு அற்புதமான சாட்சி உண்டு. நேரடியாகப் பரலோகத்திலிருநந்து இறங்கி வந்தவர்கள் போல அவர்கள் தோற்றமளிப்பார்கள். பின்னர் விழுந்தாலோ எழுந்திருப்பதில்லை. ஆனால் மெய்யான விசுவாசிகள் விழுந்தாலும் திரும்ப

எழுந்திருப்பார்கள். நகோமியின் வாழ்வில் இதைப் பின்னர் காணலாம்.

ஆதியாகமம் 8:6-9 வசனங்களில் காகமும், புறாவும் நோவாவின் பேழையை விட்டுப் போகின்றன. புறாபேழைக்குத் திரும்பி வந்த போதிலும் காகத்திற்கு வரமனமில்லை. மிதக்கும் பிணங்கள் அதற்கு உணவையும் இளைப்பாறும் இடத்தையும் தருகின்றனவே! விசுவாசிகளின் ஐக்கியங்களிலும் இப்படிப்பட்ட காகங்கள் உட்புகவாய்ப்புண்டு. J.N. டார்பியின் மாணவனான ஒரு மனிதனின் வாழ்க்கை இதற்குச் சான்றாகும். 19ஆம் நூற்றாண்டின் இறுதி காலத்தில் வாழ்ந்த பெயர் பெற்ற நாஸ்திகனான அவன் ஒரு கிறிஸ்தவ ஐக்கியத்தில் அப்பம் பிட்டு தேவ வசனத்தையும் பிரசங்கித்து வந்தான். பாரசீகத்திற்கு மிஷனரியாகச் சென்று பணியாற்றினான். சில வருடங்களுக்குப் பிறகு தாய் நாட்டிற்குத் திரும்பிவந்த அவனை சில நிபந்தனைகளோடு விசுவாசிகள் ஏற்றுக் கொண்டனர். ஏனெனில் அவனைக் குறித்து சில் வதந்திகள் அவர்களிடையே பிரபலமாக இருந்தன. நாளடைவில் அவன் அவிசுவாசியைப் போலப் பேசவும் முற்பட்டான். சகோதர சங்கத்திலிருந்து வெளியேற்றப்பட்டபிறகு பெயர்க் கிறிஸ்தவ சபை ஒன்றோடு இணைந்து செயல்பட்டான். விசுவாசிகளின் ஐக்கியங்களுக்கு எதிராக பிரசங்கித்தபடியால் அவர்கள் இவனை இருகரம் நீட்டி வரவேற்றனர். ஆனால் அவனது முகமூடி கிழிந்தது "விசுவாசத்தின் கூட்டங்கள்" (Phases of Faith) எனும் நாத்திக நூலை எழுதி வெளியிட்டபோது அவர்களும் திகைத்தனர். நாத்திகனாகத் தன் வாழ்வைச் செலவிட்ட அவன் அவ்வண்ணமாகவே மரித்தான். மிக புகழ்பெற்ற மனிதராகிய கார்டினல் நியுமேனின் சகோதரன் தான் அவன்!

ஆனால் நகோமியைப் பாருங்கள் அவளுடைய பேர் அழிந்து போயிற்று. (2 சாமுவேல் 14:7) அவளுடைய பெயரை நிலை நிறுத்த இவ்வுலகில் அவளுக்கு வாரிசு இல்லை. சிருஷ்டி அனைத்திற்கும் உண்டாயிருந்த ஆசிர்வாதம் அற்றுப்போன நிலைமைக்கு அவள் ஒரு உதாரணமாக விளங்குகிறாள். மனிதன் வீழ்ந்து போவதற்கு முன் இப்படிப்பட்ட ஒரு நிலை வருவதற்கு வாய்ப்புண்டா? அழிந்து கொண்டிருக்கும் சிருஷ்டி மீட்பின் அடிப்படையில் மாத்திரமே ஆசிர்வாதத்தைப் பெறமுடியும். இதை நகோமி யாத்திராகமத்தின் புத்தகத்திலிருந்து அறிந்து கொண்டிருக்கலாம். அவளது வீழ்ச்சியின் மூலமாக தேவன் ஆழமான சத்தியங்களை அவளுக்குக் கற்றுக்கொடுத்தார். இறுதியில் அவள் மீட்கப்படும்படி மீட்பரண்டையிலேயே வந்து விடுகிறாள்.

### சர்தை சபையின் நிலைமை

நகோமியின் வறுமைக் கோலத்தைக் காணும்போது நாம் சர்தை சபையைக் குறித்துப் பார்க்காமல் இருக்க முடியவில்லை. "நீ உயிருள்ளவனென்று பெயர் கொண்டிருந்தும் செத்தவனாயிருக்கிறாய்.. நீ விழித்துக் கொண்டு சாவுக்கேதுவாய் இருக்கிறவைகளை ஸ்திரப்படுத்து (வெளி 3:1-2) நகோமியின் குடும்பப்பெயர் இப்போதும் எலிமெலேக்குதான். என் தேவனே என்னுடைய ராஜா. ஆனால் அது ஆண்கள் அனைவரும் மரித்துப் போன ஒரு குடும்பம் தனிமையான மரணத்தை எதிர்நோக்கி இருக்கும் ஒரு விதவை மாத்திரம் எஞ்சி நிற்கிறாள் மோவாபில் பத்து வருடங்கள் சஞ்சரித்த பிறகு பாக்கி இருப்பது அது மட்டுமே!

வேதாகமத்தில் 'பத்து' எனும் எண் பொறுப்பைக் காட்டுகிறது 'ஐந்து' மனிதனைக் காட்டுகிறது. நான்கு உலகத்தையும், பலவீனமான சிருஷ்டியையும் காட்டுகிறது. அது தேவனால் தாங்கப்படுகிறது. ஒன்று எனும் எண் தேவனைக் குறிப்பிடுகிறது மனிதன் தனது பொறுப்புகளை நிறைவேற்ற அவர் உதவுகிறார். பத்து என்பது ஐந்தின் இருமடங்காகும் எனவே பத்து என்பது பொறுப்பின் முழுமையான வெளிப்பாடாகும்.

தேவன் நமக்குச் சில பொறுப்புகளைத் தரும்போது நாம் தவறிவிடுகிறோமல்லவா? அவரது கிருபை மாத்திரமே நம்மைத் தாங்கவியலும் நாம் அனைத்தையும் தாறுமாறாக்கி விட்டுத் தவிக்கும் போது கிருபை செயல்படாமல் இருப்பதில்லை. அது நமக்கு ஒரு திறந்த வாசலைக் காட்டுகிறது. நாம் தாறுமாறாக்கின காரியங்களிடத்திற்கே திரும்பிப் போவதில்லை. அது நாம் இடிந்துபோனதைவிடச் சிறந்த ஒன்றையே அவரது கிருபை தருகிறது.

சர்தை மனந்திரும்பாத போது ஒரு திறந்த வாசலை அதற்கு முன் வைத்தார். அது பிலதெல்பியா சபைக்கு நேராக நடத்தும் வாசலாகும்! திறந்த வாசல் என்பது தடையின்றிச் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதல்ல! அதற்கும் இதற்கும் தொடர்பில்லை. சுவிசேஷத்தை அறிவிப்பதற்கான சுதந்திரம் இருப்பினும் எதிர்ப்புகள் இல்லாமல் போவதில்லை. (1 கொரிந்தியர் 16:9)ல் பவுல் இவ்வாறு எழுதியிருக்கிறார். "இங்கே பெரிதும் அனுகூலமுமான கதவு எனக்குத்திறக்கப்பட்டிருக்கிறது. விரோதஞ்செய்கிறவர்களும் அனேகர் இருக்கிறார்கள்.

நாம் எவ்வழியாகப் போகவேண்டுமென தேவன் தெளிவாகக் காண்பிப்பதே சிறந்த வாசலாகும் தனக்கென்று சிலவழிமுறைகளைக் கொண்டு சாத்தான் செயல்படும் இவ்வுலகில் எதிர்ப்புகளும், பிரச்சினைகளும் இல்லாமற்போவதில்லை.

இவ்வுலகில் சபையானது எவ்வாறு தேவனுக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவிற்கும் சாட்சியாக இருக்கவேண்டுமென்பதைக் குறித்து வெளிப்படுத்தின விசேஷம் 2-3 ஆம் அதிகாரங்களில் வாசிக்கிறோம். இறுதியில் கூறப்பட்டிருக்கும் மூன்று சபைகளான, சர்தை, பிலதெல்பியா, லவோதிக்கேயா சபைகளுக்கு இப்பொறுப்புண்டு. நாங்கள்தான் 'சரியான சபை' என சர்தை தியத்திரவும் உரிமை பாராட்டும்போது தேவன் தமது வெளிச்சத்தை பிலதெல்பியாவிற்கு அருளுகிறார்.

ரூத்தின் புத்தகத்தில் இச்சத்தியத்தைத்தான் காண்கிறோம். இவ்வுலகில் சபைக்குத் தேவன் அருளிய மேன்மையான நிலையை அது இழந்துவிட்டு மோவாபில் கசப்பான அனுபவங்களைப் பெற்ற நகோமிக்கு ஆதிநிலைக்கு ஏறும் வாசல் திறக்கப்படுகிறது. கர்த்தர் தம்முடைய ஜனங்களைச் சந்தித்து அவர்களுக்கு ஆகாரம் அருளினார் என்று அவள் மோவாப் தேசத்திலே கேள்விப்படுகிறாள்.

## வீழ்ச்சியின் விளைவுகள்

வீழ்ச்சிக்குப்பின் முன்னிருந்த நிலைமைக்குத்திரும்ப வாய்ப்புண்டு ஆனால் வீழ்ச்சி உண்டாக்கிய விளைவுகளை அனுபவித்தப் பிறகுதான் அவ்வாய்ப்பு வருகிறது நமது வழிகள் மரண வழிகள்தான் என்று உணர்ந்து நம்மைத் தாழ்த்தி தேவன் மாத்திரமே ஆகாரம் அருள முடியும் எனப்புரிந்து கொள்ளும்போது ஆதிநிலைக்குத் திரும்ப முடிகிறது.

நகோமியின் வாழ்வில் அத்தகைய ஆவிக்குரிய பயிற்சிகளைக் காணலாம். பெத்லெகேமிலிருந்து ஏழையாகப்புறப்பட்டு ஒளிமயமான எதிர்காலக்கனவுகளோடு மோவாபிற்குள் நுழைந்தாள். ஆனால் நாளடைவில் உலகமும் சாத்தானும் தனக்குத் தந்த இன்பங்களுக்கு அவள் செலுத்தவேண்டிய விலைக்கிரயத்தைப் புரிந்து கொண்டாள். "நான் நிறைவுள்ளவளாகப்போனேன். கர்த்தர் என்னை வெறுமையாகத் திரும்பி வரப்பண்ணினார்." (ரூத் 1:21) எனக்கூறவேண்டிய நிலைக்கு ஆளாகினாள். யூதாவிலுள்ள பெத்லெகேமில் இப்போதும் அவளது கணவனுக்கும்,

மக்களுக்குமுள்ள சுதந்திரம் உண்டு. எனினும் இப்போது அவளது பெயரோ 'மாரா' (கசப்பு) என்பதாகும். நகோமி (என் மனமகிழ்ச்சி) எனும் பெயர் மாறி விட்டது. அவளுக்கு ஆறுதல் சொல்ல யாருமில்லை. ஏனெனில் அவளது மருமக்களும் விதவைகளே!

நமக்குள்ள ஆசீர்வாதங்களின் விலைமதிப்பை தமது தவறுகளின்மூலம் அவற்றை இழந்ததற்குப்பின்னரே புரிந்து கொள்கிறோம். "-திமொழிகள் *5:3-13* ஐ வாசித்துப்பாருங்கள். 'பரஸ்திரீயின் உதடுகள் தேன் கூடு போல் ஒழுகும். அவள் வாய் எண்ணெயிலும் மிருதுவாயிருக்கும். அவள் செய்கையின் முடிவோ எட்டியைப் போல் கசப்பும், இருபுறமும் கருக்குள்ள பட்டையம்போல் கூர்மையுமாயிருக்கும். அவள் காலடிகள் மரணத்துக்கு இறங்கும். அவள் நடைகள் பாதாளத்தைப் பற்றிப்போகும்.... உன் வழியை அவளுக்கு தூரப்படுத்து. அவளுடைய வீட்டு வாசலைக் கிட்டிச் சேராதே. சேர்ந்தால் உன் மேன்மையை அந்நியர்களுக்கும் உன் ஆயுசின் காலத்தைக் கொடூரருக்கும் கொடுத்து விடுவாய்.

தேவனை விட்டு விலகுகிறவர்களுக்குச் சம்பவிப்பதை அது தெளிவாக விளக்குகிறதல்லவா? நமக்குத் தேவன் தந்த அருமையான உரிமைகளைக் குறித்து என்றாவது எண்ணிப் பார்த்திருக்கிறோமா? இவ்வுலகிலேயே ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைச் சுற்றிலும் கூடி வரக்கூடிய இடத்தை அவர் கிருபையாகத் தந்திருக்கிறார். அங்கே அவரைத் துதிக்கவும் அவருக்கு நன்றி செலுத்தவும் முடியும். தமது ஐசுவரியங்களை அவர் அங்கே நமக்குப் பகிர்ந்தளிக்கிறார் விசுவாசத்தால் அப்பத்தின் வீடாகிய தேவசபையில், யூதாவிலுள்ள பெத்லெகேமில் நாம் வாழவியலும்.

ஆம்! மீட்பிற்கு வாய்ப்புண்டு. மோவாபில் தேவன் அப்பத்தைத் தருவதில்லை. அவர் ஆகாரம் அருளும் இடம் பெத்லகேம்தான் இச்செய்தி மோவாபிலுள்ளவர்களுக்கும் எட்டுகிறது. நாம் அனைத்தையும் இழந்தபிறகு அவரிடம் திரும்பி வரும்படி அந்த நற்செய்தி நமக்கு எட்டும்படிச் செய்கிறார்.

## தனி நபர் சாட்சியின் மாட்சி

இப்போது வேறொரு அற்புதத்தைக் காண்கிறோம். நகோமியின் இரு மருமக்களும் அவளுடன் வருகின்றனர். 'இந்தப் பெண்களிடம் என்ன சாட்சி இருக்கிறது' என்று நாம் கேட்கலாம். "என் தேவனே

என்னுடைய ராஜா' எனக்கூறக்கூடிய சாட்சி அவர்களுக்கு இல்லை. வறுமையும், மரணமுமே அவர்களது சாட்சி. எனினும் தனிப்பட்ட வாழ்வில் 'மங்கி எரியும் திரியாக' ஒரு சாட்சி அவளுக்கு உண்டு. மீந்திருப்பவர்களுக்கு நிழலாக அவள் அமைகிறாள்.

தேவகிருபை அவளது உள்ளத்தில் கிரியை செய்கிறது. தன் பூர்வ நாட்களை எண்ணிப் பார்க்கிறாள் அவள். தேவகிருபை அவளுக்கு அளித்த அவரது ஜனங்களுக்கு அளித்துக் கொண்டிருக்கும், விலையேறப்பட்ட காரியங்களை எண்ணிப் பார்க்கிறாள். அவைகளைக் குறித்து அவள் தன் இருமருமக்களோடும் பகிர்ந்து கொண்டிருக்கக்கூடும். "இஸ்ர வேலின் தேவனைக் குறித்தும், தேவ ஜனங்களைக் குறித்தும் யூதாவிலுள்ள பெத்லெகேமைக் குறித்தும் அவள் அவர்களுக்குச் சொல்லியிருக்கவேண்டும்.

நகோமி தேவனைக் குறித்துச் சொன்னது அனைத்தும் உண்மையல்ல. தனது நிர்பாக்கியமான நிலைக்கு அவள் கர்த்தரைக் காரணம் காட்டுகிறாள். (ரூத். 1:21) ஆயினும் அவள் பெத்லெகேமிற்குத் திரும்பிப்போக தீர்மானித்தாள். அத்தீர்மானம் அவர்களது உள்ளத்தில் ஆழப்பதிந்துவிட்டது. அவள் சொல்கிறபடியே விசுவாசிக்கிறாள் என்பதை அவர்கள் அறிந்து கொண்டார்கள்.

தனி நபரது சாட்சியின் வல்லமை இதுவே! வேத வசனத்திற்கு அதிகவல்லமை உண்டு. அவரது விருப்பப்படியெல்லாம் அது செய்யும். ஆனால் தேவவசனம் நமது இருதயத்திற்குள் வாசம் செய்யும் போது மட்டுமே நமது சாட்சி வல்லமை உள்ளதாக இருக்கும். நமது நடைமுறை வாழ்வில் மாறுபாடாக நடந்துகொண்டு ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து அருளும் இரட்சிப்பைக் குறித்து நமது பிள்ளைகளிடம் கூறினால் அவர்கள் விசுவாசிப்பார்களா? நமது நடைமுறை வாழ்வில் சபைக்கடுத்த உபதேசங்களைக் கைக்கொள்ளாமல் இதர விசுவாசிகளோடு இதைக் குறித்து பேசினால் அவர்கள் நம்புவார்களா?

## தேவ ஆட்டுக்குட்டி

யோவான் 1:29-37 இதைக் குறித்து அழகாக விளக்குகிறது. 29ஆம் வசனத்தில் யோவான் ஸ்நானகன் "இதோ உலகத்தின் பாவங்களைச் சுமந்து தீர்க்கிற தேவாட்டுக்குட்டி" எனக் கூறுகிறார். இது ஒரு முக்கியமான சத்தியமாகும். நமது நினைவுக்கு எட்டாத சத்தியமே அது! இது நம்மை நித்தியத்திற்கு நேராகவும், புதியவானம் புதிய

பூமிக்கு நேராகவும் நடத்துகிறது. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் ஒப்புரவாக்குதலின் ஊழியத்தை அது காட்டுகிறது. யோவான் இதை மறக்கவில்லை. பல வருடங்களுக்குப் பிறகு தனது சுவிசேஷத்தில் இவ்வார்த்தைகளை எழுதுகிறார். வெளிப்பாடு புத்தகத்திலும் அவர் "அடிக்கப்பட்ட வண்ணமாயிருக்கிற ஆட்டுக்குட்டியைக் காண்கிறார்."

முதன் முறையாக இவ்வார்த்தைகளைக் கேட்டபோது யோவான் ஸ்நானகனைச் சுற்றியிருந்தவர்கள் அதைக் கவனித்ததாகவே தெரியவில்லை. ஆனால் மறுநாள் அவன் "இதோ தேவ ஆட்டுக்குட்டி" (வசனம் 36) என்று மட்டும் கூறியபோது அவர்கள் அவனைவிட்டு ஆட்டுகுட்டியானவரைப் பின்பற்றி செல்கின்றனர். ஒரு பெரிய தீர்க்கதரிசியின் உள்ளத்தில் இவ்வளவு பெரிய மாறுதல்களை ஏற்படுத்தும் அவர் நிச்சயமாகவே மகிமை பொருந்திய நபர்தான் எனப்புரிந்து கொள்கின்றனர்.

நகோமியின் காலத்திலும் அவ்வாறே நடந்தது. அவள் பெத்லகேமிற்குத் திரும்பி வரும்போது ஓர்பாளும், ரூத்தும் உடன் வருகின்றனர். தேவ ஜனங்களோடு தங்களை இணைத்துக் கொள்ள அவ்விருமோவாபிய பெண்களும் எதையும் இழக்கத்தயாராகின்றனர். விக்கிரகங்களை விட்டு விலகி ஜீவனுள்ள தேவனுக்கு நேராகத் திரும்பத் தயாராகின்றனர்.

## தாறுமாறாய் ஓடும் பெண் ஒட்டகம்

ஆனால் தேவனை விட்டுப் பின்வாங்கும் அழிவுக்கேதுவான செயலை ஓர்பாளின் வாழ்வில் நாம் காண்கிறோம். பெத்லெகேமை நெருங்கும்போது நகோமியின் நடைவேகம் குன்றுகிறது. நாம் ஆசீர்வாதமாகவோ அல்ல சாபமாகவோ இருப்போம். இடைப் பட்ட நிலை எவருக்கும் இல்லை. ஓர்பாள் பெத்லெகேமிற்கு வர விரும்பினாள். ஆனால் மோவாபில் இருந்த யாரோ ஒருவன் அவளைப் பின்திரும்பச்செய்தான். ஏன் ஓர்பாள் திரும்பிப் போகிறாள் என்று நகோமியும் அறிவாள். ரூத் 1-15ல் நவோமியும் ரூத்திடம் "இதோ உன் சகோதரி தன் ஜனங்களிடத்துக்கும், தன் தேவர்களிடத்திற்கும் திரும்பிப் போய்விட்டாளே" என்கிறாள். நகோமி இப்படிப்பட்ட வார்த்தைகளை சொல்ல நேரிடும் என்று முன் நாட்களில் பெத்லெகேமில் யாராவது நினைத்துப் பார்த்திருப்பார்களா? தேவனை விட்டு விலகும் செயல் சிறிதாகத்தான் தொடங்கும். இறுதியில் அது நம்மை எங்கே

கொண்டுபோய் விடும் என்று நமக்கே தெரியாது.

நகோமி ஓர்பாளையும், ரூத்தையும் தன்னோடு பெத்லகேமிற்கு கொண்டு போக விரும்பவில்லை. ஏன்? தன் இரு மகன்களும் மோவாபிய பெண்களை மணந்தபடியாலா? தனது பழைய தோழிகள் இதை அறியாமலிருக்கவேண்டும் என்பதற்காகவா? நமக்குள் இருக்கும் பெருமை எத்தனை கொடியது? அப்பாவத்தை அறிக்கை செய்து விட்டு 'விடுவதை விட மற்றவர்கள் அழிவதைக் காண்பதில் தான் ஆர்வம் காட்டுகிறோம். 2 சாமுவேல் 11ஆம் அதிகாரத்தில் தாவீது தன் பாவத்தை அறிக்கை பண்ணி விட்டுவிடுவதற்குப் பதிலாகக் குற்றமில்லாத இரத்தத்தைச் சிந்தவே முற்படுகிறான்.

நண்பர்களோ அல்லது பெற்றோர்களோ மாமிச இச்சைகளுக்கு அடிமைப் பட்டு இவ்வுலகத்தின் பின்னால் போவதால் எத்தனை பேர் கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ள மறுக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் "நயவசனிப்பினாலும், இச்சகப் பேச்சினாலும் கபடமில்லாதவர்களுடைய இருதயங்களை வஞ்சிக்கிறவர்களாயிருக்கிறார்கள்" (ரோமர் 16:8) உலகப் பிரகாரமாகத் தங்கள் பிள்ளைகள் உயர்ந்த நிலைக்கு வரவேண்டுமென்று எண்ணி அவர்களை சிங்கத்தின் வாய்க்குள் திணித்தப்பிறகு சிங்கம் அவர்களை விழுங்கிவிடக்கூடாதென்று ஜெபிக்கிற பெற்றோர்கள் இவ்வுலகில் இல்லையா?

## இடறுதலா, முன்னேற்றத்திற்கான படிக்கட்டா?

இக்கொடிய நாட்களில் நமது வார்த்தைகளும் செயல்களும் மற்றவர்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள துணைசெய்ய வேண்டுமே அன்றித் தடையாக இருக்கக்கூடாது. மாம்ச இச்சைகள் நம்மைக் கெடுத்து விடாதபடி நம்மைக் காத்துக் கொள்ள வேண்டியதும் அவசியமே? நமது நண்பர்கள், பிள்ளைகளது வாழ்விலும் இப்படிப்பட்ட செயல்கள் நேரிடாதபடியும் பார்த்துக் கொள்ளவேண்டும். அப்படிச் செய்வோமாயின் நாம் "தேவனுக்கு பிரியரும், மனுஷரால் அங்கீகரிக்கப்பட்ட" ஊழியக்காரனாயிருப்போம். ஏனெனில் "தேவனுடைய இராஜ்யம் புசிப்பும், குடிப்பும் அல்ல. அது நீதியும், சமாதானமும், பரிசுத்த ஆவியினாலுண்டாகும் சந்தோஷமுமாயிருக்கிறது. (ரோமர் 14:7).

மருமக்களின் நிலைமை தன்னுடையதிலிருந்து வேறுபட்டது என்பதை நகோமி அறிவாள். அவளோ ஒரு இஸ்ரவேலியப் பெண் தனது தேவனிடத்திற்கும், ஜனத்தண்டைக்கும் திரும்பிப் போகிறவள். தனது உண்மையற்ற தன்மை உண்டாக்கப்போகிற பின்விளைவுகளை அவள் எதிர்காலத்தில் எதிரிட நேரிடும். ஆனால் ஓர்பாளும் ரூத்தும் நகோமியின் மூலமாகக் கேள்விப்பட்ட வார்த்தைகளின் அடிப்படையில், தங்களது தேவர்களை விட்டும், ஜனத்தைவிட்டும் தேவனுக்கு நேராகத்திரும்ப வேண்டியவர்கள். அவர்களைப் பொறுத்தவரை இஸ்ரவேல் அவர்களுக்கு அறிமுகமில்லாத ஒரு நாடு.

நகோமியின் பாசமோ அல்லது உதவியோ அவர்களது தியாகத்திற்கு ஈடாக அமையாது.

தேவன் நமக்கென நல்கிய ஒழுக்கமுறை விதிகளிலிருந்து ஒரு விசுவாசி எவ்வளவு தூரம் விழுந்து போக வாய்ப்புண்டு என்பதை நகோமியின் வாழ்வில் காண்கிறோம். தனது நிர்ப்பாக்கியமான நிலைமையைக் குறித்து முறுமுறுக்கும் அவள் தனது மருமக்களோடும் அதைப் பகிர்ந்து கொள்கிறாள். அவர்களுக்கு மோவாபிலே நல்ல எதிர்காலம் உண்டு எனப் பேசத் தொடங்கி விடுகிறாள். கானானில் அவர்கள் அறிமுகமில்லாதவர்களாகவே இருப்பார்கள் என்கிறாள். இனி அவளுக்குப் பிள்ளைகள் உண்டாக வாய்ப்பில்லாததால் அவர்கள் மோவாபிற்கே திரும்பிப் போகும்படி உபதேசிக்கிறாள். மனிதனுடைய இருதயம் எவ்வளவு பொல்லாதது. மோவாபிலேயே கர்த்தர் அவர்களை ஆசீர்வதிக்கமாட்டாரா என்பது அவளது எண்ணம்! எத்தனை பயங்கரமான மரணத்துக் கேதுவான நினைவும், உபதேசமும் அது! ஆத்துமாவைக் குறித்த கரிசனை இல்லாமல் நித்தியத்தைக் குறித்த நினைவில்லாமல் பேசப்பட்ட வார்த்தைகள் அவை.

ஓர்பாளை இவ்வார்த்தைகள் பாதித்தன. அதனால் அவை அவளை அழிவுக்கு நேராக நடத்தின. மனசாட்சியை அதட்டி அமைதியாக்கும்போது பாவஉணர்வு மறைந்து போகிறது பிள்ளைகளுக்காக உலகில் உன்னதமான இடங்களை வாஞ்சிக்கும் பெற்றோர் அவர்களைத் தவறான வழிகளில் நடத்தி விடுகின்றனர்.

## வேதத்தில் ஆணும், பெண்ணும்

நாம் முன்னரே குறிப்பிட்டபடி வேதாகமத்தில் பெண்வடிவம்

சூழ்நிலை அல்லது நிலைமையையும், ஆண்வடிவம் செயல்முறை வாழ்வையும் காட்டுகின்றன. நகோமி தாய்வீட்டிற்கு அடையாளமாக விளங்குகிறாள்.

குடும்ப உறவுகளில் தெய்வீக ஒழுங்குள்ள இடமாக அது திகழவேண்டும். பெற்றோர்களின் இல்லத்தைப் பிதாவின் வீடு எனக்குறிப்பிடுதல் மரபு. பிதாவின் வீடு எனக்கூறும்போது நிபந்தனைகளும், விதிகளும் நமது நினைவில் வருகின்றன. ரூத் 2:11 ல் போவாஸ் அவள் தனது. தகப்பன் வீட்டைவிட்டு வந்ததைக் குறித்துப் பேசுகிறான். 'தாயின் வீடு' எனக் கூறும்போது இயற்கையான சூழ்நிலையை நாம் எண்ணிப் பார்க்கிறோம். அங்கே அன்பும் பாசமும் உண்டு.

## நகோமியின் மூலம் வந்த சோதனை

நகோமி தனது உண்மையான நிலையைக் குறித்து அப்பெண்களிடம் பேசவில்லை. அவள் மோவாபில் இருளையும் மரணத்தையுமேயன்றி வேறொன்றையும் காணவில்லை. தீமையின் வல்லமைக்குத் தப்பவேண்டுமென்று தன் கூட்டை உயரத்திலே வைக்கும் படிக்கு தன் வீட்டுக்குப் பொல்லாத ஆதாயத்தைத் தேடுகிறவனுக்கு ஐயோ (செப்பனியா 2:9) இவ்வுண்மை அவர்களைப் பயமுறுத்துகிறது. சாத்தானுக்கு அடிமைப்பட்டுக்கிடக்கும் ஒரு நபர் கிறிஸ்துவுக்குள் தேவனால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தேவனுடைய பிள்ளையோடு தன்னை ஒப்பிடுவாரானால் அவர் தேவனிடம் வர பயப்படுவாரா? பிலதெல்பியா சபையோடு சர்தை, தியாத்திரா சபையினர் தங்களை ஒப்பிட்டுப் பார்ப்பார்களேயானால் அவர்களது உள்ளத்தில் எழுச்சி உண்டாகாமல் இருக்குமா? தியத்திராவும், சர்தையும் தேவனால் நியாயம் விசாரிக்கப் படவேண்டிய நிலையில் அல்லவா உள்ளன? ஒரு வேளை பிலதெல்பியா பலவீனமாகக்கூடத்தோன்றலாம். எனினும் தேவ ஆசீர்வாதம் அங்கேயல்லவா உள்ளது?

தனது மருமக்களை மோவாபிற்கு திரும்பிப்போகச் செய்யும்படி நகோமி மோசமானக் காரியங்களை அல்ல அவர்களைக் கவரக்கூடிய காரியங்களையே பேசுகிறாள். திராட்சைரசம் மனுஷரை மகிழ்ப்பண்ணுவதுதான் (நியாயாதிபதிகள் 9:13) ஆனால் நசரேய விரதம் பூண்டவன் தேவனுக்கென்று தன்னை வேறு பிரித்துக் கொண்டபடியால் அவன் திராட்சை ரசத்தையும் மது பானத்தையும் விலக்க வேண்டும் (எண்ணாகமம் 6: லூக்கா 22:18) இவ்வுலகில் சில செயல்கள் தீமையற்றவை போலத்தோன்றினாலும்

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவோடு இணைந்து நடக்க விரும்பு பவர்கள் அவற்றைவிட்டு விலக வேண்டும். ஏனெனில் இவ்வுலகம் அவரைப் புறக்கணித்து விட்டதல்லவா?

திருமணத்தைக் குறித்துப் பேசியபிறகும் நகோமியின் மருமக்கள் அவளோடு வர முயன்றபோது அவள் அவர்களது உள்ளத்தின் பலவீனமான பாகத்தைத் தாக்க முற்படுகிறாள். மோவாபியர் தன்னிச்சைப்படி கொண்டு பிள்ளைகளைப் பெற எண்ணுபவர்கள். அவர்களது ஆதித்தகப்பனாகிய மோவாப்பிறந்ததே அப்படித்தானே! (ஆதியாகமம் 19:30-38) இதே தன்மையை மோவாபிய பெண்களும் வெளிப்படுத்தியுள்ளனர் (எண்ணாகமம் 25:1) எனவே 11-13 வசனங்களில் கூறப்பட்டுள்ள காரியங்கள் ஓர்பாளையும், ரூத்தையும் பாதித்திருக்கவேண்டும். திருமணத்தின் நிமித்தம் அந்நிய நுகத்திலே பிணைக்கப்படும் விசுவாசிகள் அநேகர் உண்டு. அவர்கள் கர்த்தருக்காக வேறுபிரிந்து வாழ்வதில்லை. சில வேளைகளில் பெற்றோர்கூட கர்த்தருக்காகவேறுபிரிந்து வாழ அவர்களை அனுமதிப்பதில்லை "தகப்பனையாவது தாயையாவது என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்குப்பாத்திரன் அல்ல" மகனையாவது மகளையாவது என்னிலும் அதிகமாய் நேசிக்கறவன் எனக்குப்பாத்திரன் அல்ல (மத்தேயு 10:37).

## கண் சொருகிப் போன குருடி

நகோமி தனது தனிமையான நிலையை சுட்டிக்காட்டி புலம்புகிறாள். விதவைகளை விசாரிக்கிற கர்த்தரை மறந்து பேசுகிறாள் அவள். அவளுடைய இனத்தானாகிய மிகுந்த ஆஸ்தி காரனாகிய "போவாசையும் மறந்து விட்டாள். அவர்கள் பெத்லகேமிற்கு வருவதைத் தடை செய்வதற்குப் புறம்பே தேவனைக் குறித்தும் தவறாக மற்றவர்களோடே பேசுகிறாள். "கர்த்தர் என்னைச் சிறுமைப்படுத்தி, சர்வவல்லவர் என்னைக் கிலேசப்படுத்தினார் (வசனம் 21) என்கிறாள். தனது துக்கமான நிலைக்குக் கர்த்தர்தான் பொறுப்பு என்பதைப் போல் பேசுகிறாள். தேவன் அவளை மோவாபிற்குக் கொண்டு போகவில்லையே? அவளாகத்தானே போனாள்! பெத்லெகேமிலிருந்து போகாதிருந்தால் சங்கீதக் காரனைப் போல் அவர்களும் சொல்ல வாய்ப்பிருந்திருக்கும் "தமக்குப் பயந்து தமது கிருபைக்குக் காத்திருக்கிறவர்களின் ஆத்துமாக்களை மரணத்திற்கு விலக்கி விடுவிக்கவும் பஞ்சத்தில் அவர்களை உயிரோடே காக்கவும் கர்த்தருடைய கண் அவர்கள் மேல் நோக்கமாயிருக்கிறது (சங்கீதம் 33,18.19).

நம்மைச் சுற்றிலும் இருப்போர் கர்த்தரைப் பின்பற்ற விரும்பினால் அவர்களைத் தவறான வழியில் நடத்தாமலும், அவரை விட்டுப் பின்மாறும்படி உபதேசிக்காமலும் இருப்போமாக அவரது பட்சத்தில் நிற்க ஏதாவது அவர்கள் விலைக்கிரயம் செலுத்த நேரிடுமாயின் நாம் அவர்களை உற்சாகப் படுத்தவேண்டும். இராவிலே அழுகை தங்கினாலும் விடியற்காலத்திலே களிப்புண்டாகும் எனக்கூற மறக்கக்கூடாது. ஜீவனுள்ள தேவனைச் சேவிக்கும்படி செத்தகிரியைகளகற்றி துர்மனச்சாட்சி நீங்கியவர்களாயிருக்க அவர்களை உற்சாகப்படுத்த வேண்டும். (எபிரேயர் 9:14) பாளையத்துக்கு புறம்பே அவரோடு நிந்தையைச் சகிக்கவேண்டும் எனக்கூறும்போது மகாபரிசுத்தஸ்தலத்தில் தரிசிக்கும் மகிமைகளைக்குறித்துக் கூறாமலிருக்கக்கூடாது.

## *நன்மைகளையும் காண்போமா?*

சிலராகக் கூடிவரும் விசுவாசிகளின் ஐக்கியத்திலுள்ள குறைகளைக் கூறும்போது அங்குள்ள அவரது பிரசன்னத்தையும் பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலையும் குறித்துக்கூற மறக்கக்கூடாது. பிதாவோடும் அவருடைய குமாரனாகிய கிறிஸ்துவின் ஐக்கியம் கொண்டு இணைந்து உறவாட விரும்பினால் இப்பொல்லாத உலகத்தை விட்டும், கிறிஸ்தவமதத்தை விட்டும் விலகாமலிருக்க முடியாது "ஏனெனில் எல்லா மனுஷருக்கும் இரட்சிப்பை அளிக்கத் தக்க தேவகிருபையானது பிரசன்னமாகி நாம் அவபக்தியையும் லௌகிக இச்சைகளையும் வெறுத்து தெளிந்த புத்தியும், நீதியும், தேவபக்தியும் உள்ளவர்களாய் இவ்வுலகத்திலே ஜீவனம் பண்ணி நாம் நம்பியிருக்கிற ஆனந்த பாக்கியத்துக்கும் மகாதேவனும் நமது இரட்சகருமாயிருக்கிற இயேசு கிறிஸ்துவினுடைய மகிமையின் பிரசன்னமாகுதலுக்கும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும்படி நமக்குப் போதிக்கிறது. அவர் நம்மை சகல அக்கிரமங்களிலிருந்து மீட்டுக் கொண்டு தமக்குரிய சொந்த ஜனங்களாகவும் நற்கிரியைகளைச் செய்யப்பக்தி வைராக்கியமுள்ளவர்களாகவும் நம்மைச் சுத்திகரிக்கும்படி நமக்காகத் தம்மைத்தாமே ஒப்புக் கொடுத்தார் (தீத்து 2:11-14). இவ்விதமாய் ப் போதிக்கப்பட்டு சோதனையைச் சகிக்கிற நாம் உத்தமரென்று விளங்கின பின்பு "தேவன் தம்மிடத்தில் அன்பு கூறுகிறவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணின ஜீவகிரீடத்தைப் பெறுவோம் (யாக்கோபு 1:2)

நகோமியின் வார்த்தைகள் அப்பெண்களின் உள்ளத்தில் ஆழமாகப் பதிந்தபடியால் இருவரும் வாய்விட்டு அழுதனர். ஓர்பாள்

சோதனையில் விழுந்து போனாள். உம்முடைய ஜனத்தண்டைக்கே உம்முடன்கூட வருவோம் எனக்கூறும் வகையில் அவள் தனது மாமியாரை நேசித்தாள். நன்றாகத்தான் தொடங்கினாள். ஆனால் செலுத்தவேண்டிய விலைக்கிரயம் பெரிதல்லவா. அதரிசனமானவரைத் தரிசிக்கக் கூடும் விசுவாசக் கண் அவளுக்கு இல்லை (எபிரேயர் 11:27) அவிசுவாசத்தினாலே அவள் அதில் பிரவேசிக்கக்கூடாமற் போனாள் (எரேமியா 3:19) தீர்மானம் எடுக்க வேண்டிய வேளையில் தடுமாறின அவள் விழுந்து போனாள். மோவாபை நோக்கித் திரும்பினாள்! என்றென்றைக்குமாக!

## ஓர்பாளே ஓர்பாளே

ஓர்பாளையும், ரூத்தையும் சோதிக்க பிசாசு நகோமியையே பயன்படுத்துகிறான். மோவாபிற்குத் "திரும்பிப்போங்கள்" என அவள் மூன்றுமுறை கூறுகிறாள். (ரூத். 1;8, 11, 12) உறவினர் மூலம் வரும் சோதனையில் விழுந்து போகிறவர்கள் அனேகர்!

ஓர்பாளைக்குறித்து வேதாகமம் அதிகமாகக் கூறவில்லை ஆனால் அவளுடைய சகோதரி ரூத்தைக் குறித்து அப்புத்தகம் முழுவதிலும் எழுதப்பட்டுள்ளது. தேவன் ஓர்பாளுக்கு அநீதி செய்யவில்லை. அவளுக்கு நகோமியின் மேலிருந்த அன்பைக் குறித்து அது எடுத்துக்கூறுகிறது. நகோமி நல்ல தாயாகவும், மாமியாராகவும் திகழுகிறாள். நம்மிலுள்ள நன்மையைப் பாராட்ட வேதாகமம் தயங்குவதில்லை. அவிசுவாசியின் பேரில் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து அன்பு கூர்ந்ததாக வேதாகமத்தில் ஒரே ஒரு முறை குறிப்பிடப்பட்டுள்ளது. மிகுந்த ஆஸ்தியுள்ள வேத அறிவு உள்ள வாலிபன் அவன் (மாற்கு 10:17-22) ஜென்ம சுபாவம் தேவசித்தத்திற்குக் கீழ்படிவதில்லை - மாம்சம் ஆவிக்கு விரோதமாக இச்சிக்கிறது (கலாத்தியர் 5:17).

நகோமியின் துன்பங்கள் மோவாபை விடச்சிறந்த ஒன்றை விரும்பச் செய்தன. மாறாத தமது அன்பினால் இஸ்ரவேலுக்கு மறுபடியும் ஆகாரம் கொடுக்கும் தேவனை நோக்கித்திரும்பும்படி தன் வழிகளை எல்லாம் சீர்திருத்த விரும்பினாள். ஓர்பாளுக்கு நேரிட்ட சோதனை என்ன? மோவாபில் அவள் நகோமியோடு வாழ்க்கைப் பயணத்தில் இருந்து நடக்க முடிந்தது. ஆனால் நகோமி தேவனிடம் திரும்ப எத்தனித்த போது ஓர்பாள் சோதனையில் விழுந்து போனாள் 'சுயம்' வென்று விட்டது.

மிகுந்த ஆஸ்தியுள்ள வாலிபனும் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் வார்த்தைகளைக் கேட்டு மிகுந்த

துக்கமடைந்தவனாகத் திரும்பிப் போனான். என்றல்லவா வாசிக்கிறோம்? அவிசுவாசம் மற்றவர்களைக் கவரக் கூடிய விதத்தில் தான் வெளிப்படுகிறது.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அப்போஸ்தலருடைய நாட்களில் கூடிவந்தது போலக்கூடி தேவனை ஆராதிக்கத் தீர்மானித்த அனேகம் விசுவாசிகள், பின்மாறிவிடுதல் காரணம் என்ன தெரியுமா? அதற்காக அவர்கள் கொடுக்க வேண்டிய விலைக்கிரயம் அதிகமாக இருப்பதால்தான் அப்படிப்பட்டவர்கள் மறுபடியும் சத்தியத்திற்குத் திரும்பி வருவதே இல்லை. வெளிப்படுத்தின விசேஷம் 3.8ல் கூறப்பட்டிருக்கும் திறந்த வாசல் வழியாய் அவிசுவாசத்தின் நிமித்தம் உட்பிரவேசிக்க மறுக்கும் அவர்கள் திரும்பி வருவது கடினமே! தீர்மானம் எடுக்கவேண்டிய வேளையில் "ஆண்டவரே நான் என்ன செய்யச்சித்தமாயிருக்கிறீர்" எனக்கேட்பதல்லவா சிறந்தது? கேட்பதற்கு மட்டுமல்ல அதரிசனமுள்ள தேவனாகிய அவர் கூறும் வழியில் செல்லவும் வேண்டும்.

'ஓர்பாள்' எனும் பெயருக்கு 'அவளுடைய கழுத்து' என்று பொருள்படும். அவளிடம் நொறுங்குண்ட ஆவி இல்லை. எனவே தான் தனது இச்சைகளை நிறைவேற்ற மோவாவிற்குத் தரும்பி போனாள். ஆனால் இறுதியில் மோவாபிற்கு கிடைக்கும் நியாயத்தீர்ப்பே அவளது பங்கு.

சர்தை சபை உலகத்தோடு ஒத்துப்போய் அதின் ஒரு பகுதியாகி விட்டது. திருடனைப் போலக் கர்த்தர் இவ்வுலகத்திற்கு வருவார். அவ்வண்ணமே சர்தை சபைக்கும் திருடனைப் போல்தான் வரப்போகிறார் (வெளிப்பாடு 3:3; 1 தெசலோனிக்கேயர் 5:4).

## சோதனையின் உச்சக்கட்டம்

ஓர்பாள் மோவாபிற்குப் போகத்திரும்பினாலும் ரூத் நகோமியை விடாமல் பற்றிக் கொண்டாள். இப்பொழுது ரூத்திற்குக் காத்திருக்கும் தனிமையைக் குறித்துப் பேசி நகோமி அவளுக்கு முன் இடறலை வைக்கிறாள். அப்பப்பா சாத்தானின் சூழ்ச்சிகள்தான் எத்தனை எத்தனை உண்மைதான். தனிமையை விடக் கொடுமையானது ஒன்றுமில்லையே.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இவ்வுலகத்தில் இருந்த நாட்களில் அவர் "வீட்டின் மேல் தனித்திருக்கும் குருவியைப் போல"

இருப்பதாகக் கூறினார். யாரும் அவர் மேல் பரிதாபம் கொள்ளவில்லை. "என் சகோதரருக்கு வேற்று மனுஷனும் என் தாயின் மக்களுக்கு அந்நியனுமானேன். (சங்கீதம் 69:8) எனக்கூறிப் புலம்பினார். அவருக்கும் பிதாவாகிய தேவனுக்கும் இடையே இருந்த ஐக்கியம் மிகவும் பலமானதாக இருந்தபடியால் அது முறிந்தபோது தனிமையை அவர் வெகுவாக உணர்ந்தார். நமது கீழ்ப்படிதலின் அளவுக்கேற்ப தனிமையின் அளவும் கூடும் நான் பூமியிலே சமாதானத்தை உண்டாக்க வந்தேன் என்று - நினைக்கிறீர்களா? சமாதானத்தையல்ல, பிரிவினையையே உண்டாக்க வந்தேன் என்று உங்களுக்குச் சொல்லுகின்றேன். எப்படியெனில் இது முதல் ஒரே வீட்டிலே ஐந்துபேர் பிரிந்திருப்பார்கள் இரண்டு பேருக்கு விரோதமாய் மூன்று பேரும், மூன்று பேருக்கு விரோதமாய் இரண்டு பேரும் பிரிந்திருப்பார்கள். தகப்பன் மகனுக்கும் மகன் தகப்பனுக்கும், தாய் மகளுக்கும், மகள் தாய்க்கும், மாமி மருமகளுக்கும் மருமகள் மாமிக்கும் விரோதமாய் பிரிந்திருப்பார்கள் (லூக்கா 10:51.53).

ஆனால் தனிமையைக் குறித்த மிரட்டல் கூட ரூத்தை மிரளச் செய்யவில்லை. ரூத்திற்கு விக்கிரகங்கள் தேவையில்லை. இனி தனது இருதயத்தின் வாஞ்சைகள் நிறைவேறவேண்டும். ரூத் என்றாலே 'திருப்தி' என்றல்லவா பொருள்? சரீர இச்சைகளை அல்ல, கர்த்தருக்குள்ளான புது வாழ்வின் வாஞ்சைகளை நிறைவேற்றத்துடித்தாள் அவள். விக்கிரகமும் விவாகமும் விரக்தியைத் தருமென்பது அவளறியாத ஒன்றல்ல. நகோமியைப் பற்றிப் படித்துக் கொள்வதை இனி ஒன்றும் தடை செய்ய முடியாது.

### பில்தெல்பியா என்பது.......!

நகோமி இவ்வுலகில் தேவனுடைய சாட்சிக்கு மாதிரியாக அமைகிறாள் என்று கண்டோமல்லவா? அனைத்தையும் இழந்து விட்டுக் கர்த்தரிடம் திரும்பும்" மீந்திருக்கிறவர்களுக்கு ஒப்பானவள் நகோமி! ரூத்திற்கு அது புரிந்தது. அவளும் அழுதாள். ஆனால் தேவன் தனக்கு முன்வைத்திருக்கும் திறந்தவாசலை அவளது விசுவாசக் கண்கள் கண்டன. (வெளிப்படுத்தல் 3:8) அதையாரும் பூட்ட முடியாது.

பிலதெல்பியாவிற்குக் கொஞ்சம் பெலன்தான் உண்டு. சாத்தானின் ஆலயங்களான பரம்பரைக்கொள்கைகளைத் தழுவிச் சடங்குகளில் நம்பிக்கை வைத்து தேவனுடைய ஜனங்கள் எனக்கூறித்திரிபவர்களால் நிறைந்திருக்கும் சபைகளும்,

கோவில்களும் அதை அங்கீகரிப்பதில்லை. அவள் பெரிய காரியங்களைச் செய்யவில்லை. அவளிடமுள்ளவர்கள் மற்றவர்களைப்பார்க்கிலும் மேம்பட்டவர்களல்ல. ஆனால் தங்களது இயலாமையையும், இல்லாமையையும் உணர்ந்தவர்கள் தேவனுடைய சட்ட ஒழுங்குகளை மதிப்பவர்கள். சுபாவ மனிதனின் இச்சைகளை சார்க்கும்படி அவளிடம் ஒன்றுமில்லை. ஆனால் அவளிலுள்ள ஒரு விசுவாசம், தேவன் ஒரு வழியைக் காட்டுவாரானால் அவள் ஆண்டவரே என்னோடு தங்கியிரும் உம்மோடு இணைந்து நடக்க உதவும் எனக்கூறுவாள்.

## வார்த்தையும் வாழ்க்கையும்

ரூத் உதட்டளவில் அல்ல. உள்ளத்திலிருந்து பேசும் சாட்சியை உடையவள். கர்த்தரைச் சேவிப்பதற்கு விலை கிரயம் செலுத்தத்தயங்காதவள். அவளுக்கு பெத்லெகேமைக் குறித்தோ, "மிகுந்த ஆஸ்திகாரனாகிய போவாசைக்குறித்தோ" ஒன்றும் தெரியாது. ஆனால் நகோமியிடம் அவள் கண்ட சில செயல்கள் அவளைக் கவர்ந்தன. அவளுடைய வார்த்தை தேவனுடைய நினைவுகளைக் கற்று அறிந்ததன் மூலம் வெளிப்பட்ட வார்த்தைகளல்ல. அவை ஆழமான விசுவாசத்தின் வெளிப்பாடுகளே! நகோமியின் சாட்சி பரிசுத்த ஆவியானவர் சகல சத்தியத்திற்குள்ளாகவும் நடத்தும் அனுபவத்தைக் கொண்டதாகும். கிறிஸ்துவுக்குள் புதிதாய்ப்பிறந்த யாருக்கும் போதிக்க வேண்டுவதில்லையே! சத்திய ஆவியானவர் அவளைச் சகல சத்தியத்திற்குள்ளாகவும் நடத்துவாரே? (யோவான் 2:20:27).

ரூத் நகோமியோடு ஒன்றாய் இருப்பதைக்குறித்தும் பேசுகிறாள் (ரூத் 1:16,17) இது பின்னர் அவள் போவாஸோடு ஒன்றாயிருப்பதற்கு ஏதுவாக அமைகிறது. தனது வார்த்தைகளின் வல்லமையை அப்போது தான் அவள் உணர்ந்து கொள்கிறாள்.

ஒரு மனிதன் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளும் போதோ, அல்லது சர்தை சபையிலுள்ள அங்கத்தினராய் இருக்கும்போதோ அவனால் திறந்த வாசலாகிய பிலதெல்பியாவைக்காண முடியும். அங்கே சகோதர அன்பு உண்டு. ஆவிக்குரிய உணவு உண்டு. இருதயக்கடினமும் சமுதாயத்தின் அங்கீகரிப்பும் அதற்குள் பிரவேசிக்கத்தடை செய்யலாம். ஆனால் விசுவாசத்தின் இயற்கைத் தன்மை அதற்குள் நடத்தப்பாடுபடும். இங்கே விசுவாசத்தின் இயற்கைத் தன்மை என்பது உணர்ச்சிகள் அல்ல விசுவாசத்தின்

உள்ளுணர்வு என்பது ஆவிக்குரிய கிரியை ஆகும். உணர்ச்சியோ ஜென்ம சுபாவத்தோடு இணைந்ததாகும். இயற்கையாக மனதில் எழும் உணர்வுகளை தேவனுடைய வசனத்தோடு ஒப்பிட்டுப்பார்த்துச் சரிசெய்யாமல் போனால் சாத்தான் உணர்ச்சிகளைப் பயன்படுத்தி தவறான வழியில் நடத்தி விடுவான்.

## விசுவாசிகளைச் சார்ந்து கொள்வதால் வரும் பயன்

ரூத்தின் சரியான விசுவாச அறிக்கை அவளை ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வம்ச வரலாற்றிலே இடம் பெறச் செய்தது. அவள் ஒரு எபிரேயப் பெண்ணல்ல. இதே போன்ற ஒரு அருமையான மனிதனை 2 சாமுவேல் 15:21 இல் காணலாம். அவன் தான் கித்தியனாகிய ஈத்தாய் இஸ்ரவேலரில் பெரும்பாலானோர் அப்சலோமைச் சார்ந்து கொண்டு தாவீதைப் புறக்கணித்த வேளையில் புறஜாதியானான ஈத்தாய் என்ன கூறுகிறான் பாருங்கள்" ராஜாவாகிய என் ஆண்டவன் எங்கே இருப்பாரோ, அங்கே உமது அடியானும் செத்தாலும், பிழைத்தாலும் இருப்பான் என்று கர்த்தருடைய ஜீவனையும், ராஜாவாகிய என் ஆண்டவனுடைய ஜீவனையும் கொண்டு சொல்லுகிறேன்''. நான் உம்மை விடுகிறதில்லை எனக்கூறிக்கொண்டு எலியாவைப்பின்பற்றின எலிசாவின் அர்பணிப்பு எத்தனைப் பெரியது (2 ராஜாக்கள் 2:2,6) "ஆண்டவரே யாரிடத்தில் போவோம், நித்திய ஜீவ வசனங்கள் உம்மிடத்தில் உண்டே" எனக்கூறி ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை விடாமல் பற்றிக்கொண்ட பேதுருவின் அர்ப்பணிப்பும் அதற்குக் குறைந்ததல்ல (யோவான் 6:68).

ஒவ்வொரு விசுவாசிகளின் உள்ளத்திலும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை முழுமையாகப் பின்பற்ற வேண்டுமென்கிற வாஞ்சை உண்டு. இவ்வாறு இல்லாவிடில் அவன் மறுபடியும் பிறந்தவனல்ல! ஆனால் வெளிப்பாடு 14ஆம் அதிகாரத்தில் கூறப்பட்டுள்ள 144000 பேரைக் குறித்துச் சொல்லப்படும் சாட்சி நம்மைக் குறித்தும் சொல்லப்படுமா? என்பதுதான் கேள்வி. அது என்ன? "ஆட்டுக்குட்டி யானவர் எங்கே போனாலும் அவர்களைப் பின்பற்றுபவர்கள் இவர்களே".

## கிறிஸ்துவைப் பின்பற்ற நாம் செலுத்தவேண்டிய கிரயம்

மத்தேயு 14:29ல் பன்னிரு சீடர்களும் படகில் யாத்திரை செய்யும் போது பேதுரு மட்டும் ஆண்டவராகிய இயேசு

கிறிஸ்துவிடம் செல்லும் படி படகை விட்டுத்தண்ணீரில் நடந்து போகிறான். மற்றவர்கள் அவரை நேசிக்கவில்லையா? நேசித்தார்கள் ஆனால் அவரிடம் நெருங்கிச் சேர அவர்கள் செலுத்தவேண்டிய விலை பெரிதாக இருந்தது. தண்ணீரின் மேல் பயணம் செய்ய மனிதனுக்குள்ள ஒரே ஒரு வாகனம் படகு! அதைவிட்டு விட்டுத் தண்ணீரில் இறங்க அவரை மட்டும் சார்ந்திருக்கும் இதயம் வேண்டும். அவர்களுடைய எளிய இதயம் இப்பெரிய சத்தியத்தை உட்கொள்ள மறுத்ததுதான் அவர்கள் பேதுருவைப் போலத்தண்ணீருக்குள் இறங்கத் தயங்கக்காரணம்! ஆனால் ரூத்திற்கு தயக்கமில்லை. "நீர் போகும் இடத்திற்கு நானும் வருவேன் என்கிறாள்".

## தங்குமிடமும், வசிக்குமிடமும்

"நீர் தங்கும் இடத்தில் நானும் தங்குவேன்". என்கிறாள். தங்குதல் தற்காலிகமான செயலாகும். வசித்தல் நிரந்தரமான வாழ்வைக் குறிக்கிறது. ரூத் வசிப்பேன் எனக்கூறாமல் தங்குவேன் என்கிறாள். சபையாகிய மணவாட்டிக்கு நிலையான நகரம் இங்கே இல்லை. சரீரத்தின் தலையும், மணவாளனுமாகிய கிறிஸ்துவைப் புறக்கணித்த இவ்வுலகில் அவள் தங்கியிருக்கும் காலத்தை வேதாகமம் இரவு என்றழைக்கிறது. மனிதக்குமாரன் இவ்வுலகத்தாரால் புறக்கணிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் காலம் இரவுதான் (ரோமர் 13:11-14; 1 தெசலோனிக்கேயர் 5:4-7; யோவான் 13:20; 2 பேதுரு 1:13) "விடிவெள்ளி நட்சத்திரம் எழும்பும் போது அவளது 'இரவு' முடியும். இவ்வுலகைப் பொறுத்த வரையில் நீதியின் சூரியன் செட்டைகளின்கீழே ஆரோக்கியத்தோடு உதிக்கும்போது அதின் இரவும் முடிவு பெறும் (மல்கியா 4:2) மணவாளனைப் புறக்கணித்த இவ்வுலகில் மணவாட்டியாகிய சபையும் புறக்கணிக்கப்பட்ட நிலையில் அவரது பாடுகளோடு ஐக்கியம் கொள்ளுகிறது. இவ்வுலகின் அங்கீகரிப்பைப் பெற்ற மதக்கூட்டத்தினர் மணவாட்டியாய் இருப்பார்களோ? சிந்தித்துப் பாருங்கள் மணவாளனைப் புறக்கணித்த உலகத்தோடு சபை ஒத்து வாழ விரும்பினால் வேசித்தனமல்லவா அது! புறக்கணிப்பே இரவாகும்? இரவின் அனுபவத்தைப் பெறாதவர்கள்" விடிவெள்ளியைக் காண்பது எப்படி.

ரூத்தின் விதவைக் கோலம் அவளது வாழ்வின் இருளின் நாட்களே! அந்நாட்களில் இவ்வுலகின் பாடுகள் மட்டுமே அவளது பங்கு. சகோதர சகோதரிகள் அன்பற்ற தன்மையும் சாத்தானின்

அளவற்ற சோதனையும் நிறைந்த உலகம் தான் இது! எனினும் சகோதர சகோதரியின் பெலவீனங்களைப் பொருட்படுத்தாமல் "உம்முடைய ஜனம் என்னுடைய ஜனம்" என்கிறாள். ரூத்தினுடைய ஜனம் யார்? யூதர்களா? இல்லை! தேவனுடைய குடும்பத்தாராய் அவருக்குச் சாட்சியாக நிற்பவர்கள் மட்டுமே அவளுடைய ஜனம். ''மீந்திருப்பவர்கள் மட்டுமே'' அவர்கள் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய தேவனை மட்டுமே ஆராதிப்பவர்கள்! உயிர்த்தெழுந்த பிறகு தேவனைக்குறித்து ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து கூறினதென்ன ''என் பிதாவினிடத்திற்கும் உங்கள் பிதாவினிடத்திற்கும், என் தேவனிடத்திற்கும் உங்கள் தேவனிடத்திற்கும் ஏறிப்போகிறேன்" (யோவான் 20:17) என்று கூறினார்.

"நீர் மரணமடையும் இடத்தில் நானும் மரணமடைந்து"- ஒரு விசுவாசி எங்கே மறிக்கிறான்? ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சிலுவையின் மேல் செய்து முடித்த பெரும் பணியின் அடிப்படையிலுள்ள நமது நிலையைக் குறித்து இங்கே நாம் கவனிக்கப்போவதில்லை ஏனெனில் விசுவாசிகள் அனைவருமே கிறிஸ்துவுடனே கூட மரித்திருக்கிறார்கள் (ரோமர் 6:8; கொலோசேயர் 3:3) நடைமுறை வாழ்வில் இச்சத்தியத்தை எவ்வளவு தூரம் புரிந்து கொண்டு செயல் படுத்துகிறோம்? என்பது தான் கேள்வி. கலாத்தியர் 2:20ல் பவுல் பின்வருமாறு கூறுகிறார். "கிறிஸ்துவுடனே கூடச் சிலுவையில் அறையப்பட்டேன். ஆயினும் பிழைத்திருக்கிறேன். இனி நான் அல்ல கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார். நாம் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ என்னில் அன்பு கூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக் கொடுத்த தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன்". இங்கே "நாம்" எனும் பதில் பயன்படுத்தப்படாமல் நான் எனும் சொல் பயன் படுத்தப் பட்டிருப்பதைக் கவனிக்கவேண்டும். இதுவே செயல் முறைப்படுத்தலாகும். கலாத்தியர் 6:14 ல் பவுல் தொடர்கிறார் "அவரால் உலகம் எனக்குச்சிலுவையிலறை யுண்டிருக்கிறது நானும் உலகத்திற்குச் சிலுவையில் அறையுண்டிருக்கிறேன்." இவ்வுலகத்திற்கு கிறிஸ்துவோடுள்ள உறவு சிலுவையில் தான் தீர்மானிக்கப்படுகிறது. கிருபையின் செய்தியோடு இவ்வுலகத்திற்கு வந்தார் அவர். "தேவன் உலகத்தாருடைய பாவங்களை எண்ணாமல், கிறிஸ்துவுக்குள் அவர்களைத் தமக்கு ஒப்புரவாக்கி—" (2 கொரிந்தியர் 5:19) ஆனால் இவ்வுலகம் அவரையும் விரும்பவில்லை. தேவனுடைய கிருபையையும் விரும்பவில்லை. "அவனை அகற்றும் அகற்றும்

சிலுவையில் அறையும்" என்கிற கூக்குரலிட்டது. அதன் பின்னரே 'கல்லறை' வந்தது. உலகம் செய்வது அதைத்தான் ஒருவனைத்தீர்த்துக் கட்டிய பிறகு அவனை புதைத்து விடுகிறது. அதற்குப் பிறகு அது அவனைக்குறித்து எண்ணிப்பார்ப்பதுமில்லை.

## வேரூன்றும் உறவுகள்

ரூத் நகோமியியோடு மரித்து அடக்கம் பண்ணப்பட விரும்பினாள். தன்னோடு இணைந்த மோவாபியர் அனைவரும் தன்னை மறந்தாலும், வெறுத்தாலும் நகோமியியோடு இணைந்து கொள்வதில் உவகை கொண்டாள் அவள்.

நாமும் ரூத்தைப் போல ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவோடு இணைந்து நடக்கும் மனமுடையவர்களாயிருக்கிறோமா? இவ்வுலகம் அவரோடுள்ள சகல தொடர்புகளையும் அறுத்துக் கொண்டு விட்டது. அவரும் "சில நாட்களுக்கு" உலகத்தோடு ஒரு தொடர்பும் கொள்ளப்போவதில்லை. உலகத்துக்காக அவர் பிதாவோடு வேண்டிக்கொள்ளவில்லை. (யோவான் 17:9) ஆனால் ஒரு நாளிலே ஜாதிகளை தமக்கு சுதந்தரமாகத்தரும்படி பிதாவோடு வேண்டிக்கொள்வார். (சங்கீதம் 2:8) அதன் பின்பு அதை நியாயம் விசாரிப்பார். அந்நாளிலே நாம் அவரோடு இவ்வுலகத்தை நியாயந்தீர்ப்போம் (1 கொரிந்தியர் 6:2).

ஞானஸ்நானத்தின் போது நாம் இச்சத்தியத்தை தான் அறிக்கை செய்கிறோம். ஞானஸ்னானம் பெற்ற நாம் அனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்னானம் பெற்றதாக பவுல் எழுதுகிறார். (ரோமர் 6:3,4) அவ்வண்ணமாகவே அடக்கம் செய்யப்பட்டோம். ஆனால் இத்தனைக்காரியங்கள் ஞானஸ்நானத்தில் உண்டென்று நம்மில் அநேகர் அறிந்திருக்கவில்லை. இச்சத்தியத்தின் அடிப்படையில் தண்ணீரைத்தெளித்து ஞானஸ்நானம் கொடுப்பது எவ்வளவு தவறானது என்றுத்தெள்ளத்தெளிவாக விளங்கும்.

ரூத் ஞானஸ்னானத்தில் கிறிஸ்துவோடு கூட அடக்கம் பண்ணப்படும் விசுவாச அறிக்கையின் நிழலாக மரணத்தைக் குறித்துப் பேசுகிறாள்.

இதற்குப் பிறகு நகோமி ரூத்தை அதைரியப்படுத்தும் செயலை நிறுத்தி விடுகிறாள். இப்படிப்பட்ட தீர்மானத்தை யாரால் எதிர்க்கமுடியும். இருவரது உள்ளமும் பெத்லகேமை எண்ணி

ஏங்குகிறது. முன்னாட்களிலே நகோமி அனுபவித்த ஆசிர்வாதங்கள் அவளை அவ்வூரை வாஞ்சிக்கிறது. நகோமி மூலமாகக் கேள்விப்பட்ட ஆசிர்வாதங்கள் ரூத்தை வாஞ்சிக்க வைக்கின்றன. வழிப்பயணத்தின்போது இருவரும் பேசிக்கொண்டே நடந்திருப்பார்கள். நகோமிக்குப் பெத்லெகேமைக் குறித்துக் கூறுவதில் இன்பம்! ரூத்திற்குக் கேட்பதில் இன்பம்!

## பெத்லெகேமின் புதுப்பொலிவு

வறுமை நீங்கி வளம்பெற்று வாழும் பெத்லெகேமியரின் நிலையைக் கண்ட நகோமி மன மகிழ்ந்தாள். அவர்கள் போவாஸைப் போலவே இருந்தனர். பரலோகப் போவாஸோடு அனுதினமும் நாம் உறவாடுவோமாயின் அவரைப் போலவே நாமும் ஆகிவிடுவோம். திரும்பிவரும் பின் மாற்றக்காரனை புன்னகையோடு வரவேற்போம். கிறிஸ்துவின் அன்பு நம்மை நெருக்கி ஏவும். திரும்பி வந்தவளை நகோமி, பிரியமானவள் அல்லது மனமகிழ்ச்சி எனும் பெயர் சூட்டி அழைப்போம்.

கர்த்தரிடத்தில் இருந்து தூரமாய்ப்போன ஆத்துமாக்கள் திரும்பி வரக்காரணம் என்ன? ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் பரிந்து பேசும் ஊழியம்! “அவர் என் ஆத்துமாவைத் தேற்றி தம்முடைய நாமத்தின் நிமித்தம் என்னை நீதியின் பாதையில் நடத்துகிறார் *(சங்கீதம் 23:3)* நாமாகவே ஒரு நாளும் அவரிடம் திரும்பி வருவதில்லை. நமக்கு அதற்கான பலமும் கிடையாது. சுயசித்தம் தேவனை விட்டுத் தூரமாகப்போக ஏவினபடியால் அது தேவனுக்கு விரோதமான பகையாகும். தேவன் தமது வசனத்தை அனுப்பி நம்மைத் திருப்பி கொள்கிறார். நாம் நிர்மூலமாகாதிருப்பது கர்த்தருடைய கிருபையே. அவருடைய இரக்கங்களுக்கு முடிவில்லை. அவைகள் காலை தோறும் புதியவைகள். *(புலம்பல் 3:22-23)* நகோமியும் கர்த்தர் தம்முடைய ஜனங்களைச் சந்தித்து அவர்களுக்கு ஆகாரம் அருளினார்.” எனும் வார்த்தையைக் கேட்டபிறகல்லவா திரும்பி வந்தாள்.

## இப்படியும் ஓர் இழப்பா?

மோவாபிற்குப் போகும் போது “நகோமி” எனும் பெயரை நாம் இழந்து போகிறோம். மாரா வாக (கசப்பாக) மாறி விடுகிறோம். ஏனெனில் இரட்சிப்பின் சந்தோஷத்தை இழந்தபடியால் தான்! இந்த அனுபவத்திற்காக தேவனுக்கு நன்றி சொல்லவேண்டும்.

மோவாபிலும் மகிழ்ச்சி நீடித்தால் நாம் பெத்லெகேமிற்குத் திரும்பி வரப்போவதில்லை. நமது பாவத்தில் மரித்து அடக்கம் பண்ணப்படுவோம்.

±

பெத்லெகேமிற்குத்திரும்பி வந்த நகோமிக்கு இது நன்றாக விளங்கிற்று. கணவனையும், பிள்ளைகளையும் இழந்த வெறுமையான பாத்திரம் அவள். அவளோடு இருப்பவளும் வெறுமை நிறைந்த ஓர் விதவை தான்.

தேவனுடைய கிருபைக்கு முடிவேயில்லை. எனினும் நாம் செய்த பாவங்களின் பின் விளைவுகள் நம்மை பின்தொடராமல் இருப்பதில்லை. மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான். தன் மாம்சத்திற்கென்று விதைக்கிறவன் மாம்சத்தினால் அழிவை அறுப்பான். ஆவிக்கென்று விதைக்கிறவன் ஆவியினாலே நித்திய ஜீவனை அறுப்பான். (கலாத்தியர் 6:7-8) சில சத்தியங்களை நாம துக்கமான அனுபவங்கள் மூலமாகவே கற்றுக்கொள்ள முடிகிறது. உதாரணமாக "என் மாம்சத்தில் நன்மை வாசமாயிருக்கிறதில்லை (ரோமர் 7:18) எனும் உண்மை. கீழ்ப்படிதலின் பாதையிலே பசுமையும் சமாதானமும் உண்டு. சர்வ வல்லவர் அவளைக் கிலேசப்படுத்தினார் என்கிறாள் நகோமி. அவருடைய ஆளுகையின் தனிச்சிறப்பு அது. சிட்சிக்கப்பட்ட அவள் பெத்லெகேமிற்குத் திரும்பி வந்தாள். தேவனுடைய வீட்டிலுள்ள ஆசீர்வாதங்களை எண்ணி ஏங்க வைத்தது அவளுடைய உபத்திரவமே! அப்பத்தின் வீடாகிய பெத்லெகேம் அவளை அரவணைக்க எப்போதும் தயார்.

## ஆவிக்குரிய அறிவை இழந்த நகோமியும் ஆதி அன்பை ருசிக்கும் ரூத்தும்

ஆபிரகாமைத்திடப்படுத்தி, பெலப்படுத்த தேவன் சர்வ வல்லமையுள்ள தேவன்" எனும் நாமத்தில் தன்னை அவனுக்கு வெளிப்படுத்தினார். மனிதனுடைய நினைவிற்கெட்டாத அசாதாரணமான காரியங்களை அவனுக்கு வாக்குப் பண்ணினார். ஆனால் நகோமியோ சர்வ வல்லவர் எனும் நாமத்தைத் தவறான சந்தர்ப்பத்தில் பயன் படுத்துகிறாள். "சர்வ வல்லவர் எனக்கு மிகுந்த கசப்பைக் கட்டளையிட்டார்" என்கிறாள். "சர்வ வல்லவர் என்னைக் கிலேசப்படுத்தியிருக்கையில்....." எனக்கூறிப்புலம்புகிறாள். அவளுடைய துக்கத்திற்குக் கர்த்தர் தான் காரணம் என்கிறாள். அவளைப் பொறுத்த வரையில் சர்வ வல்லமை ஆறுதலோடும்,

திடப்படுத்தலோடும் இணைக்கப்பட்ட ஒன்றல்ல. அவளது நினைவு என்ன? இதற்கெல்லாம் நான் காரணமல்ல? கர்த்தர்தான் காரணம்!

தேவனுடைய பிரசன்னத்தில் அறிவொளியைப் பெற்றுக்கொள்ளாத மனித இதயம் எவ்வளவு மடமையானது பாருங்கள். தேவனிடம் இருந்து விலகிப் போகும் இருதயம் ஞானத்தையும், ஒளியையும் இழந்து விடுகிறது. இழந்து போன ஒளியை முழுமையாகப் பெற்றுக்கொள்வதென்பது இயலாத காரியம். தாவீதின் வாழ்விலும், நகோமியின் வாழ்விலும் இதைக் காணலாம். வாற்கோதுமை அறுப்பின் துவக்கத்தில் பெத்லகேமிற்கு வந்த அவள் கர்த்தருடைய கிருபையை நம்பாமலிருக்கலாமா? ஏனெனில் முதல் முதலாக விளைந்து அறுவடைக்குத் தயாராவது வாற்கோதுமையே. அதற்குப் பிறகு கோதுமை விளையும். கோதுமை அறுவடைக்குப்பிறகு திராட்சைக்குலைகள் அறுவடைக் குத்தயாராகும் (யாத்திராகமம் 9:31, 32, ரூத் 2:23) "கர்த்தர் தமது ஜனத்தை சந்தித்து ஆகாரம் கொடுத்தார்." எனும் செய்தி அவளது செவிக்கு எட்டியபோது அறுவடை முடிந்திருக்கும் என்றுதான் அவள் நினைத்தாள். ஆனால் அவள் வந்தபோது நிலங்கள் அறுவடைக்குத் தயாராயிருப்பதைக் காண்கிறாள். ஏதோ அவர்கள் வந்த பிறகு கொழுத்தகன்றை அடிக்க காத்திருப்பதைப் போலக்கர்த்தர் காத்திருக்கிறார். அவர் எவ்வளவு நல்லவர்! நாம் ஆராதிக்கும் தேவன் எவ்வளவு நல்லவர்!

## இன்றியமையாத இரு உண்மைகள்

இங்கே நாம் வேறொரு முக்கியமான காரியத்தைக் கூடக்கவனிக்கவேண்டும். முதலாம் அதிகாரத்தின் 4ஆம் வசனத்தைத் தவிர இதர வசனங்களில் காலத்தைக் குறித்த சொல்வழக்கு "அறுவடை"யோடு இணைக்கப்பட்டுள்ளது. 4 ஆம் வசனத்தில் மோவாபிலுள்ள அவர்களது சஞ்சாரம் குறப்பிடப்பட்டுள்ளது. அது உலகப்பிரகாரமான குறிப்படையாளமே. ஆனால் பெத்லெகேமிலுள்ள வாழ்க்கையைக் குறித்து வாசிக்கும் போது அறுவடைக்காலத்திற்கு முதலிடம் தரப்பட்டுள்ளது. உபாகமம் 16ஆம் அதிகாரத்தில் தேவன் வருடத்தை அறுவடையின் அடிப்படையில் பிரித்தார் எனினும் துவக்கம் பஸ்காவில் தொடங்குகிறது. பின்னர் அறுவடை செய்யப்பட்டவிளைப்பலன்கள் கூட்டிச் சேர்க்கப்பட்டு கூடாரப்பண்டிகையோடு வருடம் முடிவடைகிறது. ரூத்தின் புத்தகத்திலும் திருமணத்தோடு நிகழ்ச்சிகள் முற்றுப்பெறுகின்றன.

அத்தருணத்தில் போராடிக்கும் வேலை நடைபெறுவதாக வேதாகமம் கூறுகிறது.

## மீந்திருக்கிறவர்களுக்கு நிழலான ரூத்

இதைவிட அசாதாரணமான ஒரு காரியத்தை நாம் ரூத்தின் புத்தகத்தில் காணலாம். 22ஆம் வசனம் எபிரெய மொழியில் ரூத் மோவாப் தேசத்திலிருந்து திரும்பி வந்தாள்" என்று ஆணித்தரமாகக் கூறுகிறது. அவிசுவாசிகளான சில விமாசகர்களுக்கு இது ஒரு புரியாத புதிர் தமிழ் வேதாகமத்தில் நகோமி ரூத்தோடுங் கூடத்திரும்பிவந்த தாகவே எழுதப்பட்டுள்ளது. உடன் நகோமியுடன்எனும் வேற்றுமை உருபு வேதாகமத்தின் ஆவிக்குரிய தீர்க்கதரிசன நிறைவேறுதலைப் புரிந்துகொள்ள இடறுதலாக அமைகிறது! கொரிந்தியர் 9:9-10 இப்படிப்பட்ட ஒரு சத்தியம் விளக்கப்பட்டுள்ளது. இஸ்ரவேல் ஆதிநிலைக்கு ஏகும் தீர்க்கதரிசனங்களைக் குறித்த அறிவுள்ள எவரும் ஒரு காரியத்தை எளிதாகப் புரிந்து கொள்ளலாம். கடைசி நாட்களில் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவிடம் திரும்பி வரும் "மீந்திருக்கிற" யூதர்களுக்கு நிழலாக அமைந்தவள் தான் ரூத். மீந்திருக்கிறவர்களின் பிரதிநிதியாக ஒரு மோவாபியப்பெண் அமைந்துள்ளாள். காரணம் என்ன? அவர்கள் அவ்வளவு தூரம் கர்த்தரை விட்டு விலகிப்போய் விட்டனர். தீர்க்கதரிசன நிறைவேறுதலைக்குறித்து சர்ச்சை செய்ய இச்சிறு நூல் போதாது.

நகோமிக்கும் ரூத்திற்கும் இடையே உள்ள வேறுபாட்டைக் கவனியுங்கள். நகோமி ஒரு பின் மாறிப்போன ஒரு விசுவாசி. ஆனால் ரூத்தோ ஆதி அன்பை ஆனந்தித்து அனுபவிப்பவள். நகோமிக்கு இருக்கும் அளவிற்கு அவளுக்கு அறிவு இல்லை தான் எனினும் அவளது விசுவாசம் காரியங்களைப்புரிந்து கொள்ளச் செய்தது. மாம்சத்தில் நன்மை வாசமாயிருப்பதில்லை எனும் உண்மையைக் கர்த்தரிடத்திலிருந்து தூரமாய் போய் துக்கங்களின் மூலம் நகோமி கற்றுக்கொண்டாள். ஆனால் கர்த்தரோடுள்ள ஐக்கியத்தின் மூலம் ரூத் இதைக் கற்றுக் கொண்டாள். இச்சத்தியத்தை ரூத் நடைமுறைப் படுத்திய படியால் நகோமியைப் போல துக்கங்களின் பாதை வழியாய் அவள் கடந்து செல்லவேண்டியதில்லை. நகோமி முறுமுறுக்கிறாள் ரூத் மிகவும் பரிதாபப்பட்டதாயினும் அவள் முறுமுறுக்கவில்லை அன்பும் விசுவாசமும் அவளது இருதயத்தில் ஆளுகை செய்தன. இவ்விரண்டுமே நன்மையை எச்சூழ்நிலையிலும் உயர்த்த முடியும்.

## அறுவடைக்குமுன் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டி

யாத்திராகமம் 9:31; ரூத் 2:23 வசனங்களிலிருந்து, முதன் முதலாக அறுவடை செய்யப்படும் தானியம் வாற்கோதுமை தான் என்று கண்டோமல்லவா? உபாகமம் 16, லேவியராகமம் 23. அதிகாரங்களிலிருந்து வேறு சில விஷயங்களைப் புரிந்து கொள்கிறோம்.

ஆபீப் மாதத்தில் வாற்கோதுமை அறுவடை தொடங்குகிறது. ஆபீப் என்றாலே பச்சைக் கதிர்கள் என்று தான் பொருள். பஸ்கா ஆட்டுக்குட்டி அடிக்கப்படும் மாதமும் இதுவே! அடிக்கப்பட்ட பஸ்கா ஆட்டுக்குட்டியின் அடிப்படையிலேயே கர்த்தருக்குப் பூமியின் மேல் பலனும், மனிதனுக்குப் பயனும் உண்டாகும். இச்சத்தியத்தை 2 சாமுவேல் 21:3,9 வசனங்களில் காணலாம். வாற்கோதுமை அறுவடைக்குமுன் பாவ பரிகாரமாக மரணம் சம்பவிக்கவேண்டும் பஸ்கா ஆட்டுக்குட்டி அடிக்கப்பட்ட பிறகு முதற்பலனான கதிர்கட்டை அசைவாட்டும் பலியாகச் செலுத்தும் படி ஆசாரியனிடம் கொண்டு போகவேண்டும். ''அது அங்கீகரிக்கப்படும்படி ஆசாரியன் அந்த கதிர்கட்டை ஓய்வு நாளுக்கு மறுநாளில் (ஞாயிறு) கர்த்தருடைய சந்நிதியில் அசைவாட்ட வேண்டும். (லேவியராகமம் 23:11) அசைவாட்டப்படும் முதற்பலன் உயிர்த்தெழுந்த ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைக் குறிக்கிறது. இதை இராஜாக்கள் 4.38.43 வசனங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கவும். நகோமியும் ரூத்தும் பெத்லெகேமிற்கு வந்தபோது தான் பஸ்கா ஆட்டுக்குட்டி அடிக்கப்பட்டிருந்தது. முதற்பலனான கதிர்கட்டுகளை தேவப்க்தியுள்ள எபிரேயர் ஆசாரியனிடம் கொண்டு போய்க்கொண்டிருந்தனர் மறுபடியும் நமது கவனம் வாற்கோதுமை அறுப்பின் துவக்கத்திற்கே ஈர்க்கப்படுகிறது. பெத்லெகேமில் வாழ்வதென்றால் அது உயிர்த்தெழுதலினால் சாரமேற்றப்பட்ட வாழ்க்கையாக இருக்கும். கிறிஸ்துவானவர் சிலுவையில் செய்து முடித்த பெரும் பணியின் அடிப்படையில் அமைந்த உயிர்த்தெழுதலின் வாழ்வே அது!

## இதுவரை கற்றது

முதலாவதாக. எபேசு சபையின் நிலைமையைப் பார்த்தோம் (வெளிப்பாடு 2:1.7) மேற்போக்காகப்பார்த்தபோது எல்லாம் சரியாகத்தான் தோன்றிற்று. நாம் எலிமெலேக்கைக் குறித்துப்

பார்த்தோம். என் தேவனே என் ராஜா என்பது அவனது பெயரின் பொருள். பெயருக்கேற்ற சாட்சி அவனிடமில்லை நகோமி என்பிரியமே அல்லது என் மகிழ்ச்சியே எனும் பெயரைக் கொண்டவள் அவள். ஆனால் ஆதி அன்பிலிருந்து அவ்விருவரும் விழுந்து போயினர் என்பதற்கு அவர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு இட்டப்பெயர்களே சான்று. 3 ஆம் வசனத்தில் பெர் கமுசபையைக் கண்டோம். சாத்தானின் சிங்காசனம் உள்ள இடத்திலல்லவா அது உள்ளது. "என் தேவனே, என் ராஜா எனும் பெயரை உடையவன் மரிக்கிறான். புறக்கணிக்கப்பட்ட ராஜாவாகிய இயேசு கிறிஸ்துவை ராஜாவாக அங்கீகரிக்கும் சாட்சி அற்றுப்போன இடம் தான் அது 4ஆம் வசனத்திலே தியத்தீரா சபையைக் கா்ண்கிறோம். மோவாபின் விக்கிரகங்களோடு பின்னிப்பிணைந்து கிடக்கும் அலங்கோலமான நிலைமையில் அது கிட்க்கிறது. 5ஆம் வசனத்தில் சர்தை சபையைக் காண்கிறோம். மோவாபின் விக்கிரகங்களோடு பின்னிப்பிணைந்து கிடக்கும் அலங்கோலமான நிலைமையில் அது கிடக்கிறது. "5ஆம் வசனத்தில் சர்தை சபையைக் காண்கிறோம்" உயிருள்ளவனென்று பெயர் கொண்டிருந்தும் செத்தவனாயிருக்கும் சபை அது! 6ஆம் வசனம் முதல் பிலதெல்பியா சபையைக்குறித்துப்பார்த்தோம். ஆதி நிலைக்குத் திரும்பும் சபை அது! பழைய மகிமைக்கல்ல, பலவீனத்தோடும் தேவதுக்கத்தோடும் தனது தவறை உணர்ந்து, தேவனிடம் திரும்பும் சபை அது. இச்சபையின் பிரதிநிதியாக நகோமி திகழுகிறாள். ஆனால் ரூத்தில் நாம் ஆதி அன்பையும் தேவனுடைய நினைவுகளுக்கிணங்க செயல்படும் இயற்கை குணநலன்களையும் காண்கிறோம். பெத்லெகேம் என்றும் "அப்பத்தின் வீடுதான்" வாற்கோதுமை அறுப்பின் காலத்தில் இருவரும் அங்கே திரும்பி வருகின்றனர். முதல் அறுவடையில் நாம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சிலுவையின்மேல் செய்து முடித்த பெரும் பணியின் அடிப்படையில் அமைந்த உயிர்த்தெழுதலையும், அதின் குணநலன்களையும் காண்கிறோம். சபையின் குணநலன்களை வெளிப்படுத்துவதும் உயிர்த்தெழுதலே.

தொடர்ந்து வரும் அதிகாரங்களில் பிலதெல்பியா சபையின் குணநலன்களையும், ரூத் எவ்வாறு போவாஸுடன் முழுமையாக இணைந்து விடுகிறாள் என்றும் தியானிப்போம்.

## அத்தியாயம் 2

# முதல் வசனத்தின் முக்கியத்துவம்

இரண்டாம் அதிகாரத்தில் முதன் வசனத்திலே போவாஸ் அறிமுகப்படுத்தப்படுகிறான். "மிகுந்த ஆஸ்திகாரனாகிய இனத்தான்" எனும் வார்த்தைகள் மூலம் அறிமுகம் தொடங்குகிறது. வேதாகமத்தில் ஏதேனும் முக்கியமான காரியத்தைப் போதிக்க இம்முறையை ஆவியானவர் கைக்கொள்ளுகிறார். சிறப்பாக சங்கீதங்களில் இம்முறை பயன்படுத்தப் பட்டுள்ளது. முதல் வசனம் ஒரு சத்தியத்தையோ அல்லது சூழ்நிலையையோ விவரிக்கிறது. அதற்குப்பின் வரும் வசனங்கள் சங்கீதக்காரன் எவ்வாறு அச்சத்தியத்தைக் கண்டு கொண்டார், அல்லது அத்தகைய சூழ்நிலைக்கு உள்ளானார் என விளக்குகின்றன. பரிசுத்த ஆவியானவர் நமக்கு அழுத்தம் திருத்தமாகச் சில சத்தியங்களைப் போதிப்பதற்கு இம்முறையைக் கையாளுகிறார்.

மரணம் எல்லாவற்றையும் வாரிக்கொண்ட பிறகு நமது நிலைக்கேற்ற வாழ்க்கை இல்லாமற்போகிறது. இத்தருணத்தில் மீட்பதற்கான உரிமையும், வல்லமையும் உடைய ஒருவரின் உயிர்த்தெழுதலின் மூலமாகவே இழந்துபோன ஆசிர்வாதங்களைத்திரும்ப பெற முடியும். போவாஸ் இத்தகைய மீட்பருக்கு நிழலாக இருக்கிறான். உயிர்த்தெழுந்த கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவிற்கு அவன் நிழலாக அமைகிறான்.

வாற்கோதுமை அறுப்பின் துவக்கத்திலிருந்து மோவாபிலிருந்து பெத்லெகேமிற்கு வரும் செய்கை மீட்பின் தொடக்கமேயாகும். ஆனால் ஒரு ஆத்துமா மீட்பின் மன மகிழ்ச்சியை ருசி பார்க்கவும், மகிமைப் படுத்தப்பட்ட கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவிற்கு சாட்சியாகவும் வாழ விரும்பினால் தனிப்பட்ட முறையில் அது மீட்பரை அறிந்துகொள்ள வேண்டும் 'மீட்பை' அறிந்திருக்கிறதற்கும் மீட்பரை அறிந்திருப்பதற்கும் இடையே வேறுபாடு உண்டு.

போவாஸ் எனும் வார்த்தையின் பொருள் அவரில் பலம் உண்டு என்பதாகும். எபிரெய பதிப்பில் "பராக்கிரமசாலியான மிகுந்த ஆஸ்திகாரன்" எனக்குறிப்பிடப்பட்டுள்ளது. இஸ்ரவேலை எதிரிகளின் கையிலிருந்து மீட்ட கிதியோனும் யெப்தாவும் பராக்கிரமசாலிகள் என்றழைக்கப்பட்டுள்ளனர். (நியாயாதிபதிகள் 6:12;11:1) ஒரு விதத்தில் அவர்களும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவிற்கு நிழலாக இருக்கின்றனர். அவர் கூறுவதென்ன? வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. நான் முந்தினவரும் பிந்தினவரும் உயிருள்ளவருமாயிருக்கிறேன். மரித்தேன் ஆனாலும் இதோ சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன். ஆமென். நான் மரணத்திற்கும் பாதாளத்திற்கும் திறவு கோல்களை உடையவராயிருக்கிறேன்." (மத்தேயு 28:18, வெளிப்படுத்தல் 1:17,18) இவ்வாறு அவர் மாத்திரமே கூற முடியும்.

தேவன் நமது கண்களை உயிரோடிருக்கும், மகிமைப்படுத்தப்பட்ட ஒருநபருக்கு நேராகத்திருப்புகிறார். மனிதகுமாரனாகிய இவர் தெய்வீக அன்பு மனுக்குலத்திற்கு தரச்சித்தங்கொண்ட வல்லமை அனைத்தையும் பெற்றுக்கொண்டார். தேவனும் அவரை எல்லாவற்றிற்கும் மேலாக உயர்த்தி தமது வலது பாரிசத்திலே உட்கார வைத்தார்.

இந்த அற்புதமான நபர் நகோமிக்கு கணவனும் உறவினனும் கூட! அவருக்கு மீட்பதற்கான உரிமை உண்டு (எபிரேயர் 2:11:15) நகோமியைப் பொறுத்தவரை இது ஒரு அற்புதமான எண்ணமே! நமக்கும் இது அற்புதமான எண்ணமல்லவா? தேவன் நமக்குத்தந்த நிலையை செயல்முறைப் படுத்தாமலும், பாராட்டாமலும் இருக்கும் இந்நாட்களில் இது அற்புதமான நினைவு தான்! நகோமி இனி ரூத்தின் மூலமாகவே (ரூத் விசுவாசத்திற்கும் நிழலாயிருக்கிறாள்) போவாஸை அணுகமுடியும். தேவனது வல்லமையை அறிக்கை செய்தபடி தேவனே என் ராஜா எனக்கூறிக்கொண்டுதான் போவாஸை அணுகமுடியும் எலிமெலேக்கின் பெயரைச் சொல்லியல்லவா அவள் போவாசை அணுகுகிறாள்.

ரூத்திற்கு இப்பொழுதும் போவாஸை யாரென்று தெரியாது. அவளுடையகண்கள் யாருடைய கண்களிலாவது தயை கிடைக்குமா என்று தேடுகின்றன. அவரைத்தேடுகிறாள் அவள்! (ரூத் 2:2).

தேவன் தமது ஜனத்தை சந்தித்து ஆகாரம் அருளினார். எனும் நற்செய்தி வேகமாகப் பரவுகிறது.அந்த வார்த்தையை நகோமியும், ரூத்தும் விசுவாசித்தார்கள். பெத்லெகேமிற்குத் திரும்பினார்கள் அறிமுகமற்றவளாக ரூத்தும், அனைத்தையும் இழந்தவளாக நகோமியும் வாற்கோதுமை அறுப்பின் துவக்கத்தில் அங்கே வருகின்றனர். ஆனால் அப்பத்தில் எவ்வாறு பங்கு பெற முடியும்?அவர்களுடைய சுதந்திரம் அற்றுப் போயிற்று. அவர்கள் உழவுமில்லை, விதைக்கவுமில்லை தேவன் தமது கிருபையை அங்கே வெளிப்படுத்துகிறார்., தரித்திரரையும், அந்நியரையும் தேவன் போஷிக்கும் விதத்தை உபாகமத்தில் காணலாம். அறுவடையைக் குறித்துப் பேசும்போது மறதியாய் வைத்து வந்த அரிக்கட்டையை பரதேசிக்கும், திக்கற்ற பிள்ளைக்கும், விதவைக்கும் விட்டு விடும் படிக் கூறுகிறார். (உபாகமம் 24:19) லேவியராகமம் 19:9, 23:22 ன்படி வயலின் ஓரத்திலிருக்கும் கதிர்களும்,சிந்திக்கிடக்கும் கதிர்கள் எளியவனுக்கும், பரதேசிக்கும் இவைகளைப் பெற்றுக் கொள்வதற்கான உரிமை கிடையாது. தேவன் தமது ஜனமாகிய இஸ்ரவேலருக்கு சுதந்திரமாக கானான் தேசத்தை கொடுத்திருந்தார். எனவே யாரும் தரித்திரனாயிருக்க வாய்ப்பில்லை. வறுமை நியாயப்பிரமாணத்தை மீறுவதன்மூலம் உண்டான தேவசிட்சையாகும் எனவே தரித்திரனுக்கு ஒரு உரிமையும் கிடையாது.

ஆயினும் தேவன் வயல்களையும், திராட்சைத் தோட்டங்களையும் உடையவர்களுக்குக்கட்டளை கொடுத்திருந்தார். துரத்துண்டவன் முற்றிலும் தம்மை விட்டு விலகாத நினைவுகளை நினைப்பவர் அவர்! உரிமையில்லாதவர்களுக்கு அவர் காட்டும் இரக்கத்தையும் கிருபையையும் வயலைஉடைவர்களும் வெளிப்படுத்த வேண்டுமெனக்கட்டளையிட்டார்.

## அறிந்த சத்தியத்தை ஆணித்தரமாய்ப் பின்பற்றும்போது....

வயலில் சிந்திக்கிடக்கும் கதிர்களைப் பொறுக்கும் படியாக நகோமி போகவில்லை. ரூத் கதிர்களைப் பொறுக்கும் படி போகிறாள். நகோமிக்கு தேவனுடைய வசனம் தெரியாதா? தரித்திரருக்கும், விதவைக்கும் தேவன் காண்பிக்கும் இரக்கத்தைக் குறித்து அவள் அறிவாள். எனினும் கதிர்களைப் பொறுக்கப்போகாதபடிக்கு ஏதோ ஒன்று அவளைத் தடுத்தது.

ஆனால் ரூத்தோ அவருடைய இரக்கத்தையும், அவரது சத்தியத்தையும் அதிகமாக அறிந்துகொள்ளும் வாஞ்சையோடு கதிர்களைப் பொறுக்கப்புறப்பட்டுவிட்டாள். அச்செயல் அவளைப் போவாஸிடம் கொண்டு போயிற்று. நமக்குத் தெரிந்திருக்கும் சத்தியத்தை உறுதியாய்ப் பிடித்துக் கொள்ளும் மனமே ஆவிக்குரிய வளர்ச்சிக்கு அடித்தளமாய் அமைகிறது. ரூத்தின் வாழ்வில் இவ்வுண்மை அழகாக வெளிப்படுகிறது. மாம்சத்தின் மேல் தனக்கிருந்த நம்பிக்கையைத் துறந்து விட்டு நகோமியைப் பற்றிப் பிடித்துக் கொண்ட அவள் கதிர் பொறுக்கப்புறப்பட்டு விட்டாள்.

ஒரு ஆத்துமா சத்தியத்தைப்பற்றிப்பிடிக்கும்போது யாரும் தடைசெய்ய முடியாத விதத்தில் கெட்டி யாகப்பிடித்துக் கொள்கிறது. அது சத்தியத்தை வாங்குமேயன்றி விற்பதில்லை. உள்ளவனெவனோ அவனுக்குக் கூடகொடுக்கப்படும்.

தகுதியான நோக்கங்களின் மேல் உள்ள பற்று பெண்களை உயர்த்துகிறது. அது அவளது உடைமை ஆகிவிடும். இப்பற்று இல்லையேல் உன்னதமான நற்குணங்களை அவள் இழந்து விடுவாள். விழுந்து போனவள் தன்னைக்குறித்து மாத்திரமே எண்ணிக்கொண்டிருப்பாள். விழுந்துபோன ஏவாள் ஆதாமையும் விழச் செய்தாள். இன்றைய சபையும் கிறிஸ்துவுக்கு இடமளிக்காமல் உலகத்தின் பின்னால் போகிறதே! முடிவு என்ன? நாசம் தான்! சத்தியத்தின் மேலுள்ளப் பற்றுதலே ஊழியத்திற்கும் சாட்சிக்கும் நம்மைத் தயாராக்குகிறது. இப்பற்று இல்லையேல் நமது வார்த்தைகளும் செயல்களும் வல்லமையின்றி அரைகுறையாகவே இருக்கும். மனிதன் சாத்தானின் பொய்களை நம்பி, கிறிஸ்துவைப் பகைத்துக் கொண்டு அவருடைய வழிகளில் நடப்பதில்லையா? சத்தியத்திற்காக நடப்பவன் இப்படிப்பட்டவர்களிடையில் சாட்சியாக விளங்கமுடியும். இக்காரியத்தில் விழுந்து போவோமே யானால் நாம் வல்லமையுள்ள சாட்சிகளாகத் திகழ முடியுமா.

ஓர்பாளைப் போல பாசத்தோடு முத்தமிட்டுவிட்டு நமது வழியில் போனால் பலன் என்ன? சத்தியத்தை நேசியாதபடி யாலல்லவோ அவள் உணர்ச்சிகளுக்கு முதலிடம் கொடுத்து அவளது வழியில் போய் விட்டாள்.

## கதிர் அறுப்போரும், அரிகளைப் பொறுக்குவோரும்

வேத வசனமாகிய வயலில் அறுவடையின் போது கதிர்களைப் பொறுக்கும் வாலிப சகோதர சகோதரிகளை காண்பது எவ்வளவு

இன்பம் தரும் காட்சி! அவர்கள் அங்கே அறுவடைச் செய்வதற்கும் நாம் அனுமதிக்க வேண்டும். அறுக்கிறவர்கள் பிறகே போய் முதலாவதாக வாலிபர்கள் பொறுக்கிக் கொண்டு போக வேண்டும். சத்தியத்தைக் குறித்த அறிவிலே தேர்ச்சி பெற்று சத்தியத்தைப்போதிக்கும் விசுவாசிகளே அறுக்கிறவர்கள் அவர்கள் அரிகளிலே சிலதைச் சிந்தவிடுவார்கள். அவை எளிமையான சத்தியங்களே! இளம் விசுவாசிகளுக்கு அறுக்கிறவர்கள் சிந்தவிடும் அரிகளே ஆவிக்குரிய உணவாகும்.

எளிய சத்தியங்களை முழு மனதோடு ஏற்றுக்கொள்வோம். தேவனுடைய கிருபையின் மேல் நம்பிக்கைவைப்போம். "நான் தகுதியற்றவள் தவன் தம்முடைய ஜனங்களுக்கு சுதந்திரமாகக்கொடுத்த வயல்களில் நான் போய்ப்பொறுக்குவது எப்படி"? என்று ரூத் கேட்கவில்லை. தனது தகுதியின்மையை உணர்ந்திருந்த போதிலும் அவள் தேவனுடைய கிருபையின் மேல் நம்பிக்கை வைத்து அவரை மகிமைப் படுத்தினாள். அவரது அன்பையும், கிருபையையும் குறித்து நாம் சிந்திக்கும் போது அவர் மகிமைப் படுத்தப்படுகிறார்.

அரிகளைப் பொறுக்குவோம் எனும் நிலையில் மாத்திரம் சில வாலிபர்கள் திருப்தி அடைந்து விடுவதில்லை. அவர்கள் அறுவடை செய்வோரின் இடத்தை அடையத்துடிக்கின்றனர். அறுவடை செய்கிறவர்களாகிய நற்செய்திப்பணியாளர்களும், வேதத்தைப் போதிப்பவர்களும் பயிற்சியினால் நன்மை, தீமை இன்னதென்று பகுத்தறியத்தக்கவர்களாகியுள்ளனர். (எபிரேயர் 5:13,14) கர்த்தரை வாலிபர்கள் அறிந்து கொள்வதென்பது தலைவனாக விரும்புவதன் மூலம் அன்று. கர்த்தராகிய இயேசு கிறிஸ்து சாந்தமும், மனத்தாழ்மையும் உள்ளவர். அவரிடத்தில் வந்து கற்றுக் கொள்ளும் படி அவர் அழைக்கிறார். (மத்தேயு 11:29) தாழ்மையுள்ளவர்களுக்கு அவர் தமது வழியைப் போதிக்கிறார்.

## ஏனென்று கேட்காத கீழ்ப்படிதல்

ரூத்தின் வாழ்விலிருந்து ஆவிக்குரிய வளர்ச்சிக்குத் தேவையான இரண்டாம் நிபந்தனையைக் கற்றுக்கொள்கிறோம். ஏனென்று கேட்காமல் கீழ்படியும் எளிமையான தன்மைதான் அது! ஆசீர்வாதத்தைப் பெற கதிர்களைப் பொறுக்குவதைத்தவிர வேறுவழியே இல்லை என்பதை அறிந்து அதைச் செய்ய முற்படுகிறாள். எத்தனை எளிமையான சொல்லாயினும்

தன்னிச்சைப்படி செய்ய அவள் விரும்பவில்லை. ஆவிக்குரிய வாழ்வில் ஆக்கத்திரிபுகளை உண்டாக்கிய நகோமியின் சொற்படி செய்யவே வாஞ்சிக்கிறாள் அவள். தேவன் நகோமியின் கீழ்படிதலின் ஆவியே தேவன் ஒருவரது வாழ்வில் கிரியை செய்கிறார் என்பதை வெளிப்படுத்தும் காரணியாகும். அன்பானது கிரியை செய்யும் பொழுது கீழ்படியாமல் இருக்கமுடியாது. சத்தியத்தின் மேலுள்ள பற்றுதலையும் எளிமையான கீழ்ப்படிதலையும் தேவன் நம்மில் காணும் பொழுது ஆவிக்குரிய வளர்ச்சியை அருளுகிறார். பின்னர் அவர் தம்மோடு தனிப்பட்ட முறையில் நாம் நெருங்கி உறவாடும்படி செய்கிறார்.

தற்செயலாக ரூத்துக்கு நேரிட்ட வயல் போவாஸுடைய தாயிருந்தது. தேவனுடைய முன்கருதல் நமது சூழ்நிலைகளுக்கு மேலாகக்கிரியை செய்கிறது. ஆனால் அவரது முன் கருதல் மட்டுமே நம்மை நடத்த வேண்டும் என்று அவர் விரும்புவதில்லை. நமக்குப் பூரண சுதந்திரத்தை அளிக்கிறார். நம் மேல் கண்களை வைத்து ஆலோசனை சொல்கிறார். அவருக்கு முன்பாக புத்தியோடு நடந்து கொள்ளும் படி அவ்வாறு செய்கிறார் *(சங்கீதம் 3:8,9)*.

நாம் விசுவாசித்து நடப்போமேயாயின் நமது விசுவாசத்திற்கேற்ப அவர் நமது வாழ்வில் கிரியை செய்வார். நமது இருதயத்தின் நிலைக்கேற்றபடியும் அவர் தமது திட்டங்களை நிறைவேற்றுவார்.

தேவன் ரூத்தை போவாஸின் வயலுக்கு நேராக நடத்தினார். அங்கே அவளுக்குத் திருப்தியும் ஆவிக்குரிய வாழ்வின் நிறைவும் காத்திருக்கிறது. பெத்லெகேமிலுள்ள ஏனைய வயல்களிலிருந்து போவாஸின் வயல் வேறுபட்டதா என்ன? ஆம்! ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் அதிகாரத்தை அங்கீகரிக்கும் வயல் தான் அது! அவருடைய வயலில் அறுப்பவர்கள் அவருடைய ஊழியக்காரர்கள் மட்டுமே! தேவனால் ஊழியத்துக்கு அழைக்கப்பட்ட ஒருவர், தேவனுக்கு கீழ்படிந்து ஊழியம் செய்யும் போது அவர் தேவனது ஊழியத்தில் இருப்பார். மனிதரால் நியமிக்கப்பட்டவர்கள் தேவ ஊழியத்தை செய்யமுடியாது. மனிதனை திருப்திபடுத்தும் வேலையையே அவர்கள் செய்வார்கள்.

## அறுக்கிறவர்கள் மேல் கண்காணியாக நியமிக்கப்பட்ட ஆவியானவர்

போவாஸின் வயல் எனக் கூறும் பொழுது அவ்வயலின்

எல்லாக்காரியங்களையும் போவாஸ் கட்டுப்படுத்துகிறான் என்பது தான் பொருள். ஆண்டவரே நான் என்ன செய்யச்சித்தமாயிருக்கிறீர். எனும் கேள்வியும் ஆண்டவரே நான் எப்படி இதைச் செய்யவேண்டும். எனும் வினாவும் இடைவிடாமல் கேட்கப்படும் இடம் அது! அவ்வயலின் "அறுக்கிறவர்கள் மேல் கண்காணியாக வைக்கப்பட்ட வேலைக்காரன்" (வசனம் 5) உண்டு (1 கொரிந்தியர் 12:1—11); கலாத்தியர் 5:17) கண்காணியாகிய பரிசுத்த ஆவியானவர் இல்லாத இடத்தில் அறுக்கிறவர்கள் அவரவரது விருப்பப்படி போய்க்கொண்டிருப்பார்கள்.

தேவனுடைய ஊழியத்தையும், ஊழியக்காரர்களையும் குறித்த நடைமுறை உதாரணத்தை அப்போஸ்தலர் 16:6-10 வசனங்களில் காணலாம். ஆளுகை செய்வதற்கான உரிமை ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவிற்கு உண்டு. ஒரு நாளிலே முழங்கால் யாவும் அவருக்கு முன்பாக முடங்கும் (பிலிப்பியர் 2:9-11) ஆனால் இன்றே அவரை ஆண்டவராகவும், எஜமானனாகவும் கைக்கொண்டவர்கள் அவரது ஆளுகைக்கும், அதிகாரத்திற்கும் அடங்கவேண்டுமென்று தேவன் விரும்புகிறார். தேவன் எல்லாவற்றையும் அவருடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தியிருக்கிறார் (எபேசியர் 1:22) அவரே சபையாகிய சரீரத்திற்குத் தலையானவர் (கொலோ செயர் 1:18).

பரிசுத்த ஆவியானவரின் மூலமாகக் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து சபையில் தமது அதிகாரத்தை செயல்முறைப்படுத்துகிறார். போவாஸின் வயலில் அவனுக்கு பரிபூரணமான உரிமை இருப்பதுபோல ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவிற்கு பரிபூரண உரிமை இருப்பதை சபையாகிய சரீரத்தின் அவயவங்களாகிய விசுவாசிகள் ஒத்துக்கொள்கின்றனர்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவிற்கும், அவரது வயலில் வேலை செய்யும் ஊழியர்களுக்கும் இடையே உள்ள உறவு எவ்வளவு அற்புதமானது! போவாஸ் தனது ஊழியக்காரருக்குக் கூறும் வாழ்த்து என்ன? கர்த்தர் உங்களோடே இருப்பாராக! (வசனம் 4) பரமபோவாஸின் நன்மையையும், ஞானத்தையும், சகாயத்தையும், ஆறுதலையும், மனதுருக்கத்தையும் அவரது வயலில் வேலை செய்யும் ஊழியர்கள் அனுபவிக்காமல் போவதில்லை.

## எஜமானனின் மேன்மை

ஒரு ஊழியக்காரர் மற்றொரு ஊழியக்காரரிடம் மிகவும் களைப்போடு, "கர்த்தருடைய ஊழியத்தைச் செய்பவர்கள் எந்த

வசதியையும் எதிர்பார்க்க முடியாது. நான் எவ்வளவு களைப்பாய் இருக்கிறேன் பாருங்கள், இந்த நேரத்தை வேறு நல்ல விதத்தில் செலவழித்திருக்கலாம் என்றார்.

அதற்கு மற்றவர்கள் வேறு ஒரு வேலையைத் தெரிந்தெடுத்தால் வேறு ஒரு எஜமானனல்லவா நமக்கு கிடைப்பார் என்றார்கள்.

"ஐயய்யோ, நான் இந்த எஜமானனை மாற்றிக்கொள்ள விரும்பவில்லை என்று அவசர அவசரமாக அந்த ஊழியக்காரர் பதிலளித்தார். எஜமானனின் மேன்மை கடினமான வேலையையும் எளிதாக்கிவிடும்.

போவாஸ் தமது ஊழியக்காரரோடு "கர்த்தர் உங்களோடு இருப்பாராக" எனக்கூறியது நமக்கு யோவான் 20:19-23 ஐ நினைவு படுத்தவில்லையா?

உயிர்த்தெழுந்த போவாஸிற்கு ஒவ்வாத அனைவரையும் விட்டுப்பிரிந்து, சீஷர்கள் கூடியிருந்தனர். பூட்டிய அறைக்குள் அவர் பிரவேசித்த சம்பவத்தைப் பார்ப்போமா? "வாரத்தின் முதல் நாளாகிய அன்றைய தினம் சாயங்கால வேளையிலே சீஷர்கள் கூடியிருந்த இடத்தில், யூதருக்குப் பயந்ததினால் கதவுகள் பூட்டியிருக்கையில் இயேசு வந்து நடுவே நின்று "உங்களுக்கு சமாதானம்" என்றார்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை சுற்றிலும் நாம் கூடும்போது அவரது பிரசன்னத்தை நாம் அனுபவிப்பதில்லையா? அவரது பந்தியைச் சுற்றிலும் ஒலிவமரக்கன்றுகளைப்போலக்கூடும்போது பிட்கப்பட்ட அப்பத்தின் வடிவில் தமது கையையும், ஊற்றப்பட்ட திராட்சரசத்தின் வடிவில் தமது விலாப்புறத்தையும் அவர் நமக்குக் காண்பிப்பதில்லையா? நாம் அவரை நன்றி பொங்கும் இதயத்தோடு அவரை ஆசீர்வதிப்பதில்லையா? (நாம் ஆசீர்வதிக்கிற ஆசீர்வாதத்தின் பாத்திரம்...) (1 கொரிந்தியர் 10:16) ரூத் 2:4ஐ ஒப்பிட்டுப் பாருங்கள் நம்மை வல்லமையில் நிரப்பி தமது ஊழியத்திற்கு அனுப்புகிறார். (யோவான் 20:21.23).

### போவாஸும் கண்காணியும்:

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் மட்டும் கூடி வருகிறவர்கள் (மத்தேயு 18:20) (ஒரு சபைப்பிரிவின் நாமத்திலுமல்ல,

ஒரு தலைவனுடைய நாமத்திலுமல்ல) அவரோடு ஐக்கியங்கொள்ளுவதால் உண்டாகும் மகிழ்ச்சியை அனுபவிக்காமல் போவதில்லை. ஏனெனில் அவரே வயலின் மேல் சகல உரிமையையும் பெற்ற உரிமையாளர்.

அறுவடை செய்கிறவர்கள் மேல் கண்காணியாக நியமிக்கப்பட்ட வேலைக்காரன் பரிசுத்த ஆவியானவருக்கு மாதிரியாக அமைகிறான். பரலோகத்திலிருந்து அனுப்பப்பட்ட பரிசுத்த ஆவியானவரர்கிய தேற்றரவாளன் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைக் குறித்து சாட்சி கொடுக்கிறார் அவர் பாவத்தைக் குறித்தும், நீதியைக் குறித்தும், நியாயத்தீர்ப்பைக் குறித்தும் கண்டித்து உணர்த்துவார். சகல சத்தியத்திற்குள்ளும் நம்மை நடத்துவார் (யோவான் 15:26; 16:17-14) கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் நாம் ஆராதிக்கக்கூடி வரும்போது அவரது அதிகாரத்தை பரிசுத்த ஆவியானவர் செயல்படுத்துகிறார். தேவ ஊழியக்காரர்களையும் கட்டுப்படுத்துகிறவர் அவரே (1 கொரிந்தியர் 12:4-11 கலாத்தியர் 5:17)அப்போஸ்தலர் 16:6-10) இந்நிலையில் ஆவியானவர் செயல்படுவதை ஆதியாகமம் 24ஆம் அதிகாரத்திலும் காணலாம்.

## இறைமையின் சில உரையாடல்கள்

தேவனுடைய மனதின் எண்ணங்கள் நம்மை குறித்தவையே என்று அறிந்து கொள்ளும் போது உண்டாகும் மனமகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை! பிதா, குமாரன் பரிசுத்த ஆவியானவருக்குள் நடைபெறும் உரையாடல் நம்மைப் பற்றியதே! ஆதியாகமம் 1:26ல் அவர்கள் மனிதனைச் சிருக்ஷ்டிப்பதைக்குறித்து உரையாடுகின்றனர். யோபு 33:23.24 ல் பாவ நிவிர்த்தியைக் குறித்தும் குமாரன் பிதாவோடும் உரையாடுகிறார். எபிரெயர் 10:5-10 ல் அவர்களது உரையாடல் மனிதனைக் குறித்ததாயிருக்கிறது. சகரியா 6:13 ல் அவர்கள் ஆயிரம் வருட அரசாட்சியின் ஆசீர்வாதங்களைக் குறித்துப் பேசுகின்றனர். யோவான் 17ஆம் அதிகாரத்தில் குமாரனாகிய தேவன் பிதாவோடு நம்மைக் குறித்துப்பேசுகிறார். சபையாகிய மணவாட்டியைப் பரலோகத்தில் மணவாளனாகிய கிறிஸ்துவோடு இணைத்துவிட்டு எப்படியாக அவளை ஆயத்தப்படுத்தி வனாந்திர வழியாய் நடத்திக் கொண்டு வந்து அவரிடம் ஒப்புவித்தார் என்று பரிசுத்த ஆவியானவர் குமாரனோடு விளக்கிக்கூறுவதற்கு நிழலாக ஆதியாகமம் 24:66 திகழுகிறது. இவ்வளவு அழகான வேதத்தை யாராவது நேசிக்காமல் இருக்க முடியுமா?

ஆனால் ரூத்தின் புத்தகத்தில் ஒரு இளம் விசுவாசியைக் குறித்த உரையாடலைக் காணலாம். போவாஸ் "அந்தப் பெண் யார்? என்று கேட்காமல்,"இந்தப்பெண்பிள்ளை யாருடையவள்'' என்று கேட்கிறான் (வா) "நாம் யாருக்குச் சொந்தமானவர்கள்" என்று அறிந்து கொள்ளவே இவன் விரும்புகிறான். நாம் இவ்வுலகத்திற்கா, நமக்கா, அவருக்கா அல்லது யாருக்குச் சொந்தமானவர்கள்? ·

மனந்திரும்பிய அனைவருமே அவருக்குச் சொந்தமானவர்கள் தான் (1 கொரி 6:20) நமது நடைமுறை வாழ்வு நாம் அவருக்குச் சொந்தமானவர்கள் தான் என்று வெளிப்படுத்துகிறதா என்பது தான் கேள்வி. "கிறிஸ்துவின் ஆவி இல்லாதவன் அவருடையவனல்ல!" என்று ரோமர் 8:9 ல் வாசிக்கிறோம். வேதவாக்கியங்களின் படி பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ளாதவன் கிறிஸ்தவனல்ல. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மரணத்தோடும் உயிர்தெழுதலோடும் நாம் இணைக்கப்பட்டவர்கள் எனும் உணர்வோடு வாழ்வதுதான் அது! இதைக்குறித்து விளக்கமாக பின்னர் அறிந்து கொள்ளலாம்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து ஒவ்வொரு விசுவாசியின் ஆவிக்குரிய வாழ்வைக்குறித்துக் கரிசனை உள்ளவராயிருக்கிறார். "நாம் யாருக்குச் சொந்தமாக இருக்கிறோம்"? எனும் கேள்வியை நாம் அடிக்கடி கேட்டுப் பார்க்கவேண்டும். சுயசித்தத்தின்படி வாழ்ந்து சுயத்தையே மையமாகக் கொண்டு வாழும்போது நாம் அவருக்கல்ல. நமக்கு நாமே சொந்தமானவர்களாகி விடுகிறோம்.

நாம் அவருக்குச் சொந்தமானவர்களாயிருக்கும் போது அவருடைய சித்தத்தைச் செய்வதில் மகிழ்ச்சியடைவோம். அவரது வாஞ்சையும் அது தான்! கிறிஸ்துவானவரை மகிமைப்படுத்த விரும்பின பரிசுத்த ஆவியானவரின் (யோவான் 16:14) வாஞ்சையும் அது தான்!

## சுய மகிமையை நாடாத கண்காணி

"அறுக்கிறவர்கள் மேல் கண்காணியாக வைக்கப்பட்ட வேலைக்காரன்'' ரூத்தின் நன்நடத்தையைக் குறித்தும், அவளைக்குறித்தும் பேசுகிறானே அல்லாமல் தான் எவ்வாறு அவளுக்குப் போதித்தான் என்றோ வழிநடத்தினான் என்றோ

கூறவில்லை. அவளை "மோவாபிய பெண்பிள்ளை" என்று தான் அவன் குறிப்பிடுகிறான். ஒருவேளை அவள் மோவாபைவிட்டு வெளியேறிப் பெத்லெகேமிற்கு வந்திருக்கலாம். மங்கி எரியும் திரி போன்ற சாட்சிக்குறைவுள்ள நகோமியோடு அவள் இணைந்திருக்கலாம் எனினும் அவள் போவாஸுடன் இணைக்கப்படாத வரை அவள் மோவாபியப்பிள்ளை தான்.

ஒருவன் மெய்யாகவே மனந்திரும்பி இரட்சிக்கப்படும்போது அவர்கள் இவ்வுலகத்திலிருந்து பிரித்தெடுக்கப்பட்டு பரிசுத்தமாக்கப்படுகிறார்கள்."மறுபடியும் நாம் ஜெநிப்பிக்கப்படும் போது இது நடந்தேறுகிறது." *(1 பேதுரு 1:2; 2 தெசலோனிக்கேயர் 2:13)* அவர் இனி மாம்சத்திற்குரியவர் அல்ல. *(ரோமர் 7:4-5)* ஆனால் அவர் ஆவிக்குள்ளான நடத்தையும், ஆவிக்குரிய வாழ்க்கையும் இல்லாதவராக இருக்க வாய்ப்புண்டு *(ரோம் 8:9; 1 கொரிந்தியர் 2:15)* அவர்கள் மாம்சத்திற்குரியவர்கள் *(ரோமர் 7:14, 1 கொரிந்தியர் 3:3)* அவர் மறுபடியும் பிறந்தவர்தான்! ஆனால் பாவத்திலிருந்து விடுதலை பெற்றவர் அல்ல! ஒருவேளை ஆவியானவரால் முத்திரை இடப்பட்டிருந்தாலும் மனித ஞானம் திறமைகள் போன்றவை அவரது மாம்சத்தைக் கவர்ந்து இழுக்கலாம் இது மாம்ச சிந்தைக்கும், சுயசித்தத்துக்கும் சான்றாகும்.

## நீக்கப்பட்ட நிந்தை

இஸ்ரவேலர் பஸ்கா ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினால் பாதுகாக்கப்பட்டனர். சிவந்த சமுத்திரத்தைக் கடந்து சென்றனர். அவ்விரு செயல்களும் கிறிஸ்து நமக்காக மரித்து உயிர்த்தெழுந்ததற்கு நிழலாக அமைகின்றன. கிறிஸ்துவானவர் சிலுவையில் செய்து முடித்த செயலின் விளைவுகளுக்கு அவர்களும் பங்குள்ளவர்கள் ஆனார்கள். தேவனும் ஓரேப பர்வதத்தில் அவர்களைத் தம்முடைய ஜனங்களாக அங்கீகரித்துக் கொண்டார். எனினும் அவர்கள் அப்போதும் எகிப்தின் நிந்தையை சுமந்து கொண்டுதான் நடந்தனர் *(யோசுவா 5:9)* தன்னார்வத்தோடு யோர்தானைக்கடக்கும் வரை அந்நிந்தை அவர்களைப் பின்தொடர்ந்தது. வேறு விதமாய் கூறினால் கிறிஸ்துவானவரின் மரணத்தோடும், உயிர்த்தெழுதலோடும் அவர்கள் தங்களைத்தாங்களே தன்னார்வத்தோடு இணைத்துக்கொண்டு அவ்விரு அனுபவங்களையும் தங்களுடையதாக உரிமை பாராட்டிக்கொள்ளும்வரை நிந்தை அவர்களைத் தொடர்ந்தது. பார்வோனின் சேனைக்குத்தப்ப அவர்கள் செங்கடலுக்குள் இறங்கினர். ஆனால் அவர்கள் தன்னார்

வத்துடன் யோர்தானைக்கடந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது விருத்த சேதனம் பண்ணப்பட்ட ஒவ்வொரு இஸ்ரவேலனும், "கிறிஸ்துவுடனேகூட மரித்தேன்; உயிர்த்தெழுந்தேன்" எனக்கூறும் அனுபவத்திற்குக்கடந்து வருகிறான் (2 கொரி 4:10-12) ஒவ்வொரு விசுவாசியையும் பரிசுத்த ஆவியானவர் இப்படிப்பட்ட இடத்திற்கே கொண்டு செல்ல விரும்புகிறார். அவ்விடம் தான் எபேசியர் 2:7 ல் கூறப்பட்டுள்ளது "கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை அவரோடேகூட எழுப்பி உன்னதங்களிலே அவரோடே கூட உட்காரவும் செய்தார்! இது நம்மை மகிமைப்படுத்தப்பட்ட மனுஷகுமாரனோடு (எபே 125) ஒருமைப் படுத்திக்கொள்ளும் செயலை நினைவூட்டுகிறது.

ரூத்தும் இதற்கு விதிவிலக்கல்ல! தன்னைப் போவாஸோடு இணைத்துக்கொள்ளும் வரை அவள் நிந்தையைச் சுமக்க வேண்டிய "மோவாபிய பெண்பிள்ளைதான்!" ஆனாலும் அவளைக்குறித்த நற்சாட்சியை நாம் கேட்க முடிகிறது. அவள் மோவாபின் வயல்களை வெறுத்துவிட்டு நகோமியுடன் பெத்லெகேமிற்கு வந்து விட்டாள்.

"நகோமி ரூத்தோடுங்கூட ..... திரும்பி வந்தாள் (ரூத். 1:22) ரூத்தின் மோவாபிய பெருமை அவளை விட்டுப் போய்விட்டது. (ஏசாயா 16:6) கிருபையும், தாழ்மையுமே உயர்வுக்கு வழி என்பதை அறிந்து கொண்ட ரூத் சிந்திய மணிகளைப் பொறுக்குவது முதற்படி அதற்குப் பிறகு அவள் "அரிக்கட்டுகள் நடுவே பொறுக்குகிறாள்." ரூத் (2:15) பிறகு "கட்டுகளாகக் கட்டிச்" சேர்க்கும் செயல் நடைபெறும். சிந்தின வாற் கோதுமை மணிகளைப் பொறுக்குவது பெத்லெகேமின் உணவு தான் சிறந்தது என்பதை நாம் ஒத்துக் கொள்ளும் செயலாகும். தேவன் தனக்கென்று வைத்திருக்கும் ஆசீர்வாதங்களை அனுபவிக்கத் தீர்மானித்தாள். அவை "அரிக்கட்டுகள்" இருக்குமிடத்தில் தான் இருக்கும். "அறுக்கிறவர்கள்" பின்னால் சென்றால்தான் "அரிக்கட்டுகளின்" நடுவே நடக்க முடியும். 'அறுக்கிறவர்கள்' அனுபவம் நிறைந்தவர்கள். போவாஸின் எண்ணங்களையும் எழுச்சிகளையும் நன்கு அறிந்தவர்கள். அவர்களோடுகூட நடந்தால்தான் "போவாஸின்" எண்ணங்களை சித்தத்தை அறிந்து கொள்ள முடியும்.

## நாம் ஒரு அடி எடுத்து வைத்தால்

வேதவசனத்தின் மேல் நமக்குள்ள வாஞ்சையைக்குறித்து பரிசுத்த ஆவியானவர் அக்கறை உள்ளவராயிருக்கிறார். வேதவசனம்

போதிக்கப்படும் இடங்களுக்கு நாம் போகிறோமா என்று கவனிக்கிறார். ஒரு விசுவாசிக்கு வேதவசனத்தின் மேல் விருப்பமோ வாஞ்சையோ இல்லையெனில் அவர் நோயுற்ற, பலவீனமான விசுவாசி ஆவார்.

ரூத்தைப் பாருங்கள் "காலமே துவக்கி" (2:7) சிந்திய மணிகளைப் பொறுக்கத் தொடங்கி விட்டாள். "குடிசைக்கு வந்து கொஞ்ச நேரம் தான் ஆயிற்று" (2:2) விசுவாசியின் வாழ்வில் இரட்சிக்கப்பட்ட உடனேயே 'அழிவில்லாத வித்தாகிய வசனத்தை' சேகரிக்க ஆரம்பித்து விடவேண்டும்!

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் காரியங்களோடு நமக்குத் தொடர்பு உண்டா, இல்லையா என்பதைப் பரிசுத்த ஆவியானவர் அவர்களுக்குத் தெரியப்படுத்துகிறார். (ரோமர் 8:26)! தெசலோனிக்கேயர் 1:3 யும் வாசித்துப் பாருங்கள்.

இறுதியில் போவாஸ் ரூத்துடன் பேசத் தொடங்குகிறான் (2:8) இங்கே கவனிக்க வேண்டிய ஒரு செயல் உண்டு. கதிர்களைப் பொறுக்கும்படி ரூத் முதற்படியில் கால் வைத்தாள். அதற்குப் பிறகு சகல பொறுப்புகளையும் போவாஸ் ஏற்றுக் கொள்ளுகிறான். தேவ அன்பின் தன்மையும் இப்படிப்பட்டதே!

பரிபூரண ஆசீர்வாதம் நிறைந்த இடத்தை அடையும் வரை போவாஸ் தன் பணிவிடைக்காரர்களை படிப்படியாக நடத்தினான். வறுமை நிறைந்த அவர்கள் அவர்களாகவே அவ்விடத்தை அடைய முடியுமா? ஆனால் செல்வம் பெருத்த அவன் அவர்களை அவ்விடத்திற்குக் கொண்டுசெல்ல மனமுடையவனாயிருந்தான் தனக்குச் சொந்தமானவர்கள் தன்மீது அயரா நம்பிக்கை வைத்திருக்க வேண்டுமென்பதே அவனது இருதயத்தின் வாஞ்சை! தனது அன்பிற்கும் செல்வத்திற்கும் ஒத்த வண்ணம் அவன் அவர்களுக்குத் தர விரும்பினான்.

போவாஸின் கண்களில் தனக்குத் தயைகிடைத்தது என்றறிந்து கொள்ளும் விதத்தில் அவன் ரூத்திடம் பட்சமாய் பேசினான். இளம் விசுவாசிகள் வளரும் விதத்தில் நாம் அவர்களுடன் நட்புணர்வோடு பேசுகிறோமா? போவாஸ் இதற்கு முன் மாதிரியாகத் திகழ்கிறான். மூப்பர்கள் மட்டுமல்ல இளம் விசுவாசிகளும் இதர இளம் விசுவாசிகளை உற்சாகப்படுத்த வேண்டும்.

மனுஷனுடைய இருதயத்திலுள்ள கவலை அதை ஒடுக்கும் நல்வார்த்தையோ அதை மகிழ்ச்சியாக்கும் (நீதி 12:25).

துக்கபாரம் சுமப்பவர்களால் இவ்வுலகம் நிறைந்துள்ளது. அநேக விசுவாசிகளும் 'துக்க பாரம் நிறைந்தவர்களாகவே காணப்படுகின்றனர். ஆறுதலளிக்கும் வார்த்தைகள் குறைந்துபோனதால் இவ்வுலகத்தில் ஒவ்வொரு ஆறுதலளிக்கும் சொல்லும் விலையுயர்ந்ததே!

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் அடையாளங்களாலும், அற்புதங்களாலும், ஆறுதலளிக்கும் வார்த்தைகளாலும் மக்களுக்கு உண்டான பலனைக் குறித்து நீங்கள் எப்போதாவது எண்ணிப்பார்த்ததுண்டா? அவர் செய்த அடையாளங்களாலும், அற்புதங்களாலும் அநேகர் மனந்திரும்பினதாக நாம் வாசிக்க முடியவில்லை.

யோவான் 2.23ல் இவ்வாறு வாசிக்கிறோம். அவர் செய்த அற்புதங்களை அனேகர் கண்டு அவருடைய நாமத்தில் விசுவாசம் வைத்தார்கள்" ஆனால் அதற்குப்பிறகு வரும் வசனம் இவ்வாறு உள்ளது'' அப்படியிருந்தும் இயேசு எல்லாரையும் - அறிந்திருந்தபடியால், மனுக்ஷரைக்குறித்து ஒருவரும் அவருக்கு சாட்சி கொடுக்க வேண்டியதாய் இருக்கவில்லை. அடையாளங்களும், அற்புதங்களும், நமது புலன்களையும், அறிவையும் கிளர்ச்சியூட்டும் விதத்தில் காணப்படலாம். ஆனால் இலட்சக்கணக்கானோர் அவரது வார்த்தைகளின் மூலமாகவே ஆறுதல் அடைந்துள்ளனர். இக்காரியத்திலும் நாம் அவரைப் பின்பற்றுகிறவர்களாக இருக்க வேண்டுமென்றே அவர் விரும்புகிறார்.

இளைப்படைந்தவனுக்கு சமயத்திற்கேற்ற வார்த்தை சொல்ல நான் அறியும் படிக்கு, கர்த்தராகிய ஆண்டவர் எனக்குக்கல்வி மானின் நாவைத் தந்தருளினார். காலைதோறும் என்னை எழுப்புகிறார். கற்றுக்கொள்ளுகிறவர்களைப்போல நான் கேட்கும்படி என் செவியை கவனிக்கச்செய்கிறார். (ஏசாயா 50:4) நமது திறமை எத்தனைப் பெரியது என்று காண்பிப்பதற்காக அநேகர் "கல்வி மானின் நாவை" வாஞ்சிக்கின்றோம். ஆனால் கிறிஸ்துவோ தமது திறமைகளை வெளிப்படுத்தும்படி அதை வாஞ்சிக்கவில்லை.

எனவேதான் கோராகின் புத்திரர்" எல்லா மனுபுத்திரரிலும் நீர் மகாசவுந்தரியமுள்ளவர். உம்முடைய உதடுகளில் அருள் பொழிகிறது. ஆகையால் தேவன் உம்மை என்றென்றைக்கும் ஆசீர்வதிக்கிறார் எனக்கூறி அவரைப் புகழ்ந்தனர் *(சங் 45:2).*

## நெருங்கும் உறவுகள்

''வார்த்தையினாலாவது, கிருபையினாலாவது'' எனும் வார்த்தைகள் எப்போதாவது நமது உள்ளத்தைத் தொட்டிருக்கின்றனவா? நம்மில் அநேகர் "வார்த்தைகளைக்" கிரியைகளாகக் கணக்கிடுவதில்லை. வார்த்தைகளினால் நாம் நன்மையையோ, தீமையையோ செய்யமுடியும். நன்மை செய்ய வேண்டுமாயின் நாம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுடன் நெருங்கி உறவாடுகிறவர்களாக இருக்க வேண்டும்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து "என்னிடத்தில் வந்து கற்றுக் கொள்ளுங்கள்" என்கிறார். அவர் இவ்வுலகில் இருந்த நாட்களில் அப்படித்தானே செய்தார்!

''பொறுக்கிக்கொள்ள வேறே வயலில் போகாமலும், இவ்விடத்தைவிட்டுப் போகாமலும் இங்கே என் ஊழியக்காரப் பெண்களோடு கூடவே இரு'' என்கிறான் போவாஸ். தமது அதிகாரம் முழுமையாகச் செயல்படாத வயல்களுக்கு நாம் போவதை நமது பரம போவாஸ் விரும்புவதில்லை.

"போவாஸ் செல்வம் பெருத்தவன்" எல்லா வயல்களும் அவனுக்கு சொந்தமானவைகளே அவன் செல்வம் பெருத்தவன் ஆனபடியால் அனைவருடைய தேவைகளையும் சந்திக்க போதுமானவனாக இருந்தான்.

அவ்வண்ணமே பரம போவாஸும் தமது வயலில் நடைபெறபேண்டிய காரியங்களை அவரே கட்டளை இடுகிறார். ''ஆவியோ உயிர்ப்பிக்கிறது'' எனும் தத்துவத்தை இங்கே காண்கிறோம். ஜென்மசுபாவம் உள்ள மனிதன் இதை விரும்புவதில்லை. அவருடைய சீஷரில் அநேகர் இவைகளை கேட்டபோது இது கடினமான உபதேசம், யார் இதை கேட்பார்கள் என்றார்கள். அது முதல் அவருடைய சீஷரில் அநேகர் அவருடனேகூட நடவாமல் பின் வாங்கிப் போனார்கள் *(யோவான் 6:60.69).*

## அன்பரின் கேள்வி

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தமது 12 சீஷர்களை நோக்கி "நீங்களும் போய்விட மனதாய் இருக்கிறீர்களா" என்று கேட்டார். அவரை விட்டுப் போனவர்கள் அனைவரும் அவருடைய சீஷர்கள் தாம் என்பது இங்கே குறிப்பிடத்தக்கது. அவர்கள் சீஷர்களாக இருக்க விரும்பின போதும் அவரோடு நடக்க மனமற்றவர்களாக இருந்தார்கள். கேள்வி கேட்காமல் கீழ்ப்படியக்கூடிய தன்மை மாம்சத்திற்கு இல்லை.

"ஆண்டவரே யாரிடத்தில் போவோம் நித்திய ஜீவவசனங்கள் உம்மிடத்திலுண்டென பேதுரு கூறியபோது அவருடைய உள்ளம் எவ்வளவு மகிழ்ச்சியால் நிறைந்திருக்கும். மெய்யான வாழ்வும் ஆசீர்வாதமும் அவரோடுள்ள உறவில் தான் உண்டு. அவருடைய ஞானத்தாலும், அன்பினாலும், வல்லமையினாலும் வழிகாட்டப்படும் வாழ்வையே அவர்கள் விரும்பினார்கள்.

எந்த ஊழியக்காரனும் இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ்செய்யக்கூடாது. தேவனுக்கும், உலகப்பொருளுக்கும் ஊழியஞ்செய்ய உங்களாலே கூடாது. (லூக்கா 16:13) ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவிற்கும் உலகத்திற்கும் ஊழியஞ்செய்ய முன்போவோமேயாயின் அனலற்றவர்களாகவும் துக்கம் நிறைந்தவர்களாகவும் ஆகிவிடுவோம். பல ஜாதியான அந்நிய ஜனங்கள் இஸ்ரவேலருக்குள்ளே இருந்தபடியால் அவர்கள் இச்சை உள்ளவர்களாகி அழத்தொடங்கினார்கள். முதல் முறையாக அவர்கள் அழுததும் அப்போதுதான் (எண்ணாகமம் 11:4).

## இரட்டை வேடங்கள்

நெகேமியா 13:23-24) ல் அஸ்தோத், அம்மோன், மோவாப் ஜாதிகளான ஸ்திரீகளைச் சேர்த்துக் கொண்ட சில யூதரையும் யூத பாஷையை திட்டமாக பேச அறியாதிருந்தவர்களையும் நெகேமியா கண்டதாக நாம் வாசிக்கிறோம். விசுவாசிகளுக்கிடையிலும் இப்படிப்பட்டவர்கள் உண்டு. கொஞ்ச நேரம் அவர்கள் போவாஸின் வயலில் பேசப்படும் பாஷையை பேசுவார்கள். அதற்குப் பிறகோ வேறு வயல்களின் பாஷை அவர்களுக்குள்ளே நுழைந்து விடும். அவர்களுடைய பிள்ளைகள் போவாஸின் வயலில் பேசப்படும் பாஷையை பேசாதிருப்பதில் வியப்பொன்றும் இல்லை. வெளியரங்கமான நாம் வேறுபடுத்தப்பட்ட வாழ்க்கையை தெரிந்து

கொண்டாலும் சில வேளைகளில் வேறு வயல்களுக்கும் செல்லும் அனுபவம் காணப்படுமானால் நாம் தேவனையும் அவரது அன்பையும் வல்லமையையும் முழுமையாக விசுவாசிக்கவில்லை என்றே பொருள்படும். "தேவனே நான் என்ன செய்ய சித்தமாயிருக்கிறீர்"? என விசாரிக்கும் அனுபவம் நம் வாழ்வில் இராது.

பரிசுத்தமும் வேறுபாடும்

தேவன் நமது வேறுபிரிக்கப்பட்ட வாழ்க்கையை பரிசுத்தத்தை விரும்புவார். அந்த ஜனங்கள் ஜாதிகளோடே கலவாமல் தனியே வாசமாய் இருப்பார்கள். (எண்ணாகமம் 23:9) "நான் பரிசுத்தர் ஆதலால் நீங்களும் பரிசுத்தராய் இருங்கள்" என்று எழுதியிருக்கிறதே. (1 பேதுரு 1:14-17) உள்ளத்தில் நாம் உண்மை உள்ளவர்களாக இருக்கவேண்டும் என்று அவர் விரும்புகிறார். வெளியரங்கமாக நாம் வேறுபிரிக்கப்பட்ட வாழ்க்கையை தெரிந்து கொள்வோமேயாயின் அந்தரங்கத்திலும் நாம் அவ்வாறு இருக்கவேண்டும். அப்படி இருந்தால் தான் தேவன், "ஆட்டுக் குட்டியானவர் எங்கே போனாலும் அவரைப் பின்பற்றுகிறவர்கள் இவர்களே என்று கூறுவார் (வெளி 14:4).

இவ்வாறு பிரிந்திருக்கும் கூட்டத்தாரினிடையில் அதிக வல்லமை வெளிப்படுவதில்லையே என நீங்கள் கூறலாம் அது ஒரு விதத்தில் உண்மைதான். ஏனெனில் தேவன் தாமே அவர்களைக் குறித்து "உனக்கு கொஞ்சம் பெலன் இருந்தும்" என்றுதான் கூறியிருக்கிறார்.

தேவனுடைய வல்லமை என்றால் என்ன? இதைக்குறித்து 1 இராஜாக்கள் 19ஆம் அதிகாரத்தில் வாசிக்கிறோம். தேவனுடைய வல்லமை வெளிப்பட்டவிதத்தைக்குறித்து எலியா திருப்தியடையவில்லை. அப்பொழுது கர்த்தர் நீ வெளியே வந்து கர்த்தருக்கு முன்பாகப் பர்வதத்தில் நில் என்றார். அப்பொழுது இதோ கர்த்தர் கடந்து போனார். கர்த்தருக்கு முன்பாகப் பர்வதங்களைப் பிளக்கிறதும் கன்மலைகளை உடைக்கிறதுமான பலத்த பெருங்காற்று உண்டாயிற்று. ஆனாலும் அந்தக்காற்றிலே கர்த்தர் இருக்கவில்லை; காற்றிற்குப்பின் பூமியதிர்ச்சி உண்டாயிற்று; பூமி அதிர்ச்சியிலும் கர்த்தர் இருக்கவில்லை. பூமி அதிர்ச்சிக்குப்பின் அக்கினி உண்டாயிற்று; அக்கினியிலும் கர்த்தர் இருக்கவில்லை. அக்கினிக்குப்பின் மெல்லிய சத்தம் உண்டாயிற்று. அதை எலியா

கேட்டபோது தன் சால்வையினால் தன் முகத்தை மூடிக்கொண்டு வெளியே வந்து கெபியின் வாசலிலே நின்றான். அப்பொழுது இதோ எலியாவே இங்கே உனக்கு என்ன காரியம் என்ற சப்தம் அவனுக்கு உண்டாயிற்று (1 இராஜாக்கள் 19:11-13).

ஜென்ம சுபாவம்

ஜென்ம சுபாவமுள்ள மனிதனும் மாம்சத்திற்குரியவர்களும் பெருங்காற்றையும், பூமி அதிர்ச்சியையும், அக்கினியையும் குறித்து. "ஆ" எவ்வளவு பயங்கரமானவைகள்" என்று கூறியிருக்கக்கூடும். தேவன் அவைகளையெல்லாம் பயன் படுத்தினாலும் அவைகளில் அவர் இருக்கவில்லை.

அமர்ந்த மெல்லிய குரலை பலவீனமானது என்று ஜென்ம சுபாவமுள்ள மனிதன் கூறியிருக்கக்கூடும். ஆனால் தேவன் அதில் தான் இருந்தார். அந்த அமர்ந்த மெல்லிய குரல்தான் எலியாவை கெபியை விட்டு வெளியே வரச்செய்தது. அது அவனை சிறுமைப் படுத்தியது. தாழ்மையுள்ளவனாக்கியது. அதின் மூலமாக அவர் அவனுக்கு போதித்தார். எதிர்காலத்தைக் குறித்த திட்டங்களைத் தந்தார். "பலத்தினாலும் அல்ல பராக்கிரமத்தினாலும் அல்ல என்னுடைய ஆவியினாலே ஆகும்" என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார் (சகரியா 4:6; 1 கொரிந்தியர் 2:1-5; 2 கொரிந்தியர் 12:9:10.

"இங்கே என் ஊழியக்காரப்பெண்களோடுகூட இரு" வேறு வயலில் போகாமல் இரு என கூறியதன் தொடர்ச்சியைப் போல இது தோன்றினாலும் சரியான ஐக்கியத்தைக் குறித்துப் போவாஸ் எவ்வளவு அக்கரை உள்ளவனாக இருந்தான் என்பதை இது காட்டுகிறது.

ரெபெக்காளும் சபையும்

ரெபெக்காள் ஒரு கன்னிகை. ஒரு புருஷனாலும் அறியப்படாதவள் அவள் திருச்சபைக்குச் சின்னமாக விளங்குகிறாள். ஆதியாகமம் 24:6 ல் இவ்வுண்மை ஆணித்தரமாக கூறப்படுகிறது. அவளுடைய கன்னிமையும் புருஷனால் அறியப்படாத பரிசுத்தமும் ஈசாக்கை அவள் மணப்பதற்குள்ளான தகுதிகளாக அமைகின்றன. பிரதான ஆசாரியனும் ஒரு கன்னிகையைத் தான் விவாகம் பண்ண வேண்டும். (லேவியராகமம் 21:13-14)" நான் உங்கள் கற்புள்ள கன்னிகையைக் கிறிஸ்து எனும் ஒரே புருஷனுக்கு நியமித்தபடியால்"

என்று பவுல் 2 கொரிந்தியர் 11-2ல் எழுதுகிறார். வெளிப்படுத்தின விசேஷம் 14ம் அதிகாரத்தில் ஸ்திரிகளால் தங்களை கறைப்படுத்தி கொள்ளாத 1,44,000 பேரைக்குறித்து வாசிக்கிறோம். அவர்கள் கற்புள்ளவர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். அப்படியானால் வேதாகமத்தின் வெளிச்சத்தில் விபச்சாரம் என்றால் என்ன? எசேக்கியேல் 16:26-29 லிருந்து கிறிஸ்துவோடு அன்றி உலகத்தோடு வாழும் வாழ்க்கையே அது என்றறிந்து கொள்ளலாம். கிறிஸ்துவிற்காக வேறு பிரிக்கப்பட்ட வாழ்க்கையின் கடைச்சுவர்களை தகர்ப்பதுதான் அது. தேவனுக்காக வேறு பிரிக்கப்பட்ட வாழ்க்கை வாழ்கிறோம் எனக்கூறிக்கொண்டு அவ்வாறு வாழாதவர்கள் கிறிஸ்தவ உலகத்தில் இருக்கட்டும். ஆனால் போர்வாஸின் வயலில் உள்ளவர்கள் அவ்வாறு இருக்க முடியாது. இங்கே சகலமும் போவாஸின் அதிகாரத்துக்குக் கீழ்ப்பட்டவைகளாய் இருக்கும். போவாஸின் வயலில் தங்களது கற்பை காத்துக்கொள்ளாமல் உலகத்தோடு இசைந்தவர்கள் இப்படிப்பட்டவர்களாகத்தான் இருப்பார்கள். அவர்களைக்குறித்து பவுல் "அநேகர் வேறு விதமாய் நடக்கிறார்கள். அவர்கள் கிறிஸ்துவின் சிலுவைக்குப்பகைஞர் என்று உங்களுக்கு அநேக தரம் சொன்னேன். இப்பொழுது கண்ணீரோடும் சொல்லுகிறேன் என்று கூறுகிறார் (பிலிப்பியர் 3:1.8)

## தவறான ஐக்கியத்தால் உண்டாகும் சீர்கேடு

"பாலியத்துக்குரிய இச்சைகளுக்கு நீ விலகியோடி சுத்த இருதயத்தோடு கர்த்தரை தொழுதுகொள்ளுகிறவர்களுடனே நீதியையும், விசுவாசத்தையும் அன்பையும் சமாதானத்தையும் அடையும் படி நாடு" என்று வேதம் கூறுகிறது. இவ்வறிவுரை வெளியரங்கமாக வேறுபிரிந்திருக்கும் விசுவாசிகளுக்கு நல்கப்படுகிறது. வெளியரங்கமாக வேறு பிரித்திருக்கிறதைப் போலக்காணப்படாமலும் அந்தரங்கத்தில் அசுத்தமுள்ளவர்களாகவும். அன்பு, விசுவாசம், சமாதானம் அற்றவர்களாகவும் நடந்துகொள்ள வாய்ப்பு உண்டு. மூடர்களும், மாம்சத்திற்குரியவர்களாகவும் காணப்படும் விசுவாசிகளோடு ஐக்கியங்கொள்ளும்வரை நாம் கிருபையில் வளர முடியாது. வேதவசனம் போதிப்பதை செயல்படுத்துகிறவர்களுடன் ஐக்கியம் கொள்ளும் போது நாம் கிருபையில் வளர முடியும். முழு மனதோடு கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்களின் ஐக்கியத்தில் தான் வளர்ச்சி உண்டு. "அறுக்கிறவர்களின் பிறகே போய்ப் பொறுக்கிக்கொள்ளும் படி போவாஸ் அவளைக்கேட்டுகொள்கிறான். பரம போவாஸின

வயல்களில் இடைவிடாதவாறு நமது கண்களை பதிக்கவேண்டும்." அறுக்கிறவர்களின் பிறகே நாம் நடப்போமேயாயின் எல்லா ஆசீர்வாதங்களையும் பெற முடியும். "அவ்வாறு செய்வோமே யானால் நாம் குறையற்றவர்களாய் இருப்போம்." நீ ஆரோனோடே சொல்லவேண்டியதென்னவென்றால் உன் சந்ததியாருக்குள்ளே அங்கவீனமுள்ளவன் தலைமுறைதோறும் தேவனுடைய அப்பத்தை செலுத்தும்படி சேரலாகாது. அங்கவீனமுள்ள ஒருவனும் அணுகலாகானாக; குருடனானாலும், சப்பாணியானாலும், குறுகின அல்லது நீண்ட அவயமுள்ளவனானாலும், காலொடிந்தவனாலும், கையொடிந்தவனானாலும், கூனனானாலும் குள்ளனானாலும், பூவிழுந்த கண்ணனானாலும், சொறியரையனானாலும் அணுகார்களாக (லேவியராகமம் 21:11-23) 2 பேதுரு 1:9-10, பிலிப்பியர் 3:3) ஆவிக்குரிய வாழ்வில் நாம் அங்கவீனமுள்ளவர்க்ளாகவோ, குள்ளர்களாகவோ இருப்பதை ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து விரும்புவதில்லை. நாம் பரிபூரணமுள்ளவர்களாக இருப்பதை அவர் விரும்புகிறார். புதிய ஏற்பாட்டில் பரிபூரணம் என்றால் 'முதிர்ச்சியடைந்த வளர்ந்த நிலையைக்' குறிக்கும். அல்லது வேறு விதமாகக்கூறினால் எபேசியருக்கு எழுதின நிருபத்தில் கூறப்பட்டுள்ள உன்னத நிலைமையை அது குறிக்கிறது. அவ்வாறு நாம் வளருவதற்கு முன் ரோமர், கொரிந்தியருக்கு எழுதின "நிருபங்களில் கூறப்பட்டுள்ள சத்தியங்களை கற்றுக்கொள்ள வேண்டும்.

"ஒருவரும் உன்னைத் தொடாதபடிக்கு வேலைக்காரருக்குக் கட்டளையிடுகிறேன்", மூல மொழியில் வேலைக்காரர் பதத்திற்கு வாலிபர்கள் என்னும் பதம் பயன்படுத்தப்பட்டுள்ளது. அவர்கள் தீமையை வெல்லத்தக்க வல்லமை உடையவர்கள் அவர்களுக்குள்ளும் வேதவசனம் நிலைத்திருக்கிறது (1 யோவான் 2:14) ஆனால் அவர்களும் ஒரு காலத்தில் கிறிஸ்துவுக்குள் குழந்தைகளாக இருந்தவர்கள் நாம் என்பதை மறந்து விடக்கூடிய வாய்ப்பு உண்டு. கிறிஸ்துவுக்குள் குழந்தைகளாக இருப்பவர்களால் செயல்களைப் புரிந்துகொள்ளவோ, சகித்துக் கொள்ளவோ அவர்களால் முடிவதில்லை. இதற்குரிய உதாரணங்களை மத்தேயு 15:23; லூக்கா 9:55; லூக்கா 18:15 ஆகிய வசனப்பகுதிகளில் காணலாம். ஆனால் போவாஸ் ரூத்தைப் போன்ற இளம் விசுவாசிகளின் பயத்தை அகற்றும்படி அவன் உற்சாகப்படுத்துகிறான்.

## "ஓ தாகமாயிருக்கிறவர்களே"

"உனக்குத் தாகம் எடுத்தால் தண்ணீர் குடங்களண்டைக்குப்

போய் வேலைக்காரர் மொண்டு கொண்டு வருகிறதிலே குடிக்கலாம் என்றும் போவாஸ் கூறுகிறான். அறுவடை என்பது ஆவிக்குரிய வரங்களைப் பயன்படுத்தி மற்றவர்களுக்கு கிறிஸ்துவைக்குறித்து அறிவிக்கிறவனாக காண்பிக்கிறது. ஆனால் இங்கே முன்னரே செய்து முடிக்கப்பட்ட ஒரு ஊழியத்தைக் காண்கிறோம். நாம் அதின் தன்மைகளை மாத்திரம் சொல்லுகிறோம். நமது பரம போவாஸ் தமது ஊழியக்காரர்கள் மூலமாக நமது களைப்பை மாற்றும் தண்ணீரை முன்னரே கொண்டு வைத்திருக்கிறார் *(யோவான் 7:38).*

இந்தப் பாத்திரங்களில் வேத வசனமாகிய "ஜீவத்தண்ணீரை காண்கிறோம். ஆவிக்குரிய விதத்தில் பரிசுத்த ஆவியானவர் மற்றவர்களின் தாகத்தைத் தீர்க்கப்பயன்படுத்துகிறார் *(1 கொரிந்தியர் 2:9:13)* பலவான்களாகிய வாலிபர்களின் தியானங்களின் மூலமாகக்கிடைக்கும் பொக்கிஷங்களையும் நாம் பெற்றுக்கொள்ளுகிறோம். அவ்வாலிபர்கள் பொல்லாங்கானதை ஜெயித்தவர்கள் *(1 யோவான் 2:14)*

அப்பொழுது அவள் தரையிலே முக்குப்புற விழுந்து வணங்கி "நான் அந்நிய தேசத்தாளாயிருக்க நீர் என்னை விசாரிக்கும்படி எனக்கு எதினாலே உம்முடைய கண்களில் தயை கிடைத்தது." என்றாள். தேவனுடைய அநாதி கிருபைகளைப் பெற்றுக்கொள்ள ஆயத்தம் இன்றி அநேக ஆத்துமாக்கள் இருப்பதைக்காணலாம். வருங்காலத்தில் நாம் அனுபவிக்கப்போகும் கிருபைகள் கடந்த காலத்தில் நாம் அனுபவிக்க வேண்டியவைகளைப் பார்க்கிலும் மிகச்சிறியவைகள்தாம். ரூத் போவாசின் நற்குணங்களை பகுத்தறிந்தது எவ்வளவு விலையேறிய காரியம் என்று மேவிபோசேத் தாவீது ராஜாவின் முன் நிற்கும் போது இவ்வாறு தான் உணர்ந்தான்." செத்த நாயைப் போல் இருக்கிற என்னை நோக்கிப்பார்க்கிறதற்கு உமது அடியான் எம்மாத்திரம்" என்று கேட்கிறான் *(2:சாமுவேல் 9:8)* தேவ பிரசன்னத்திற்குள் கடந்து செல்லும் போது ஒரு ஆத்மா தன்னைத்தான் தாழ்த்துவது இயல்பான செயலே. யோபைக்குறித்து தேவன் "உத்தமனும் சன்மார்க்கனும் தேவனுக்கு பயந்து பொல்லாப்புக்கு விலகுகிறவனுமாகிய அவனைப்போல பூமியில் ஒருவனும் இல்லை" என்றார் *(யோபு 1:8).* ஆனால் தன்னைக் குறித்து யோபு கூறுவதைக் கேளுங்கள். என் காதினால் உம்மைக் குறித்துக் கேள்விப்பட்டேன். இப்பொழுதோ என் கண் உம்மைக் காண்கிறது. ஆகையால் நான் என்னை அருவருத்து தூளிலும் ''சாம்பலிலும் இருந்து மனஸ்தாபப்படுகிறேன்" என்றான். *(யோபு 42:5-6).* ஆராதிக்கத்தக்க

ஒருவரின் பிரசன்னத்தில் இருக்கும் பொழுது நம்மைக்குறித்து நாம் அருவருக்காமல் இருக்கமுடியுமா? நமது உள்ளத்தில் நாம் பெருமை கொள்வோமாயின் நாம் இன்னும் அவரை தரிசிக்கவில்லை என்பது தான் பொருள். நம்மைத்தாழ்மை யுள்ளவர்களாக மாற்றுவதும் அவர் கிருபையே. அவரது பிரசன்னத்தில் நம்மை நாமே காணும்போது நாமும் அதிசயத்தோடு "உம்முடைய கண்களில் எனக்கு தயை கிடைத்தது எப்படி" என்று தான் கேட்கத்தோன்றும். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் அளவில்லாக்கிருபையைக் குறித்து நாம் இவ்வாறு கூறமுடியும்." என்னில் அன்பு கூர்ந்து எனக்காக தம்மைத்தாமே ஒப்புக் கொடுத்த என் தேவ குமாரன்" (கலாத்தியர் 2:20)சுயத்தை மையமாகக் கொண்டிருக்கும் பொழுது நாம் இவ்வாறு கூற முடியாது. நாம் அவரை நோக்கிப் பார்க்கும் பொழுது அவரது அன்பையும், கிருபையையும் புரிந்து கொள்ள முடியும். அவர் நம்மிடத்தில் அன்பு கூறுகிறவர் மாத்திரமல்ல அவர் அன்பாகவே இருக்கிறார்.

### நற்சாட்சி பெற்ற நங்கை

அதற்குப் போவாஸ் பிரதியுத்தரமாக உன் புருஷன் மரணமடைந்த பிறகு நீ உன் மாமியாருக்காக செய்ததையும் நீ உன் தகப்பனையும், உன் தாயையும், உன் ஜென்மதேசத்தையும் விட்டு முன்னே நீ அறியாத ஜனங்களிடத்தில் வந்தது எல்லாம் எனக்கு விவரமாய் அறிவிக்கப்பட்டது (ரூத் 2:11) என்றான்.

இதற்கு முன்பாக "அறுக்கிறவர்கள் மேல் கண்காணியாக வைக்கப்பட்ட வேலைக்காரன் ரூத்தைக் குறித்து சொன்ன சாட்சியை கேட்போம். இங்கே கண்காணியானவன் பரிசுத்த ஆவியானவருக்கும், போவாஸ் ஆண்டவருக்கும், ரூத் ரட்சிக்கப்பட்ட நமக்கும், நிழலாக அமைகின்றனர். நாம் நம்மைக் குறித்தே மேன்மை பாராட்டிக்கொள்ளாமல் ஆண்டவருடைய கிருபையைக் குறித்தே மேன்மை பாராட்டுவோமேயாயின் அவரே நம்மைக்குறித்து சாட்சி கொடுக்கிறார். ரூத்திற்கு இவ்வனுபவம் எவ்வளவு உற்சாகத்தை அளித்திருக்கும். ஒரு ஏழைப் பெண்ணான தன்னைக் குறித்து செல்வம் படைத்த ஒருவனிடம் சகல விவரங்களும் தெரிவிக்கப் பட்டது என்று அறிந்த பொழுது அவளுக்கு பேருவகை உண்டாயிற்று.

மோவாபிலிருந்து பெத்லெகேமிற்கு வந்ததை அவள் ஒரு தியாகமாக கருதவில்லை. அவ்வண்ணமே பாவபாரத்தோடு

கிறிஸ்துவிடம் கடந்து வரும் ஒரு விசுவாசி தான் ஒரு பெரிய நற்செயலை செய்து விட்டதாக எண்ணிக்கொள்ளவில்லை. ஆனால் கிருபையில் ஐசுவரியம் உள்ள தேவன் அதை ஒரு நற்கிரியையாகக் கணக்கிடுகிறார். உலகம் அவரைப் புறக்கணித்திருக்கிறது. ஆனால் நமக்கோ அவர் ஒரு பெரிய ஈவைத்தந்திருக்கிறார். உன்னதங்களில் அவரோடுகூட உட்கார்ந்திருக்கிற நாம் அவரது இரண்டாம் வருகையின்போது மிகப் பெரிய பலன்களைப் பெறுவோம்.

## நன்மை செய்வதால் மேன்மை

தனது புருஷன் இறந்த பிறகு ரூத் நகோமிக்குச் செய்த அனைத்தையும் போவாஸ் அறிந்திருந்தான் நகோமியுடன் வந்தபடியால் தனது தகப்பனோடும், தாயோடும் உள்ள உறவை அவள் முறித்துக் கொண்டு விட்டாள் என்பதையும் போவாஸ் அறிந்திருந்தான். ரூத்தைக் குறித்த போவாஸின் வார்த்தைகள் நமக்கு ஆபிரகாமைத்தான் நினைவுக்குக் கொண்டு வருகிறது (ஆதியாகம் *12:1*) எபிரேயர் *11:8*) ஆம் தேவன் நம்முடைய சூழ்நிலைகளை நன்கறிவார். ஏனெனில் கிருபை நிறைந்தவரான அவரே அப்படிப்பட்ட சூழ்நிலைகளுக்குள் கடந்து சென்றார். (எபிரேயர் *2:10) 14, 18; 4:15)* பின் ஏன் நாம் பயப்பட வேண்டும்.

நமது கண்களும் இதயமும் அவரை நோக்கி பதிந்திருக்கும் போது பலவீனமான நம்மை அவர் தமது சாட்சிகளாக பயன்படுத்த முடியும். அவருக்கு சாட்சியாக வாழ்வதே நமது நோக்கம் எனும் எண்ணத்தில் நாம் அடிக்கடி தவறி விடுகிறோம். நம்மைக்குறித்து எண்ணாமல் அவரைக்குறித்து மாத்திரம் எண்ணும் போது நாம் அவருக்கு சாட்சியாக வாழ முடியும்.

ரூத் தான் ஒரு சாட்சியாக திகழ வேண்டுமென்று மிகவும் பிரயாசப்படவில்லை. நகோமியின் மீதுள்ள அன்பினால் தமது கடமையை மாத்திரம் செய்தாள். அவளுடைய எண்ணத்தில் தேவனை மகிமைப்படுத்தவேண்டும். எனும் கடமை உணர்வே மேலோங்கி நின்றது. அவரது அன்பினால் உந்தப்பட்டவர்களாய் நாம் அவருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படியும் போது நாம் அவருக்கு சாட்சிகளாக வாழ முடியும்.

ரூத் தான் செய்த கடமைக்கு அதிகமான பலனைப் பெறுகிறாள். கதிர்களை மாத்திரம் பொறுக்கி இருந்தால் அவள் கொஞ்சம் தானியத்தைதான் சேகரித்து இருக்க முடியும். ஆனால்

அவளது அர்ப்பணமும் கடமை உணர்வும் அனைத்தையும் பெறச்செய்தன. போவாஸ் தொடர்ந்து கூறுகிறான் "உன் செய்கைக்குத்தக்க பலனை கர்த்தர் உனக்குக் கட்டளையிடுவாராக இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருடைய செட்டைகளின் கீழ் அடைக்கலமாய் வந்த உனக்கு அவராலே நிறைவான பலன் கிடைப்பதாக (வ:12) போவாஸ் ரூத்தை ஆசீர்வதித்தான். பிறகு அவனுடைய ஆசீர்வாதங்களிலே அவளுக்கு பங்கு கிடைத்தது. தனது கிரியைகளை தேவனுடைய கண்கள் அவள் மேல் பதித்திருந்தன. அவள் மோவாபிற்குத் திரும்பி போகமாட்டேன் எனக்கூறியபோது கர்த்தர் அவளைக் கண்டார். நகோமி அவளை மோவாபிற்கு இரும்பி போக சொன்னபோது தான் உம்மைப்பின்பற்றாமல் உம்மைவிட்டுத்திரும்பி போவதைக்குறித்து என்னோடே பேச வேண்டாம் என கூறுகிறாள்.

## உண்மையுள்ள தேவன்

உம்முடைய தேவன் என்னுடைய தேவன் என்று அவள் கூறிய வாக்குறுதியை அவர் கேட்டிருந்தார். தனக்கான சகல கிரியைகளையும் அவள் செய்து முடித்து விட்டதைப் போலவே அவர் கணக்கிட்டார். இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருடைய செட்டைகளின் கீழ் கடந்து வந்த அவளது செயல் விருதாவாவது இல்லை. என்பதைத் தெரிவிக்கும் படி போவாஸ் அவளை ஆசீர்வதிக்கிறான். இவ்வாசீர்வாதத்தின் அனுபவத்தை ஆபிரகாமின் வாழ்விலும் காணலாம் (ஆதியாகமம் 15:1)

தேவன் தம்முடைய ஜனங்களைக் காப்பாற்றுகிறார். என்பதற்குப் போவாஸ் பயன்படுத்தும் அணியிலக்கணத்தைப் பாருங்கள். "இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருடைய செட்டைகளின் கீழ் அடைக்கலமாய் வந்த உனக்கு அவராலே நிறைவான பலன் கிடைப்பதாக. இதே அடையாள மொழியைத் தான் ஆண்டவரும் பயன்படுத்துகிறார் (யாத்திராகமம் 19:4) உபாகமம் 32:11) ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தாம் எருசலேமைக் குறித்து கரிசனை உள்ளவராக இருக்கிறார் என்பதை வெளிப்படுத்த இம்மாட்சியைத்தான் பயன்படுத்துகிறார். (மத்தேயு 23:37) கோழிக்குஞ்சுகள் தாய்க்கோழியின் சிறகுகளின் கீழில் எவ்வாறு பாதுகாப்பாக இருக்கும் என்று பாருங்கள் கழுகு தன் குஞ்சுகளை எவ்வளவு பாதுகாப்பாக தன் சிறகுகளின் மீது வைத்துக்கொண்டு பறக்கும் என்பதை சிந்தித்துப் பாருங்கள். இப்படியிருக்க நம்மைக் குறித்து நாமே கவலை கொண்டது ஏன்? ரூத் தன்னைக்குறித்து

மாத்திரம் எண்ணியிருப்பாளேயானால் அவள் எளிதாக ஆசீர்வாதங்களை கண்டுகொள்ளவோ பெற்றுக் கொள்ளவோ முடிந்திருக்காது.

## ஆறுதலளிக்கும் ஆதாரங்கள்

அதற்கு அவள் "என் ஆண்டவனே உமது கண்களில் எனக்கு தயை கிடைக்கவேண்டும்; நான் உம்முடைய வேலைக்காரிகளில் ஒருத்திக்கு சமானமாயிராவிட்டாலும் நீர் எனக்கு ஆறுதல் சொல்லி உமது அடியாளோடே பட்சமாய்ப் பேசினீரே" என்றாள். ரூத் போவாஸின் வார்த்தைகளால் எவ்வளவு தூரம் ஆறுதல் அடைந்தாள் என்பதை அவளது வார்த்தைகளே எடுத்துக் கூறுகின்றன. விசுவாசத்தின் நோக்கம் பரிசு அல்ல. எனினும் அப்பரிசு விசுவாசத்தை பெலப்படுத்தவும், உற்சாகப்படுத்தவும் உறுதுணையாய் அமைகிறது. கிருபையால் நாம் பெற்றுக்கொண்ட அன்னத்தையும் விசுவாசம் பகுத்தறிகிறது. மேலும் அதிக கிருபைப்பெற்றுக்கொள்ளவும் அது வாஞ்சிக்கிறது. மெய்யான விசுவாசத்தின் தன்மை இதுவே.

மாறாக மாம்சமானது கிருபையை விரும்புவதில்லை. கிருபையைப் பெற்றுக்கொள்வது அதற்கு ஒரு தாழ்மையான செயலாக தோன்றுகிறது. கிருபை மாத்திரமே தனக்கு உதவக்கூடும் எனும் நிலைவரும் பொழுது அது கிருபையை புறக்கணித்து விடுகிறது. கிருபையை ஏற்றுக்கொள்வது ஏதோ ஒரு தரக்குறைவான செயல் என்று அது எண்ணுகிறது. இது தான் பெருமை என்பது சுயத்தை மையமாகக் கொண்ட மாம்சமானது கிருபையை தன்னளவு கோலைக்கொண்டே கணக்கிடுகிறது.

## கிருபையும் விசுவாசமும்

கிருபையானது ஆத்துமாவை உற்சாகப்படுத்தி தன்னை நம்பும்படி செய்து முழுமையாக அதை திருப்திப்படுத்துகிறது. விசுவாசமோ உலகத்தை ஜெயித்து தேவனை முழுமையாக நம்புகிறது. தேவனை முழுமையாக நம்பி அவரது கிருபையுள்ள வார்த்தைகளைப் பற்றிக் கொள்கிறது. மேலும் அவைகளைப் பெற்றுக்கொள்ள வாஞ்சிக்கிறது. தேவன் கிருபையின் தேவன்! அவரை விசுவாசமானது மகிமைப்படுத்துகிறது. தேவனைப் பெரிய கொடையாளியாகக் கண்டுகொண்ட சிலாக்கியத்தை அது வெளிப்படுத்துகிறது.

போவாஸின் கிருபையும், ரூத்தின் விசுவாசமும் இணைந்து செயல்படுகின்றன. போவாஸின் வார்த்தைகளை ரூத் அப்படியே நம்பினாள். போவாஸின் கண்களில் தனக்கு தயை கிடைத்தது என்பதையும் அவள் அறிந்து கொண்டாள். தேவனுடைய கிருபை நம்மேல் இருக்கிறது என்பதை நாம் அறிவோம். நாமும் விசுவாசித்த படியால் கிருபையின்மேல் நிலை கொண்டிருக்கிறோம். நம்முடைய கர்த்தராகிய இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவரை விசுவாசிக்கிற நமக்கும் அப்படியே எண்ணப்படும் அவர் நம்முடைய பாவங்களுக்காக ஒப்புக்கொடுக்கப்பட்டும் நாம் நீதிமான்களாக் கப்படுவதற்காக எழுப்பப்பட்டும் இருக்கிறார்.

ரூத் தனக்குக் கிடைத்த ஆசீர்வாதங்களைக்குறித்து மகிழ்ந்தாளே அன்றி பெருமைக்கொள்ளவில்லை. போவாஸின் அதிகாரத்தை அவள் அங்கீகரித்தாள். அறிக்கை செய்தாள். தன்னை 'அடியாள் என்று குறிப்பிடுகிறாள்'. (வ. 13) போவாஸ் ரூத்தின் இருதயத்தோடே பேசினான். நமது தேவனும் அப்படியே செய்கிறார். அவர் நமது பகுத்தறிவோடே பேசுவது இல்லை. அவர் நமது மனசாட்சியோடும், உள்ளத்தோடும் பேசுகிறார் இதை நாம் அறிந்து கொள்வது நல்லது.

## தாழ்மையும், சாட்சியும்

ரூத் போவாஸின் அதிகாரத்தை அங்கீகரித்தபடியால் தன்னை அடியாள் என்று அழைத்துக்கொண்டாள். ஆனால் அவள் அவனுடைய வேலைக்காரிகளோடுபோலும் சமமாக கருதிக்கொள்ள வில்லை. மோவாபியப்பெண்கள் எப்படிப்பட்டவர்கள் என்று அவளுக்குத் தெரியும். இப்பொழுது பெத்லகேமிலுள்ள போவாஸின் வேலைக்காரிகளைக்கண்டபோது தன்னுடைய அவல நிலைமையை அதிகமாக உணர்ந்தாள். போவாஸின் வேலைக்காரிகள் கன்னிகைகளாகவும், உலகத்தோடு தொடர்பில்லாதவர்களாகவும் இருந்தனர். ஒருமுறை ஒரு சகோதரி இவ்வாறு கூறினாள். "நான் மனந்திரும்பியவுடன் ஒரு ஆராதனைக் கூட்டத்திற்கு சென்றேன். அங்கு இருந்தவர்கள் அடக்கம் உள்ளவர்களாகவும், நீண்ட முடியை உடையவர்களாகவும் இருந்தனர். தலைகளை முக்காடிட்டுக் கொண்டிருந்த அவர்களின் தன்னடக்கம் என்னை பிரமிப்படையச் செய்தது. அவர்கள் பரிசுத்தம் உள்ளவர்கள் நான் அவ்விடத்திற்கு உகந்தவள் அல்ல என்று உணர்ந்தேன் எனினும் ரூத்தைப் போல அச்சகோதரியும் அச்சபையை விட்டு போக விரும்பவில்லை. ஏனெனின் பரம போவாஸின் பிரசன்னம் அவளை நிலைத்திருக்கச்செய்தது. பரம போவாஸின் வேலைக்காரிகள்

நடையிலும், உடையிலும் அவரை மகிமைப்படுத்தவேண்டும்". அவர்கள் மயிரைப்பின்னுதலினாலாவது பொன்னினாலாவது, முத்துக்களினாலாவது, விலையேறப்பெற்ற வஸ்திரத்தினாலாவது தங்களை அலங்கரியாமல், தகுதியான வஸ்திரத்தினாலும், நாணத்தினாலும், தெளிந்த புத்தியினாலும், தேவ பக்தியுள்ளவர்களென்று சொல்லிக்கொள்ளுகிற ஸ்திரீகளுக்கு ஏற்றபடியே நற்கிரியைகளினாலும் தங்களை அலங்கரிக்க வேண்டும். (தீமோத்தேயு 1:9-10) அவர்களுக்கு தங்கள் தலையை மறைத்துக்கொள்ள நீண்டமுடி இருக்கும் (1 கொரிந்தியர் 11).

தனம் பெருத்த பெத்லெகேமியன் ஆகிய போவாஸின் இரக்கமும் சீரிய பண்பும் ரூத்தை மகிழ்வித்தன. சொல்லாலும், செயலாலும் அவன் தனது நற்குணங்களை வெளிப்படுத்தினான். அவனுடைய கவனம் முழுவதும் ரூத்தின் மீது திருப்பப்படுகிறது. அவனது தன்னலமற்ற தன்மை அவளைக்கவர்ந்தது. அவளைப்போன்ற பெண்ணையும் ஒரு பெண்ணாகக்கருதும் அவனது நற்குணத்திற்கு முன் அவள் தலைகுனிந்தாள். அவள் தரையிலே முகங்குப்புற விழுந்து வணங்குகிறாள். அவள் ஒரு "அந்நிய தேசத்தாள்." (வ. 10) அவன் அவள் மீது காட்டிய பரிவையும் பாசத்தையும் புறக்கணிக்காமல் ஏற்றுக்கொள்கிறாள். சுவிசேஷங்களில் கூறப்பட்டிருக்கும் விலையேறியப்பெண்களில் அவளும் ஒருத்தியாக விளங்குகிறாள்.

## தன் உணவை பகிர்ந்து தரும் தன்னலமற்றவன்

பின்னும் போவாஸ் சாப்பாட்டு வேளையில் அவளை பார்த்து "நீ இங்கே வந்து இந்த அப்பத்தில் புசித்து காடியிலே உன் துணிக்கையைத் தோய்த்துக்கொள்" என்றான். அப்படியே அவள் அறுப்பறுக்கிறவர்கள் அருகே உட்கார்ந்தாள். அவளுக்கு வறுத்த கோதுமையைக் கொடுத்தான். அவள் சாப்பிட்டுத்திருப்தியடைந்து மீந்ததை வைத்துக்கொண்டாள். மிகுந்த தாழ்மையோடும், எளிமையோடும் நடந்துகொள்கிறாள்.. ஆனால் போவாஸ் மற்றவர்களுக்கு முன்பாக ரூத்தை கனம் பண்ண விரும்புகிறான். தன்னோடு வந்து உணவருந்த அவளை அழைக்கிறான். அவள் மறுக்கவில்லை. அவள் தனக்கு கற்பிக்கப்பட்ட படியே நடந்து கொள்கிறாள் தன்னுடைய உடையைக்குறித்தோ, வறுமையைக் குறித்தோ, தகுதியின்மையைக் குறித்தோ அவள் பாரப்படாமல் போவாஸின் அழைப்பை ஏற்றுக்கொள்ளுகிறாள். நமது ஆசீர்வாதத்திற்கும் ஊற்றாகத் திகழ்வது இப்படிப்பட்ட

கீழ்ப்படிதலே. அவர் செய்ய விரும்பாத ஒரு செயலையும் நாம் செய்ய வேண்டுமென்று அவர் எதிர்பார்ப்பதில்லை. நாம் கீழ்ப்படிவதற்கான பெலத்தையும் அவர் தருகிறார்.

ரூத் மிகுந்த ஜாக்கிரதையோடு கதிர்களை பொறுக்குகிறாள். ஆனால் தேவன் எல்லா வேலைகளிலும் நாம் பரபரப்பாக இயங்குவதை விரும்புவதில்லை. அவரோடு இருந்து உணவருந்தும் அனுபவத்திற்குள்ளாக நாம் கடந்து வருவதை அவர் விரும்புகிறார். சீஷர்கள் தாங்கள் செய்தவைகள் உபதேசித்தவைகள் யாவையும் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவிற்கு அறிவித்தபோது அவர் அவர்களை நோக்கி வனாந்திரமான ஒரு இடத்தில் தனித்தே சற்று இளைப்பாறும்படி போவாம் வாருங்கள்" என்றார் (மாற்கு 6:30-31).

நாம் தேவனோடு தனித்திருக்கும் அனுபவங்களை எவ்வளவு உதாசீனப்படுத்துகிறோம் என்று பாருங்கள். நாம் அனேக வேளைகளில் அவரது வல்லமையை நமது வல்லமையாகக்கணக்கிட்டு வருகிறோம். இப்படிப்பட்ட வேளைகளில் நாம் அவரோடு தனித்து இருக்கப்பழகவேண்டும்.

நாம் அவர் சொல்லுவதைக் கேட்டு அவருடைய பாதத்தில் அமர்ந்து அவரோடு உறவாடுவோமேயாயின் நமது வாழ்விலும் ஊழியத்திலும் வல்லமை காணப்படும். வாழ்க்கைக் கனிகளால் நிறைந்திருக்கும். ரூத் சாப்பாட்டு வேளையிலும் கதிர்களைப் பொறுக்குவாளேயானால் அவள் அதிக ஆசீர்வாதங்களை அனுபவிக்கவியலாது. ஆனால் போவாஸ் அவள் மீது கரிசனை உள்ளவனாம். அவளை மிகுந்த கனத்தோடு பராமரிக்கிறவனாம். அவள் தின்று திருப்தியடைந்த பின்பு நகோமிக்கும் கொஞ்சத்தைக் கொண்டு போகிறாள்.

நடைமுறை வாழ்வில் வாரத்தின் 6 நாட்கள் சொந்த வேலையைச் செய்துவிட்டு ஞாயிற்றுக்கிழமை மட்டும் ஆவிக்குரிய உணவை உட்கொள்ள விரும்பும் அநேகர் உண்டு.. இப்படிப் பட்டவர்கள் கிறிஸ்தவ வாழ்க்கையில் பலவீனமுள்ளவர்களாகவே இருப்பார்கள். கிறிஸ்துவே "ஜீவ அப்பம்" (யோவான் 6:35) ஆவிக்குரிய வாழ்வில் வளர அவர் எப்படிப்பட்டவர்" என்றும் வசனங்களின் மூலம் அறிந்து கொள்வது அவசியம் (யாவான்6:56) அனுதினமும் நமக்குரிய பங்கான மன்னாவை, தேசத்தின் பழைய தானியத்ததைச் சேகரித்து உட்கொள்ளவேண்டும். (யோவான் 6:27; யோசுவா 5:11) கதிர்களைப் பொறுக்குவதன்மூலம் ரூத் தனக்குரிய உணவைச்

சேகரித்தாள். நமக்குரிய ஆவிக்குரிய உணவை ஒரு பிரசங்கத்தைக் கேட்பதன் மூலமாகவோ வேதாகமத்தை வாசிப்பதன் மூலமாகவோ பெற்றுக்கொள்ள முடியும்.

## மேஜை என்றால்

போவாஸ் தனது மேஜையிலிருந்தே உணவருந்தும் உரிமையை ரூத்திற்கு அளிக்கிறான். ஒரே விதமான உணவு தான் அங்கே உண்டு. என்றாலும் அவ்வுணவை போவாஸின் கையிலிருந்தே நேரிடையாகப் பெற்றுக்கொண்டு அவனோடுகூட உணவருந்தும் சிலாக்கியத்தை அவள் பெற்றுக்கொள்கிறாள். அவனோடு ஐக்கியம் கொள்ளும் ஒரு பங்காளியாக, உறவாடுபவளாக அவள் மாறுகிறாள். வேதாகமம் 'மேஜை' எனும் சொல்லை பயன்படுத்தும்போது அதன் உட்கருத்து ஐக்கியத்தையும், பங்காளித்துவத்தையும், உறவையும் குறிப்பதாக அமையும்.

போவாஸ் தன் ஊழியக்காரர்களையும், ஊழியக்காரிகளையும் அவ்வாறு செம்மையாக நடத்தினான் என்று ரூத் கண்டு கொண்டாள், சிறந்த உணவையும், பானத்தையும் அவர்கள் அவன் கையிலிருந்து நிறைவாகப்பெற்றுக்கொண்டனர். நமது பரமபோவாஸும் தமது ஊழியக்காரர்களுக்கு இப்படிச்செய்வதில்லையோ? ரூத் இப்படிப்பட்ட ஆசீர்வாதங்களையும் பெற்றுக்கொள்ளுகிறாள். போவாஸின் ஊழியக்காரர்களுக்கு அருகே அமர்ந்து உணவருந்தும் ஐக்கியத்திலிருந்து லேவியராகமம் மூன்றாம் 7ஆம் அதிகாரத்தில் கூறப்பட்டுள்ள சமாதான பலியை நினைவூட்டுகிறதல்லவா? தேவனுடைய குடும்பம் முழுவதும் பலிபீடத்தைச் சுற்றிலும் கூடி பலி செலுத்தப்பட்ட மிருகத்தின் மாமிசத்தைப் புசிக்கின்றனர். அங்கே ஆரோனுடைய குமாரர்களும் பரிசுத்த ஜனங்கள் அனைவரும் உண்டு. லேவியராகமம் 3:11-16ல் கூறப்படும் தேவனுக்கும் அதிலே பங்கு உண்டு. "தகன ஆகாரம்" தான் அவருடைய பங்கு ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவிற்கு நிழலாக அமையும் ஆரோனுக்கும் அதிலே பங்கு உண்டு. யோவான் 6:27.35 ல் நமது பரம போவாஸாகிய இயேசு கிறிஸ்து நமக்கு மன்னாவைத்தருகிறார். அவர் இவ்வுலகத்தில் வாழ்ந்த வாழ்விற்கு நிழலாக மன்னா அமைகிறது. இவ்வனாந்திர வாழ்க்கையில் நமக்குத்தேவைப்படும் ஆகாரமே அம்மன்னாவாகும். அவர் ஒரு மனிதனாக இவ்வுலகில் அவதரித்து ஒரு விசுவாசி கடந்து செல்ல வேண்டிய அனைத்து அனுபவங்களுக்குள்ளாக அவர் கடந்து சென்றார். அவர் பரிசோதிக்கப்பட்டும் பாவமற்றவராகத்திகழ்ந்தார் அவருக்கு

பசியுண்டாயிற்று. தாகமாயிருந்தார், களைப்பாயிருந்தார் (யோவான் 4) அவர் லாசருவின் கல்லறை அருகே நின்று கண்ணீர் விட்டார். (யோவான் 11) அவருக்கும் தனிமை உணர்வு உண்டாயிற்று (சங்கீதம் 102:7,8) ஆறுதல் செய்கிறவர்களுக்காகவும் அவர் ஏங்கினார். (சங்கீதம் 69) நம்முடைய எல்லா நெருக்கங்களிலும் அவர் நெருக்கப்பட்டார். (ஏசாயா 6,3:9) எபிரேயர் 2:10-14-18) இவ்வண்ணமாக நாம் அவரை தரிசிக்கும் பொழுது அவரை ஆராதிக்காமல் இருக்க முடியுமா? அவரது வாழ்வே நம்மை பெலப்படுத்துகிறது. அவரது வாழ்வுதான் மன்னா. பலவான்களின் அப்பமும் அது தான். தூதர்களின் அப்பமாகிய இம்மன்னாவினால் அவரது ஊழியர்கள் பலப்படுத்தப்படுகிறார்கள். அதன் மூலமாக நாமும் அவருடைய சித்தத்தை நிறைவேற்றுவதற்கு தேவையான வல்லமையைப் பெற்றுக் கொள்கிறோம். கிறிஸ்துவைப் புறக்கணித்து விட்டு சாத்தானுடைய ஆட்சியை அங்கீகரித்திருக்கும் இவ்வுலகில் ஒவ்வொரு விசுவாசியும் வெற்றியுள்ள வாழ்க்கை வாழ்வதற்கு தேவையானது கிறிஸ்துவானவரின் வாழ்க்கை மன்னாவே.

## காடியும் பாடுகளும்

ரூத் அப்பத்தைப் புசிக்கும் பொழுது அவளது துணிக்கைகளை காடியிலே தோய்த்துக் கொள்ள போவாஸ் அனுமதி அளிக்கிறான். காடி எனும் பதத்திற்கான கிரேக்க எபிரேய வார்த்தைகளை எண்ணாகமம் 6:3; -இமொழிகள் 10:26; 25:20; சங்கீதம் 69:21; மத்தேயு 27:48; மாற்கு 15:36; லூக்கா 23:36; யோவான் 19:29:30 எனும் வசனங்களில் காணலாம். இப்பகுதிகளில் காடி ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து நமக்காக பாவமான பொழுது அவர் அனுபவித்த பாடுகளோடு தொடர்புடையதாய் இருக்கிறது. ரூத் தன்னுடைய அப்பத்தை காடியிலே தோய்க்கும் செயல் இஸ்ரவேலர் விருத்த சேதனம் செய்யப்பட்ட பிறகு யோர்தானைக் கடந்த அனுபவத்தை நினைவூட்டுகிறதல்லவா, (யோசுவா 4:5 அதிகாரங்கள்) செங்கடலைக் கடக்கும் அனுபவம் கிறிஸ்துவானவர் நமக்காக மரித்ததையும் உயிர்த்தெழுந்ததையும் காண்பிக்கறது. இவ்வனுபவத்தின் வாயிலாகவே நாம் வனாந்தரத்திற்குட் பிரவேசிக்கிறோம். யோர்தான் அவரது மரணம் உயிர்த்தெழுதலோடு நம்மை இணைத்துக் கொள்ளுவதை காட்டுகிறது. இவ்வனுபவத்தின் மூலமாக வாக்குத் தத்தம் பண்ணப்பட்ட கானானுக்குள் பிரவேசிக்கிறோம். கானானுக்குள் பிரவேசித்த உடனேயே இஸ்ரவேலர் விருத்த சேதனம் பண்ணப்படவேண்டும். ,வனாந்தரத்தில் விருத்தசேதனத்தின் அனுபவம் இல்லை. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மரணத்தோடும், உயிர்த்தெழுதலோடும் நம்மை இணைத்துக்

கொண்டு ஆவிக்குரிய வாழ்க்கையைத் தொடங்கும் பொழுது நாம் விருத்தசேதனம் பண்ணப்படுகிறோம். செயல் முறையில் நாம் அவரோடு மரித்தோம் என்பதை வாழ்ந்து காட்டுகிறோம்.

## மன்னா, புளிப்பில்லாத அப்பம், பழைய தானியம்

வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட கானானுக்குள் நாம் பிரவேசித்து, விருத்தசேதனம் பண்ணப்பட்ட பிறகு நமக்கு முற்றிலும் வேறுபட்ட ஓர் உணவு அளிக்கப்படுகிறது. மன்னா விழுவது நின்று போகிறது. ''தேசத்தின்பழைய தானியத்தை'' புளிப்பில்லா அப்பங்களின் வடிவில் உட்கொள்ளத்தொடங்குகிறோம்" (யோசுவா 5:11,12) ரூத்திற்கு போவாஸ் இவ்வுணவைத் தான் கொடுத்தான். பரலோகத்தில் மகிமைப் படுத்தப்பட்ட கிறிஸ்துவிற்கு "பழைய தானியம்'' நிழலாக அமைகிறது. உள்ளத்தில் அவரோடுகூட உட்கார்ந்திருக்கிறவர்களுக்கு அவர் அருளும் உணவு அது தான்!" மகிமைப் படுத்தப்பட்ட கிறிஸ்துவே" அவ்வுணவு! (எபிசேயர் 2:6) தங்கள் இருதயங்களில் இவ்வுண்மையை உணர்ந்தவர்கள் எத்தனை பேர்? அனேகர் பஸ்காவின் அனுபவத்திற்கு மேல் முன்னேறுவதில்லை. (யாத்திராகமம் 12) தங்களது பாவ வாழ்வை உணர்ந்து ஆட்டுக்குட்டி யானவரின் இருதயத்திற்குள்ளாக அவர்கள் அடைக்கலம் தேடிக்கொண்டனர்.' இனி அவர்களுக்கு ஆக்கினைத்தீர்ப்பு இல்லை. தேவனை ஒரு நியாயாதிபதியாக அவர்கள் காண்பது மட்டுமன்றி இனி அவர்கள் ஆக்கினைத் தீர்ப்புக்கு உட்படுவது இல்லை என்றும் நம்புகின்றனர். ஆனால் நியாயத்தீர்ப்பு நாள் வரும் வரை அவர்கள் தங்களது ரட்சிப்பைக் குறித்து சந்தேகத்துடனே காலம் கழிக்கின்றனர்.

## விசுவாசிகளும் பலவிதங்கள்

வேறு சிலர் செங்கடல் வரை கடந்து சென்று இருக்கின்றனர். தாங்கள் ஆக்கினைத்தீர்ப்புக்கு தப்பினோம் என்று நம்பி அவரைத் தங்கள் சினேகிதராக ஏற்றுக்கொண்டுள்ளனர். தேவன் தம்முடைய சொந்த குமாரன் என்றும் பாராமல் அவரையே அவர்களுக்காகத் தந்தார். இந்நிலைமையை நாம் ரோமர் 8ம் அதிகாரத்தில் காணலாம். இது வனாந்திர வாழ்வில் நமது நிலைமையைக் காட்டுகிறது. இவ்வனுபவத்தை யாத்திராகமம் 15-18 அதிகாரங்களில் காணலாம் ஆனால் எபேசியருக்கு எழுதின நிருபத்தில் உள்ள உன்னதத்தில் உட்காரும் அனுபவத்திற்குள்ளாக அனேகர் கடந்து செல்வதில்லை. இந்நிருபத்தில் நாம் அவரோடு கூட உட்கார வைக்கப்படுவதாக காண்கிறோம். விசுவாசத்தால் நாம் இப்பொழுதே பரலோக

பாக்கியங்களை அனுபவிக்கிறவர்களாய் பரலோக வாழ்வை வாழவியலும் (எபேசியர் 1:3) ஒரு மெய்யான கிறிஸ்தவனின் நிலைமை அது தான். அந்நிலைமைக்கே அவர் நம்மை கொண்டுபோக விரும்புகிறார். இக்காரணத்தை முன்னிட்டே போவாஸ் ரூத்திற்கு வறுத்த கோதுமையை கொடுத்தான் (வ. 4) உன்னதத்தில் அவரோடே கூட உட்கார்ந்திருக்கிறவர்களின் அந்நிலை தான் மகிமைப்படுத்தப் பட்ட கிறிஸ்துவானவரின் வாழ்க்கையாகிய இவ்வற்புத உணவை நாம் ருசித்தறியும் போது மேன்மேலும் இந்நிலையே நீடித்திருக்க விரும்பசெய்கிறது. அனைவருக்காகவும் ஆயத்தம் பண்ணப்பட்ட ஒரு பங்கு வீதம் அனைத்து விசுவாசிகளும் மன்னாவைப் புசிக்கலாம். கிறிஸ்துவானவரின் மரண உயித்தெழுதல்களை அனைத்து விசுவாசிகளும், தேசத்தின் பழைய தானியத்தையும் (வறுத்த கோதுமை) உட்கொள்ளலாம். வாழ்வில் உண்டாகும் தடைகள் சூழ்நிலைகளுக்கிணங்க கர்த்தருடைய மேன்மையிலும், பந்தியிலும் ஒவ்வொரு விசுவாசியும் ஒவ்வொரு நிலைமையைச் சொந்தமாக்கிக்கொள்ளலாம்.

## தனிப்பட்ட ஆசீர்வாதமும், பொதுவான ஆசீர்வாதமும்

ஆனால் தனிப்பட்ட முறையில் ஒவ்வொரு விசுவாசியும் சில ஆசீர்வாதங்களை அனுபவிக்க முடியாது. ஒவ்வொரு விசுவாசியும் அவரோடு ஐக்கியம் கொள்ள முடியும். அது செயல்முறையில் வெளிப்படுகிறது. "ஒருவன் என்னில் அன்பாய் இருந்தால் அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான். அவனில் என் பிதா அன்பாய் இருப்பார். நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடே வாசம் பண்ணுவோம். (யோவான் 14:23) பொதுவாக இருக்கும் ஆசீர்வாதங்களுக்குப்புறம்பே தனிப்பட்ட முறையில் ஒவ்வொரு விசுவாசியும் அனுபவிக்க வேண்டிய மிகப்பெரிய ஆசிர்வாதம் அவரோடுள்ள ஐக்கியமே!

பெர்கமு சபையிலே ஜெயங்கொள்ளுகிறவர்களைக் குறித்து" ஜெயங்கொள்ளுகிறவனுக்கு நான் மறைவான மன்னாவை ப்புசிக்கக்கொடுத்து அவனுக்கு வெண்மையான குறிக்கல்லையும் அந்தக் கல்லின் மேல் எழுதப்பட்டதும் அதைப் பெறுகிறவனே அன்றி வேறொருவனும் அறியக்கூடாததுமான புதிய நாமத்தையும் கொடுப்பேன். என்று ஆண்டவர் கூறுகிறார். (வெளி 2:17) தேவன் தனிப்பட்ட முறையில் அவ்விசுவாசியின் மீது காட்டும் அன்பையும், பரிவையும் அது காட்டுகிறது. இத்தகைய அனேக உதாரணங்களை வேதாகமத்தில் காணலாம். பிதாவானவர் ஆவிக்குரிய வாழ்வில்

நம்மை பயிற்றுவிக்கும் செயலில் சீர்படுத்தலும் ஒரு பாகமாகும். நாம் ஒரே சரீரத்தின் அவயவங்கள் மாத்திரமல்ல பிதாவோடும், குமாரனோடும் தனிப்பட்ட முறையில் ஐக்கியம் கொள்ளுகிறவர்களாய் இருக்கிறோம். அவர் தனிப்பட்ட முறையில் நம்மை பயிற்றுவித்து வழிநடத்த விரும்புகிறார் *(அப்போஸ்தலர் 23:11; 2 கொரிந்தியர் 12:2-9ச 2 தீமோத்தேயு 4:17).*

நமது இதயம் கர்த்தராகிய தேவனோடு பின்னிப்பிணைந்து இருக்குமானால் "பொதுவான ஆசீர்வாதங்களைக் கூட" அவருடைய கைகளில் இருந்து பெற்றுக்கொள்ளுகிறோம். ரூத்திற்கும் இப்படிப்பட்ட அனுபவம் தான் கிடைத்தது. போவாஸின் கைகளில் இருந்து நேரடியாகப் பெற்றுக்கொண்ட உணவு அவ்வுணவின் மதிப்பைக் கூட்டி விடுகிறது.

தேவன் ஆசீர்வாதங்களை நிறைவாகக் கொடுக்கிறார். நமக்கு மாத்திரமல்ல மற்றவர்களுக்கும் பகிர்ந்து கொடுக்கத்தக்கதாக அபரிமிதமான ஆசீர்வாதங்களை அவர் அருளுகிறார். ரூத் தின்று திருப்தி அடைந்து பிறகு நகோமிக்கும் கொடுக்கத்தக்கதாக கொஞ்சம் உணவை எடுத்துவைத்துக் கொள்கிறாள். தேவன் நம்மை ஆசீர்வதித்து மற்றவர்களுக்கும் நாம் ஆசீர்வாதமாக இருக்கும்படி நம்மை உற்சாகப்படுத்துகிறார்.

## போவாஸின் தயை

கதிர் பொறுக்கிக்கொள்ள எழுந்தபோது, போவாஸ் தன் வேலைக்காரரை நோக்கி அவள் அரிக்கட்டுகள் நடுவே பொறுக்கிக் கொள்ளட்டும். அவளை ஈனம் பண்ணவேண்டாம் அவள் பொறுக்கிக் கொள்ளும் படிக்கு அவளுக்காக அரிகளிலே. சிலதைச் சிந்த விடுங்கள். அவளை அதட்டாதிருங்கள் என்று கட்டளையிட்டான். *(வ:15:16)*

ரூத்தினுடைய ஜாக்கிரதையும் திறமையும் அல்ல; போவாஸின் தயை அப்படிப்பட்ட நிலைமைக்கு அவளை உயர்த்தியது. "கர்த்தருடைய ஆசீர்வாதமே" ஐசுவரியத்தைத் தரும்.

பவுலும், பர்னபாவும் அனேக ஜனங்கள் விசுவாசிக்கத்தக்கதாகப் பிரசங்கித்தார்கள். ஆனால் அதற்கு முன் நித்திய ஜீவனுக்கு நியமிக்கப்பட்டவர்கள் எவர்களோ அவர்கள் விசுவாசித்தார்கள். *(அப். 13:48) 1 கொரி 8:5-8)* கர்த்தரே

பெருகப்பண்ணுகிறார். ரூத் கடினமாக உழைப்பவள் எனவே தான் அவள் உணவருந்தின உடனேயே எழுந்து கரித்களைப் பொறுக்கத்தொடங்கினாள். சாயங்காலம் வரை அவள் கதிர்களைப் பொறுக்குகிறாள். போவாஸின் கண்களில் தயைகிடைக்காமல் இருந்ததேயானால் அவள் உழைப்பும், ஜாக்கிரதையும் விருதாவாயிருக்குமே?

ரூத்தைக் குறித்து எல்லாம் போவாஸுக்கு தெரிவிக்கப்பட்டபடியால் அவன் அவள் மீது இரக்கம் பாராட்டினான். அவன் அவளை "ஓய்வெடுத்துக்கொள் என்று சொன்னபோதும் உணவருந்து என்று சொன்ன போதும் அவள் அப்படியே கீழ்ப்படிகிறாள். எதிர்பாராவிதமாக அளவுக்கதிகமான கதிர்களைப் பொறுக்கும் போதும் அவள் கதிர் பொறுக்குவதை நிறுத்தவில்லை. அவள் விசுவாசம் நிறைந்த பெண்மணி. அவள் பொறுக்கிய ஒவ்வொரு கதிரும் அதிகமாக கதிர்களை பொறுக்க அவளை தூண்டிற்று.

ரூத்தை மிகவும் கவனத்தோடும், அன்போடும், திறமையோடும் போவாஸ் கையாளுகிறான். கதிர்கட்டுகளை ரூத்திற்கு தரும்பொழுதும் வேலைக்காரர்களுக்கு உடனடியாக அவன் கட்டளையிடவில்லை. கடின உழைப்பால் நாம் பெற்றுக்கொண்ட காரியங்கள் இலவசமாக நமக்குக் கிடைக்கும். ஆசீர்வாதங்களை விட விலையேறியவைகளாக இருக்கும் தேவன் நமக்கு ஞானத்தை தரும் பொழுது அதைக்கட்டுரைகளாக எழுதி கையில் தருவதில்லை. படிப்படியாக ஞானத்தை அவர் நமக்குத்தருகிறார். சத்தியத்தை விலையேறியதாகக்கருதி அதை அறிந்துகொள்ளும் படி கவனமாய் உழைப்பவர்களுக்கு அவர் ஞானத்தை அபரி மிதமாய் தருகிறார்.

## பரம போவாஸின் பரிவை காட்டுவது எப்படி?

நமது ஊழியத்தின் காரியத்திலும் அப்படியே. சில வேளைகளிலே நாம் மற்றவர்களுக்காக கதிர்களை சிந்தவிடவேண்டி யிருக்கிறது. பல முள்ளவர்களாகிய நாம் நமக்காக பிரியமாய் நடவாமல் பெலவீனர்களுடைய பெலவீனங்களைத் தாங்கவேண்டும். "ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து இப்படியே கிறிஸ்துவினுடைய பிரமாணத்தை நிறைவேற்றுங்கள்" என்று வேதம்கூறுகிறது. *(கலாத்தியர் 6:2; தெசலோனிக்கேயர் 5:14.15).*

சபைகளில் பிரசங்கிக்கும்போது நாம் புதிதாக கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவர்களைக் குறித்தும், பலவீனத்தைக்குறித்தும்

எண்ணமுடையவர்களாய் இருப்போமேயானால் கதிர்களைச் சிந்தவிடும் நற்செயலை நாமும் செய்வோம். ஒரு தனி நபரை மனதில் கொண்டல்ல அனைவரையும் கருத்தில் கொண்டு நாம் பிரசிங்கிக்க வேண்டும். அப்படியே அவள் சாயங்காலம் மட்டும் வயலிலே கதிர் பொறுக்கினாள். பொறுக்கினதை அவள் தட்டியடித்து தீர்ந்தபோது அது ஏறக்குறைய ஒரு மரக்கால் வாற்கோதுமை கண்டது (வ.17) அவள் மாலைவரை கடினமாக உழைக்கிறாள். நாம் இப்படி ஜாக்கிரதை உள்ளவர்களாக இருக்கிறோமா?

சிலர் வேத பாட வகுப்புகள் முதியவர்களுக்கு மட்டுமே என்று நினைக்கின்றனர். வேதத்தை ஆராய்ந்து படிக்க ஏற்ற பருவம் 15 வயது முதல் 35 வயதுக்குள்ளான ஆயுட்காலமே அப்பருவமே வேதத்தை படிக்கவும் செயல் படுத்தவும் ஏற்றகாலமாகும்.

ரூத் தான் பொறுக்கிய கதிர்களை தட்டியடிக்கிறாள். வைக்கோல் இல்லாமல் தானியம் விளைவது இல்லை. ஆனால் வைக்கோல் மனிதருக்கு உணவாவதில்லை. பிரசங்கங்களிலும் குட்டிக்கதைகள், உதாரணங்கள் போன்றவை சில சத்தியங்களை விளக்குவதற்காக பயன்படுத்தப் படலாம். ஆனால் அவை வெறும் வைக்கோல் தான். சத்தியம் தான் ஆத்துமாவிற்கு உணவாகுமே அன்றி வைக்கோல் உணவாவதில்லை. அதிகமாக தானியத்தைத் தர ஒரே ஒரு வழி தான் உண்டு. ஒருவன் போதித்தால் தேவனுடைய வாக்கின்படி போதிக்கக்கடவன். ஒருவன் உதவி செய்தால் தேவன் தந்தருளும் பெலத்தின்படி செய்யக்கடவன். எல்லாவற்றிலேயும் இயேசுகிறிஸ்து மூலமாக தேவன் மகிமைப்படும் படியே செய்வீர்களாக. அவருக்கே மகிமையும், வல்லமையும் சதாகாலங்களிலும் உண்டாவதாக. உபதேசம் எனும் பதத்திற்கான கிரேக்கவார்த்தை (அப். 7:38) ரோமர் 8:2; எபிரேயர் 5:12 போன்ற வேதப்பகுதிகளில் காணலாம். கிரேக்க மொழியில் இப்பதம் தேவர்களிடம் சில காரியங்களைக்குறித்து அவர்களது எண்ணத்தைக் கேட்கும் போது அவர்கள் கூறும் கருத்திற்கு பயன்படுத்தப்படுகிறது. பிரசங்கிக்கிறவன் தேவனுடைய கருத்தை வெளிப்படுத்தும் தேவனுடைய வார்த்தைகளை அன்றி வேறொன்றையும் பிரசங்கிக்கக்கூடாது. அவர் கூறச்சொல்லும் வார்த்தைகளை அவர் கூறும் வேளையில் கூறாமலிருக்கக்கூடாது. உதாரணமாக எண்ணாகமம் 24:4ல் இப்புடிப்பட்ட அனுபவம் பிலேயாமின் வாழ்க்கையில் காணப்படுகிறது. "தேவன் அருளும் வார்த்தைகளைக் கேட்டு சர்வ வல்லவரின் தரிசனத்தைக் கண்டு தாழவிழும்போது கண் திறக்கப்பட்டவன் விளம்புகிறதாவது" இதை 1 கொரிந்தியர் 2:13னுடன் ஒப்பிட்டுப் பாருங்கள்.

## வாற்கோதுமையும் வைக்கோலும்

சில வேளைகளில் நாம் வாற்கோதுமையை அல்ல வைக்கோலைத் தான் வீட்டிற்கு கொண்டு போகிறோம். பிரசங்கத்தில் பயன்படுத்தப்பட்ட குட்டிகதைகளையும், உதாரணங்களையும் பிரசங்கத்தின் வசனிப்பையும் நாம் நினைவில் நிறுத்துகிறோமே அன்றி சத்தியத்தை அல்ல. ரூத் வைக்கோலைக்குறித்து கவலைப்படவில்லை. அவளுடைய தேவை வாற்கோதுமைதான்.

லேவியராகமம் 11ஆம் அதிகாரத்தில் அசைபோடும் மிருகங்கள் சுத்தமுள்ளவைகள் என்று எழுதப்பட்டிருக்கிறது. உபாகமம் 18:3 ல் பலிசெலுத்தப்படும் மிருகத்தின் வயிற்றுப் பகுதி ஆசாரியனைச் சேர வேண்டும் என்று எழுதப்பட்டுள்ளது. நாமும் பிரசங்கங்களில் கேட்கும் சத்தியங்களை தியானித்து அசைபோடுகிறவர்களாகவும் ஆவிக்குரிய உணவை ஜீரணிக்கிறவர்களாகவும் காணப்பட வேண்டும். மேலும் வைக்கோலை எரிந்துவிட்டு தானியத்தை மாத்திரம் சேகரிக்கும் நல்ல பண்பும் நம்மில் வளர வேண்டும். ஈசாக்கும் வயல் வெளிகளில் தான் தியானிக்கப் போயிருந்தான் ஆதியாகமம் 24:63).

ரூத் தான் பொறுக்கிய கதிர்களின் விலைமதிப்பை அப்போது அறிந்து கொண்டாள். அவள் ஒரு மரக்கால் (1 எப்பா) வாற்கோதுமையைப் பொறுக்கி இருந்தால் யாத்திராகமம் 16:16,36 ன் படி அது 10 நாட்களுக்கு போதுமான உணவாக இருந்தது. மேலும் அது 10 ஆசாரியர்களை பிரதிஷ்டை செய்வதற்கு வேண்டிய 10 போஜன பலிகளுக்கு போதுமானதாக இருந்தது. ரூத் நிறைவான ஆசீர்வாதங்களை நகோமியோடு பகிர்ந்து கொள்ள வீட்டிற்கு போனாள். நாம் பெற்றுக்கொண்டது என்னவென்று நாம் சரியாக அறிந்து கொள்ளும் பொழுது அவ்வாசீர்வாதங்களை மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ள முடியும்.

## தனக்கென்று மட்டுமல்ல மற்றவர்களுக்கும் கூட

அவள் அதை எடுத்துக் கொண்டு ஊருக்குள் வந்தாள். அவள் பொறுக்கினதை அவளுடைய மாமி பார்த்தாள். தான் திருப்தியாக சாப்பிட்டு மீதியாக வைத்ததையும் அவளுக்கு எடுத்துக்கொடுத்தாள். (வ.18).

ரோமர் 14-7ல் "நம்மில் ஒருவனும் தனக்கென்று பிழைக்கிறதும் இல்லை. ஒருவனும் தனக்கென்று மரிக்கிறதும் இல்லை" என்று வாசிக்கிறோம். ரூத் மிகுந்த பிரயாசத்தோடு கதிர்களைப் பொறுக்கினாள். அதைச் சுமந்துகொண்டு போக அவள் வெட்கப்படவில்லை. போவாஸின் வயலில் கதிர்களைப் பொறுக்குகிறவர்களுக்கு எவ்வளவு கிடைக்கும் என்பதை மற்றவர்களும் அறிந்துகொள்ள வேண்டாமா? மற்றவர்கள் பசியாய் இராதபடிக்கு தனது ஆசீர்வாதத்தின் நிறைவை பட்ட்ணத்திற்குள் கொண்டு போனாள். 1 சாமுவேல் 30:22ல் சில பேலியாளின் மக்கள் செய்ததற்கு மாறுபாடான செயல் அது. அவர்கள் தாவீதோடே இருந்து அமலேக்கியரை மடங்கடித்தனர். அவர்களுடைய பொருட்களைக் கொள்ளையடித்தபோது களைப்பின் நிமித்தம் யுத்தத்திற்கு போகாமல் ரஸ்துக்கள் அண்டையில் இருந்தவர்களுக்கு கொள்ளையில் பங்கு வீதத்தைக் கொடுக்க மறுத்தனர். ஆனால் தாவீதோ அப்படிப்பட்ட நிலையை உடையவன் அல்ல. அவன் அனைவருக்கும் கொள்ளையைப் பங்கிட்டுக் கொடுத்தான். ரூத்தும் இத்தகைய மனநிலையை உடையவள்.

பட்டணத்திற்கு வந்த பொழுது தான் சேகரித்த தானியம் முழுவதையும் நகோமியின் வீட்டிற்கு கொண்டுபோனாள். நகோமி சாட்சியற்ற வாழ்க்கைக்கு உருவமாக அமைகிறாள். ரூத் தன்னைக் குறித்து மாத்திரமல்ல "சாட்சியை"க் குறித்தும் எண்ணமுடையவளாய் இருந்தாள். ஆவிக்குரிய வழியில் பெற்றுக்கொண்ட ஆவிக்குரியவல்லமை சாட்சியின் நன்மைக்காக மட்டுமின்றி சமுதாயத்தின் நன்மைக்காகவும் பயன்படுகிறது.

தேவனுடைய சித்தம் அதுதான் என்று நாம் வேதத்திலிருந்து அறிந்து கொள்ள முடியும். உதாரணமாக கொலோசெயர் 12:19; எபேசியர் 4:11, 16; 1 கொரிந்தியர் 12:14-27.... போன்ற வசனப்பகுதிகளை வாசித்துப் பொருங்கள். தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும் நாம் வளருகிறவர்களாயிருக்கும்படியாக அப்படிச் செய்தார். அவராலே சரீரம் முழுவதும் அதற்கு உதவியாயிருக்கிற சகல அணுக்களினமும் இசைவாய்க்கூட்டி இணைத்து ஒவ்வொரு அவயவும் தன்தன் அளவுக்குத் தக்கதாய் கிரியை செய்கிறபடியே அது அன்பினாலே தனக்கு பக்திவிருத்தி உண்டாவதற்கேதுவாக சரீர வளர்ச்சியை உண்டாக்குகிறது.

நாம் பெற்றுக்கொண்ட அனைத்துக் காரியங்களையும் கூட்டங்களில் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்பதல்ல இதற்குப் பொருள். இது மெய்யானால் எல்லா சகோதரிகளும் பெரும்

பான்மையான சகோதரர்களும் தங்களுக்கு கிடைத்த ஆசீர்வாதங்களை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ள முடியாத நிலைமை ஏற்படும். ஏபேசியர் 4:16ல் சகல, ஒவ்வொரு எனும் பதங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளதைக்காணலாம். நமது தனிப்பட்ட உரையாடல்களில் ஒவ்வொருவர் சந்தித்துக்கொள்ளும் பொழுது நாம் பெற்றுக்கொண்ட ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை பகிர்ந்து கொள்ளும் வாய்ப்பு கிடைக்கிறது. இவ்விதத்தில் நாம் அனைவரும் அவரது கிருபையில் வளர முடியும். அது நமது ஆராதனைகளிலும் வெளிப்படும். நமது தனிப்பட்ட அனுபவங்களும் தேவனோடுள்ள ஐக்கியமும், ஆசீர்வாதங்களும் மற்றவர்களுக்கு உணவாக அமைய முடியும். போவாஸின் கைகளில் இருந்து பெற்றுக்கொண்ட வறுத்த கோதுமையை ரூத் நகோமியுடன் பகிர்ந்து கொள்வது இதற்கு நல்ல உதாரணம் ஆகும். நம்முடைய ஒவ்வொரு உணர்ச்சியையும் மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளவேண்டும் என்பதல்ல இதன் பொருள். ஆனால் தேவன் சில வேளைகளில் நமது வாழ்வின் அனுபவங்களை மற்றவர்களை உற்சாகப்படுத்தும் விதத்தில் பயன்படுத்தக்கூடும். பவுல் தான் தேவனிடத்தில் இருந்து பெற்றுக்கொண்ட ஆசீர்வாதங்களை நம்மை உற்சாகப்படுத்தும் விதத்தில் எழுதியிருப்பதைப் பாருங்கள். அப்போஸ்தலர் 23:11; 2 கொரிந்தியர் 12:2-9; 2 திமோத்தேயு 4:17.

### ‘எங்கே’ என்பதல்ல ‘எவரிடம்’ என்பதே

அப்பொழுது அவளுடைய மாமி: இன்று எங்கே கதிர் பொறுக்கினாய்? எவ்விடத்தில் வேலை செய்தாய்? என்று கேட்டு உன்னை விசாரித்தவன் ஆசீர்வதிக்கப்படுவானாக என்றாள். அப்பொழுது அவள் இன்னாரிடத்தில் வேலை செய்தேன் என்று அவளுக்கு அறிவித்து நான் இன்று வேலை செய்த வயல்காரன் பேர் போவாஸ் என்றாள்.

பவுல் தெசலோனிக்கேயருக்கு இவ்வாறு எழுதுகிறார். “எப்படியெனில் உங்களிடத்திலிருந்து கர்த்தருடைய வசனம் மக்கெதோனியாவிலும் அகாயிலும் தெரிவித்ததுமல்லாமல் நாங்கள் அதைக் குறித்து ஒன்றும் சொல்லவேண்டியதாயிராத படிக்கு தேவனைப்பற்றிய உங்கள் விசுவாசம் எங்கும் பிரசித்தமாயிற்று” (1 தெசலோனிக்கேயர் 1:8:10) உலகம் அவர்களுடைய மனமாற்றத்தையும் அதன் விளைவுகளையும் மற்றவர்களுக்கு அறிவித்தது. ரூத்தின் வாழ்க்கையிலும் இது தான் சம்பவித்தது. நகோமியைக்குறித்து அவள் ஒரு வார்த்தையும் பேசாதிருந்தபோதும் அவள் கொண்டு வந்த

தானியம் அவளைக்குறித்து சாட்சி கொடுத்தது. போவாஸின் வயலில் செல்லுகிறவர்களுக்கு கிடைக்கும் ஆசீர்வாதங்களை வார்த்தைகளல்ல கனிகளே வெளிப் படுத்துகின்றன. நமது முகபாவனை நடை, உடை ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் போன்றவை நாம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுடன் கொண்டுள்ள ஐக்கியத்தை வெளிப்படுத்துகிறது.

நீங்கள் அப்பமில்லாததிற்காகப் பணத்தையும், திருப்திசெய்யாத பொருள்களுக்கு உங்கள் பிரயாசத்தையும் செலவழிப்பானேன்? நீங்கள் எனக்கு கவனமாய்ச் செவிகொடுத்து நலமானதை சாப்பிடுங்கள். அப்பொழுது உங்கள் ஆத்துமா கொழுப்பான பதார்த்தங்களால் மகிழ்ச்சியாகும் *(ஏசாயா 55:2)*.

ரூத் சொல்லாமலேயே அவள் ஏதோ நல்ல மனிதனின் கண்களில் தயை பெற்றுக் கொண்டாள் என்பதை நகோமி அறிந்து கொண்டாள். அவள் அந்த நல்ல உள்ளத்தை ஆசீர்வதித்தாள்.

நகோமி ரூத்திடம், "இன்று எங்கே கதிர் பொறுக்கினாய். எங்கே வேலை செய்தாய் என்று கேட்டதற்கு ரூத் எங்கே வேலை செய்தாள் என்று சொல்லாமல் "யாரிடத்தில்" வேலை செய்தாள் என்று கூறுகிறாள். "வேலை செய்த "இடம் அல்ல" யாருக்காக வேலை செய்தாளோ "அந்த நபர் தான்" அவளுக்கு முக்கியமாகத் தோன்றுகிறார். நபரைக் கொண்டுதான் இடத்திற்கு மதிப்பு உண்டாவதற்க்கு காரணம். அங்கே அவருடைய பிரசன்னமே.

## பெயரின் பெருமை

போவாஸ் நகோமிக்கு அறிமுகமானவன் தான் எனும் உண்மை ரூத்திற்கு தெரியாது. அதற்கு முன் அவனுடைய பெயரை நகோமி சொன்னது கிடையாது. நகோமியின் உள்ளத்திலும், வாழ்க்கையிலும் போவாஸிற்கென்று சிறப்பிடம் கிடையாது. அவளுடைய உள்ளம் ஒரு நாளும் மகிழ்ச்சியில் பாடியது இல்லை.

அந்த நாளின் நிகழ்ச்சிகளிலிருந்து தனிப்பட்ட முறையில் ரூத் போவாஸைக்குறித்து அறிந்துகொண்டாள். இப்பொழுது அவனுடைய பெயர் கூட அவளுக்குத்தெரியும். போவாஸ் என்றால் "அவரில் பெலம் உண்டு" என்று பொருள்! ஏழ்மை கோலத்தில் கடந்து வந்த ஒரு விதவைக்கு அவன் ஆதரவாக இருக்கிறான் என்றால் அது எவ்வளவு பெரிய ஆறுதல்! ரூத் அவனுடைய

பெயரை நகோமிக்கு மிகுந்த மகிழ்ச்சியோடு தெரிவிக்கிறாள். உமது நாமம் ஊற்றுண்ட பரிமளத்தைலமாயிருக்கிறது. ஆகையால் கன்னியர்கள் உம்மை நேசிக்கிறார்கள். (உன்னதப்பாட்டு 1:3) எல்லா மனுபுத்திரரிலும் நீர் மிகுந்த சவுந்தர்யமுள்ளவர்; உம்முடைய உதடுகளில் அருள் பொழிகிறது என்று கோராகின் புத்திரர் சங்கீதம் 45:2 ல் ஆண்டவராகிய இயேசு கிறித்துவைக்குறித்து கூறுகின்றனர்.

'இயேசு' எனும் பதத்தினுடடைய பொருளின் ஆழத்தை யாரால் அளக்க முடியும். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை அறிந்திருக்கும் உள்ளத்தில் நடைபெறும் மாற்றங்களை யாரறிவார்? அவரை ரட்சகராக அறிந்து கொள்ளுவது அதிசயமான அனுபவம் ஆகும். வாழ்க்கையில் பல்வேறு சூழ்நிலைகளில் கஷ்டங்களில், பாடுகளில் ஆபத்துகளில் அவர் நமக்கு எப்படிப்பட்டவராயிருக்கிறார் என்று அறிந்துகொள்வது அதைவிட அதிசயமான செயல் ஆகும். நாம் உண்மையற்றவர்களாக இருந்தபோதும் அவர் உண்மையுள்ளவராயிருக்கிறார் எனும் நினைவே நம்மை வியப்புறச்செய்கிறது. அவருடைய அனுபவங்களை நாம் அறிந்துகொள்ள அவ்வற்புதமான அனுபவம் மேலோங்கி நிற்கிறது.

அப்போஸ்தலனாகிய யோவான் மகிழ்ச்சியின் உச்சக்கட்டத்தில் வியப்புணர்வோடு கூறுவதைப் பாருங்கள். "அந்த வார்த்தை மாம்சமாகி கிருபையினாலும், சத்தியத்தினாலும் நிறைந்தவராய் நமக்குள்ளே வாசம் பண்ணினார். அவருடைய மகிமையைக்கண்டோம் அது பிதாவுக்கு ஒரே பேரானவருடைய மகிமைக்கேற்ற மகிமையாய் இருந்தது. (யோவான் 1:14). தாங்கள் கண்டதை நாமும் காணும்படி அப்போஸ்தலர்கள் அவரைக் குறித்து எழுதினர். நாம் அவரைக் கண்டிருக்கிறோமா இன்று நாம் காண்கிறோமா?

## கிருபையின் கிரியை

கிருபை உணர்ச்சிகளையும், உணர்வுகளையும் தூண்டுகிறது என்பது தான் ரூத்தின் புத்தகத்தின் கருத்து. பாசத்தால் மட்டும் திருப்தி அடையும் அன்பின் இணைப்புகளை அது கட்டி எழுப்புகிறது. அப்படிப்பட்ட பாசத்தை கண்டுபிடிக்கும் பொழுது விசுவாசமானது கிருபையை இறுக பற்றிக் கொள்ளுகிறது. விசுவாசம் கேட்கும் கேள்விகளுக்கு பதிலளிப்பதை தவிர வேறு ஒன்றையும் கிருபை நேசிப்பதில்லை. ரூத் 3, 4 ஆம் அதிகாரங்களில் நாம் இதைத்தான் காணப்போகிறோம். போவாஸின் கிருபை ரூத்தின் உள்ளத்தில் உருவாக்கிய அன்பை இங்கே காண்கிறோம்.

இப்பொழுது நகோமி தன் மருமகளைப் பார்த்து உயிரோடிருக்கிறவர்களுக்கும் மரித்தவர்களுக்கும் தயவு செய்கிற கர்த்தராலே அவன் ஆசீர்வதிக்கப்படுவானாக என்றாள் பின்னும் நகோமி அவளைப் பார்த்து அந்த மனுஷன் நமக்கு நெருங்கின உறவின் முறையினனும் நம்மை ஆதரிக்கிற சுதந்தரவாளிகளில் ஒருவனுமாய் இருக்கிறான் என்றாள்.

## மீட்பின் விதிமுறைகள்

ரூத் போவாஸை சந்தித்ததும் அவன் அவளுக்கு உதவியதும் கர்த்தருடைய கரத்தின் செயலாக நகோமி கருதினாள். இப்புத்தகத்தின் முதல் அதிகாரத்தின் 20:21 வசனங்களில் நகோமி "சர்வவல்லவர் எனக்கு மிகுந்த கசப்பைக்கட்டளையிட்டார்." எனக் கூறினாள். ஆனால் இப்பொழுதே. அவளுடைய துன்பங்களைக் கர்த்தர் தன்னை மறுபடியும் அவரிடத்தில் திருப்பிக்கொள்ளுவதற்கான சிட்சையாக கருதுகிறாள். தேவனுடைய சிட்சை பின் நாட்களில் நமக்கு நன்மை செய்யும். (உபாகமம் 8:15) ரூத்திடம் பட்சமாய் நடந்து கொண்ட போவாஸ் ஒரு உறவின் முறையான் அவன் ரூத்தை மீட்பதற்கு உண்மை உள்ளவன். இங்கே மீட்பு எனும் பதத்திற்காக பயன் படுத்தப்பட்டிருக்கும் எபிரேயர் சொல்லுக்கு "மீட்பர்" இனத்தான் என்று பொருள் உண்டு. ஒருவனை வேறொருவன் மீட்க வேண்டுமானால் அவன் யாராக இருக்க வேண்டுமென்பதைக் குறித்து விவரங்கள் லேவியராகமம் 25, எண்ணாகமம் 35, உபாகமம் 25 போன்ற வேதபகுதிகளில் காணலாம்.

வறுமையினிமித்தம் ஒருவனுடைய சுதந்திரம் விற்கப்பட்டிருந்தால் அதை ஒரு இஸ்ரவேலிய அடிமையை மீட்பதற்கு உரித்தான நியமங்களின்படியே மீட்கவேண்டும். அப்படி மீட்பவன் கொலை செய்யப்பட்டவனுக்காக இரக்கப்பட்டு வாங்குபவனாகத் திகழ முடியும் (எண்ணாகமம் 35:16, 17) சுதந்திரத்தை மீட்கும் பொழுது மரித்துப் போனவனுடைய மனைவியை விவாகம் பண்ணவேண்டும் (உபாகமம் 25. 5,6) ஒருவன் தரித்திரத்தினிமித்தம் விலைபட்டுப் போனால் (அடிமையானால்) அவன் சகோதரன் அவனை மீட்கலாம். அவனுடைய பிதாவின் சகோதரனாவது அந்த சகோதரனுடைய புத்திரனாவது அவன் குடும்பத்தில் அவனைச் சேர்ந்த இனத்தாரின் ஒருவனாவது அவனை மீட்கலாம் (லேவியராகமம் 25:28, 29).

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து இஸ்ரவேலின் மீட்பர் அவரே அந்த சுதந்திரத்தை மீட்பார். அவர் இஸ்ரவேலை மீட்டு அதன்

சத்துருக்களை நிர்மூலமாக்குவார். சத்துருக்களை நியாயம் தீர்க்கும் செயலைத்தவிர பாக்கி அனைத்து தீர்க்கதரிசனங்களும் ரூத், போவாஸ் வாழ்க்கை சரித்திரத்தில் நிறைவேறுவதைக் காணலாம்.

ஆனால் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நமது மீட்பரும் கூட எபிரேயர் 2:14 இல் மரணத்திற்கு அதிகாரியான பிசாசு எனபவனை அழித்தார் என்று வாசிக்கிறோம். எபிரேயர் 10லும் 1 பேதுரு 1:18,20 வசனங்களிலும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை மீட்பின் கிரயத்தைச் செலுத்தும் மீட்பராகக்காண்கிறோம். எபேசியர் 1:14, கொலோசெயர் 1:20 வசனங்களில் சுதந்திரத்தின் மீட்பைக்காண்கிறோம். 1 கொரி 15:45; ரோமர் 5:12 வசனங்களில் முந்தின ஆதாமின் சுதந்திரத்தை மீட்டு அவனுடைய பேரை விளங்கப்பண்ணும் சந்ததியை எழும்பப்பண்ணும் சகோதரனாகிய பிந்தின ஆதாமாக அவரைக்காண்கிறோம் அல்லவா?

## சபையை மீட்கும் மீட்பர்

இறுதியாக வெளிப்படுத்தின விசேஷம் 2:3 அதிகாரங்களில் சபையை மீட்கும் மீட்பராக அவரைக் காண்கிறோம். சபையானது ஆதி அன்பிலிருந்து விழுந்து தரித்திர நிலைமையை அடைந்து விட்டது. தனது சுதந்திரத்தை விற்று விட்டு சாத்தானுடைய சிம்மாசனம் இருக்கும் இடத்தில் அவள் இருக்கிறாள். (வெளி 2:13) அவள் உயிருள்ளவளென்று பெயர் பெற்றிருந்தும் மரித்தவளாயிருக்கிறாள். (வெளி 3:1) எனினும் மெய்யான மீட்பர் பரம போவாஸ் வருகிறார் (தாவீதின் திறவு கோல் அவரிடம் உண்டு அவர் யாரும் பூட்டக்கூடாதபடிக்கு திறக்கிறவரும் திறக்கக் கூடாதபடிக்கு பூட்டுகிறவருமாயிருக்கிறார். மரித்துப்போன சர்தை சபை இருந்த இடத்தில் புதிய ஒரு சுதந்திரத்திற்கு ஓர் திறந்த வாசலையும் தருகிறார். பிலதெல்பியா சபையைத் தன்னோடும் தம்முடைய வசனத்தோடும் இணைத்துக்கொள்கிறார். சாத்தானுடைய கூட்டத்தாருக்கு அவர் இரத்தத்திற்காகப்பழி வாங்குகிறவராகத்தோன்றுகிறார். இவை அனைத்தையும் ரூத்தின் புத்தகத்தில் நாம் நிழலோவியங்களாகக் காண்கிறோம்.

## சில நேரங்களில் சில விசுவாசிகள்

மீட்கும் உரிமையைக்குறித்து நகோமி முன்நாட்களிலே கேள்விப்பட்டிருந்தாள் எனினும் அதைப்பெரிதாக எண்ணவில்லை. அப்படி எண்ணியிருந்தால், அதனை பயன்படுத்தியிருப்பாளே! அவள் சோதனைகளின் வழியாகக் கடந்து சென்று தேவனுடைய

சிட்சையை ஏற்றுக்கொண்டு சுத்திகரிக்கப்படுகிறாள். இப்பொழுதோ போவாஸ் எவ்வளவு நல்லவன் என்று அவனை அறிந்து நினைவு கூறுகிறாள். மீட்கும் உரிமை அவனுக்குத்தான் உண்டு. அவளது எண்ணங்கள் இப்பொழுதும் குழம்பிய நிலையில்தான் இருந்தன. மனம் போன போக்கின்படி நடந்து, சத்தியத்தைவிட்டு விலகுகிறவர்கள் தேவன் அருளும் வெளிச்சத்தையும் இழந்து விடுகின்றனர். மறுபடியும் அவர்கள் மனந்திரும்பி வரும்போது மீண்டும் அவ்வொளியைப் பெற்றுக் கொள்கின்றனர். அவர்கள் தங்கள் வழிகளை விட்டுத் திரும்பும் போது அச்சத்திய ஒளி கொஞ்சம் கொஞ்சமாக வருகிறது. நகோமி போவாஸைக் குறித்து "அந்த மனுஷன் நமக்கு நெருங்கின உறவின் முறையானும் நம்மை ஆதரிக்கிற சுதந்தரவாளிகளில் ஒருவனுமாயிருக்கிறான் என்கிறாள்."

அவன் தான் அவளுக்கு உதவி செய்யமுடியும் எனும்மாபெரும் உண்மையை அவள் அப்போதும் தெளிவாக அறிந்திருக்கவில்லை. வாழ்க்கையின் எந்தச் சூழ்நிலையிலும் அவன் அவளுக்கு உதவவல்லவன் எனும் சத்தியத்தையும் அவளால் உணரமுடியவில்லை.

## என் அறுவடை என் வேலைக்காரர்கள்

பின்னும் மோவாபிய ஸ்திரியான ரூத் அவர் என்னை நோக்கி என் அறுப்பெல்லாம் அறுத்து தீருமட்டும் நீ என் வேலைக்காரிகளோடே கூடவே இரு என்று சொன்னார் என்றாள். (வ:21). இவ்வசனத்தில் இடம்பெறும் "என் அறுப்பு" என் வேலைக்காரிகள் எனும் பதங்களை கவனமாக வாசித்துப்பாருங்கள். சகலமும் போவாஸினுடையதே அறுவடையும், வேலைக்காரர்களும் போவாஸிற்கு உரியவர்கள். ஆதலால் அறுவடைக்கும் ஆட்களுக்கும் தனி சிறப்பு உண்டாகிறது.

இங்கே ரூத் "மோவாபிய ஸ்திரீ" என்றுதான் குறிப்பிடப்படுகிறாள். அவள் இதுவரை முதிர்ச்சிப்பெற்ற மெய்யான ஆவிக்குரிய நிலைமையை அடையாதவளாகவே கருதப்படுகிறாள். அவள் மீட்பைக்குறித்து தேவனுடைய நினைவுகள் எப்படிப்பட்டவை என்று முழுமையாக அறிந்திருக்கவில்லை. ஏனெனில் தேவனுடைய வசனங்களைக்குறித்து அவளுக்கு அதிகமாக ஒன்றும் தெரியாது. போவாஸ் "சுதந்திரவாளிகளில் ஒருவனாக இருக்கிறான்." என்ற உண்மையின் முழு பொருளையும் அவளால் புரிந்து கொள்ள முடியவில்லை. தேவன்

மனிதர்களுக்குத் தரப்போகிற ஆசீர்வாதங்கள் அனைத்தும் கிறிஸ்து இயேசுவுக்குள் தான் இருக்கின்றன. (எபேசியர் 1:3,11) நாம் அவருடைய மகிமையை காணும் பொழுது அவ்வாசீர்வாதங்களின் விலை மதிப்பை உணர முடியும். ரூத்தின் காரியத்திலும் அப்படியே. போவாஸின் செல்வ சிறப்பையும், மகிமையையும் உணராதவரை அவனால் உண்டாகும் ஆசீர்வாதத்தின் விலைமதிப்பை அவள் அறியவியலாது.

போவாஸ் ரூத்திடம் "நீ என் வேலைக்காரிகளோடே கூட இரு" என்று கூறியிருந்தான். (வ.21) ஆனால் இப்பொழுதோ "என் அறுப்பெல்லாம் அறுத்துத்தீருமட்டும் நீ என் வேலைக்காரிகளோடே வயலிலே இரு. கிறிஸ்தவ வாழ்வில் நமது மெய்யான நிலைமையை புரிந்து கொள்ளாதவரையில் நாம் அமைதியாக இருக்க முடியாது."

## வேலைக்காரர்கள் வேலைக்காரிகளின் ஆவிக்குரிய விளக்கம்

8,9 வசனங்களில் வேலைக்காரர்கள் (ஆண்கள்) செயல் முறைப்பாட்டிற்கும் அவ்வண்ணமே இதர வசனங்களில் வரும் வேலைக்காரிகள் ஆவிக்குரிய நிலைமைக்கும் மாதிரிகளாக அமைகின்றனர். வேலைக்காரிகள் எனும் பதம் உலகத்திலிருந்து பிரித்தெடுக்கப்பட்டு கர்த்தருக்காகப்பிரதிஷ்டை செய்யப்பட்டவர்கள் எனும் உண்மையை சுட்டிக்காட்டுகிறது. ஆனால் உன்னதப்பாட்டின் புத்தகத்தில் இன்னொரு உண்மையைக் காண்கிறோம். உமது பரிமளத்தைலங்கள் இன்பமான வாசனையுள்ளவைகள்; உமது நாமம் ஊற்றுண்ட பரிமளத் தைலமாயிருக்கிறது. ஆகையால் கன்னியர்கள் உம்மை நேசிக்கிறார்கள். என் ஆத்தும நேசரே! உமது மந்தையை எங்கே மேய்த்து அதை மத்தியானத்தில் எங்கே மடக்குகிறீர்? எனக்குச் சொல்லும்; உமது தோழரின் மந்தைகள் அருகே அலைந்து திரிகிறது போல நான் இருக்கவேண்டியதென்ன? அவருடைய பரிமளத்தைலத்தின் வாசனை கன்னியர்கள் அவரைப் பின்பற்றுமாறு செய்கின்றன. இதிலும் மேற்பட்டது தான் கிறிஸ்துவோடும் பிதாவாகிய தேவனோடும் அவர்களுக்குள்ள ஐக்கியம்! 1 யோவான் 1:3).

1 யோவான் 2:14ல் காண்பது போல வாலிபர்கள் தேவனால் பலப்படுத்தப்பட்ட செயல்முறை வாழ்க்கைக்கு நிழலாக அமைகின்றனர். கர்த்தருடைய வசனம் அவர்களுக்குள் தரித்திருக்கிறபடியால் அவர்கள் பெலமுள்ளவர்களாய்

இருக்கிறார்கள். அவர்கள் பொல்லாங்கானதை ஜெயித்திருக்கிறார்கள்.அறுவடை தீருமட்டும் அவர்கள் கதிர்களை செம்மையாக அறுத்துக் கொண்டு போகின்றனர். அதே நேரத்தில் கதிர் பொறுக்கிறவர்களுக்காகச் சில கதிர்களைச்சிந்த விடுகின்றனர். அறுவடை முடியுமளவும் ரூத்தை அவர்களோடுகூட இருக்கும்படி போவாஸ் கேட்டுக்கொள்கிறான்.

## நகோமியின் உபதேசத்திலுள்ள தவறுகள்

அப்பொழுது நகோமி தன் மருமகளாகிய ரூத்தைப் பார்த்து "என் மகளே வேறொரு வயலிலே மனுஷர் உன்னை எதிர்க்காதபடிக்கு நீ அவன் வேலைக்காரிகளோடே போகிறது நல்லது" என்றாள். அப்படியே கோதுமை அறுப்பும், வாற்கோதுமை அறுப்பும் தீருமட்டும் அவள் கதிர்பொறுக்கும் படிக்கு போவாஸுடைய வேலைக்காரிகளோடே கூடியிருந்து தன் மாமியினிடத்தில் தங்கினாள்.

வேலைக்காரர்களுக்கும், வேலைக்காரிகளுக்கும் இடையே உள்ள வேறுபாட்டை ரூத் முழுமையாக புரிந்து கொண்டாள் எனக் கூறவியலாது. இரு குழுவினருக்கும் இடையே அநேக ஒற்றுமைகள் உண்டு. இரு குழுவினரும் போவாஸிற்கு சொந்தமானவர்கள்; போவாஸிற்காக சேவை செய்பவர்கள். போவாஸ் அவ்விரு கூட்டத்தாருக்கு இடையே உள்ள வேறுபாட்டை நன்கு அறிவான். போவாஸ் தன் வேலைக்காரர்கள் (அறுக்கிறவர்கள்) பிறகே போகும்படி கூறுகிறாள். ஆனால் நகோமி வேலைக்காரிகளோடே இருக்கும்படி கூறுகிறாள். ரூத் போவாஸின் சப்தத்திற்கு கீழ்ப்படிகிறாள். அனேக வருடங்களாக பெத்லெகேமில் வாசம் பண்ணாமலும் போவாஸோடு ஒரு தொடர்பும் இல்லாத நகோமிக்கு வேலைக்காரர்களுக்கும், வேலைக்காரிகளுக்கும் இடையே உள்ள வேறுபாடு எப்படித்தெரியும் வேலைக்காரர்கள் பிறகே போன படியால் ரூத் அன்று ஆசீர்வதிக்கப்படவில்லையா?

பின் மாற்றத்தில் கிடக்கும் சபையின் சத்தியத்திற்கு ஆவியானவர் நம்மீது ஒரு அதிகாரமும் கிடையாது. ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன் (வெளி *2:7.11, 12:29; 3:6, 13, 22)* அதிக அநுபவமுள்ள மூப்பர்கள் கூறும் வார்த்தைகள் ஒருவேளை நம்மைக் கவர்ந்தாலும் அவை வேதவசனத்தோடு ஒத்திராவிடின் ஆவியானவரின் சத்தத்திற்கு செவி சாய்ப்பதே நலம்! கர்த்தருக்கு கீழ்ப்படிவதே மேலானது!

ஆனால் நகோமியின் சொல்லைக் கேட்கத்தொடங்கி விடுகின்றாள். சிநேகிதனே உயர்ந்த இடத்தில் வாரும். (லூக்கா 14:10) எனும் அழைப்பு ரூத்திற்கும் கொடுக்கப்படுகிறது. ஆனால் அவளோ வேலைக்காரிகளோடே இருந்து அவர்கள் பின்னால் கதிர்பொறுக்குவதையே தெரிந்து கொள்ளுகிறாள். ஆனால் தேவனுடைய கிருபையால் இதர காரியங்களில் அவள் அவனுக்கு கீழ்ப்படிகிறாள். போவாஸ் தெரிந்து கொண்ட ஆசீர்வாதமான நிலைமையை அவள் தெரிந்து கொள்ளாவிடினும் தேவனுடைய அறுவடை முழுவதையும் அவள் புரிந்து கொள்கிறாள்.

## வாற்கோதுமை, கோதுமை அறுவடைகளின் விளக்கம்

முதல் அதிகாரத்தின் இறுதிப்பகுதியில் பஸ்கா பண்டிகைக்குப்பிறகு முதல் பலன்களாகிய வாற்கோதுமை கதிர்க்கட்டுகள் அறுவடையை தொடங்கிவைத்ததைக் கண்டோம். முதற்பலன்கள் உயிர்த்தெழுதலையும் பஸ்கா பண்டிகை ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மரணத்திற்கும் மாதிரியாக அமைகின்றன. நகோமியும் ரூத்தும் இப்பருவத்தில் தான் பெத்லெகேமிற்கு வந்து சேர்ந்தனர். ஆவிக்குரிய முறையில் இதைக் கண்ணோக்கும்போது கர்த்தரிடம் திரும்பி வரும் செயல் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வின் மரணம் உயிர்த்தெழுதலின் மூலமே ஆகும் என்பது விளங்கும்.

இரண்டாம் அதிகாரம் கோதுமை அறுவடைமுடிவதோடு நிறைவு பெறுகிறது. கோதுமை அறுவடையின் நிறைவு முதற்பலன்களில் அசைவாட்டப்பட்டு ஏழுவாரங்கள் கழிந்த பிறகு இடம் பெறுகிறது (யாத் 34:22; லேவி 23, 15.21; உபா 16:9.12) பெந்தெகொஸ்தே பண்டிகை கோதுமை அறுவடையின் இறுதியில் வருகிறது என்றறிந்துகொள்ளலாம். ஏனெனில் பெந்தெகொஸ்தே பண்டிகையின் போது பச்சையான கதிர்கள் அசைவாட்டப்படுவதில்லை. அதற்குப்பதிலாக புளிப்பில்லாத இரு அப்பங்கள் படைக்கப்படுகின்றன. எனவே பெந்தெகொஸ்தே பண்டிகைக்கு முன்பாகவே களத்திலே கோதுமை தூற்றுவது முடிவடைந்திருக்க வேண்டும். மட்டுமல்ல அப்பண்டிகையை ஆசரிக்க அனைத்து ஆண்களும் எருசலேமிற்கு செல்ல வேண்டும். சர்வ ஞானியாகிய கர்த்தர் அறுவடைகாலத்தின் இடையே அப்பண்டிகையை ஆசரிக்கக் கட்டளையிட்டிருக்க மாட்டார்.

பஸ்கா பண்டிகைக்கும் பெந்தெகொஸ்தே பண்டிகைக்கும் இடையே உள்ள ஒருவார நிகழ்ச்சிகளை இரண்டாம் அதிகாரத்தில் காண்கிறோம். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சிலுவையில் மரித்து உயிர்த்தெழுந்ததற்கும் பரிசுத்த ஆவியானவர் அப்போஸ்தலர் 2ஆம் அதிகாரத்தில் பொழியப்பட்டு சபையானது சம்பவங்களின் நிழலோ வியங்களை நாம் கண்டோம். சபையானது பரலோகத்திலுள்ள தலையாகிய கிறிஸ்துவுடன் (எபேசியர் 1.20-23) இணைக்கப் பட்டுள்ளது. ஒவ்வொரு இஸ்ரவேலனும் இவ்வேழுவாரங்களை எண்ணி கணக்கிட வேண்டும். (உபாகமம் 16:9) சீஷர்களும் இவ்வேழு வாரங்களை எண்ணிக்கணக்கிட்டுக் காத்திருந்தனர். இவ்வேழு வாரங்களில் அவர்கள் அதிசயிக்கத்தக்க விதத்தில் ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர்ந்தனர் (லூக்கா 24:26, 27; 45:49) யோவான் 20:17, 23) ம் அப்போஸ்தலர் 1:2, 4, 4-11) இவ்வாறாக அப்போஸ்தலர் இரண்டாம் அதிகாரத்தில் கூறப்பட்டுள்ள அனுபவத்திற்கு தேவன் அவர்களை நடத்தினார்.

தேவன் நாம் ஒவ்வொருவரும் ஒவ்வொருவாரங்களை கணக்கிட்டு கவனமாக வளரவேண்டும் என்று விரும்புகிறார். ஆவிக்குரிய கண்ணோட்டத்தில் நாம் மனந்திரும்பினதற்கும் அவரோடு இணைக்கப்ப்ட்டு கிறிஸ்துவானவர் நமக்கு நல்கிய முழுமையான நிலைமையை நாம் அடைவதற்கும் இடையேயுள்ள காலம் தான் அது. மகிமைப்படுத்தப்பட்ட மனித குமாரனாகிய அவர் பரலோகத்திலிருக்கையில் பரிசுத்த ஆவியானவர் இப்பூமியிலே சபையிலும் தனிப்பட்ட முறையிலே ஒவ்வொரு விசுவாசிக்குள் ளிலும் அவர் வாசம் பண்ணுகிறார் திருச்சபையானது இவ்வரிய சத்தியத்தை மறந்து தேவன் அதற்குத்தந்த சுதந்திர வீதத்தை இழந்து போன நிலையில் காணப்படுகிறது.

## சபைகளின் நிலைமை

தியத்தீராசபையில் . யேசபேல் சபையின் ஸ்தானத்தை பிடித்துக்கொண்டாள். சர்தைசபையில் சபையின் குணநலன்கள் ஒன்றுமே இல்லாத நிலைமை காணப்படுகிறது அச்சபையில் உள்ளவர்களுக்கு தங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட்டு இருக்கின்றன என்று மாத்திரம் தெரியும். இச்சத்தியத்தை அச்சபையில் அறிந்திருக்கிறவர்கள் வெகு சிலரே.

பிலதெல்பியா சபையில் ஆவியானவர் மீந்திருக்கிறவர்களை பெந்தெகொஸ்தே அனுபவத்திற்குள்ளாக கொண்டுவர கிரியை

செய்து கொண்டிருக்கிறார். ரூத் 2:1-21ல் நாம் வாற்கோதுமை அறுவடை செய்யப்படுவதைக் காண்கிறோம். இது உயிர்த்தெழுந்த ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைப் பரலோகத்தில் மகிமைப்படுத்தப்பட்ட மனிதகுமாரனாக அறிந்து கொள்ளுவதற்குச் சமமாகும். அவரிடம் நேரடியாக ஆகாரத்தை பெற்றுக்கொண்டு ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை அனுபவிக்கக்கற்றுக்கொள்ளும் இனிய செயலாகவும் அது விளங்குகிறது. 23ம் வசனத்தில் கோதுமை அறுவடை செய்யப்படுவதைக் காண்கிறோம். பரிசுத்தவான்கள் அனைத்துக்காரியங்களிலும் கிறிஸ்துவைப்போல இருக்க வேண்டுமென்கிற எளிய சத்தியத்தை அது விளக்குகிறது. (யோவான் 12:24; 1 கொரி 15:28) மகிமைபடுத்தப்பட்ட மனிதகுமாரனோடு இணைந்திருப்பதற்கான அடிப்படை சத்தியம் இதுதான்.

தொடர்ந்து வரும் அதிகாரங்களில் பெந்தெகொஸ்தே அனுபவங்களை காணலாம்.

அத்தியாயம் - 3

## வாற்கோதுமை, கோதுமை, திராட்சைக் குலைகள் அறுவடைகள்

பின்பு அவள் மாமியாகிய நகோமி அவளை நோக்கி "என் மகளே, நீ சுகமாக வாழ்ந்திருக்கும்படி நான் உனக்கு சவுக்கியத்தைத் தேடாதிருப்பேனோ? நீ போவாஸின் வேலைக்காரிகளோடே கூடியிருந்தாயே அவன் நம்முடைய உறவின் முறையான் அல்லவா? இதோ அவன் இன்று ராத்திரிகளத்திலே வாற்கோதுமை தூற்றுவான்" என்றாள். (வ. 1,2).

அறுவடைக் காலத்தில் நடந்த சம்பவங்களை கடந்த இரு அத்தியாயங்களில் கண்டோம். 2ஆம் அதிகாரத்தின் இறுதி வசனத்தில் கோதுமை அறுவடையைக் குறித்தும் கண்டோம். இனி எஞ்சி இருப்பது திராட்சைக் குலைகளின் அறுவடையே, அது உணவு அல்ல, திராட்சை ரசத்தையே தரும். திராட்சை ரசம் மகிழ்ச்சிக்கு அடையாளமாகும். இனி ரூத்தும் நகோமியும் என்ன செய்யவேண்டும். (அரிகளை) ரூத் பொறுக்கிக்கொள்ளும் போது கதிர்களைச் சிந்தவிடும் வேலைக்காரர் இனி அங்கே இருக்கப்போவதில்லை. ரூத் மிகுந்த ஜாக்கிரதையோடு சிந்திய மணிகளைப் பொறுக்கி தேவையான அளவிற்கு சேமித்து வைத்திருக்கிறாள். எனினும் அடுத்த வருடம் வரையும் இச்சேமிப்பு போதுமானதாக இருக்குமா?

வியாதியின் நிமித்தமாகவோ, போர்க்காலசிறையிருப்பின் நிமித்தமாகவோ, உபத்திரவங்களின் நிமித்தமாகவோ நாமனைவரும் சிலவேளைகளில் கூட்டங்களுக்குச் செல்ல முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. அப்படிப்பட்ட வேளைகளில் முன்னாட்களில்

கூட்டிச் சேர்த்த சேமிப்பையே நாம் சார்ந்து கொண்டோம். ஆனால் இவ்வனுபவம் நிரந்தரமாகத் தொடராதே! அப்படியாயின் சத்துணவு பற்றாக்குறையும், களைப்பும் இறுதியில் மரணமுமே நேரிடும். கூட்டங்களையல்ல தேவனையே சார்ந்திருக்க வேண்டும் என்று வேதம் கூறுவது மெய்தான். எனினும் தினசரி வாழ்வில் இப்படிப்பட்ட "முறைகளையும்" தேவன் பயன்படுத்தத்தான் செய்கிறார்.

எப்படிப்பட்ட சூழ்நிலையிலும் நாம் கிருபையைச் சார்ந்து கொள்வோமேயாயின் கீழ்படிதலின் பாதையில் நடப்போம் அவ்வழியில் எச்சூழ்நிலையிலும் ஒரு குறைவுமின்றி நடக்க முடியும். ஏனெனில் கிருபை பெரிது.

## மனம் மாறும் மாமியாள்

நகோமியின் வாழ்வில் தான் எத்தனை பெரிய மாற்றம்! ரூத் 1. 2ல் மோவாபிய புருஷர்களின் வீட்டில் ரூத்தும், ஓர்பாளும் கர்த்தருடைய ஆசீர்வாதத்தோடு வாழ்ந்திருக்க வேண்டுமென்று கூறினாள். அப்படி நடந்திருப்பின் அவர்களுக்கு தற்கால மகிழ்ச்சியே கிடைத்திருக்கும் ரூத்தும் கர்த்தரையோ, போவாஸையோ, பெத்லெகேமையோ அறிந்து கொள்ளாமல் விக்கிரக ஆராதனையில் மூழ்கியிருப்பாள். இறுதியில் நியாயத்தீர்ப்பின் நாளில் அவள் நிலைமை என்ன ஆகும்?

இப்போது நகோமி பெத்லெகேமில் போவாஸின் வயலில் விளைந்த வாற்கோதுமையைப் புசித்திருக்கிறாள். அதைப் புசித்த பிறகு நாம் முன் போலவே இருப்பதில்லை. முன்னர் உபயோகித்தப் பொருள்களை நாம் திருப்பிப்பார்ப்பதுமில்லை. இப்போது நகோமி ரூத்தைப் போவாஸுடன் இணைத்து அவளுக்கு இளைப்பாறு தலைத்தர விரும்புகிறாள். ஐசுவரியம் பெருத்த அவன் மெய்யாகவே அவர்களுடைய உறவின் முறையான் என்று ரூத்திடம் கூறுகிறாள். "நம்முடைய உறவின் முறையான்" (வ. 2) என்று அவனைக் கூறுவதைக் கேளுங்கள்.

உறவைக் குறித்து வேதவசனம் கூறுவதை அறிந்துகொள்வது ஓர் அற்புதமான அனுபவமே." நாம் தேவனால் பிறந்தவர்கள்." (1 யோவான் 5:11) அவருடைய திவ்ய சுபாவத்திற்கு பங்குள்ளவர்கள். (2 பேதுரு 1:4) கர்த்தரும் நம்மை சகோதரர்கள் என்று அழைக்க வெட்கப்படவில்லை. (எபிரேயர் 2:11) இச்சத்தியங்கள் நாம் அவரோடு

நெருங்கி உறவாட வேண்டும் என்னும் வாஞ்சையை வர்த்திக்கப் படுத்துகின்றன. இவ்வாஞ்சையை எவ்வாறு நிறைவேற்றலாம். வேத வசனங்களும் சபை மூப்பர்களின் ஆழ்ந்த அறிவுரைகளும் இதற்கு துணை செய்யும்.

## அறுவடையும், தூற்றுதலும்

இன்று ராத்திரி களத்திலே வாற்கோதுமை தூற்றுவான் (வ.2) போவாஸ் விதைத்ததாகவோ அறுத்ததாகவோ நாம் வாசிக்கவில்லை. அவனுடைய வேலைக்காரர்கள் அவைகளைச் செய்தார்கள். ஆனால் தானியத்தை தூற்றுவது மிகவும் முக்கியமான செயலாக இருந்த படியினாலே அவனே அதைச் செய்ய முற்படுகிறான்.

விதைப்பது என்பது வேதவசனத்தைப் பிரசங்கிப்பதாகும். அறுவடை என்றால் அதின் பலன்களை கூட்டிச் சேர்ப்பதாகும். ஒரு வேளை பிரசங்கத்தின் மூலமாக ஆத்துமாக்கள் ரட்சிக்கப்படுவதோ அல்லது தேவனுடைய நினைவுகளுக்கேற்ப நாம் வாழும் செயலாகவோ அது இருக்கலாம். ஆனால் தூற்றுவது கோதுமையை பதரிலிருந்து பிரிக்கும் செயலாகும். தேவனுக்கு பதர் விருப்பமில்லை அவியாத அக்கினியினால் சுட்டெரிப்பதற்கே அதை வைத்திருக்கிறார் (மத்தேயு 3:12).

போரடிப்பது வேறு, தூற்றுவது வேறு போரடிக்கும் போது தானியம் கதிரிலிருந்து வேறு பிரிக்கப்படுகிறது. மிகவும் பெலத்தோடு செய்யப்படும் கிரியை அது. அதற்குக்காளைகளோ அல்லது போரடிக்கும் இயந்திரமோ தேவை. ரோமர் 7-ல் கூறப்பட்டுள்ள ஆவிக்குரிய பயிற்சிகளின் மூலமாக கடந்து செல்வதோ அல்லது தேவனால் சிட்சிக்கப்படுவதோ தான் போரடிப்பது என்று நான் எண்ணுகிறேன். எபேசியரில் கூறப்பட்டுள்ளபடி அவரோடு மரித்து உயிர்ப்பிக்கப்படும் அனுபவத்திற்குள்ளாக கடந்து செல்லும் புது சிருஷ்டியாக நாம் இருக்கிறோம் என்றறிந்து கொள்வதற்கு அது தேவைப்படுகிறது.

கிறிஸ்துவானவர் நமக்காக மரித்து உயிர்த்தெழுந்தபடியால் உண்டான ஆசீர்வாதங்களை நமக்குச் சொந்த மாக்கிக்கொள்ளும் செங்கடலின் அனுபவம் அல்ல இது. (ரோமர் 4:25) அவரோடு மரித்து அவரோடு உயிர்த்தெழும் யோர்தானின் அனுபவத்தை இது காட்டுகிறது. (கொலோசெயர் 3:3 காலத்தியர் 2:20 எபேசியர் 2:6).

## காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ளும் பரம போவாஸ்

போரடித்துத்திர்ந்ததும் பதரை நீக்கும் பொருட்டு அது தூற்றப்படவேண்டும். இருநபர்கள் தூற்றுவதற்கு (புடைப்பதற்கு) ஆர்வம் காட்டுகிறார்கள். ''சாத்தானும்'' (லூக்கா 22:31 ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும் தானியத்தை புடைப்பதிலும், தூற்றுவதிலும் ஆர்வம் 'காட்டுகிறார்கள். சாத்தான் கோதுமையை அகற்றிவிட்டு பதரை தனக்கென்று வைத்துக் கொள்ள விரும்புகிறான். ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து அதற்கு எதிர்மாறான செயலை செய்ய விரும்புகிறார். ஏனெனில் பதரால் அவருக்கு பயனில்லை தூற்றும் வேலை இரவில் காற்றடிக்கும் பொழுது தான் நடைபெறுகிறது. கிறிஸ்துவானவர் புறக்கணிக்கப்பட்டிருக்கும் இராக்காலமாகிய இக்காலத்தில் தான் ஆவியானவர் தனிப்பட்டமுறையில் ஒவ்வொரு விசுவாசிகளுக்குள்ளிலும் கூட்டாக சபையிலும் வாசம் பண்ணுகிறார். எபிரேய கிரேக்க மொழியில் காற்று எனும் பதத்திற்கும் ஆவி எனும் பதத்திற்கும் ஒரு சொல்தான் பயன்படுத்தப்பட்டுள்ளது. கலாத்தியர் 1:19ல் மாம்சம் ஆவிக்கு விரோதமாகவும் ஆவி மாம்சத்திற்கு விரோதமாகவும் இச்சிக்கிறது. நீங்கள் செய்யவேண்டுமென்றிருக்கிறதை செய்யாமலிருக்கும் படிக்கு இவைகள் ஒன்றுக்கொன்று விரோதமாயிருக்கிறது என்று வாசிக்கிறோம். நாம் இச்சிக்கிற செயல்களை நாம் செய்யாமல் ஆவியானவர் நம்மை நடத்தும் படி அவருக்கு முழு சுதந்திரம் அளிப்போமேயானால் நாம் ஆவியினால் நிறைந்திருப்போம் அப்பொழுது தேவசித்தத்திற்கு விரோதமான அனைத்தும் நமது வாழ்வை விட்டு அகன்று போகும்.

வாற்கோதுமை உயிர்த்தெழுந்த வாழ்வைக்காட்டுகிறதென்று முன்னரே கண்டோமல்லவா? உயிர்த்தெழுந்த ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தமது "தமது உயிர்த்தெழுந்த வாழ்வை" யே நமக்குத் தந்திருக்கிறார். (யோவான் 20:22, எபேசியர் 2:6) பரலோகத்திற்கு ஏற்ற உயிர்த்தெழுந்த வாழ்வுக்கு ஒவ்வாத உலகப் பிரகாரமான அனைத்தையும் நம்மை விட்டு நீக்கவே அவர் விரும்புகிறார். எபேசியர் 5:26-27ல் நாம் காண்பது இதுவே! விண்ணிலிருந்து வந்த பிந்தின ஆதாம் இவரே! நாமும் அவரைப்போலவே இருக்கிறோம். (1 கொரிந்தியர் 15:48) ஆனால் என்னே ஒருபரிதாபம்! அப்பரலோக வாழ்வு அனேக வேளைகளில் இவ்வுலகக்காரியங்களால் மாசுபட்டுவிடுகிறது. உயிர்த்தெழுந்த வாழ்வு ஜென்ம சுபாவத்தால் தடுமாற்றமடைந்துவிடுகிறது. பதர் என்பது களை அல்ல. எனவே பதர் தீமையைக் குறிக்கிறது எனினும் தேவன் பதரை அவியாத அக்கினியில் தான் போடுகிறார் (மத். 3:12).

வாற்கோதுமைக்கும், பதருக்கும் உள்ள வேறுபாட்டை நாம் அறிந்திருக்கிறோமா? நம்மிலிருந்து பதரை நீக்கும் படி தேவன் நம்மைத் தூற்ற விரும்புகிறார். அவர் போரடிப்பதற்கு நம்மை நாம் அவருக்கு ஒப்புக் கொடுக்காவிடில் அவர் நம்மைத் தூற்றுவது எப்படி? பேதுரு தேவனால் தூற்றப்படுவதற்கு இடமளிக்கவில்லை.அவனுடைய நோக்கங்கள் ஒருவேளை சரியான ககுகM இருந்திருக்கலாம். (யோவான் 13:8). பாதங்களைக் கழுவுவதற்கும், தூற்றுவதற்கும் உள்ள ஒற்றுமைகள் ஏராளம் உண்டு என்று நான் கருதுகிறேன்.

வாற்கோதுமைக்கும் பதருக்கும் இடையில் உள்ள வேற்றுமை களைப் பவுல் நன்கு அறிவார். வேறுவிதமாய் நடக்கும், சிலுவைக்குப் பகைஞரைக்குறித்து அவர் அதிகமாகப்புலம்புகிறார் (பிலிப்பியர் 3:18) பதரின் முடிவே அவியாத அக்கினியானால் பதரின் தன்மை கொண்டோரின் முடிவு என்னவாயிருக்கும்?

தேவனை துக்கப்படுத்தும் செயல்கள் நம் வாழ்வில் இருக்குமாயின் நாம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுடன் ஐக்கியம் கொள்ள முடியாது. ஐக்கியம் என்றாலே ஒரு மனமல்லவா? ஒரே நோக்கத்தையும் ஒரே பங்கையும் உடையவர்களாயிருப்பதும் ஐக்கியத்தின் இலக்கணமல்லவா? இதற்காகவே நாம் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்குமுன்பாக நிற்கப் போகிறோம். அன்று தேவனுடைய வெளிச்சத்தில் நமது நினைவுகளும் செயல்களும் அவற்றின் பிறப்பிடங்களும் கூட (எபி.4:12, 13) நாம் காண நேரிடும். அப்பொழுது அவற்றைக் கிறிஸ்துவானவர் எப்படிக்காண்பாரோ அப்படிக்கண்டு நியாயந்தீர்ப்போம். இவ்வாறு அவருக்கும் நமக்குமிடையே தடையில்லாத ஐக்கியம் உண்டாகும்.

ஆனால் அவரோடு ஐக்கியம் கொள்வதென்றால் என்னவென்று நாம் அனுபவத்தின் மூலமாக அறிந்து கொள்வோமேயாயின், நாம் இவ்வுலகிலேயே நாம் அதை அனுபவிக்க முயலுவோம். நாம் அவரை நேசிப்போமேயாயின் அவரது இருதயத்தை மகிழ்விக்க எண்ணுவோம். அவரைத் துக்கப்படுத்தும் ஒரு செயலையும் நாம் பொறுத்துக் கொள்ளமாட்டோம். அவர் கழுவும் படி நமது பாதங்களைக் காண்பிப்போம். அவர் நம்மை போரடிப்பதற்கும் தூற்றுவதற்கும் இடமளிப்போம். தேவ அன்பின் நிமித்தம் வாலிபரையும், முதியோரையும் அவ்வாறே நடந்துகொள்ள உற்சாகப்படுத்துவோம்!

“நீ குளித்து எண்ணெய் பூசி, உன் வஸ்திரங்களை உடுத்திக்கொண்டு அந்த களத்திற்குப் போ; அந்த மனுஷன் புசித்துக் குடித்து தீருமட்டும் அவன் கண்ணுக்கு எதிர்ப்படாமலிரு”

தேவன் நம்மை தூயராக்கவேண்டும் என வாஞ்சிக்கும் வாஞ்சை நமது நடைமுறை வாழ்வில் சுத்திகரிப்பையும் பரிசுத்தத்தையும் உருவாக்கும் ஓர் உந்துதலாக அமைகிறது. சங்கீதம் 17:12-16; சங்கீதம் 139:24-25, வசனங்களில் காணப்படும் ஜெபங்களை செய்கிறவர் நமது நடைமுறை வாழ்வில் பரிசுத்தத்தைக் குறித்து கவலையற்றவராக இருக்க முடியுமா? ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சீக்கிரமாகத் திரும்பி வருவார் எனும் நம்பிக்கை நம்மை பரிசுத்தத்தின் மேல் தாகம் கொள்ள செய்யவில்லையா? (1 யோவான் 3:3; வெளி 22:11, 12) நாம் சுத்தமுள்ளவர்கள் ஆகும்படி நமது இருதயத்தையும், மனச்சாட்சியையும் வசனத்தால் சுத்திகரித்துக் கொள்வோமல்லவா? (எபேசியர் 5:26; 1 பேதுரு 1:22; சங்கீதம் 119:9, 11, 76; சங்கீதம் 19:8, 12) நமது வாழ்க்கையும், எண்ணங்களையும், நினைவுகளையும் வேத வசனத்திற்கு நேராக நிறுத்தி பரிசோதித்து பார்க்கிறோமா? வேத வசனத்தை வாசிக்கிறவர்களாக மாத்திரம் காணப்படாமல் அதன்படி வாழுகிறவர்களாகவும் காணப்படுகிறோமா?

“நீ எண்ணெய் பூசி” எண்ணெய் பூசிக்கொள்ளுதல் பரிசுத்த ஆவியானவர் நமக்குள் வாசம் பண்ணும் அனுபவத்தைக் குறிப்பிடுகிறது. (1 யோவான் 2:20,27; 2 கொரிந்தியர் 1:21,22) இரட்சிப்பின் நற்செய்தியை விசுவாசிக்கிற அனைவருக்கும் கிடைக்கும் பங்கு இதுவே. (எபேசியர் 1:13; 1 கொரிந்தியர் 15:1, 4) இங்கு உள்ளான அபிஷேகத்தை அல்ல புறம்பான அபிஷேகத்தையே ரூத்தின் அனுபவத்தில் காணமுடிகிறது. எபேசியர் 5:18 ல் “ஆவியினால் நிறைந்து” என்று எழுதியிருப்பது உள்ளான அபிஷேகத்தை அதாவது தனிப்பட்ட பொறுப்புணர்வைக்காட்டும் பகுதியாகும். ஸ்தேவான் பரிசுத்த ஆவியினால் நிறைந்தவனாக இருந்தான் என்று அப்போஸ்தலர் 6:5; 7:55 வசனங்களில் வாசிக்கிறோம். பரிசுத்த ஆவியானவர் ஸ்தேவானின் குணநலன்களைச் சிருஷ்டிக்கிறவராக இருந்தார் என்பது தான் அதன் பொருள். அவன் சுயசித்தத்தின்படி நடவாமல் ஆவியானவரின் வழி நடத்துதலின்படி தேவசித்தத்தைச் செய்தான். (கலாத்தியர் 5:17) இப்படிப்பட்ட வாழ்க்கை ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை மகிமைப்படுத்தி அவரது உன்னதத்தை மகிழ்விக்கிறது. (யோவான் 16:14, 15)

"உன் வஸ்திரங்களை உடுத்திக் கொண்டு" வேதாகமத்தில் வஸ்திரங்கள் நமது பழக்க வழக்கங்களையும் குணநலன்களையும் குறிப்பிடுபவைகளாக உள்ளன. வேறு விதமாகக்கூறின் மற்றவர்கள் நம்மை எவ்வாறு காண்கின்றனர் என்பதையும் அவை சுட்டிக்காட்டுகின்றன. ஒரு மெய்க்கிறிஸ்தவனுக்குரிய வஸ்திரங்களை நாம் தரித்திருக்கிறோமா? எபேசியர் 1:6ல் நாம் தேவனுக்குமுன்பாக நிற்கும் போது நாம் தரித்திருக்கும் வஸ்திரத்தைக் குறித்து வாசிக்கிறோம். நாம் ''பிரியமானவருக்குள் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறோம்". அடிக்கப்பட்ட மிருகத்தின் தோலினால் தேவன் ஆதாமுக்கும் ஏவாளுக்கும் வஸ்திரங்களை உண்டாக்கிக்கொடுத்தார் ஆனால் இப்பொழுதோ தமக்குப் பிரியமானவரின் அருமையான சுபாவங்களாக வஸ்திரங்களை நமக்குக் கொடுத்திருக்கிறார்.

மேலும் இவ்வுலகில் நாம் இருக்கும் போதே சில வஸ்திரங்களைத் தரித்துக் கொள்ளும் படி தேவன் தந்திருப்பதாக எபேசியர் 2:10 ல் வாசிக்கிறோம். நற்கிரியைகளைச் செய்வதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு தேவனுடைய செய்கையாய் இருக்கிறோம். அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தப்படுத்தியிருக்கிறார். நகோமி கூறிய வஸ்திரங்களை ரூத் அதுவரை தரித்திருக்கவில்லையென்று இதிலிருந்து தெளிவாகிறது. எப்படிப்பட்ட வஸ்திரங்களை நாம் தரித்துக் கொள்ளுகிறோம் என்பது மிக முக்கியமான செயலாகும் ஆட்டு மயிரும், பஞ்சுநூலும் கலந்த வஸ்திரங்களை நாம் அடிக்கடி தரித்துக் கொள்வதில்லையா? (உபாகமம் 22:11) இவை கலப்படமுள்ள உபதேசங்களுக்கு நிழலாகும். இவை கலப்படமுள்ள கொள்கைகளையும் காட்டுகின்றன. பரலோகத்துக்குரியவைகளையும், பூலோகத்துக்குரியவைகளையும் கலந்து கொண்டு நாம் பரம போவாஸின் போரடிக்கும் களத்திற்கு போகமுடியாது. அப்படிச்சென்றால் அவர் முதலாவதாக நம்மைத்தான் போரடிப்பார். வெளிப்பாடு 7:14ல் கூறப்பட்டுள்ள வார்த்தைகளே நம்மைக்குறித்தும் கூறப்படவேண்டும். "இவர்கள் தங்கள் அங்கிகளை ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்திலே தோய்த்து வெளுத்தவர்கள் என்பதே அது!'' "ஜீவ விருட்சத்தின் மேல் அதிகாரம் உள்ளவர்கள் ஆவதற்கும் வாசல்கள் வழியாய் நகரத்துக்குள் பிரவேசிக்கிறதற்கும் அவருடைய கற்பனைகளின் படி செய்கிறவர்கள் பாக்கியவான்கள் (வெளிப்பாடு 22:14) இவ்வாறு நாம் நம்மைத் துப்புறக்கழுவி (குளித்து) எண்ணெயைப் பூசிக்கொண்டு வஸ்திரங்களைத்தரித்துக்கொள்ளும்போது நாம் களத்திற்குப்

போவதற்கு ஆயத்தம் ஆவோம். ஆங்கில வேதாகமத்தில் "களத்திற்கு இறங்கிப்போ" எனும் பதங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. நாம் நம்மைத்தாழ்த்தி களத்திற்குச் செல்லும் பொழுது அவர் நம்மில் இருந்து பதரை பிரித்தெடுக்கிறார். மனிதனுடைய பெருமைக்கு இது அவலட்சணமாக தோன்றுகிறது. தாழ்மையும் எளிமையுமான அவரிடத்தில் இருந்து நாம் கற்றுக்கொள்ளும்பொழுது தான் இத்தகைய அனுபவத்திற்குள்ளாக கடந்துசெல்ல முடியும்.

## நித்திரையும், மரணமும்

"அந்த மனுஷன் புசித்துக்குடித்துத்தீருமட்டும் அவன் கண்ணுக்கு எதிர்ப்படாமலிரு. அவன் படுத்துக்கொண்ட போது அவன் படுத்திருக்கும் இடத்தை நீ பார்த்துக்கொண்டு போய் அவன் கால்களின் மேல் இருக்கிற போர்வையை ஒதுக்கி நீ படுத்துக்கொள். அப்பொழுது நீ செய்யவேண்டியது இன்னதென்று அவன் உனக்குச் சொல்லுவான்" என்றாள் (வ. 3,4).

"இறங்குதல்" (தாழ்த்துதல்) என்பதன் பொருள் என்ன? போவாஸ் புசித்துக்குடித்து படுத்துக் கொள்ளும் பொருளை அறிந்து கொள்ளும்போது அது தெளிவாக விளங்கும். யோவான் 4:32, 34; மத்தேயு 28:1-6, 1 பேதுரு 1:2 வசனப் பகுதிகள் இதற்கான விளக்கத்தை அளிக்கின்றன. பிதாவின் சித்தத்தை செய்து முடிப்பதே ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் போஜனமாயிருந்தது. பிதாவானவர் ஆயத்தம் பண்ணின பாத்திரத்தில் அவர் குடித்தார். பிதாவின் சித்தத்தைச் செய்த பிறகு அவர் கல்லறையில் அடக்கம் பண்ணப்பட்டார். அது படுத்து நித்திரை பண்ணுவதற்கு ஒப்பாயிருந்தது. (எபிரேயர் 10:5,10; 1 பேதுரு 1:2 ன்படி அனைத்து விசுவாசிகளும் கீழ்படிதலுக்கும் இயேசு கிறிஸ்துவினுடைய இரத்தம் தெளிக்கப்படுவதற்கும் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள். அதாவது அவருடைய ஜீவனுக்கும், மரணத்துக்கும் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள். தேவ ஆலோசனையின் படியும் பரிசுத்த ஆவியானவரின் பரிசுத்தமாக்குதலின் படியும் நாம் கீழ்படிதலுக்கென்று தெரிந்துகொள்ளப்பட்டோம். இரத்தம் தெளிக்கப்படுதல் நமக்கு ஆக்கினைத்தீர்ப்புகிடையாது என்பதை அறுதியிட்டு உறுதியாகக்கூறும் ஓர் கிரியையாகும். ரூத்தின் காரியத்திலும் இச்சத்தியங்கள் செயல் முறையில் வெளிப்படுகின்றன. ரூத்தும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வாழ்விற்கு சாட்சி கொடுக்க நேரிடுகிறது. கீழ்ப்படிதலை கற்றுக்கொள்ள, முழுமையாக கீழ்ப்படிந்தவரை அவள் நோக்கிப்பார்க்க நேரிடுகிறது. (இது

நேரிடையான ஓர் அனுபவம் அல்ல. ஆனால் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை நோக்கிப் பார்க்கும் அனுபவத்திற்கு மாதிரிப்படிவமாக அமைகிறது.) நமது பழைய மனிதன் கீழ்ப்படியாமையுள்ள தீயசுபாவம் உள்ளவனாகக் காணப்படுகிறான். கிறிஸ்துவுக்குள்ளான புதிய மனிதனே கீழ்ப்படிகிறவனாகவும், கீழ்ப்படிய விரும்புகிறவனாகவும் இருக்கிறான். கிறிஸ்துவோடேக்கூட மரிக்கும் அனுபவத்தைச் செயல்படுத்துதலை இங்கேதான் நாம் அறிந்துகொள்ளவியலும் கொலோசெயர் 8:3ல் "நீக்கள் மரித்தீர்கள்" என்று வாசிக்கும்போது ரோமர் 6:2, 11ல் இந்நிலைமையை நாம் உரிமை பாராட்ட அழைக்கப்படுகிறோம். 2 கொரி 4:10ல் இது செயல்முறைப் படுத்தப்படுகிறது. ''கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய ஜீவனும் எங்கள் சரீரத்தில்" விளங்கும்படிக்கு இயேசுவின் மரணத்தை எங்கள் சரீரத்தில் சுமந்து செல்கிறோம். இச்சத்தியங்களை நாம் சரியாகப்புரிந்துகொள்வோமேயாயின் களத்திற்கு இறங்கிப்போகுதல் என்னவென்று நாம் புரிந்துகொள்ளுவோம். நமது சுயசித்தத்தைத்தகர்த்துவிட்டு ''என்னிடத்தில் அதாவது என் மாம்சத்தில் நன்மை வாசமாயிருப்தில்லை என்று நான் அறிந்திருக்கிறேன்" (ரோமர் 7:18) என்று அறிக்கையிடும் கிரியைதான் அது. ரூத் போவாஸின் பாதங்களை மூடியிருந்த போர்வையை விலக்கிக்கொண்டு பாதத்தின் அருகே படுத்துக் கொள்கிறாள். கிறிஸ்து வானவரின் மரணத்தோடு நமது உள்ளத்தை இணைத்துக் கொள்ளும் செயலுக்கு ஒப்பானது அது. ரூத்தின் வாழ்வில் இத்தகைய ஆவிக்குரிய பயிற்சிகள் உருவாக்கிய விளைவு தான் என்ன? "நீ செய்யவேண்டியது இன்னதென்று அவன் உனக்குச் சொல்லுவான்" என்பதுதான் விளைவு. கீழ்ப்படிதலின் பாதையைத் தெரிந்துகொள்ளும் ஒவ்வொரு விசுவாசிக்கும் கிடைக்கும் ஆசீர்வாதம் இப்படிப்பட்டதுதான். நாம் செய்யவேண்டியது இன்னதென்று அவர் தாமே நமக்கு வெளிப்படுத்துவார். அவர் தமது கண்ணை வைத்து ஆலோசனை சொல்வதாக தாவீது கூறுகிறார். (சங்கீதம் 32:8) அதிக நெருக்கமான ஐக்கியமே வழிகள் பேசும் மொழிகளை அறியும். நமக்காக தம்மைத்தாமே மரணபரியந்தம் ஒப்புக் கொடுத்தவர் அவரல்லவா? என்னில் அன்பு கூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவகுமாரன் அவர் தானே. நான் தேவனால் கைவிடப்படாத பொருட்டு அவர் தேவனால் கைவிடப்பட்டு "என் தேவனே என் தேவனே ஏன் என்னைக் கைவிட்டீர்" என்று உரக்க கூப்பிட்டாரே அவருக்கு கீழ்ப்படிய வேண்டிய என் கடமையல்லவா? இக்கடமை உணர்வை ரூத்தின் வார்த்தைகள் மிக அழகாக வெளிப் படுத்துகின்றன.

## கீழ்ப்படிதலும் மகிழ்ச்சியும்

“நீர் எனக்குச் சொன்னபடி எல்லாம் செய்வேன்” இப்படிப்பட்ட கீழ்ப்படிதலுள்ள வார்த்தையைக் கேட்டபோது நகோமியின் உள்ளம் எவ்வளவாக மகிழ்ந்திருக்கும்? நாமும் இப்படிப்பட்ட கீழ்ப்படிதலைக் காட்டும்பொழுது கிறிஸ்துவானவரின் உள்ளம் திருப்தி அடையாமற் போகுமா? போவாஸின் செயல்களையும், செய்கைகளையும் நகோமி நன்றாக அறிந்திருந்தாள். ஒருவரிடமிருந்து ஒன்றைப் பெற்றுக் கொள்ள அவரிடமிருந்து அதைக்குறித்து அறிந்திருப்பது அவசியம் அல்லவா? ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து எங்கே இருக்கிறார்? என்ன செய்கிறார் என்பதை நன்கு அறிந்து அவரோடு இணைபிரியா உறவை ஏற்படுத்திக் கொண்ட விசுவாசிகள் அனேகர் உண்டு அவர்களில் ஒருவராக நாம் இருக்க தேவன் துணை செய்வாராக.

“நீ செய்ய வேண்டியது இன்னதென்று அவன் உனக்குச் சொல்லுவான்.” தேவனுடைய உள்ளத்தின் உணர்ச்சிகளை உணர்ந்து அவருக்கு உவகை ஊட்டும் விதத்தில் அவரது வார்த்தைகளைக் கேட்டு அதன்படி செய்வதே நமது உன்னதமான நோக்கமாவதாக. “நீர் எனக்குச் சொன்னபடியெல்லாம் செய்வேன்” என்று வாலிபர்கள் கூறுவதைக் கேட்கும் போது உன்னதமானவருக்கு உண்டாகும் உவகைக்கு அளவுண்டோ *(1 யோவான் 2:28; 2 யோவான் 4; எபிரேயர் 13:17).*

## சொல்லும் செயலும்

அவள் களத்திற்குப் போய் தன் மாமி தனக்குக் கற்பித்தபடியெல்லாம் செய்தாள். ரூத் சொல்லினால் அல்ல செயலினால் நகோமிக்குக் கீழ்ப்படிந்தாள். உணர்ச்சிகளின் அடிப்படையில் இயங்காமல் உள்ளத்தின் அடித்தளத்தில் இருந்து கீழ்ப்படிதல் ஊற்றெடுத்து வந்தபடியால் அவள் கீழ்ப்படிந்தாள். வேத வசனத்தில் இருந்து கிடைத்த வெளிப்பாடு அவளுக்குப் போதுமானதாக இருந்தது.

மோசே தேவனுடைய கட்டளைகளையும், கற்பனைகளையும் எழுதிவைத்தார். *(யாத்திராகமம் 17:14; 24-3:7; உபாகமம் 31:24, 26)* கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தனது அழிவில்லாத அதிகாரத்தால் அவைகளை உறுதிப்படுத்தினார் *(யோவான் 5:46, 47)* மோவாபை மறந்தபடியினாலும் போவாஸை நினைவு கூர்ந்த படியினாலும்

நகோமி கர்த்தருடைய பிரமாணங்களை நினைவு கூறுகிறாள். அவளது தாழ்ந்த நிலைமையிலும் தன்னுடைய தேவைகளை சந்திக்கும் படிக்கு தேவ ஞானமும், கிருபையும் வழிநடத்தியுள்ளதை உறுதிபடுத்திக் கொள்ளுகிறாள் (லேவியராகமம் 25; எண்ணாகமம் 35; உபாகமம் 25) எளிமையும், சிறுமையுமான இப்பெண்மணிக்கு "எழுதப்பட்ட கர்த்தருடைய வசனம்" போதுமானதாக இருந்தது. அவளுக்கு வேறொன்றும் தேவைப்படவில்லை. தேவனுடைய நினைவுகளின்படியும் வழிகளின்படியும் ரூத்திற்கு உபதேசம் நல்க அவளால் முடிந்தது. அவள் செய்யப்போகும் கிரியைகளுக்கும் தேவ வல்லமையை வேத வசனமே ஈந்தது. தனிப்பட்ட முறையில் போவாஸிடம் தன்னை மீட்கும்படி ரூத்தைக் கேட்கச் சொல்லும் அளவிற்கு வேத வசனத்தின் மேல் அவளுக்கு விசுவாசம் வந்து விட்டது. இமைப்பொழுதில் கதிர்களைர்ப் பொறுக்கிக் கொண்டிருந்தவள் கருத்தோடு விண்ணப்பிப்பவளாக மாறிவிட்டாள். தேவசித்தப்படி அவள் பெரிய காரியங்களைக் கேட்டாள். அவளது விண்ணப்பம் பரிசுத்தம் உள்ளதாகவும் தேவனால் நீதிகரிக்கப்பட்டதாகவும் இருந்தது. அவளுக்கு வேறு மத்தியஸ்தன் இல்லை. வேத வசனமே போதுமானதாக இருந்தது. இங்கு கவனிக்கவேண்டிய வேறொரு காரியமும் உண்டு. போவாஸிற்கும் தேவனுடைய வார்த்தையே போதுமானதாக இருந்தது. வசனத்தோடு வாழ்க்கை இணங்கும் போது மறுப்பொன்றும் தெரிவிக்காமல் ரூத்தின் வேண்டுகோளுக்கு அவன் இணங்கினான். ஏனெனில் அவளது விண்ணப்பம் வேதவசனத்தை சார்ந்திருந்தது. பரம போவாஸின் காரியத்திலும் இப்படியே. இவ்வுலகத்தில் இருந்த நாட்களில் வேத வசனத்தைச் சார்ந்தே அவர் செயல்பட்டார். சாத்தானுக்கும் வேதவசனங்களின் நிறைவைக் குறித்து தெரியும். எனவே வல்லவர் வசனத்தைக் கூறியபோது அவன் வாயடைத்துப் போனான் (மத்தேயு 4:1,11).

நாம் படிக்கவேண்டிய படிப்பினை இதுதான். தேவனுக்கும் அவரது குமாரனுக்கும் வேத வசனமே போதுமானதாக இருக்கிறது. "கர்த்தாவே உமது வசனம் என்றைக்கும் நிலைத்திருக்கிறது. (சங்கீதம் 119:89) சாத்தான் நம்மை சோதிக்க வரும்போது இதை மேற்கொள்ள தேவனுடைய வசனம் மட்டும் நமக்கும் போதுமானதாக இருக்கிறதா? அவிசுவாசிகளுக்குப் பதிலளிப்பதற்கும் பரிசுத்தரின் வசனங்களே போதுமானவை ஆகும். அனேக வேளைகளில் நாம் "அவர்களே வேதவசனத்தை விசுவாசிப்பதில்லை. பின் ஏன் அதை அவர்களோடு பகிர்ந்து கொள்ள வேண்டும்" என நினைத்து விடுகிறோம். பிசாசும் அவனுடைய கூட்டத்தாரும்

ஒப்புக்கொள்ளாவிடினும் வேத வசனத்திற்கு ஜீவனும், வல்லமையும் உண்டு. தன்னுடைய விருப்பங்கள் அனைத்தையும் நிறைவேற்றும் ஒருவனிடமே ரூத் போனாள். ஆனால் அவள் போரடிக்கும் களத்திற்கு இறங்கிச் செல்லவேண்டி இருந்தது. வசனம் 4ல் "இறங்கிச் செல்லுதலின்" அர்த்தத்தைக் காண்கிறோம். கிறிஸ்துவானவரின் மரணத்தோடு நம்மை அடையாளப்படுத்திக்கொண்டு சுயத்தை நியாயந்தீர்ப்பது தான் இறங்கிச் செல்லும் அனுபவம் ஆகும். மாமிசமானது நம்மை உட்கார வைத்திருக்கும் சிம்மாசனத்தில் இருந்து இறங்கி தேவன் அளித்த மரண தண்டனையை ஏற்றுக் கொள்வது தான் அது. அம்மரணத்தை கிறிஸ்துவானவர் நமக்கு பதிலாக அடைந்தார். ரூத் இச்சத்தியத்தை ஒரு உபதேசமாக ஏற்றுக்கொள்ளாமல் அதைச் செயல்முறைப் படுத்தினாள். தம்மண்டைக்கு வருகிறவர்களை அவர் பரிசுத்தப்படுத்துகிறார்.

## போவாஸின் பாதத்தில் ரூத்

போவாஸ் புசித்துக் குடித்து மகிழ்ச்சியாயிருந்து ஒரு அம்பாரத்து அடியிலே வந்து படுத்துக்கொண்டான். அப்பொழுது அவள் மெள்ளப்போய் அவன் கால்களில் மேல் மூடியிருக்கிற போர்வையை ஒதுக்கிப் படுத்துகொண்டாள்.

போவாஸ் புசிப்பதையும், குடிப்பதையும் குறித்து முன்னரே பார்த்தோம் அல்லவா. அவை கர்த்தராகிய இயேசு கிறிஸ்து பிதாவின் சித்தத்தைச் செய்து முடித்ததற்கு நிழலாக அமைகின்றன. (யோவான் 4:32, 34) இங்கே போவாஸ் மகிழ்ச்சியாயிருப்பதைக் குறித்துப் பார்க்கிறோம். சிலுவையின்மேல் தாம் செய்ய வேண்டிய பெரும் பணியை செய்து தீர்த்த பிறகு கிறிஸ்துவானவரின் உள்ளத்தில் உவகையானது ஊற்றெடுத்துப் பெருகி இருக்கும் அல்லவா. கிறிஸ்துவானவர் தமக்கு முன் வைத்திருந்த சந்தோஷத்தின் பொருட்டு அவமானத்தை எண்ணாமல், சிலுவையைச் சகித்து தேவனுடைய சிங்காசனத்தின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார். பாவப்பிரச்னைக்கு ஒரு நிரந்தரமான பரிகாரத்தை அவர் உண்டாக்கி விட்டார். மனுஷனால் அவமானப்படுத்தப்பட்ட தேவன் அவரால் மகிமைப்படுத்தப் பட்டார். மட்டுமன்றி தாம் நேசித்த சபையை மீட்டுக்கொண்டார். (எபேசியர் 5:25) இனி அது அவருக்கே சொந்தம் பூலோகத்தில் உள்ளவைகளும், பரலோகத்தில் உள்ளவைகளும் அவர் மூலமாய் தேவனோடு ஒப்புரவாக்கப்பட்டன (கொலோசெயர் 1:20) இவை அனைத்தும் அவருக்கு எவ்வளவு இன்பத்தை அளித்திருக்கும்

சங்கீதம் 22ல் முதல் பகுதியில் காணப்படும் வசனங்கள் அவரது வேதனைகளை விளக்குகின்றன. ஆனால் அச்சங்கீதத்தின் 22ம் வசனத்தில் உம்முடைய நாமத்தை என் சகோதரருக்கு அறிவித்து சபை நடுவில் உம்மை துதிப்பேன். என்னும் 25ம் வசனத்தில் மகா சபையில் நான் உம்மைத்துதிப்பேன். என்றும் அவர் கூறுவதைக் காண்கிறோம். ரூத் போவாஸைக் களத்திலே இரவு வேளையில் சந்திக்கப்போனதைப் போல நாமும் அவரை சந்திப்போமேயானால் அவரது மகிழ்ச்சியையும் நாம் புரிந்து கொள்ளவியலும். அவரது மகிழ்ச்சியை நாம் எண்ணாமல் அவரால் நாம் அனுபவிக்கும் ஆசீர்வாதங்களை மாத்திரம் எண்ணுவோமேயானால் நமது உள்ளங்கள் சுயத்தை மையமாகக் கொண்டே செயல்படும்.

## பதரை நீக்கியதால் பரவசமடைந்த போவாஸ்

மேலும் நாம் கவனிக்க வேண்டிய மற்றொரு காரியமும் உண்டு. போவாஸ் வாற்கோதுமையை தூற்றி முடித்துவிட்டான். வாற்கோதுமையில் இருந்து பதர் பிரிக்க பட்டுவிட்டது. பதர் அற்றவர்களாக நம்மைக் காணும் போது அவரது உள்ளம் பரவசமடையும் அல்லவா? கிறிஸ்துவும் சபையில் அன்பு கூர்ந்து தாம் அதைத் திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து பரிசுத்தம் ஆக்குகிறதற்கும் கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத்தமக்குமுன் நிறுத்திக்கொள்வதற்கும் தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார். (எபேசியர் 5:26, 27) பரலோகத்தில் தமது மணவாட்டியாகிய சபையை மாசற்றவர்களாக காணும்போது அவரது மகிழ்ச்சிக்கு எல்லையே இருக்காது. இப்பூவுலகிலேயே அப்படிப்பட்ட நிலை காணப்படுமானால் அவர் அகமகிழ்வார் அல்லவா. இன்று சபையில் அனேக விசுவாசிகள் கறைதிரையற்றவர்களாகக் காணப்படாவிடினும் அந்நிலையில் யாராவது ஒருவர் இருந்தாலும் அவர் மகிழ்ச்சி அடையாமல் இருக்கமாட்டார்.

போவாஸின் உள்ளம் மகிழ்ச்சியால் நிறைந்திருந்தது. தானியத்தைத்தூற்று முடித்துவிட்ட படியால் அவன் சுத்திகரிக்கப் பட்ட தானியக்குவியலாகிய அம்பாரத்தின் அடியிலே படுத்துக்கொண்டான். பழைய புளித்த மாவு நீக்கப்பட்ட பிண்டமாகிய சபைக்கு இத்தானியக்குவியல் நிழலாக அமைகிறதல்லவா. (1 கொரி 5:7, 8) மேலும் அது கனவீனமான பாத்திரங்களை விட்டுத்தங்களை சுத்திகரித்துக் கொண்ட கனமான

பாத்திரங்களுக்கு ஒப்பாய் இருக்கிறதல்லவா? அவை நீதியையும், விசுவாசத்தையும் அன்பையும் சமாதானத்தையும் அடையும் படி நாடுகின்றன. (2 தீமோத்தேயு 2:19.22) அநீதி உள்ள இடத்தில் அவர் இருக்கவுமாட்டார். நீதிமான்களாக்கப்படாதவர்களிடத்தில் ரூத் மரித்தவுடன் இருக்கும் படிப்போனாள். பாவம் தொடருவதை விட நாம் மரிப்பதே நலம் என்று அவர் கருதினார். பாவங்களை நீக்கும் பொருட்டு அவர் ஒரே தரம் வெளிப்பட்டார். (எபிரேயர் 9:26) இவ்வுலகம் அவரைப் புறக்கணித்துவிட்டு அவரைச் சிலுவையில் அறைந்து அடக்கம் செய்து விட்டது. உலகத்தார் அவரைத் தொலைத்துக்கட்டிவிட்டதாக எண்ணுகிறார்கள். அவர்களைப் பொறுத்தவரையில் அவர் அடக்கம் செய்யப்பட்டு மண்ணோடு மண்ணாகக் கலந்து விட்டார். ரூத் இப்புறக்கணிப்போடுதன்னை அடையாளப்படுத்திக் கொள்ளுகிறாள்.

அவள் போவாஸின்

கால்களில் மூடியிருந்த போர்வையை ஒதுக்கிவிட்டு அவன் பாதங்களின் அருகே படுத்துக் கொள்ளுகிறாள். இது ரோமர் 6:4க்கு மாதிரியாக அமைகிறது. நாமும் அவருடைய மரணத்திற்கு உள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப்பட்டோம். இங்கே ஞானஸ்நானமும் அதை தினசரி வாழ்வில் செயல்படுத்துதலும் எடுத்துக்கூறப்பட்டுள்ளன. தனிப்பட்ட நபரின் அனுபவம் மட்டுமன்றி சபையின் அனுபவத்தையும் இங்கே காணவியலும். ஏனெனில் செயல்முறையில் சபையில்தான் பழைய மனிதனை வெறுமையாக்கி விட்டு உலகத்தில் இருந்து முழுமையாகப் பிரிந்திருக்கும் உன்னத அனுபவத்தைக் காண வாய்ப்புண்டு. பாதி இராத்திரியிலே அந்த மனுஷன் இரண்டு திரும்பி ஒரு ஸ்திரி தன் பாதத்தண்டையிலே படுத்திருக்கிறதைக் கண்டான். வெளிப்படுத்தின விசேஷம் 2:3 அதிகாரங்களில் வர்ணிக்கப்பட்டுள்ள சபையின் சரித்திரத்தில் இடம் பெற்ற ஒரு முக்கியமான நிகழ்ச்சியை நாம் இங்கே காண முடிகிறது. வெளிப்பாடு 2ம் அதிகாரத்தின் இறுதிப்பகுதியில் தியத்தீரா சபையைக் குறித்துக்கூறப்பட்டுள்ளது. ரோமன் கத்தோலிக்க அதிகாரத்தில் இருந்த வரலாற்றின் இடைநிலை காலத்தை இங்கே காண்கிறோம். ஊழல் நிறைந்த அவள் மனந்திரும்ப மறுத்து விட்டாள். எனவே தேவனே அவளை நியாயம் தீர்த்தார். எனினும் அச்சபையிலும் உண்மையுள்ள விசுவாசத்தைக் காத்துக்கொண்ட ''மீந்திருக்கிறவர்களின்'' கூட்டம் ஒன்று இருக்கத்தான் செய்தது. அவர்களுடைய முந்தின கிரியைகள் பிந்தின

கிரியைகளைப்பார்க்கிலும் மேம்பட்டவைகளாக இருந்தன. எனவே அவர்கள் நிமித்தம் தேவன் தியத்தீரா சபை முழுவதையும் அழிவுக்குத்தப்புவித்தார். ஆனால் தியத்தீரா சபையை அவர் அங்கீகரிக்கவில்லை. கர்த்தருடைய வருகைவரை அது இருக்கும் என்றாலும் தேவன் புதிய ஒரு தொடக்கத்தை ஆரம்பித்து வைத்தார். ஆயினும் அச்சாட்சி, முதல் நான்கு சபைகளிலும் காணப்பட்டதைப் போன்ற வல்லமையான சாட்சி. அன்று மறுமலர்ச்சியாளர்கள் மறைந்தபிறகு சம்பவித்தது என்ன? அதை நாம் சர்தை சபையில் காணவியலும் "நீ உயிருள்ளவன் என்று பெயர் கொண்டிருந்தும் செத்தவனாயிருக்கிறாய். சர்தை சபையில் மீந்திருக்கிறவர்களைக் குறித்து'' தங்கள் வஸ்திரங்களை அசுசிப்படுத்தாத சிலபேர் சர்தையிலும் உனக்கு உண்டு.'' என்றே கூறப்படுகிறது. நெப்போலியனுடைய காலத்திலும் அதற்கு முன்னமே பிராடஸ்ட்டண்டு சபையின் நிலைமை இதுவே.

## பிலதெல் பியாவின் தொடக்கம்

அதற்கு பிறகு பரிசுத்த ஆவியானவர் புதிய ஒரு கிரியையை தொடங்குகிறார். எல்லா நாடுகளிலும் பிராடஸ்டண்டு சபைகளில் உள்ளவர்கள் ரட்சிக்கப்பட்டு செத்த கிரியைகளாகிய சடங்காச்சாரங் களை விட்டு தங்களை வேறுபிரித்துக் கொண்டதும் தங்களுடைய வழிகளிலும் வாழ்க்கையிலும் தேவனை வெளிப்படுத்தினர். அப்பொழுது ஒரு எழுப்புதல் உண்டாயிற்று. போவாஸ் தன் பாதத்தருகே ஒரு பெண் படுத்திருப்பதைக்கண்ட அனுபவம் இதற்கு ஒப்பானது. ஐரோப்பாவை நெப்போலியனுடைய தலைமையில் பிரெஞ்சுக்காரர்கள் கைப்பற்றியபோது தேவன் நல்லதொரு ஆவிக்குரிய நிலைமையை அனேகரில் கண்டார். பிலதெல்பியா சபையில் காணப்படும் அனுபவங்களுக்குள் அவர்களை நடத்தினார். "நீ யார் என்று கேட்டான்; நான் உமது அடியாளாகிய ரூத்; நீர் உம்முடைய அடியாள் மேல் உம்முடைய போர்வையை விரியும்; நீர் சுதந்திரவாளி என்றாள்."

போவாஸிற்கு ரூத் யார் என்று தெரியாதா? 19 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த விசுவாசிகள் தேவனுக்கு தெரியாதா? எல்லாமே தெரியும். ஆனால் அவர்கள் யாரென்று அவர்களுக்கே தெரியாது. ரூத் தன்னைக்குறித்து போவாஸிடம் அறிவிப்பதற்காகவே அவன் அவளிடம் இக்கேள்வியைக் கேட்டான்.

19ம் நூற்றாண்டில் வாழ்ந்த விசுவாசிகளின் வாழ்க்கை முறைகளை வரலாற்று முறைப்படி வாசிப்போமேயாயின் அவர்கள்

கிறிஸ்துவிற்குள்ளாக தங்களுக்கு இருக்கும் உரிமைகளையும் உடைமைகளையும் அதிகமதிகமாக அறிந்து கொண்டனர் என்பது விளங்கும். முதலாவதாக கிறிஸ்துவானவர் சிலுவையில் செய்து முடித்த பெரும் பணி தேவனை திருப்தி படுத்திற்று என்பதை உணர்ந்து கொண்டனர். எனவே கிறிஸ்துவை விசுவாசிக்கும் ஒவ்வொரு விசுவாசியும் தேவனோடு சமாதானம் உள்ளவனாய் அவருடைய பிள்ளையாகிறான். மனிதன் எனும் நிலையில் கிறிஸ்துவானவரின் கிரியைகள் முற்றுமுடிய பயன் ஈந்தவை என்று உணர்ந்து கொண்டனர். பாவத்தின் பின் விளைவுகளைப் பொறுத்தவரை கிறிஸ்துவானவர் ஒரு மனிதனை நடப்பித்த கிரியைகளையும் செலுத்திய பலியும் அவற்றிற்கு ஓர் நிரந்தரமான பரிகாரத்தை உண்டாக்கின. மட்டுமன்றி அவர்கள் கிறிஸ்துவுடனே கூட மரித்து உயிர்த்தெழுந்து உன்னதங்களிலே அவரோடேகூட உட்கார்ந்திருப்பதையும் உணர்ந்து கொண்டனர். மணவாளனுக்கும் மணவாட்டியாகிய சபைக்கும் இடையே உள்ள உறவைக் குறித்தும் சத்தியத்தைக் குறித்தும், சீக்கிரமாய் சம்பவிக்கவிருக்கும் அவரதுவருகையைக் குறித்தும் அறிந்துகொண்டனர். சபையினுடைய குணநலன்களையும், பதவிகளையும் அதிகமதிகமாக அறிந்து கொண்டனர்.

## ரூத்தின் குணநலன்கள்

ரூத்தின் மறுமொழி மிக அழகானது. தாழ்மை தன்னடக்கம், தன்னைசமர்ப்பிக்கும் சிறப்பியல்பு போன்ற குண நலன்களைக் கொண்டவள் ரூத். தேவனுடைய ஐசுவரியங்கள் அளிக்கும் அனைத்தையும் அனுபவிக்கவேண்டும் எனும் அயராத வாஞ்சை உடையவள் ரூத். நகோமி, "நம்முடைய இனத்தான்" என்று போவாஸைக் குறித்துக் கூறியிருந்தாள். ரூத்தினுடைய இருதயம் ஊன்றிப் பிடித்துக் கொண்டது. போவாஸ் தன்னை நன்கு அறிவான் எனும் உண்மையை அவளது மறுமொழி வெளிப்படுத்துகிறது. தேவனுடைய வாக்குத்தத்தங்களை பற்றிக்கொண்ட அவள் போவாஸ் தனக்குச் செய்யவேண்டிய கடமையைச் செய்வான் என நம்பினாள். தன்னை அவள் 'அடியாள்' என்று அழைத்துக் கொள்கிறாள். தனது தகுதியற்ற உதவியற்ற நிலைமையை உணர்ந்தவளாக கிருபையை மாத்திரமே சார்ந்து கொண்டு அவனிடம் விண்ணப்பிக்கிறாள்.

## இனி நான் மோவாபிய ஸ்திரியல்ல

ரூத்தன்னை மோவாபிய பெண் மணி என்று அழைத்துக்

கொள்ளவில்லை. ஏனெனில் போவாஸிடம் இருக்கும் தனது உறவை அவள் உணர்ந்துகொண்டாள். ஒரு விசுவாசி முதலாவதாக தான் ஒரு பரிதபிக்கப்பட்ட பாவி அல்ல என்றும் தான்தான் தேவனுடைய குடும்பத்தின் அங்கம் என்றும் உணர்ந்து கொள்ளவேண்டும். "நான் ஒரு பரிதவிக்கப்பட்ட பாவி என்னை மன்னிக்கவேண்டும்" எனக் கூறுவதுதான் தாழ்மை என்று சிலர் தவறாக எண்ணிக்கொள் கிறார்கள். அது அவர்களது வேதவசனத்தைக் குறித்த அறிவின் குறைவையே காட்டுகிறது. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சிலுவையில் செய்து முடித்த பெரும் பணியால் உண்டான அளவற்ற ஆசீர்வாதங்களை குறைவாக மதிப்பிடுவதால் உண்டாகும் குழப்பமே ஆகும். அப்படிப்பட்ட ஒரு விசுவாசிக்கு தனது மகிமையின் ஐசுவரியத்தை தேவன் வெளிப்படுத்த முடியாது. பரலோகத்தில் மகிமைப் படுத்தப்பட்ட மனிதனோடு சேர்ந்திருப்பது என்றால் என்னவென்றும் அவர்களுக்குத் தெரியாது. ஜென்ம கர்ம பாவங்களைப் பொறுத்தவரை அவை அவரால் முழுமையாக மன்னிக்கப்பட்டுவிட்டன என்று உணரும்போது தேவனுடைய நினைவுகளை நாம் புரிந்து கொள்ளவியலும்.

ரூத் போவாஸோடு தனக்கிருக்கும் உறவை நன்கு அறிந்திருந்தாள் எனினும் தன்னை அவனது 'அடியாள்' என்று அழைத்துக் கொள்கிறாள். அவனது நற்குணத்தையும் தயவையும் நன்கு அறிந்திருக்கிறபடியால் அவளுடைய இதயம் அவ்வுறவுக்காக ஏங்கியது. நாமும் நமது அன்பரிடம் இப்படிக்கூறுவது இல்லையா "நீர் என் கர்த்தர்" கிருபையால் நான் உம்முடையவன் எனும் உண்மையில் மகிமைப்படுகிறேன் உமது அடியானாக இருப்பது இவ்வுலகை ஆளுவதைவிட மேன்மை அல்லவா?

தன்னை மீட்கும் உரிமை போவாஸுக்கு உண்டு என்று அறிந்திருந்தும் அவள் எப்படிப்பட்ட நிர்ப்பாக்கியமான நிலையில் இருக்கிறாள் என்பதையும் அவள் கூறத்தயங்கவில்லை. உமது அடியாள் மேல் உமது போர்வையை விரியும்; ஆபத்துக்குள்ளான தனது குஞ்சுகளை காப்பாற்ற தாய்க்கோழி தனது சிறகுகளால் அவைகளை மூடுவதில்லையா. சவுலிடமிருந்து தப்பி ஓடிய தாவீது எனக்கு இரங்கும் தேவனே! எனக்கு இரங்கும்! உம்மை என் ஆத்துமா அண்டிக்கொள்ளுகிறது. விக்கினங்கள் கடந்து போகுமட்டும் உமது செட்டைகளின் நிழலிலே வந்து அடைவேன்" என்று கூறவில்லையா *(சங்கீதம் 57:1)* மேலும் *சங்கீதம் 36:7, 61:4; 91:4; மத். 23:37.*

## விசுவாசத்தின் கிரியை

விசுவாசம் எப்படிக்கிரியை செய்கிறது என்பதை ரூத்தின் வாழ்வில் காண்கிறோம். விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம். பாளயத்திற்கு புறம்பே ஆனால் திரைக்குள்ளாக மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் நம்மை நடத்திச் செல்வதும் அதுவே (எபிரேயர் *13:11-13)* நகோமியோடு தன்னை இணைத்துக் கொண்ட ரூத் விசுவாசத்தால் ஆபிரகாமின் குமாரத்தி ஆகிறாள். விசுவாசத்தால் தனது இனத்தாரையும், வீட்டையும் நாட்டையும் விட்டு முன்பின் அறியாத இடத்திற்குப்புறப்படுகிறாள். நகோமியின் தேவன் இனி அவளுடைய தேவன். நகோமியின் ஜனம் இனி அவளுடைய ஜனம். விசுவாசத்தால் உலகத்தை ஜெயித்த அவள் பாளயத்திற்குப்புறம்பே தனக்கென்று ஒரு இடத்தைத்தெரிந்துகொள்கிறாள்.

மூன்றாம் அதிகாரத்தில் ரூத்தின் விசுவாசம் போவாஸின் மகிமைக்குச் சமமான விசுவாசமாக மாறிவிடுகிறது. அவளைக்காட்டிலும் மேம்பட்ட நிலைமையில் போவாஸ் இருக்கிறான். அவனது வயலில் கதிர்களைப் பொறுக்கும் கேவலமான நிலைமையில் இருந்தவள் அவள். அவன் அவனது வேலைக்காரிகளோடு போலும் அவள் தன்னை சமமாகக்கருதவில்லை. (ரூத். *2:13)* ஆனாலும் இப்பொழுது அவள் போவாஸையே தன் உடைமைகளாகக் கேட்கிறாள். கதிர் பொறுக்கினவள் அவனையே கணவனாக கரம்பிடிக்கத்தொடங்கினாள். எலிமெலேக்கின் சுதந்திரத்தை மட்டுமல்ல தனம் பெருத்த மனிதனாகிய போவாஸின் செல்வங்கள் அனைத்திலும் தனக்குப் பங்கு தரும்படி கேட்கிறாள்.

தேவ ஆவியால் வழி நடத்தப்படும் விசுவாசத்திற்கு அதிக தைரியம் உண்டு. விசுவாசம் கேட்டதைப் பெற்றுக்கொள்ளும் என்பதற்கு அவரது வழிந்தோடும் கிருபையும், நித்திய ஆலோசனைகளும், மீட்பரின் கட்டளைகளும், அவரது மாறாத உண்மையும் உறுதியளிக்கும் உத்திரவாதங்களாக அமைகின்றன. விசுவாசம் எவ்வளவு தைரியத்தைக் காட்டினாலும் அது சட்டப்பிரகாரமான உரிமைகளை மீறுவதில்லை. அதற்கு அவன் "மகளே நீ கர்த்தரால் ஆசீர்வதிக்கப்படுவாயாக" நீ தரித்திரரும் ஐசுவரியவான்களுமான வாலிபர்களின் பின்னால் போகாததினால் முந்தின நற்குணத்தைப் பார்க்கிலும் உன் பிந்தின நற்குணம் உத்தமமாய் இருக்கிறது."

விசுவாசத்தின் வழியை ரூத்தின் வாழ்வில் கண்டால், கிருபை கிரியை செய்யும் மார்க்கத்தை போவாஸின் செய்கைகளில்

காண்கிறோம். கிருபை ஆத்துமாவிற்கு உற்சாகமூட்டுகிறது. அதற்குத் தன்னம்பிக்கையை அளிக்கிறது. அத்தன்னம்பிக்கைக்கு பலன் அளிக்கிறது. பரிசுத்த ஆவியானவர் ஒரு பாவிக்கு பாவ உணர்வை உண்டாக்கி அப்பாவங்களை அறிக்கை செய்யவைப்பாரானால் அப்படிச்செய்வதற்கு அதே ஆவியானவர் தன்னம்பிக்கையை அளித்திருக்கிறார் என்று தான் பொருள். தேவனுடைய நீதி, பரிசுத்தம், மன்னிக்கும் நற்குணம் போன்றவைகளின்மேல் அவன் நம்பிக்கை கொள்கிறான். தன் பாவங்களை மட்டும் அவன் காண்பானேயானால் அவன் தேவனை விட்டே ஓடிப்போய் விடுவான். அவர் பாவத்தைக் காணமாட்டார். தனக்கு ஆக்கினைத் தீர்ப்புதான் உண்டு என்றெண்ணி அவன் தேவனிடம் நெருங்கிச் சேர்வதில்லை.

தேவன் தம்முடையவர்களுடைய வாழ்வில் செயல்படும்போது இப்படிப்பட்ட கிருபைதான் மேலோங்கி நிற்கிறது. மோசே கிதியோன், எரேமியா போன்றோரை அவர் தமது சேவைக்கென்று அழைத்தபோது அவர்கள் அற்பவிசுவாசமும், நடுங்கும் இருதயமும் உடையவர்களாகத்தான் இருந்தனர். யாத் 3,4; நியாயா 6; எரேமியா; தான் அவர்களுக்கு அருளவிருக்கும் ஆசீர்வாதங்களுக்கு உகந்தவர் களாய் அவரது கிருபையே அவர்களை மாற்றிற்று. யோவான் 4ஆம் அதிகாரத்திலும் கிருபையின் சிறப்பை காணலாம். பாவியாகிய சமாரியா ஸ்திரீக்கு அவர் நன்மைகளைத் தருபவராகத் தன்னை வெளிப்படுத்துகிறார். அவள் இருக்கும் வண்ணமாகவே தம்மிடம் கடந்து வரும்படி அப்படிச்செய்தார். போவாஸிடமும் நாம் இப்படிப்பட்ட கிருபையைக் காண்கிறோம். அவளை இரண்டாம் அதிகாரத்தில் உற்சாகப்படுத்திய அவனது நேர்மையை என்னென்பது. இப்பொழுது அவளுடைய ஆசைகளையெல்லாம் நிறைவேற்ற அவன் தயாராகிறான். அவன் அவளை ஏமாற்ற விரும்பவில்லை.

## விசுவாசத்தால் உரிமைகளை சுதந்தரித்தவள்

பிறப்பிலேயே ரூத் கிறிஸ்து அற்றவளாக, இஸ்ரவேலின் காணியாட்சிக்குப் புறம்பானவளாக, வாக்குத்தத்தங்களுக்கு அந்நிய ஸ்திரீயாக நம்பிக்கையற்றவளாக தேவன் இல்லாதவளாக, இவ்வுலகத்தை சேர்ந்தவளாக இருந்தாள். ஆனால் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரை அவள் ஏற்றுக்கொண்டபடியால் அவளும் தேவனுடைய ஜனத்தை சேர்ந்தவள் என்று போவாஸ் அங்கீகரித்துக் கொள்கிறான். "நீ கர்த்தரால் ஆசீர்வதிக்கப்படுவாயாக" என்று

போவாஸ் கூறியதன் பொருள் அதுதான். அதிகாரப்பூர்வமாக அவள் "இஸ்ரவேலின் குமாரத்தி" ஆகிவிடவில்லை. அவள் உயர்ந்த சிலபடிகள் உண்டு. சில தடைகள் மாற்றப்படவேண்டும் என்னும் அவளது இதயம் அவனுக்குரிய உரிமைகளை அங்கீகரிக்கிறது. நம்மையும் உற்சாகப்படுத்தும் ஓர் எளிய தன்மையல்லவா அது.

ரூத் 2:11ல் போவாஸ் ரூத்தின் முந்தின நற்குணத்தைப் பார்க்கிறான். அவளது பிந்தின நற்குணம் என்ன? தனது பிந்தின இச்சைகளின்படி நடவாமல் வேதவசனத்தின்படி போவாஸ் தனக்குச் செய்யவேண்டிய கடமைகளைப் பற்றிப் பிடித்துக் கொண்டது தான் அது! தேவன் நம்மிலும், இப்படிப்பட்ட நற்குணத்தைதான் புகழ்வார்.

## தேவனுக்கு நம்மேல் உள்ள அதிகாரம்

மனம் போன போக்கின்படியே மனிதன் நடக்க விரும்புவான். இவ்வுலகத்திற்குரியவைகளின் மேல் தான் அவனுக்கு விருப்பம். ஆனால் நம் வாழ்வில் கிறிஸ்து இயேசுவிற்கு அதிகாரம் உண்டு. நமக்காக விலைக்கிரயத்தை செலுத்தின அன்பின் அடிப்படையில் அவருக்கு நம்மீது உரிமை உண்டு. கிறிஸ்துவானவர் சபையிலே அன்பு கூர்ந்து அதை முழுமையாகத் தனக்குச் சொந்தமாக்கிக் கொள்ளும் படிக்கும், அது அவரது சித்தத்தையே செய்யவேண்டும் என்பதற்காகவும் அதற்காகத்தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார் (எபே 5:25-27) தமக்குண்டான சகலத்தையும் விற்று அதை வாங்கினார். (மத். 13:4) தம்மைத்தாமே வெறுமையாக்கி அடிமையின் ரூபமெடுத்தார். மரணபரியந்தம், சிலுவையின் மரணபரியந்தம் கீழ்ப்படிதலுள்ளவரானார். (பிலிப் 2:7,8) பாதாளத்திற்கு தப்புவித்து நமக்கு பரலோக ஆசீர்வாதங்களைத் தரும்படி அவர் செலுத்தின விலைக்கிரயம் அளவிடமுடியாதது. இவ்வளவு பெரிய விலைக்கிரயத்தைச் செலுத்திய அவருக்கு நமது ஆவி, ஆத்துமா, சரீரங்கள் மேல் உரிமையுண்டு. நமது அன்பையும், அர்ப்பணிப்பை யும், அதிகமான கீழ்ப்படிதலையும் எதிர்பார்க்கும் உரிமை அவருக்கு உண்டு.

மேலும் வேத வசனத்தின்படி நம்மை உருவாக்கினவர் என்னும் நிலையிலும் அவருக்கு நம்மீது உரிமை உண்டு. சகலமும் அவருக்குள் அவரைக்கொண்டு அவருக்கென்று சிருஷ்டிக்கப்பட்டது. (கொலோ 1:16) உருவாக்கப்பட்ட மனிதன் உருவாக்கியவருக்குக் கீழ்ப்படிந்து அவரை மகிமைபடுத்தவேண்டும். மெய்யான திருப்தி மனிதனுக்கு

அதில் தான் உண்டு. "தேவனுக்குள் இளைப்பாறுதலைக்கண்டடையும் வரை மனிதனுக்கு இளைப்பாறுதல் கிடைக்காது" என்று அகஸ்டின் கூறினார். எனவே தான் கிறிஸ்துவானவர் "உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு பெலத்தோடும் அன்பு கூறுவாயாக" என்று உபாகமம் 6-5ல் எழுதப்பட்ட வசனத்துடன் "உன் முழு மனதோடும் எனும் சொற்றொடரைக் "கூட்டிச் சேர்த்தார். (மாற்கு 12:30).

மூன்றாவதாக மனிதகுமாரன் சகலவற்றையும் ஆளும் உரிமைப் படைத்தவர் (எபி. 1:1, 2) இறுதியாக தேவ ஆலோசனைப்படி சகலமும் மனுஷகுமாரனுக்குள் கீழ்ப்படுத்தப்பட்டிருக்கிறது (சங்கீதம் 8; எபி 2:5-8; கொலோ 1:15).

நான்கு விதங்களில் கிறிஸ்துவானவருக்கு நம்மில் உரிமை உண்டே. இவற்றை நாம் அங்கீகரிக்கிறோமா? "ஆண்டவரே நான் என்ன செய்ய சித்தமாயிருக்கிறீர்" என்று கேட்கும் பழக்கம் நம்மிடம் உண்டா? நமது எதிர்காலமாயினும், நமது பிள்ளைகளின் எதிர்காலமாயினும் எதுவாக இருந்தாலும் "ஆண்டவரே நான் என்ன செய்ய சித்தமாயிருக்கிறீர்" என்று கேட்கும் உன்னத அனுபவம் நமக்கு உண்டா?

இவற்றைப் பொறுத்த மட்டில் வேத வசனம் தெளிவான பதிலைத்தருகிறது "நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த இயேசுவையே தேவன் ஆண்டவரும் கிறிஸ்துவும் ஆக்கினார்" (அப். 2, 36) வேத வசனத்தின்படி தன்னை மீட்கும் உரிமை போவாஸுக்கு உண்டு என்று அறிந்திருக்கிறபடியால் அவள் அவனுக்குச் சொந்தமானவள் என்று நிச்சயித்துக் கொண்டாள். தன்னை முழுமையாக ஒப்புக்கொடுத்த அவளை போவாஸ் பாராட்டுகிறான். அவன் அவளுக்காக மனதுருகினான். நாமும் நம்மை முழுமையாகப் பரம போவாஸிற்கு ஒப்புக் கொடுக்கும்போது அவர் நம்மேல் மனதுருகுவார். நமது குமாரனின் அதிகாரத்தை அனைவரும் அங்கீகரிக்கவேண்டுமென்று தேவன் விரும்புகிறார். (பிலி 2:9, 11) ரோமர் 10:9; சங்கீதம் 2) முழு விருப்பத்தோடோ, விருப்பமின்றியோ நாம் அங்கீகரிக்கலாம். ஆனால் அவர் நம்மில் முந்தி அன்பு கூர்ந்தபடியால் முழு விருப்பத்தோடு நாம் அங்கீகரித்தால் அவர் நம்மை அங்கீகரித்திருக்கிறார் எனும் சான்று நமக்கு கிடைக்கும். நாம் அவரது அங்கீகாரத்தின் குரலைக் கேட்டிருக்கிறோமா?

தரித்திரரும் ஐசுவரியவான்களுமான வாலிபர்கள் பின்னால் ரூத் போகவில்லை. செல்வத்தின் பேரில் கண் இருந்திருந்தால்

செல்வந்தர்கள் பின்னால் போயிருப்பாள். சரீர இச்சைகளை மாத்திரம் எண்ணியிருந்தால் வறியவனானாலும் பரவாயில்லை. என்று வறுமை நிறைந்த வாலிபன் பின்னால் போயிருப்பாள். போவாஸ் ரூத்தின் இந்த நற்குணத்தைதான் புகழ்ந்தான். ஆணிற்குப் பெண்ணின் மேலும், பெண்ணிற்கு ஆணின்மேலும் உள்ள அன்பு மேலானது உன்னதமானது. ஆனால் இப்படிப்பட்ட உன்னதமான உணர்ச்சிகளையும் கிறிஸ்துவின் மேல் அன்பு கூறும் பொருட்டு கீழ்ப்படுத்த வேண்டும். நமது உணர்ச்சிகளையும், அறிவையும் அவருக்கென்று அர்ப்பணிக்கும் போது அவ்வியற்கை உணர்ச்சிகளும் தன்னை மகிமைப்படுத்தும்படி அவற்றை அவர் ஆசீர்வதிக்கிறார்.

## போவாஸின் பெருமை

"இப்பொழுதும் மகளே பயப்படாதே உனக்கு வேண்டிய படியெல்லாம் செய்வேன். நீ குணசாலி என்பதை என் ஜனமாகிய ஊராரெல்லாரும் அறிவார்கள்" *(ரூத் 3:11).*

ரூத்தின் செய்கைகள் போவாஸை மனமடியச்செய்வதற்கான வாய்ப்புகள் இருந்தன. ஏனெனில் ரூத்தின் வேண்டுதல் வேதவசனத்தில் கூறப்பட்டுள்ளதை மீறுவதாக இருந்தன. வறுமையின் நிமித்தம் ஒருவன் அடிமையானால் அவனின் அடுத்த உறவினன் அவனை மீட்கலாம். அவ்வண்ணமே வறுமையின் நிமித்தம் சொத்துக்களை விற்றுப் போட்டால் அவனது சகோதரன் அவற்றை மீட்டுக்கொள்ளலாம் லேவியராகமம் 25-25, 48, 49) உபாகம் 25ல் வாரிசு இல்லாது ஒருவன் மரித்துப்போனால் மரித்துப் போனவனுடைய சகோதரன் அவ்விதவையை மணந்து கொண்டு மரித்துப்போனவனுடைய பெயரை நிலைக்கப்பண்ணும்படி சந்ததியை உண்டாக்கலாம். இக்கட்டளைகளின்படி போவாஸ் ரூத்தை மணக்கவும் தேவையில்லை எலிமெலேக்கின் சுதந்திரத்தை மீட்கவும் வேண்டியதில்லை.

ஆனால் போவாஸின் தயையோ பெரியது. நமது போவாஸின் கிருபையோ அளவிடமுடியாது. எதையாவது ஒன்றை எதிர்பார்த்து விசுவாசமானது அவரிடம் வரும்போது அவர் அதை ஏமாற்றுவதில்லை. (மாம்சம் கேட்பதை அவர் தருவதில்லை. பதிலாக அவரிடமிருந்து சிட்சை தான் கிடைக்கும்). விசுவாசம் பெரிய காரியங்களை கேட்கும்போது கிருபையானது களிகூறுகிறது. கிருபை விசுவாசத்திடம் "உன்வாயை விரிவாய்த்திற" என்கிறது. மலை போன்ற பிரச்சினைகளை அகற்றும்படி விசுவாசம் கேட்கும்போது

கிருபையானது அவற்றைக் கடலிலே தள்ளி விடுகிறது.

"என் எதிர்காலம் உம்கையில் பிதாவே! என் விசுவாசம், எவ்வளவாயினும் உம் கிருபை பதிலளிக்கும், என் ஜெபங்களுக்கு." என்றோர் ஆங்கிலப் பாடல் உண்டு. அவரை முழுமையாக விசுவாசிப்பது ஒன்றையே அவர் நம்மிடம் எதிர்பார்க்கிறார்.

நீ குணசாலி என்பதை என் ஜனமாகிய ஊராரெல்லாம் அறிவார்கள்." குணசாலியான ஸ்திரி தன் புருஷனுக்குக் கிரீடமாயிருக்கிறாள். *(நீதி 12:4)* அவள் நீதி மொழிகள் *31:10-31ல்* வருணிக்கப்பட்டுள்ளாள். "கர்த்தருக்குப் பயப்படுகிற ஸ்திரியே புகழப்படுவாள்." "ஏனெனில் கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்" *(நீதி 1:7)*.

## குணசாலியான பெண்ணிற்கான இலக்கணம்

தேவனுடைய எண்ணத்தின்படி தனக்கென்று குடும்பத்தில் தேவனால் தரப்பட்ட நிலைமையை ஏற்றுக் கொள்பவளே அவருடைய இருதயத்திற்கு ஏற்றவள். கணவன் மனைவிக்கு இடையே உள்ள உறவு, கிறிஸ்துவிற்கும் சபைக்கும் உள்ள உறவிற்கு நிழலாக அமைகிறது. *(எபே 5:35)* தேவனுடைய எண்ணங்கள் படி உள்ள சபைக்கு அவள் மாதிரியாக அமைகிறாள்.

ரூத் போவாஸுடன் திருமண உறவுக்குள் கடந்து வராவிடினும் அவன் அவளை 'குணசாலி' என்று அழைக்கிறான். JND என்ற மொழியாக்கம் அவளை 'குணசாலி' என்ற பட்டணவாசலில் உள்ளவர்கள் அறிவார்கள் என்கிறது. பட்டண வாசல் ஆளுகைக் குரிய இடமாகும். அங்கே உள்ள மூப்பர்களும் ரூத் தேவனுடைய இருதயத்திற்கு ஏற்றவள் என்று ஒரு மனதோடு ஒத்துக்கொண் டிருந்தனர். எனவேதான் போவாஸ் "உனக்கு வேண்டிய படியெல்லாம் செய்வேன்." என்கிறான்.

இதை மனதில் கொண்டு நீதிமொழிகள் 31ஐ தியானிப் போமா? தேவனுடைய சபையின் பண்பு நலன்கள் செயல்முறையில் அங்கு கூறப்பட்டுள்ளன. நம்மிலும் அப்பண்புகள் உண்டா? கூட்டாகவும், தனிப்பட்ட முறையிலும் இப்பண்பு நலன்களை பட்டணவாசலி லுள்ள மூப்பர்கள் நம்மில் காணவியலுகிறதா?

கடந்த நூற்றாண்டின் இறுதிக்காலத்தில் சிலவிசுவாசிகளிடம் தேவன் இப்பண்புகளைக் கண்டார். அவருக்கும் அவரது

வசனத்திற்கும் அவர்கள் கீழ்ப்படிந்தனர். அவர்களை அவருடைய இருதயம் நம்ப முடிந்தது. அவருடைய ஆளுகையை அவர்கள் ஏற்றுக்கொண்டனர். (வெளி 3:8) தேவனுடைய வீட்டைக்குறித்த பக்திவைராக்கியம் அவர்களைப் பட்சித்தது. தேவனுடைய வீட்டிலுள்ளவர்களின் தேவைக்கிணங்க அவர்கள் அவர்களைக் காத்து பராமரித்தனர். "பிலாதெல்பியா" என்றால் "சகோதர அன்பு" என்று பொருள். "சிறுமையானவர்களுக்கும்," "தரித்திரருக்கும்" நற்செய்தியைப் பிரசங்கித்தனர் (நீதி 31:20) "பட்டண வாசலிலுள்ள அவருடைய மூப்பர்கள்" இதைக்கண்டனர். எனவே தேவன் அவர்களோடு இணைந்து அவர்களது சாட்சியைத் தம்முடைய சாட்சியாக ஒப்புக் கொண்டு உரிமைப் பாராட்டுகிறார்.

## முறைப்படி இயங்கும் இயல்பு

"நான் சுதந்திரவாளி என்பது மெய்தான். ஆனாலும் என்னிலும் கிட்டின சுதந்திரவாளி ஒருவன் இருக்கிறான். இராத்திரிக்குத் தங்கியிரு; நாளைக்கு அவன் சுதந்திரமுறையாய் விவாகம் பண்ண சம்மதித்தால் நல்லது; அவன் விவாகம் பண்ணட்டும்; அவன் உன்னை விவாகம் பண்ண மனதில்லாதிருந்தானேயாகில் நான் உன்னைச் சுதந்திரமுறையாய் விவாகம் பண்ணுவேன் என்று கர்த்தருடைய ஜீவனைக்கொண்டு ஆணையிடுகிறேன். விடியற்கால மட்டும் படுத்துக்கொண்டிரு என்றான். (ரூத் 3:12, 13).

ரூத்தின் வேண்டுகோளைக் கேட்ட போவாஸ் ஆச்சரியப்படவில்லை. தனது தயவின் மிகுதியால் அவன் அவளைத் தன்னிடம் சேர்த்துக்கொள்ள எண்ணினான். ஏனெனில் அவன் மாத்திரமே அவளுக்கு உதவ முடியும். தனது செயலின் பின்விளைவுகளை எண்ணிப்பாராமல் தன் மனம் போன போக்கின்படி அவன் செய்ய விரும்பவில்லை. அவன் நேரிடவேண்டிய பிரச்சினைகளை ரூத்தைவிட நன்கறிவான்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நமது உள்ளங்களையும், சூழ்நிலைகளையும் வழிகளையும் நன்கறிவார். ஏசாயா 46-9-10ல் நானே தேவன் வேறு ஒருவரும் இல்லை. நானே தேவன் எனக்கு சமானம் இல்லை. அந்தத்திலுள்ளவைகளை ஆதிமுதற் கொண்டும் இன்னும் செய்யப்படாதவைகளை பூர்வகால முதற்கொண்டும் அறிவிக்கிறேன். என் ஆலோசனை நிலைநிற்கும். எனக்குச் சித்தமானவைகளையெல்லாம் செய்வேன் என்கிறார். சங்கீதம் 139ல் தாவீது "என் நினைவுகளை தூரத்திலிருந்து அறிவீர்" என்கிறார்.

என் நாவில் சொல் பிறவாததிற்கு முன்னே இதோ கர்த்தாவே அதையெல்லாம் நீர் அறிந்திருக்கிறீர் என்கிறார். நமது ஆவியானவரின் மூலமாக அவர் நமது உள்ளங்களில் கிரியை செய்து அவரையே நம்பச் செய்கிறார். அவரே நமது சகலக்கட்டுகளிலிருந்தும் நம்மை மீட்க முடியும். அவர் மூலமாகவே பரிசுத்தவான்களுக்குரிய சுதந்திரத்தை நாம் பெற்றுக்கொள்ள முடியும். அதை நாம் பெற்றுக்கொள்ளும் முன் நேரிட வேண்டிய தடைகளையும் அவர் அறிவார். மகிழ்ச்சியோடு அவரே நமது மீட்பர் எனக்கூறுகிறார். விசுவாசம் கேட்கும் அனைத்தையும் அவர் அருள்வார். நமது இதயம் திருக்குள்ளதான படியால் நாம் அடிக்கடி வேறு மீட்பர்களைத் தேடுகிறோம். ரோமர் 7ல் காணப்படும் மீண்ட அனுபவங்கள் மிகக்கடினமானவை. ஆனால் அவை அவருக்குக் கடினமானவை அல்ல "நிர்ப்பந்தமான மனுஷன் நான் ! இந்த மரண சரீரத்திலிருந்து யார் என்னை விடுதலையாக்குவார்? என்று கதறாதவரை அவர் நமக்கு உதவ முடியாது. நியாயப்பிரமாணத்தின் வல்லமையற்ற தன்மை வெளிப்படவேண்டும். பாவசுபாவமுள்ள மனிதனை அது தேவனோடு சேர்க்க முடியாது. பாவத்தின் வல்லமையிலிருந்து விடுவிக்கவும் முடியாது. அடுத்த அதிகாரத்தில் இதை ஆராயலாம்.

போவாஸ் ரூத்திடம் விடியற்காலமட்டும் படுத்துக் கொண்டிரு என்றான். அவன் உறங்கிக்கொண்டிருந்த போது அவள் அவன் பாதத்தண்டையில் படுத்துக்கொண்டாள். அவனது நித்திரை கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மரணத்துக்கு மாதிரியாக அமைகிறது. நித்திரை செய்பவனின் பாதத்தருகே படுத்துக்கொண்டது, நாம் ஞானஸ்னானத்தில் அவரோடே அடக்கம் பண்ணப்பட்டதற்கு நிழலாகும். "அவருடைய மரணத்துக்குள்ளாக்கும் ஞானஸ்னானத்தினாலே கிறிஸ்துவுடனே அடக்கம் பண்ணப்பட்டோம். *(ரோமர் 6:4)* இந்நிலைக்குதான் நாம் வந்திருக்கிறோம். மீட்பின் பணியில் நாம் பங்கு பெறுவது இங்கே தான். நமது ஜென்மகர்ம பாவங்கள் அற்றுப்போவதும் இங்கேதான். நமது சுதந்திரத்தை இங்குதான் பெற்றுக்கொள்கிறோம். நம்மைக் கிறிஸ்துவுடனேகூட எழுப்பி உன்னதங்களிலே அவரோடேகூட உட்காரவும் செய்தார். *(எபே. 2:5:6)*எனவேதான் போவாஸ் விடியற்காலமட்டும் படுத்துக் கொண்டிரு என்றான். விடியற்காலத்தில் தான் மற்றொரு சுதந்திரவாளி தேவையா இல்லையா என்று தெரியும்.

### சாயங்காலமும் விடியற்காலமும்

"அவள் விடியற்காலமட்டும் படுத்திருந்து ஒருவர் முகம் ஒருவருக்குத்தெரிவதற்கு முன்னே எழுந்திருந்தாள்." (வ. 14)

ரூத் 2:17ல் அவள் சாயங்காலம் வரை கதிர்பொறுக்கினாள் என்று வாசிக்கிறோம். இப்போதோ "விடியற்காலம் வரை அவன் பாதத்தண்டையில் படுத்திருந்ததாக" வாசிக்கிறோம். கிறிஸ்தவ வாழ்வின் இன்றியமையாத இரு கூறுகள் இவையே? வேலை செய்வதும், விழித்திருப்பதும் பகலில் தான்! இரவில் நாம் காத்திருக்கிறோம். (யோவான் 9:4; 1 தெச 5:4-8). இவை இரண்டும் மாறுபட்ட அனுபவங்கள் அல்ல! கிறிஸ்துவானவர் புறக்கணிக் கப்பட் டிருக்கும் இந்த இராக்காலத்தில் அவரது பாதத்தண்டையில் "படுத்திருப்பவர்களே" பகலில் கிரியை செய்கிறவர்களாகவு மிருப்பார்கள்.

போவாஸின் பாதத்தண்டையில் படுத்திருந்தபோது தான் மீட்ப்போடு இணைக்கப்பட்ட ஆசீர்வாதங்களைக்குறித்து ரூத் அறிந்துகொண்டாள். அவனை முழுமையாக நம்பினாலே அவை சாத்தியமாகும். அவரது பாதத்தில் அமர்ந்திருக்கும் போது தான் நாம் அவரது வாக்குத்தத்தங்களுக்கு உரியவர்கள் என்றும் அவருக்குப் பிரியமானவர்கள் என்றும் அறிந்துகொள்ள முடிகிறது. அவர் நமக்காக யாவையும் செய்து முடிப்பார் என்று அறிந்து இவ்வாசீர்வாதங்களை நாம் பெற்றுக்கொள்கிறோம்.

## ரூத்தின் தவறும் சில விசுவாசிகளின் நிலையும்

ஆனால் ரூத் விடியற்காலமட்டும் படுத்திருக்கவில்லை. அவள் அதற்கு முன்னரே எழுந்து போகமுற்படுகிறாள். தமது பாதத்தண்டையில் படுத்திருக்கிறவர்கள் பாவியானாலும், பரிசுத்தவான்களானாலும் கிறிஸ்துவானவர் விரட்டி விடுவதில்லை. ஆனால் அவரது மரணத்தோடிணைக்கப்பட்டிருக்கும் அந்நிலையிலிருந்து எழுந்து விடுகிறாள். விடியற்காலம் வரை காத்திருந்தாள். அவளது ஆத்துமாவில் வெளிச்சம் தோன்றியிருக்கும். ஆனால் அவள் "ஒருவர் முகம் ஒருவருக்கு தெரியாததற்கு முன்னே எழுந்து விட்டாள்."

ரோமர் 5-1,2ல் கூறப்பட்டுள்ள இடத்திலேயே அனேக கிறிஸ்தவர்கள் தங்கிவிடுகின்றனர். ஏன்? அவர்கள் அவரை இரட்சகராகவும் மீட்பராகவும் ஏற்றுக்கொண்டவர்கள் தான். ஆனாலும் "பழைய மனிதனின்" பிடியிலும் "பாவத்தின்

வல்லமையிலும் சிக்கித்தவிக்கின்றனர். அடக்கம் பண்ணப்பட்ட இடத்தில் அவர்கள் தங்கியிருப்பதில்லை. கிறிஸ்துவானவர் அவர்களது பாவங்களைச் சுமந்தது மட்டுமன்றி அவர்களுக்காகப் பாவமானாரே. அவருக்குள் அவர்களது அனைத்துப் பாவங்களும் நியாயந்தீர்க்கப்பட்டுவிட்டன. நாம் பாவத்திற்கான தண்டனையிலிருந்து இரட்சிக்கப்பட்டவர்கள் மட்டுமல்ல! மனந்திரும்பும் முன் நாம் இருந்த நிலைமையிலிருந்து முழுமையாக வேறுபிரிக்கப்பட்டு, சுத்திகரிக்கப்பட்டவர்கள். (1 பேதுரு, 1-2 கொரி 6:11) இதை நாம் உணரும்போது கல்லறைக்கு மறுபக்கமுள்ள உன்னதங்களிலே அவரோடேகூட உட்கார வைக்கப்படும் இடத்திற்கு அவர் நம்மை நடத்தி செல்லுகிறார். அப்போது தான் நாம் அவரை மீட்பராகவும் சுத்திகரிப்பவராகவும் மகிமைப் படுத்துகிறவராகவும் அறிந்து கொள்ள முடியும். ஒரு மெய் கிறிஸ்தவனுக்குரிய இடம் அதுதான் (யோவான் 17:3).

ரூத் அவ்விடத்தை விட்டு எழுந்து போய்விட்டாள். தனக்காக சகலமும் செய்து முடிக்கப்போகும் போவாஸின் பாதத்தண்டையிலே இளைப்பாறுவதை விட்டு அவள் எழுந்து போகிறாள். நாமும் அவரோடே அடக்கம் பண்ணப்பட்ட அந்த இடத்தை விட்டு எழுந்து "உயிருள்ளவனின்" இடத்தைப் பிடிக்க முனையும் போது ''பரம போவாஸை'' விட அடுத்த உறவின் முறையான நியாயப்பிரமாணம் நம்மேல் உரிமை பாராட்டும் மரித்தவனின் மீது நியாயப்பிரமாணத்திற்கு ஒரு அதிகாரமும் இல்லை. (ரோமர் 7, 4, 6) ஆனால் பாவத்திலிருந்து விடுதலை பெற விரும்பும் உயிருள்ளவர்களின் மீது அதற்கு வல்லமையுண்டு. அப்படிப்பட்ட வர்களுடன் அது " இதைச் செய்தால் (நீ பிழைப்பாய்)" என்கிறது. (நியாயப்பிரமாணத்தை மீறுபவன் சாவான்). ஒருவன் நியாயப்பிரமாணத்தை முழுமையாகக் கைக்கொண்டால் அது அவனுடைய மீட்பனாகும்.. இது சாத்தியமல்ல என்பதை ரூத் அறிந்து கொள்ளவேண்டும். நாமும் "ஜீவனுக்கேதுவான கற்பனையே எனக்கு மரணத்துக்கேதுவாய் இருக்கக்கண்டேன்" என்று அறிந்து கொள்ள வேண்டும்.

## ரூத்தின் சஞ்சலம்

"களத்திலே ஒரு ஸ்திரீ வந்ததாக ஒருவருக்கும் தெரிவிக்க வேண்டாம் என்று அவன் சொல்லியிருந்த படியால் ஒருவர் முகம் ஒருவருக்குத் தெரியாததற்கு முன்னே எழுந்திருந்தாள். அவன் அவளை நோக்கி நீ போர்த்துக் கொண்டிருக்கிற போர்வையை

விரித்துப் பிடி என்றான் அவன் அதைப்பிடித்தபோது அவன் அதிலே ஆறுபடி வாற்கோதுமையை அளந்து போட்டு அவள்மேல் தூக்கிவிட்டு பட்டணத்திற்கு புறப்பட்டு வந்தான். (வ 14,15)

ஏன் இவ்வாறு அவள் இரகசியமாக அனுப்பிவிடப்பட்டாள்? போவாஸ் தன்னைப் பார்க்கிலும் கிட்டின ஒரு சுதந்தரவாளி ஒருவன் இருக்கிறான் எனக்கூறியதைக் கேட்டதும் ரூத் தொடர்ந்து அங்கு தரித்திராமல் ஒருவர் முகம் ஒருவருக்கு தெரியாததற்கு முன்னே எழுந்திருந்தது அவனை களவீனப்படுத்தும் செயலாகும். ஏனெனில் அவனைப் பார்க்கிலும் கிட்டின சுதந்தரவாளி அவளை மீட்பான் என்று எண்ணிவிட்டாள். கருங்கக்கூறின் "அனைத்தும் அவர் தான்" எனும் எண்ணம் போவாஸைக்குறித்து அவள் உள்ளத்தில் எழவில்லை.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நமக்காக அனைத்தையும் செய்து முடித்து விட்டார். தேவனுடைய கட்டளைகளைக் கைக்கொள்ளவும் நம்மைப் புதிய சிருஷ்டிகளாக்கிக்கொள்ளவும் மட்டும் அவரைப் பயன்படுத்தினால் அது அவரைக் களவீனப்படுத்தும் செயலாகும். சரிப்படுத்த முடியாத பாவங்களாக நாம் இருந்தபடியால் அவர் நமக்காகப்பாவமானார். நமது பாவங்களுக்காகவும், பாவ சுபாவத்திற்காகவும் தேவன் நம்மை ஆக்கினைக்குள்ளாகத்தீர்க்கவே முடியும். கிறிஸ்துவே அந்த நியாயத்தீர்ப்பையும் நமக்காகத்தம்மேல் ஏற்றுக்கொண்டார். சிலர் தங்களது பழைய சுபாவத்தின் கந்தல்களைத்தைத்து சரியாக்க நியாய பிரமாணத்தைப் பயன்படுத்துகின்றனர். அதைக்கைக்கொள்ள கிறிஸ்துவானவர் பலத்தையும், வல்லமையும் தரவேண்டுமாம்! விந்தைதான்.

இதற்கு அவர் உதவமுடியாது ஏனெனில் அது இயலாத ஒரு செயல். நாம் சரிப்படுத்த முடியாதபாவிகள் ஆனபடியால் அவர் நமக்காகப் பாவமானார். அவர் நியாயப்பிரமாணத்தை மகிமைப்படுத்துவதற்காக பரலோகத்தில் வீற்றிருக்கவில்லை. நியாயப்பிரமாணத்தைக்கைக்கொள்ள முயற்சிப்பதே அவரது மீட்பின் கிரியையை மறுதலிப்பதாகும். பாவம், பிசாசு, உலகம், மரணம் ஆகியவற்றிலிருந்து நம்மை விடுவிப்பதற்கான அனைத்தையும் அவர் செய்து முடித்துவிட்டார். "நிர்ப்பந்தமான மனுஷன் நான்!" இந்த மரண சரீரத்தினின்று யார் என்னை விடுதலையாக்குவார்? என்று கூறத்தக்க நிலையில் இருப்போமேயானால் அது அவரைக்களவீனப்படுத்தும் செயலாகும்.

இந்நிலையில் இருப்பவனைக்கிறிஸ்தவன் என்று வேதம் அழைக்கவில்லை. நாம் விடுதலையடைந்தவர்களாய்ப்பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொண்டபிறகு தான் கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்படமுடியும். (ரோமர் 8:10) அப்பொழுது தான் பரிசுத்த ஆவியானவர் நம்மை முத்திரையிட முடியும் (எபே 1:13) இக்காரணத்தை முன்னிட்டே ரோமருக்கு எழுதின நிருபத்தின் முதல் 7 அதிகாரங்களில் பரிசுத்த ஆவியானவரைக்குறித்து கூறப்படவில்லை. ரோமர் 5:5 ஐத்தவிர ரூத்தைப் போன்ற ஒருத்தி போவாஸின் களத்திற்கு வந்தது தேவனைக்கனம் பண்ணும் செயலல்ல! அவர் செய்து முடித்த கிருபைக்கு மாறுபாடான ஒரு நிலைமையில் அவள் காணப்படுகிறாள்.

பகிரங்கமாக ரூத் தனக்கு உரியவள் என்று போவாஸ் ஏற்றுக்கொள்ள முடியாவிட்டாலும், அவள் மீது அவன் காட்டிய தயவும், நற்குணமும், கிருபையும் குறைந்து போகவில்லை." நாம் உண்மையில்லாதவர்களாக இருந்தாலும் அவர் உண்மையுள்ளவராயிருக்கிறார்" (2 தீமோ 2:13) எப்படிப்பட்ட ஒரு நல்ல நண்பர் இயேசு! அவர் பிரசன்னத்தில் நாம் இருந்தால் அளவற்ற ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளாமல் போக முடியாது.

## போவாஸ் ரூத்திற்குத்தந்த பரிசு

போவாஸ் ரூத்திற்கு என்ன கொடுத்தான் என்று கவனியுங்கள். 2ஆம் அதிகாரத்தின் இறுதிப்பகுதியில் அவள் கோதுமை அறுப்புத்தீரும் மட்டும் கதிர் பொறுக்குகிறாள் என வாசிக்கிறோம். கோதுமை கிறிஸ்துவானவரின் குணநலன்களைப் பெற்ற விசுவாசிகளுக்கு நிழல்! (யோவான் 12:24) இத்தன்மை அவர்களை கிறுஸ்துவோடிணைத்து சபைக்குள்ளாக்குகிறது (எபே:1, 23; 3:6; 4:16) ஆனால் ரூத் இப்படிப்பட்ட செயல்முறைக்கு கடந்துவரவில்லை. என்று 3ஆம் அதிகாரத்தில் கண்டோமல்லவா? வாற்கோதுமையை தூற்றும் களத்தில் இருந்த போவாஸ் அதையே அவளுக்குக் கொடுத்தான். அதில் வைக்கோல் இல்லை. 2ஆம் அதிகாரத்தில் கூறப்பட்டுள்ளது, போல "தட்டியடிக்க வேண்டியது" இல்லை. போவாஸ் தந்த வாற்கோதுமையில் பதரும், உமியும் இல்லை. ஏனெனில் போவாஸே அதைத்தூற்றிவிட்டான். ஆனால் அது வாற்கோதுமை தான். ரோமர் 7ஆம் அதிகாரத்தில் கூறப்பட்டுள்ள நிலைமையில் உள்ளவன் சபையில் இடம் பெற முடியாது. பாவ மரணத்தின் படிகளிலிருந்து அவன் விடுவிக்கப்பட வேண்டும்.

வாற்கோதுமை உயிர்த்தெழுந்த வாழ்விற்கு மாதிரியாக அமைகிறது. வாழ்க்கை ஒருமுறை மரணத்திற்குள்ளாகச் சென்றுவிட்டால் மறுபடியும் மரணம் அதைக்கீழ்ப்படுத்த முடியாது. நியாப்பிரமாணமோ, பாவமோ, மரணமோ இல்லாத மரணத்தின் அக்கரையில் நம்மை உயிர்த்தெழுந்த வாழ்வு கொண்டு போய் விடுகிறது.

## ஆறு எனும் எண்

போவாஸ் ஆறுபடி வாற்கோதுமையைத்தருகிறான். அந்தப்படி எவ்வளவு பெரிதாக இருந்திருக்கும் என்று நமக்குத் தெரியவில்லை. ஆனால் அவனே அதை அவள் மேல் தூக்கிவிடும் அளவிற்கு அது அதிகமாக இருந்தது. அளவின் விவரம் கூறப்படாதபடியால் எண்ணிற்கு அதிக முக்கியத்துவம் தரப்படுகிறது. ஆறு நாட்கள் மனிதன் வேலை செய்ய வேண்டும். சிருஷ்டிகளுக்கு உள்ள கடமைகளை அது காட்டுகிறது. நமது மெய்யான ஆவிக்குரிய நிலைமைக்கும் அதிகமாக நாம் ஆசீர்வாதங்களைப்பெறுவதில்லை. ஒரு இஸ்ரவேலனுக்குக் கிறிஸ்தவனுக்குக்கிடைக்கும் ஆசீர்வாதங்கள் கிடைப்பதில்லை. நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றித் தன்கடமையை செய்வதாக எண்ணும் யூதனுக்கு “ஆறுபடிதான்” கிடைக்கும். ஏழு படிகள் கிடைக்காது. ரூத்திற்கும் ஆறுபடி வாற்கோதுமை தான் கிடைத்தது. கிடைக்காமற் போன ”ஏழுபடி“ ஆசீர்வாதத்தை அவள் அடுத்த அதிகாரத்தில் பெற்றுக்கொள்ளுவாள். அந்த ஏழாம்படி போவாஸ் தான். கிறிஸ்துவோடு நாம் ஒன்றாயிருந்தால் நமக்கு அனைத்தும் உண்டு. அவரும், அவரது ஐசுவரியமும் நமக்குச் சொந்தமாகும். யோவான் பிதாக்களுக்கு எழுதும்போது (1 யோவான் 2:13, 14) என்று எழுதுகிறார். அது அனைத்து ஆசீர்வாதங்களையும் உட்கொள்ளும் அனுபவமாகும்.

அவரைச் சொந்த மாக்கிக்கொள்ள தேவையானது ஒன்றே! அவரது பாதத்தில் அமர்ந்திருக்க வேண்டும். (லூக்கா 10:38 42) அப்போது ”ஏழுபடிகோதுமை நமக்குக் கிடைக்கும். அவரே நமது பங்கு! அற்புதமான அனுபவம் அல்லவா இது. யோவாஸ் அல்லது அனைத்து சீக்ஷர்களும் மத். 26.8, மாறாக புரிந்துகொள்ளலாம். பிதாவோடும், குமாரனோடு ஐக்கியம் கொள்வது அற்புதமான அனுபவமல்லவா?” (1 யோவான் 1-3,4) நமக்கு இப்பங்கைத்தரும் ஒருவேளை சகோதரியாகிய மார்த்தாளோ, சகோதரனாகிய லாசருமேகூட தவறாகப்புரிந்து கொள்ளலாம். தேவனைத்தவிர அனைவரும் தவறாகப் புரிந்து கொள்ளும் வேதனையான

அனுபவமே. சொந்தமனைவியும், உறவினருங்கூட எதிரிகளாகலாம். (மத். 10:36; லூக் 14:26, 27)

இப்படியிருக்க அவர் உன்னதமானவரானபடியால் இச்சோதனைகளும், துக்கங்களும் ஒரு பொருட்டே அல்ல. எல்லாவற்றிற்கும் மேலாக நாம் அவரது ஐக்கியத்தையே தேட வேண்டும். அவரை முழுமையாகச்சார்ந்து கொள்ளும் படி ஒருவர் அனைத்தையும் உதரித்தள்ளினால் கிறிஸ்துவானவருடைய இதயத்தினுள் துக்கம் மாறி ஆறுதல் அடைவார். (ஆதியாகமம் 24:67) ரூத் போவாஸிடமிருந்து புறப்பட்டு பட்டணத்திற்குள் நுழைந்தாள். அது தேவ ஜனங்களால் நிறைந்த இடம். தேவனுடைய வாசஸ்தலம் தேவனாகிவிட முடியாது. சில வேளைகளில் நமது ஆவிக்குரிய கூடுகைகள் நமது கவனத்தை அவரை விட்டு திருப்பிவிடுகின்றன. இப்படிச்செய்வது தவறாகும். இத்தகைய மனநிலை உடையவளாக ரூத் இருந்ததினால் தான் அவளுக்கு 6 படி வாற்கோதுமைக் கிடைத்தது.

### நற்செய்தியும், சான்றும்

அவள் தன் மாமியினிடத்தில் வந்தபோது அவள் “என் மகளே உன் செய்தி என்ன?” என்று கேட்டாள். அப்பொழுது அவள் அந்த மனுஷன் தனக்குச் செய்ததையெல்லாம் விவரித்தாள். மேலும் அவர் நீ உன் மாமியாரண்டைக்கு வெறுமையாய்ப் போகவேண்டாம் என்று சொல்லி இந்த அறுப்பின் வாற்கோதுமையை எனக்குக் கொடுத்தார் என்றாள்.

ரூத் நற்செய்தியுடன் தன் மாமியாரிடம் போகிறாள். அந்நற்செய்திக்கு சாட்சியாக அந்த 6 படி வாற்கோதுமை அமைந்தது. இளைப்பாறுதலைத்தேடி போவாஸிடம் போனாள். ஆனால் அவ்விளைப்பாறுதலை அடையாமல் யார் மூலமாக அது கிடைக்கும் என்று அறியாதவளாய் பட்டணத்திற்குள் வருகிறாள். மிகுந்த மகிழ்ச்சியோடு போவாஸ் அந்த இளைப்பாறுதலைத்தர வருகிறானே.

”என் மகளே உன் செய்தி என்ன? என்று நகோமி ரூத்திடம் கேட்கிறாள். (நீ யார் மகளே என்று நகோமி ரூத்திடம் கேட்பதாக ஆங்கில வேதாகமம் கூறுகிறது) முந்தின நாள் இரவில் களத்திற்குப் போன ரூத் அதிக மாற்றம் அடைந்தவளாய் திரும்ப வந்திருக்கிறாள். நகோமிக்குப் போவாஸைக்குறித்து நன்றாகத் தெரியும். எனவே

அவள் இக்கேள்வியைக் கேட்கிறாள் அக்கேள்வியின் உட்கருத்து இதுதான். "நீ போவாஸ"டன் ஒன்றானாயா? அவனில் உனக்கு இளைப்பாறுதல் கிடைத்ததா?

தனது உள்ளத்தையும், மனச்சாட்சியையும் ஆராய்ந்தறியும் கேள்வியாக ரூத்திற்கு அது அமைகிறது. இப்பொழுதும் அவள் தனிமையான தரித்திரத்தில் தவிக்கும் ஒரு பெண் தான். அவள் நன்மையான எதையாவது பேசக்கூடுமானால் அது போவாஸைக்குறித்ததாகத்தான் இருக்கும். மறுபடியுமாக அவளது கவனம் போவாஸ"க்கு நேராகத் திருப்பப்படுகிறது. அவனது நற்குணத்தையும், வல்லமையையும், வாக்குத்தத்தங்களையும் அவள் எண்ணிப் பார்க்கிறாள். அவள் கொண்டு வந்த 6 படி வாற் கோதுமை அவனது செல்வத்தின் ஒரு பாகமாகும். அதிலிருந்து நகோமிக்கும் ஒரு பங்கு கிடைத்தது.

## பொறுத்திரு மகளே

நகோமி சூழ்நிலையைப் புரிந்து கொண்டாள். ரூத் சொன்னதையெல்லாம் அவள் கவனித்தாள். அவள் சொல்லாத காரியங்களையும் நகோமியால் அனுமானிக்க முடிந்தது. ரூத்திற்கு இன்னும் இளைப்பாறுதல் கிடைக்கவில்லை. அது ஏன் என்று நகோமிக்குத் தெரியும். அவள் அனுபவம் நிறைந்தவள் அல்லவா? ரோமர் 7ம் அதிகாரத்தில் உள்ள போராட்டத்தின் அனுபவங்களைக் குறித்து அறியாதகிறிஸ்தவன் யாராவது உண்டா? ஆனால் நகோமி ரூத் போவாஸால் பாராட்டப்பட்ட காரியத்தை எண்ணி தன்னை ஆறுதல் படுத்திக்கொண்டாள். ரூத் போவாஸின் மீது மிகுந்த நம்பிக்கை வைத்தாள். என்றாலும் அது நியாயப்பிரமாணமற்றே முரணானதாக இருந்தது. ஏனெனில் அவனிலுங்கிட்டிய சுதந்திரவாளி உண்டு.

நமது ஒவ்வொரு ஆவிக்குரிய ஆசைகளையும் ஆண்டவர் அங்கீகரிக்கிறார். "உள்ளான மனுஷனுக்கேற்றபடி தேவனுடைய நியாயப்பிரமாணத்தின் மேல் பிரியமாய் இருக்கிறேன். (ரோமர் : 22) என்று ஒருவர் உண்மையாகக்கூறுவாரானால் கிறுஸ்துவானவர் அவ்வார்த்தைகளை உன்னதமாகக்கருதுவார். நாமும் இப்படிப்பட்ட வாஞ்சையை காண்பிப்போமேயானால் நமது பிரச்சினைகளைத் தீர்க்க அவரும் அதிக ஆர்வம் காட்டுவார்.

ரூத் ஏன் தோல்வியடைந்தாள் என்று நகோமிக்குத் தெரியும். ரூத்தும் போவாஸைக்குறித்து அதிகமாய் அறிந்துகொண்டவளாக

புரிந்து கொண்டவளாக அவனது நற்குணத்தை எண்ணிப் பார்க்கிறாள். எனவே நகோமி "என் மகளே இந்தக் காரியம் என்னமாய் முடியும் என்று நீ அறியுமட்டும் பொறுத்திரு; அந்த மனுஷன் இன்றைக்கு இந்தக் காரியத்தை முடிக்குமுன் இளைப்பாற மாட்டான் என்றாள்.

தேவனிடமிருந்து ஜீவனைப் பெற்றுக்கொண்டபிறகும் இளைப்பாறுதலை அடையாமலிருக்கும் ஆத்துமாக்களுக்கு பொறுத்திரு எனும் ஆலோசனை எத்தனை அருமையானது. நமது வாழ்வின் நிர்ப்பந்தமான நிலைமையும், அசுத்தமும், வெட்கமும் உண்டாகும் போது நாம் பொறுத்திராமல் நமது சுயமுயற்சிகளால் அவற்றை அகற்ற முயலுவதில்லையா? நமது அனைத்துப் பாடுகளையும் கிறுஸ்துவானவர் தமது பாடுகளாக ஏற்றுக் கொண்டார். என்பது தான் கிருபையின் இரகசியம். நம் கண்களை நம்மைவிட்டுத் திருப்பி மீட்பருக்கு நேராக ஏறெடுக்கும் போது நமக்கு இளைப்பாறுதலும், சமாதானமும் கிடைக்கும். "பயப்படாதிருங்கள். நீங்கள் நின்றுகொண்டு இன்றைக்குக் கர்த்தர் உங்களுக்குச் செய்யும் இரட்ச்சிப்பை பாருங்கள்." சகரியா 3ம் அதிகாரத்தில் யோசுவாவிற்கு விரோதமாக குற்றஞ்சாட்டும் சாத்தானுக்கு தேவன் தானே பதிலளிக்கிறார். யோவான் 8ம் அதிகாரத்திலும் ஒரு பெண்மணிக்காகக் கிறிஸ்துவானவரும் தாமே கிரியை செய்கிறார். கெட்ட குமாரன் தன் தகப்பன் வீட்டிற்குத்திரும்பி வரும் பொழுது தன் பாவங்களைக் குறித்த நினைவுகளோடு வந்தான். நாமும் பரம பிதாவினண்டைக்கு நமது பாவங்களைக் குறித்து மாத்திரம் எண்ணிக்கலங்க வாய்ப்புண்டு. ஆனால் பரம பிதாவின் வீட்டிற்குள் நுழைந்ததும் நாம் ஆசீர்வதிக் கப்படவேண்டும் என்று எண்ணும் அவருடைய ஆழமான கரிசனை யைக்காண்கிறோம். அவர் நமக்காக ஆயத்தப் படுத்தியிருக்கிறவை களையும், நாம் காணமுடிகிறது. (லூக்கா 15:22-24).

ரூத்தினுடைய பிரச்சினைகளை தேவனுடைய பிரச்சனை களாக போவாஸ் ஏற்றுக்கொண்ட பிறகு அவனால் இளைப்பாற முடியவில்லை. பிரச்சினைகளைக் கூட்டுவதே அல்லாமல் குறைப்பதற்கு ரூத்திற்கு தெரியாது. அவ்வண்ணமே தேவனும் அவருடைய பிரசன்னத்தில் அவருக்குள் நம்மை இளைப்பாறுதல் கிடைக்கும் வரை ஓய்ந்திருக்கவில்லை. ஆனால் அது கிறிஸ்துவானவரை கனப்படுத்தும் விசுவாசத்தினாலே நடைபெறும்.

நாம் அவருக்குச் சித்தமானதைச் செய்தால் நமது உள்ளத்தின் வாஞ்சைகளை அவர் நிறைவேற்றுவார். அக்காரணத்தை

முன்விட்டே போவாஸ் ரூத்தின் வாஞ்சைகளை நிறைவேற்ற விரும்பினான். அவ்வன்பே அவனுடைய கிரியைகளுக்கு "ஓர் உந்துதலாக அமைகிறது." கிறிஸ்துவும் சபையில் அன்பு கூர்ந்து தாம் அதைத்திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து, பரிசுத்தமாக்குகிறதற்கும் கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும், பிழையற்றதுமாய் மகிமையுள்ள சபையாக அதைத் தமக்குமுன் நிறுத்திக்கொள்வதற்கும் தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார்."

## அத்தியாயம் - 4

# பட்டண வாசல்களும், பத்து மூப்பர்களும்

போவாஸ் பட்டண வாசலில் போய் உட்கார்ந்துகொண்டிருந்தான். அப்பொழுது போவாஸ் சொல்லியிருந்த அந்தச்சுதந்தரவாளி அந்த வழியே வந்தான். அவனை நோக்கி ஓய் என்று பேர் சொல்லி அழைத்து இங்கே வந்து உட்காரும் என்றான். அவன் வந்து உட்கார்ந்தான். அப்பொழுது அவன் பட்டணத்து மூப்பரானவர்களில் பத்து பேரை அழைத்து இங்கே உட்காருங்கள் என்றான் அவர்களும் உட்கார்ந்தார்கள்.

தேவன் வாசஞ்செய்யும் இடம் தேவனுடைய நகரம் எனப்படும் *(சங்கீதம் 87:3)* ஆனால் அது தேவனுடைய ஆலயம் அல்ல. தேவன் தேவாலயத்தில் வாசம் பண்ணுகிறார். அத்தேவ ஆலயம் தேவனுடைய நகரத்திலிருக்கிறது. தேவனோடு வசிப்பவர்களும் தேவனுடைய நகரத்தில் இருக்கிறார்கள். அவர்கள் தேவன் வாசஞ்செய்யும் வாசஸ்தலத்தைச் சுற்றிலும் கூட இருக்கிறார்கள். தேவனுடைய பிரசன்னத்தில் தரித்திருக்கும் அவர்களிடையே முழுமையான வாழ்வைக் காண்கிறோம்.

பட்டணத்தில் தாவீதின் வம்சத்தாருடைய சிங்காசனங்களாகிய நியாயாசனங்கள் வைக்கப்பட்டிருக்கிறது. *(சங்கீதம் 122:5)* "உன் தேவனாகிய கர்த்தர் உன் கோத்திரங்கள் தோறும் உனக்குக் கொடுக்கும் வாசல்களில் எல்லாம் நியாயாதிபதிகளையும், தலைவரையும் ஏற்படுத்துவாயாக அவர்கள் நீதியுடன் ஜனங்களுக்கு நியாயத்தீர்ப்பு செய்யக்கடவர்கள் *(உபாகமம் 16:18)* இவ்விடத்தில் பட்டணத்தைக்குறித்துக் கூறப்படுகிறது. இவ்வுலகில் சபையானது அதை நிர்வாகித்து ஆளும் தன்மையை உடையது என்று காண்கிறோம். தேவனுடைய மகிமையை அடைந்த எருசலேமாகிய பரிசுத்த நகரம் *(வெளி 21:10)* சகல பரிபூரண குணநலன்களையும்

பெற்றிருக்கும் ஆயிரவருட அரசாட்சியில் தேவனால் மகிமைப் படுத்தப்பட்ட சபை அதுவே. பன்னிரண்டு என்னும் எண் பயன்படுத்தப்படும் இடங்களில் எல்லாம் திரும்பத்திரும்ப திக்குணநலன்களைக் காண்கிறோம். பன்னிரண்டு எனும் எண் சர்வ வல்லமையை செயல்படுத்துதலுக்கு அடையாளம் ஆகும். இஸ்ரவேலின் 12 கோத்திரங்கள் மீதும் தேவன் இப்படிப்பட்ட சர்வ வல்லமையை செயல்படுத்தினார்.

ரூத்தின் காரியங்களை சீர்படுத்த போவாஸ் பட்டணத்திற்கு போகிறான். ரூத் தன்னை முழுமையாக ஒப்புக்கொடுத்து அமர்ந்திருக்கிறபடியால் இனி அவன் செயல்பட முடியும். மூப்பர்களின் முன்னிலையில் பட்டணவாசலில் அவன் காரியங்களை சீர்படுத்த விரும்புகிறான். போவாஸ் பட்டணவாசலுக்குப் போனான். பட்டண வாசலின் மேல் ஏறிப்போனான் என்று ஆங்கில வேதாகமத்தில் எழுதியிருக்கிறது. பட்டண வாசல் ஓர் உயர்ந்த இடமாகும். அது போரடிக்கும் களத்தைவிட வேறுபாடானது. போரடிக்கும் களத்திற்குள் ஒருவன் இறங்கிச்செல்லவேண்டும்.

## காத்திருந்து காரியங்களைச் செய்பவன்

இதிலிருந்து நாம் ஓர் பெரிய உண்மையைக் கற்றுக்கொள்ள லாம். ரூத்தை முதல் முறையாகக் கண்டவுடனேயே அவனுடைய காரியங்களைச் சீராக்க அவன் பட்டணவாசலுக்குப் போகவில்லை. ஒருபடி வாற்கோதுமையை அவன் தூத்தக்க நிலைமைக்கு அவள் வரும்வரை காத்திருந்தான். ஏனெனில் அவனுடைய மரணத்தோடு தன்னை இணைத்துக்கொள்ளும் நிலைமைக்கு ஒப்பான இடத்தில் அவள் அதிக நேரம் தங்கியிருந்தாள்.

அரைகுறை மனமாற்றத்தோடு சபைக்குள் கடந்து வருபவர்களால் மனவேதனையும் மாறாக பிரச்சினையும் உண்டாகிறதல்லவா. ரூத்தின் புத்தகத்திலுள்ள மொழிமுறையை பயன்படுத்துவோமேயானால் அப்படிப்பட்டவர்கள் போவாஸின் கையில் இருந்து ஒரே ஒருபடி கோதுமையை மாத்திரம் வாங்கியிருக்கிறார்கள்.

நாம் முழுமையான ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ள பட்டண வாசலுக்குதான் போகவேண்டும். அங்கே மூப்பர்கள் உண்டு. இவ்வுலகில் ஆவிக்குரிய காரியங்களை தீர்மானிக்க

தேவனால் ஏற்படுத்தப்பட்ட ஒரு அமைப்பே சபை ஆகும்.

போவாஸ் பட்டணத்து மூப்பர்களிடத்திலே தன் காரியத்தைச் சொல்ல விழைந்த போதிலும் அவன் அதிகாரத்தோடே பேசினான். தன் காரியங்களுக்கு அவனே வழிகாட்டுகிறான். நியாயாசனங்களை தேவன் ஏற்படுத்தியிருப்பினும் எங்கே இரண்டு அல்லது மூன்று பேர் அவர் நாமத்தில் கூடியிருக்கிறார்களோ அவர்கள் மத்தியிலே அவர் இருப்பார். *(மத்தேயு 18:17-20; 1 கொரி 5:4, 13)* அவர் இருக்கும் இடத்தில் அவருக்குத்தான் அதிகாரமுண்டு. ரூத்தின் புத்தகத்தில் காணும் அப் பத்து மூப்பர்களின் மனநிலையே நமக்குத் தேவை. நாம் அவர் கூறுவதை கவனித்துக் கேட்டு அவருடைய முடிவுகளுக்கு ஒத்துக் கொள்ளுகிறவர்களாகவும் அவைகளுக்கு சாட்சி சொல்லுகிறவர்களாகவும் இருக்க வேண்டும்.

## நியாப்பிரமாணமாகிய மற்றொரு சுதந்திரவாளி

"போவாஸ் சொல்லியிருந்த சுதந்திரவாளி அவ்வழியாக வந்தான்." இவன் ரூத், நகோமியின் காரியங்களில் அக்கரை காட்டவில்லை. ரூத்தின் காரியத்தைக் குறித்து அக்கரைகொள்ளும்படி போவாஸ் கேட்டுக் கொள்கிறான். கிறிஸ்துவானவரின் கிருபை, சிலுவை மரணத்திற்குப்புறம்பே யாரையாவது இரட்சிக்க முடியுமா? ரோமர் 2:6, 7ன்படி "சோர்ந்து போகாமல் நற்கிரியைகளைச் செய்து மகிமையையும், கனத்தையும், அழியாமையையும் தேடுகிறவர்களுக்கு நித்திய ஜீவனை அளிப்பார். ஆனால் இந்த நியாயப்பிரமாணமாகிய ஏட்டுச்சுரைக்காய்கறிக்கு உதவாதே. எசேக்கியேல் 18;20, 28ல் நற்கிரியைகளைச் செய்கிறவர்களுக்கான பிரதிபலனைக் குறித்தும் கூறப்பட்டுள்ளது.

ஆனால் கிருபையின் சுவிசேஷம் இப்படிப்பட்டதல்ல. நாம் விசுவாசத்தால் நீதிமான்களாக்கப்படுகிறோம். மேற்கூறிய வசனங்களோ கிரியையால் ஒருவன் அடையும் இரட்சிப்பைக்குறித்துக் கூறுகின்றன. இங்கு கிருபையும், நியாயப்பிரமாணமும் கலந்திருப்பதைக் காணலாம். இஸ்ரவேலர் பொன்கன்றுக்குட்டியை வழிபட்டபோது தேவன் அவர்களிடம நடந்து கொண்ட முறை இங்கே குறிப்பிடத்தக்கது. மோசே தேவனுடைய விரலால் எழுதப்பட்ட கற்பலகைகளை உடைத்துப் போடுகிறான். நியாயப்பிரமாணமும் கருணையும் கலந்திருப்பினும், அது கிரியைகளால் உண்டாகும் இரட்சிப்பையே போதிக்கிறது. இது சுவிசேஷத்திற்கு முரணானது. அது கிரியைகளினால்

உண்டாயிருந்தால், அது கிருபையாயிராது? அப்படியல்ல என்றால் கிரியையானது கிரியையல்லவே? (ரோமர் 11:6). நியாயப்பிரமாணம் இஸ்ரவேலருக்குதான் கொடுக்கப்பட்டது. இஸ்ரவேலின் காணியாட்சிக்குப் புறம்பானவர்களுக்கு அது உரித்தானதல்ல. ஆனால் நியாயப்பிரமாணத்தின் கடமைகள் மனுக்குலம் அனைத்திற்கும் உரியவை. நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளுவதற்கு மனிதனுக்கு பலம் இருக்குமேயானால் தேவன் அவனுடைய அக்கிரமங்களை நினைவு கூறமாட்டார். நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ள அவனுக்கு பலம் இருக்குமேயானால் தேவனுடைய நியாயத்தீர்ப்பில் இருந்தும் அவன் தப்புவிக்கப்படமுடியும். (எசேக்கியேல் 18:22). போவாஸைப் பார்க்கிலும் நெருங்கின உறவின் முறையான் இதற்கு நிழலாக அமைகிறான்.

## கிருபையால் உண்டாகும் இரட்சிப்பு

ஆனால் மனிதனுக்கு நன்மை செய்வதற்கான வல்லமை இல்லை. அவன் கிருபையால் மாத்திரம் இரட்சிக்கப்பட முடியும். அவனுக்கு நியாயப் பிரமாணமல்ல! கிறிஸ்துதான் தேவை. அகந்தை உள்ள மனம் அதை ஏற்றுக் கொள்வதில்லை. எனவேதான் தேவன் முதன்முதலாவதாக நியாயப்பிரமாணத்தைக் கொடுத்தார். எந்த மனுஷனும் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே தேவனுக்கு முன்பாக நீதிமானாக்கப்படுவதில்லை. (ரோமர் 3:20) நியாயப்பிரமாணம் யாரையும் இரட்சிக்க முடியாது என்னும் நிலைமை வந்தபோது கிருபை வெளிப்பட்டது. தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துவின் வடிவில் கிருபை வெளிப்பட்டது. "கிருபையும் சத்தியமும் இயேசு கிறுஸ்துவின் மூலமாய் உண்டாயின." (யோவான் 1:17)

நமது பாவ நிலைமையைக்குறித்து உணர்வு உண்டாகும் போது நாம் நியாயப்பிரமாணத்தைப் பிடித்துக்கொள்ளுகிறோம். பாவத்தின் பிடியிலிருந்து விடுதலை பெறவும் விரும்புகிறோம். இப்பயங்கரமான போராட்டத்தின் சித்திரத்தைதான் ரோமர் 7ம் அதிகாரம் நமக்குத்தருகிறது. "ஐயோ! நிர்ப்பாக்கியமான மனுஷன் நான் எனக்கதறும் அளவிற்கு தேவன் அப்போராட்டத்தை" தேவன் நம் வாழ்வில் அனுமதிக்கிறார். இந்நிலைமைக்குப்பிறகு "எது" என்னை விடுதலையாக்கும் என்று கதறாமல் ''யார்'' என்னை விடுதலையாக்குவார் என்று கேட்கிறோம். அப்போதுதான் தேவன் நமக்கு சரியான மீட்பரைக் காட்டுகிறார். "நம்முடைய கர்த்தராகிய

இயேசு கிறிஸ்து மூலமாய் தேவனை ஸ்தோத்தரிக்கிறேன்." (ரோமர் 7:24-25).

எனவே போவாஸ் ரூத்தின் காரியத்தில் குறுக்கிடுகிறான். மீட்பதற்கு உரிமையுள்ள மற்றொருவனையும் அழைக்கிறான். அம்மனிதன் ரூத்தை மீட்கமுடியாது எனக்காண்பிப்பதற்காகவே அவ்வாறு செய்கிறான். ரூத்தையும், நகோமியையும் போவாஸ் ஆழமாக நேசித்தான் ஆனால் மற்றொருவன் அப்படி நேசிப்பவன் அல்ல. போவாஸ் அவன் முன் தன் பிரச்னைகளை எடுத்துரைக்கிறான். சபையைத் தம்மோடு இணைத்துக்கொள்வதற்காக ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார். ஏனெனில் அவர் சபையை அவ்வளவாக நேசித்தார். நியாயப் பிரமாணத்திற்கு அன்பு கிடையாது. அது அன்பாகவே இருப்பவரை வெளிப்படுத்தவும் மாட்டாது. (1 யோவான் 4:8, 16) கிருபை நீதிக்கு விரோதமாக செயல் படுவதில்லை. அவை இரண்டும் முரணானவைகளும் அல்ல எனவே தான் போவாஸ் பத்து மூப்பர்களை சாட்சியாக நிறுத்தும்படி அழைத்துக்கொண்டு போனான்.

பத்துக் கட்டளைகளும் நியாயபிரமாணத்தின்சாயலாகும் இருவரையும் இரட்சிக்க முடியாது என்பதற்கு அவை சாட்சி பகருகின்றன. இப்பத்து கட்டளைகளை மட்டும் சாட்சியாக நிறுத்துவோமேயாயின் ரோமரில் கேட்கப்படும் கேள்விகளுக்கு எவ்வளவு எளிதாக பதில் கிடைக்கும் இப்பத்துக் கட்டளைகளை மட்டும் வாழ்வின் அடிப்படையாகக் கொண்டால் நாம் எவ்வளவு நம்பிக்கையற்ற பாவிகள் என்று விளங்கும். ஆனால் நம்மில் அனேகர் நியாயப்பிரமாணம் எதிர்பார்க்கும் நீதியை தேவன் வற்புறுத்துவதில்லை என்று தவறாக எண்ணி விடுகிறோம். மெய்யாகவே தேவனுடைய கிருபைக்கும், இரக்கத்திற்கும் அளவே கிடையாது தான்! அவர் நீடிய பொறுமையுடையவர் எனினும் தமது பரிசுத்த நீதியை நிலைநிறுத்தாமல் விடுவதில்லை. அவர் தம்மைத்தாமே மறுதலிப்பதில்லை.

## ஓர் உரையாடல்

அப்பொழுது அவன் அந்தச் சுதந்திரவாளியை நோக்கி "எலிமெலேக்கு என்னும் நம்முடைய சகோதரனின் நிலத்தின் பங்கை மோவாப் தோசத்திலிருந்து திரும்பி வந்த நகோமி விற்கப்போகிறாள். ஆகையால் நீர் ஊராருக்கு முன்பாகவும் என் ஜனத்துக்கு

முன்பாகவும் வாங்கிக்கொள்ளும் படி உமக்கு அறியப்பண்ண வேண்டுமென்றிருந்தேன். நீர் அதை சுதந்திர முறையாக மீட்டுக்கொள்ள மனதாயிருந்தால் மீட்டுக்கொள்ளும் அதை மீட்டுக் கொள்ள மனதில்லாதிருந்தால் நான் அதை அறியும்படி எனக்குச் சொல்லும் உம்மையும் உமக்குப் பின்பு என்னையும் தவிர அதை மீட்கத்தக்கவன் வேறொருவனும் இல்லை என்றான். அதற்கு அவன் "நான் அதை மீட்டுக் கொள்ளுகிறேன்" என்றான். (வ 34).

## மூன்று வினாக்களும் விடைகளும்

ரூத்தின் மீட்பு மெய்யாகுமுன் மூன்று வினாக்களுக்கு விடையளிக்கப்படவேண்டும் முதலாவதாக மீட்பதற்கு உரிமையுள்ள மீட்பன் உண்டா? எவ்வளவு பணம் படைத்தவன் ஆயினும் ரூத்தின்மீதும், நகோமியின் மீதும் அதிக பாசம் உள்ளவனாயினும் அவன் உறவின் முறையானாக இல்லாவிட்டால் அவளை மீட்க முடியாது? ஆகையால் பிள்ளைகள் மாம்சத்தையும், இரத்தத்தையும் உடையவர்களாய் இருக்க அவரும் உங்களைப்போல மாமிசத்தையும், இரத்தத்தையும் உடையவர் ஆனார். எல்லாரையும் மீட்கும் பொருளாக தம்மைத்தாமே ஒப்புக்கொடுக்க மனுஷனானார். (I தீமோத்தேயு 2:5,6) ஆனால் நாம் வசனம் 2ல் கண்டபடி தேவன் நியாயப்பிரமாணத்தை முதலாம் மீட்பராக நியமித்திருந்தார். ஆகிலும் ஆவிக்குரிய சரீரம் முந்தினதல்ல. ஜென்ம சரீரமே முந்தினது (I கொரி 15:46).

இரண்டாவதாக அந்த மீட்பன் ரூத்தை மீட்க திறன்படைத்தவன் தானா ரூத்தை மீட்பதற்கான செல்வம் அவனிடத்தில் இல்லாவிட்டால் அவளை மீட்கவேண்டும் எனும் வாஞ்சையும், விருப்பமும் விருதாவாகுமே. மற்ற உறவின் முறையான் வயலை மீட்க மனதுள்ளவனாய் இருப்பினும் வாரிசை மீட்க மனதற்றவனாய் இருந்தான். ஆனால் தனம் பெருத்தவனாகிய (ரூத் 2:1) போவாஸ் கிரயத்தைச் செலுத்த திறன் உள்ளவனாய் இருந்தான். நம்மை மீட்பதற்காக ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து மிகப்பெரிய விலைக்கிரயத்தைச் செலுத்தினாரே ஒருவனாவது தன் சகோதரனின் அழிவைக்காணாமல் இனி என்றைக்கும் உயிரோடு இருக்கும்படி எவ்விதத்தினாலாவது அவளை மீட்டுக்கொள்ளவும் அவனிமித்தம் மீட்கும் பொருளை தேவனுக்குக் கொடுக்கவும் கூடாதே. அவர்கள் ஆத்தும மீட்பு மிகவும் அருமையாக இருக்கிறது. அது ஒரு போதும் முடியாது. "நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையை அறிந்திருக்கிறீர்களே! அவர் ஐசுவரியம் உள்ளவராய் இருந்தும் நீங்கள் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரியவான்களாகும்

படிக்கு உங்களினிமித்தம் தரித்திரர் ஆனாரே" (2 கொரி 8:6) மத்தேயு 13.46ல் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து செலுத்த வேண்டிய மிகப்பெரிய விலைகிரயத்தைக்குறித்த குறிப்பைக் காண்கிறோம். அந்த வியாபாரி தனக்குண்டான எல்லாவற்றையும் விற்று அந்த முத்தை விலைக்கு வாங்குகிறான். அவ்வாறே ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும் தம்மைத்தாமே வெறுமையாக்கினார். (பிலிப்பியர் 2:6, 8) தாம் தேவனுடைய குமாரன் எனும் பதவியை விட்டுவிட்டு மகாபரிசுத்தமான அவர் நமக்காகப்பாவமானார். தேவனால் கைவிடப்பட்டார். இறுதியில் தம் ஜீவனை விட்டார். சபையை மீட்பதற்காக தமக்குண்டான "எல்லாவற்றையும் அவர் விற்றார். ஆ! எவ்வளவு பெரிய இரட்சகர் அவர்.

மூன்றாவதாக அந்த மீட்பன் மீட்பதற்கு மனதுள்ளவனாக இருந்தானா? ரூத்தை மீட்பதற்கு போவாஸுக்கு உரிமையும், திறமையும் இருக்கலாம். எனினும் அவனுக்கு மனமில்லை எனில் பயனில்லையே. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சபையை மீட்பதற்கு மனதுள்ளவராய் இருந்தார். வேதாகமம் இக்காரியத்தைக் குறித்து அனேக காரியங்களை அளிக்கிறது. வேதாகமம் திரும்ப திரும்ப ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் "அன்பை" க்குறித்து பேசுகிறது. நம்மீதுள்ள பரிதாபம் அல்ல. அவருக்கு நம்மீதுள்ள அன்பே அவரை ஏங்க வைத்தது. அவரது அன்பு அனைத்தையும் ஜெயித்தது. பாவத்தை வெறுக்கும் பரிசுத்த தேவனின் நியாயத்தீர்ப்பாகிய மரணத்தையும் ஜெயித்தது. உன்னதப்பாட்டு 2:6, 7) நியாயப்பிரமாணத்திற்கு அன்பென்றால் என்னவென்றே தெரியாது அதற்கு "நீதி" மட்டுமே தெரியும் எனவே அது நம்மை மீட்பதற்கு மனமற்றிருந்தது.

மேசோரெடிக் மொழிப்பெயர்ப்பின் படி "நகோமி ஏற்கனவே வயலை விற்றுவிட்டதாக'' கூறுகிறது. ஆனால் அனேக மொழிப்பெயர்ப்பாளர்கள் விற்கிறாள் என்று நிகழ்காலத்தைப் பயன்படுத்துகின்றனர். இதுதான் பொருத்தமாகவும் அமைகிறது (வ 5,9) எபிரேய மொழிப்பெயர்ப்பில் ஒரே ஒரு உயிரெழுத்து மாத்திரமே வேறுபடுகிறது. (மோகெரா மோகெரா) எபிரேய மொழியில் உயிரெழுத்துக்கள் இல்லாமல் வரிவடிவம் இடம் பெற்றது. அனேக நூற்றாண்டுகளுக்குப்பிறகு உயிரெழுத்துக்கள் சேர்க்கப்பட்டன. உயிரெழுத்துக்கள் மாறும்போது "காலங்களும்" மாறும் தியத்தீரா சபை அதாவது ரோம கத்தோலிக்க சபை கிறிஸ்தவ "நிலைமையை விற்று விட்டது. பரலோகப்பண்பை பூலோக நிலைமைக்கு பண்டமாற்று செய்து விட்டது. சபைக்குப் புறம்பே இரட்சிப்பு இல்லை எனும் வேறான போதனையை போதித்தபோதிலும் ஒரே

இருக்கும் யூதனுக்குச் சமமாகி விட்டது. கிறிஸ்தவர்கள் என்று தங்களை அழைத்துக்கொள்பவர்களை தேவன் அங்கிகரிக்க முடியாத நிலைமையில் இருக்கிறார். அவர்கள் உயிருள்ளவர்கள் என்று பெயர் பெற்றிருந்தும் செத்தவர்களாய் இருக்கிறார்கள். விசுவாசிகளுக் கிடையே காணப்படும் அநேக பிரிவினைகள் அவர்களது மாமிச சுபாவத்தைக் காட்டுகின்றன. பழைய மனிதனின் சுபாவத்தை வெளிப்படுத்தும் செயல் அவை.(I கொரி 1:10, 13;-3:3-5) " அனைத்து சபைகளும் தேவனுடைய ஏதோ ஒரு மகிமையை வெளிப்படுத்துகின்றன. ஏனெனின் ஒரே ஒரு சபை அதைச் செய்ய முடியாது"— "அவை அனைத்தும் ஒரு சக்கரத்தின் ஆரைக்கால்கள் போன்றவை. அவை அனைத்தும் சக்கரத்தின் மையப்பகுதியோடு இணைக்கப்பட்டுள்ளன.

## நியாயப்பிரமாணமும், அடிமைத்தனமும்

கடைமையின் தத்துவமாகிய நியாயப்பிரமாணம் சுதந்திரத்தை மீட்க முடியும். அது அப்படிச் செய்யவும் விரும்புகிறது. மனிதனுடைய மனசாட்சியில் சத்தியத்தை வற்புறுத்தி உட்புகுத்தி அதற்கு அதைக் கீழ்ப்படியச் செய்யமுடியும். அடிமைத்தனத்தின் நுகத்துக்கு உட்படாமல் சுயாதீன நிலைமையிலே நிலை கொண்டிருக்கச் செய்ய முடியும். (கலாத்தியர் 5:1) கிறிஸ்துவோடு உன்னதத்திலே உட்கார முடியும் என்றுகூட அது சொல்லக்கூடும். எனினும் மறுபடி பிறந்த ஒருவர் நியாயப்பிரமாணத்திற்கு கீழ்ப்பட்டவர்கள் அடிமையின் நிலைமையில் அல்லவா இருக்கிறார்கள். (கலாத்தியர் 3:23, 4,7) மேலும் இவ்வுலகில் ஜென்மசுபாவம் உள்ள மனிதனின் நிலைமையை நாம் தெரிந்து கொண்டோமேயாயின் (ரோமர் 7, 6) செயல் முறையில் கிறிஸ்து வோடே எழுப்பப்பட்டு உன்னதங்களிலே அவரோடே கூட எப்படி உட்கார முடியும் (எபேசியர் 2:5-6) ஒருவன் தன்னை கிறிஸ்தவன் என்று ஆயிரம் முறை அழைத்துக்கொண்டாலும் அவன் பாவத்துக்கு அடிமைப்பட்டவனாய் இருந்தால் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் அவயம் ஆவது எப்படி? ஏனெனில் பாவத்திற்கு அடிமைப்பட்டவன் சபைக்கு உட்பட்டவனும் அல்ல பரிசுத்த ஆவியானவரால் முத்திரையிடப்பட்டவனும் அல்ல.

## வயலையும், வாரிசையும் மீட்க வேண்டுமே!

அப்பொழுது போவாஸ் நீர் நகோமியின் கையிலே அந்த வயல் நிலத்தை வாங்குகிற நாளிலே மரித்தவனுடைய சுதந்திரத்தில் அவன் பேரை நிலை நிற்கப்பண்ணும் படிக்கு அதை மரித்தவன்

மனைவியாகிய மோவாபிய ஸ்திரியான ரூத் கையிலும் வாங்க வேண்டியது என்றான். அப்பொழுது அந்த சுதந்திரவாளி; நான் என் சுதந்திரத்தைக் கெடுக்காதபடிக்கு நான் அதை மீட்டுக்கொள்ள மாட்டேன். நான் மீட்கத்தக்கதை நீர் மீட்டுக்கொள்ளும்; நான் அதைமீட்டுக் கொள்ளமாட்டேன் என்றான்.

இங்கே காரியத்தின் கடைத்தொகைக்கு வருகிறோம். வயலை மீட்பது மட்டுமல்ல வாரிசையும் உருவாக்கவேண்டும். தேவன் சட்டபூர்வமாக சுதந்திரத்தை அனுபவிக்க யாரை வாரிசாக எழுப்ப விரும்பினாரோ அவன் எழுப்பப்படவேண்டும். அந்த சுதந்திரத்திற்குரிய உரிமையாளன் இறந்து போனானே. (லேவி 25:23; வெளிப்பாடு 2:5; வெளிப்பாடு 5:1) வாரிசு எழுப்பப்படவேண்டுமானால் அது மோவாபிய ஸ்திரியாகிய ரூத்திற்கு நியாயப்பிரமாணம் பொருந்துமா? ஏனெனில் நியாயப்பிரமாணத்தின்படி மோவாபியர் 10 தலைமுறைவரை தேவனுடைய சபைக்கு உட்படலாகாது ரூத்தின் மூலமாக வாரிசு எழுப்பப்பட்டால் நியாயப்பிரமாணம் பெலவீனமடைந்து அதின் வல்லமையும், மகிமையும் இழந்து போகுமே. எனவே ரூத்தை மணக்கும் மீட்பன் தன்னுடைய சுதந்திரத்தையே கரைப்படுத்திக்கொள்ளுகிறான்.

## இரு தத்துவங்கள்

வேதாகமத்திலேயே கிருபையின் தத்துவம், பொறுப்பின் தத்துவம் என இருதத்துவங்களைக் காண்கிறோம். வேத வசனம் இவ்விரண்டையும் ஒன்றாக இணைப்பதே இல்லை. ஆனால் நாம் நம்முடைய வசதிக்காக இவ்விரண்டையும் இணைக்கிறோம். அல்லது இணைக்க முயலுகிறோம். கிருபையானது தேவனுடைய செயலாய் இருக்கிறபடியால் அது உறுதியானதாகவும் ஊன்ற கட்டப்பட்டதாகவும் இருக்கிறது. நாம் அவரது கிருபையின் மேல் பாதுகாப்பாக பராமரிக்கப்பட்டு நிற்க முடியும். "நாம் அனைவரும் சீயோனில் தேவனுக்கு முன் வெளிப்படுவோம்" ஆனால் பொறுப்பைக் குறித்த கேள்விகள் வரும்போது மனிதன் தடுமாறி விழுகிறான். தேவன் தந்த ஒரே ஒரு கட்டளையைத் தான் ஆதாம் மீறினான். தேவனுடைய ஆசீர்வாதங்களை நிரந்தரமாக சுதந்தரித்துக்கொள்ளும் படி மற்ற ஜாதிகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட இஸ்ரவேலர் அவர்களுக்கென்று தேவன் நல்கிய நியாயப்பிரமாணத்தை மீறினர். சபையானது ஆதி அன்பை விட்டபடியால் தேவன் தியத்தீரா சபையை நியாயம் விதிக்கவேண்டி

இருந்தது. மறுமலர்ச்சி நாட்களிலே "மீந்திருக்கிறவர்களின்" கூட்டத்திற்கு தேவன் தம்முடைய சாட்சிக்கென்று ஒரு புது நிலைமையைத் தந்தாலும் வெகுவிரைவில் அவர். "நீ உயிருள்ளவன் என்று பேர் கொண்டிருந்தும் செத்தவனாயிருக்கிறாய்" (வெளி 3:1) எனக்கூறவேண்டிவந்தது.

"அந்தரத்திலுள்ளவைகளை ஆதிமுதற்கொண்டும் இன்னும் செயல்படாதவைகளை பூர்வகாலம் முதற்கொண்டும் அறிவிக்கிற தேவன்" (ஏசாயா 46:10) வெளி 23 அதிகாரங்களில் சரீரமாகிய சபையின் சரித்திரத்தை தீர்க்கதரிசனம் முறையில் அறிவிக்கிறார். இஸ்ரவேலின் சரித்திரம் எப்படிப்பட்டதாக இருக்கும் என்பதைக் குறித்தும் அவரால் கூற முடிந்தது. (உபாகமம் 31:(6)32:43) சபையின் சரித்திரத்தையும் இத்தீர்க்கதரிசன முறையிலேயே அவர் அறிவிக்கிறார்.

## சபைகளைக் குறித்த சத்தியங்கள்

முதல் 3 சபைகளான எபேசு, சிமிர்னா, பெர்கமுசபைகள் தேவனால் பிரித்தெடுக்கப்பட்ட சுபாவத்தை உடையவையாக யிருந்தன. இம்மூன்று சபைகளும் 3 விதமானக்காலங்களை காட்டுகின்றன. எபேசு சபை வெளிப்படுத்தின விசேஷம் வெளிப்படுத்தப்பட்ட காலத்தையும் மற்ற இரு சபைகளும் விசுவாசிகள் அதிகமாக நெருக்கப்பட்ட காலத்தையும் பின்னர் ரோமப்பேரரசர்களால் ஒரு மதம் எனும் நிலையில் போற்றிப்பாதுகாக்கப்பட்ட காலத்தையும் காட்டுகின்றன. விளக்குத்தண்டுகளின் நடுவே உலாவும் நியாயாதிபதியாக அவர் இம்மூன்று சபைகளுக்கும் தன்னை வெளிப்படுத்துகிறார். வெளிப்பாடு 1ல் இதைக் காண்கிறோம். சபையின் தூதனானவர் அங்கே தனியாக இருக்கிறார். இதர 3 சபைகளின் காரியத்தில் அப்படியல்ல. அங்கே தேவனுடைய தூதனானவர் தனிப்பட்ட முறையில் அடையாளம் கண்டு கொள்ள முடியாத நிலைமையில் வெளிப்படுகிறார். தியத்தீரா போப்பின் அதிகாரம் கலம்பினமான பண்புகளைக்கொண்டது. ஆரம்ப நிலையில் அதுவும் பிரித்தெடுக்கப்ப்ட்ட "ஒரே சபையை போல தோற்றமளித்தது. ஊழல் அதிகரித்தபடியால் தேவன் அதைப்புறக்கணித்துவிட்டு மறுமலர்ச்சி நாட்களிலே புதிய ஒரு காரியத்தைச் செய்தார். எனினும் அது கத்தோலிக்க சபையில் சிலபண்புகளை கொண்டதாக இருந்தபடியால் அது சபையின் முழுமையை வெளிப்படுத்த முடியவில்லை. எனவேதான் சர்தை, பிலதெல்பியா, லவோதிக்கேயா

சபைகள் சாட்சி பகரும் தன்மை உடையவைகளாயிருந்தும் தேவனால் அழைக்கப்பட்டு வேறு பிரிக்கப்பட்ட பண்பற்றவை களாகக் காணப்படுகின்றன.

ஆனால் சர்தை சபையும் தன்னைக் கெடுத்து கொண்டது. தேவனால் புறக்கணிக்கப்படும் படியான தியத்திரா சபையின் ஊழல் அதில் காணப்படவில்லை என்பது மெய்தான். அதில் தீமைகளும் அதிகமாக இல்லை. எனினும், அதில் ஜீவன் இல்லை. அது பெற்றுக்கொண்டவைகளையும், கேட்டவைகளையும் மறந்துவிட்டது. சபையானது தன் பொறுப்புகளில் இருந்து விழுந்துவிட்டது. சகலவற்றையும் தாறுமாறாக்கி கெடுத்துப்போட்டது. இப்படி இருக்க முதல் மீட்பனில் வெளிப்படும் பொறுப்பின் தத்துவம் என்ன செய்யவியலும்? அது சர்தைசபையையும் நியாயம் தீர்த்து தனியே நிறுத்திவிடுகிறது. மரணத்திலிருந்து ஜீவனைக்கொண்டு வர அதினால் கூடாது. விற்கப்பட்டசபையின் சுதந்தரத்தில் இருந்து சுதந்திரவாளியை எழுப்ப அதினால் கூடாது. "நான் என் சுதந்திரத்தைக் கெடுக்காத படிக்கு நான் அதை மீட்டுக்கொள்ள மாட்டேன் எனக்கூறி விடுகிறது. (ரூத் 4:6) நியாயப்பிரமாணத்தை வழங்கிய மோசே இஸ்ரவேலரை வனாந்திரவழியாய் பாதுகாப்புடன் அழைத்துச் செல்ல முடியவில்லை. ஆசாரியத்துவம் தான் அப்பணியைச் செய்ய முடிந்தது (எண்ணாகமம் 16. 44-50 காண்க) அவ்வண்ணமாகவே விற்கப்பட்ட சுதந்திரத்தை மீட்கவோ வாரிசை எழுப்பவோ பொறுப்பின் தத்துவத்தினால் முடியாது. பாதாளத்திற்கும், மரணத்திற்கும் உரியதிறவுகோல்களை உடையவர். (வெளி 1:18) மாத்திரமே அதைச்செய்யமுடியும். ஏனெனில் மரித்தோர் தேவனுடைய சத்தத்தைக் கேட்கும் காலம் வரும்."(யோவான் 5:25) அவர் மாத்திரமே மரணத்திலிருந்து ஜீவனைக்கொண்டு வர முடியும். அவர் மரணத்திலிருந்து உயிர்த்தெழச் செய்து ஜீவனைத்தர முடியும். (ரோமர் 8:1, 3) மீட்கிறதிலும், மாற்றுகிறதிலும் சகல சத்தியத்தையும் உறுதிப்படுத்தும் படிக்கு இஸ்ரவேலிலே பூர்வகால வழக்கம் என்னவென்றால் ஒருவன் தன் பாதரட்சையைக் கழற்றி மற்றவனுக்குக் கொடுப்பான். இது இஸ்ரவேலிலே வழங்கின உறுதிப்பாடு. அப்படியே அந்தச் சுதந்திரவாளி போவாஸை நோக்கி நீர், அதை வாங்கிக்கொள்ளும் என்று சொல்லி தன் பாதரட்சையைக் கழற்றிப் போட்டான். அப்பொழுது போவாஸ் மூப்பரையும் சகல ஜனங்களையும் நோக்கி எலிமெலேக்குக்கு இருந்த எல்லாவற்றையும் நகோமியின் கையிலே வாங்கிக்கொண்டேன். என்பதற்கு இன்றையதினம் நீங்கள் சாட்சி. இதுவுமல்லாமல் மரித்தவனுடைய சகோதரருக்குள்ளும், ஊராருக்குள்ளும் அவனுடைய பேர் அற்றுப்

போகாமல் மரித்தவனுடைய சுதந்திரத்திலே அவன் பேரை நிலைநிறுத்த நான் மக்லோனின் மனைவியாயிருந்த ரூத்தை எனக்கு மனைவியாகக்கொண்டேன். அதற்கும் இன்றைய தினம் நீங்கள் சாட்சி என்றான்.

## பாதரட்சையின் பொருள்

கிட்டின சுதந்திரவாளி வெளிப்படையாக ரூத்தை மீட்க முடியாது என்று அறிக்கையிட்டான். செருப்பு அதிகாரத்திற்கும் உடைமைக்கும் அடையாளமாக அமைகிறது. *(யோவான் 1:27) யோசுவா 10:24; சங்கீதம் 60:8; 108:9* இவற்றுடன் ஒப்பிட்டுப் பார்க்க) "கிட்டின சுதந்திரவாளிக்கும்" போவாஸுக்கும் இடையே பகைமை இல்லை. பொறுப்பு, கிருபை இவ்விரண்டின் காரியத்திலும் இவை பொருந்தும். அவை இரண்டும் எதிர்முனைகள் ஆனாலும், தம்மில் வெறுப்பைக் காட்டுவதில்லை. இரு வேறு பட்ட நிலைகளில் அவை செயல்படுகின்றன. தேவனுடைய நீதியும், தேவனுடைய அன்பும் ஒருக்காலும் தமக்குள் போரிடுவதில்லை. ஒவ்வொன்றிற்கும் அதற்குரிய பொறுப்புண்டு. தேவன் தன்னிடம் ஒப்புவித்ததை செய்ய வேண்டிய சகலவற்றையும் பொறுப்பு காட்டுகிறது. கடமை தவறி விழுந்து போன மனிதனுக்கு தேவன் எப்படிப்பட்டவராய் இருக்கிறார். என்னவெல்லாம் தருகிறார் என்பதை "கிருபை" காட்டுகிறது.

## கிறிஸ்துவுடன் மரிப்பதால் உண்டாகும் நன்மை

"உயிரோடு இருக்கிறவனை நியாயப்பிரமாணம் ஆளுகிறது *(ரோமர் 7:1)* ஆனால் "மரணம்" வரும் போது நியாயப்பிரமாணத்தின் அதிகாரம் ஒழிந்து போகிறது. *(ரோமர் 7:4,6; 6:13,14)* அப்போது தான் மரணத்திலிருந்து ஜீவனைக்கொண்டு வருகிறவரும் மரித்தோரை உயிர்ப்பித்து ஜீவனை தருகிற வருமானவர் கிரியைச் செய்யமுடியும் எனவே தான் நெருங்கின உறவின் முறையான், "நீர் அதை வாங்கிக் கொள்ளும்" என்றான்.

"சர்தை சபைக்கு அதின் பொறுப்பை நினைவூட்டி மனந்திரும்பு" *(வெளி 3:3)* என்று கூறிய அவர் தான் யோவானிடம் நான் மரணத்திற்கும் பாதாளத்திற்கும் உரிய திறவுகோல்களை உடையவராயிருக்கிறேன் என்கிறார் *(வெளி 1:16:18)* அவர் 7 நட்சத்திரங்களை ஏந்திக்கொண்டு 7 குத்துவிளக்குகளின் மத்தியிலே உலாவுகிறவராய் இருக்கிறார் *(வெளி 1:12;16)* அவர் பிலதெல்பியா

சபைக்கு "தாவீதின்" திறவுகோலை உடையவரும் ஒருவரும் பூட்டக்கூடாதபடி திறக்கிறவரும், ஒருவரும் திறக்கக்கூடாதபடி பூட்டுகிறவருமாக வெளிப்படுகிறார். (வெளி 3:7) இத்தகையவரே நமது சபையின் போவாஸ். அவர் அதை மீட்க வல்லமையுள்ளவர். அவர் அதை மீட்பார்.

சர்தைசபை முழுமையாக இழந்து போன நிலையில் இருந்தது. தேவனுடைய நினைவுகளற்ற நிலைமையில் அது காணப்பட்டது. அவனுக்கு தனது நிலைமையோ அல்லது தனிப்பட்ட விசுவாச நிலைமையோ கூட தெரியாது. அவனுக்குத்தெரிந்ததெல்லாம் தனது பாவங்கள் மன்னிக்கப்பட்டன. இவ்வுண்மை கூட அனைவருக்கும் தெரியாது. அது செத்தசபையாக இருந்தது. இப்படி இருக்க அதின் சுதந்திரம் முழுமையாக அற்றுப்போகும் அல்லவா. தனிப்பட்ட முறையில் விசுவாசிகளுக்கும் கூட்டாக சபைக்கும் தேவன் அருளிய அற்புதமான ஆசீர்வாதங்களை இவ்வுலகத்தில் அது அனுபவிக்க முடியாதா? இதற்குரிய பதிலை பிலதெல்பியா சபையின் மீட்பரிடம் காண்கிறோம்.

எலிமெலேக்கு, கிலியோன், மக்லோன் அனைவருக்கும் சொந்தமான அனைத்தையும் போவாஸ் வாங்கிக்கொண்டான். எலிமெலேக்குக்கு உரியவை அனைத்தையும் நான் வாங்கிக் கொண்டேன் என்று மாத்திரம் அவன் சொல்லியிருந்தால் போதுமே. அப்படி கூறியிருப்பின் ஏதோ ஒன்றை இழந்துவிட்ட நினைவு நமக்கு எழலாம். தேவ ஜனத்தின் சுதந்திரத்தை ஒன்றையும் இழந்துவிட போவாஸ் விரும்பவில்லை. சபையின் ஆரம்ப நாட்களில் தரப்பட்ட அனைத்தையும், இடைக்காலத்தில் அது இழந்துவிட்ட அனைத்தையும் அவர் திரும்பத்தர விரும்புகிறார். ரூத்திற்கும், நகோமிக்கும் இதைத்தான் போவாஸ் தரவிரும்பினான். தேவனுடைய வார்த்தை முழுமையானது அத்துடன் ஒன்றையும் கூட்டிச்சேர்க்க முடியாது என்பது மெய் தான். வேதாகமம் புதிய ஏற்பாட்டில் உள்ள வெளிப்பாடுகளோடு முடிந்து விட்டது என்பதும் மெய்தான். எனினும் மோவாபில் சஞ்சரித்த நாட்களில் மோவாபின் விக்கிரக ஆராதனை ரூத், நகோமி மீது செல்வாக்கு செலுத்தியதை மறக்க முடியாது. சபையின் சரித்தரத்தைப் படிக்கும் பொழுது ஆண்டவராகிய இயேசு கிறுஸ்து தேவகுமாரன் அல்ல என்று மறுதலிக்கும் ஏரியரின் கொள்கையும் இவ்வுலகில் பாவமோ, தீமையோ இல்லை என்று வாதிக்கும் பாலஜியளின் கொள்கையும் தனி ஒருமைக்கோட்பாடும், சரீரத்தோடு ஆத்துமாவும் அழிந்து போகும் எனும் கொள்கையும் அதற்குள் ஊடுருவியதைக்

காணவியலும். இப்படிப்பட்ட தவறான கொள்கைகள் உட்புகும் போதெல்லாம் கர்த்தருடைய ஆவியானவர் சத்துருவிற்கு விரோதமாக கொடியேற்றுவதையும் காண முடிகிறது. தேவனுடைய நினைவுகளுக்கும் தவறான போதனைகளுக்கும் இடையேயுள்ள வேறுபாட்டை பகுத்தறிய முடியாமல் தடுமாறும் பொழுது தேவன் தம்முடைய நினைவுகளை வெளிப்படுத்தாமல் இருப்பதில்லை. இப்படிப்பட்ட நன்மையை தேவன் இன்றும் செய்கிறார். தேவனுக்குச் சொந்தமான ஒன்றையும் அவர் இழந்துபோகவில்லை. பலவீனமான சாட்சியானாலும் அதை திரும்ப சபைக்கு தருவதில் நமது போவாஸ் மனம் தளருவதில்லை.

## நடுச்சுவரை நீக்கிய பிறகு

நெருங்கின உறவின் முறையானை ஒதுக்கிய பிறகே போவாஸினால் சுதந்திரத்தை மீட்க முடிந்தது நியாயப்பிர மாணத்தின் கீழ் இருக்கும் வரை நாம் "தேவனுடைய வீடும்", "கிறிஸ்துவின் சரீரமுமாகிய" சபைக்கு உள்ள உன்னத நிலைமையை உணர்ந்து கொள்ள முடியாது. நியாயப்பிரமாணம் நம்மை கிறிஸ்துவினிடத்தில் வழி நடத்துகிற உபாத்தியாய் இருந்தது. (கலாத்தியர் 3.24) நாம் நியாயப்பிரமாணத்திற்கு கீழ்ப்படியும் பொழுது கிறிஸ்துவானவர் சிலுவையில் மரித்து உயிர்த்தெழுந்ததற்கு முன் உள்ள நிலைமைக்கும் பரிசுத்த ஆவியானவர் பொழியப்பட்டதற்கு முன் உள்ள நிலைமைக்கும் வந்து விடுகிறோம். உயிரோடு இருப்பவர்களை நியாயப்பிரமாணம் ஆளுகை செய்கிறது. (ரோமர் 7:1) ஆனால் கிறிஸ்தவர்கள் என்னும் நிலைமையில் கிறிஸ்துவுடனே கூட மரித்தோம் (கொலோசெயர் 2:3) அவர் நம்மை அவரோடேகூட எழுப்பி உன்னதங்களிலே உட்காரவும் செய்தார் (எபேசியர் 2:5:6) பரலோகத்தில் மகிமைப்படுத்தப்பட்ட மனிதனோடு சபையானது இணைக்கப்பட்டுள்ளது. அம்மனுஷகுமாரனே அவளுக்கு தலையாய் இருக்கிறார் (எபேசியர் 1:20-23) நியாயப்பிரமாணத்திற்கு கீழ்ப்பட்ட ஒரு விசுவாசியும் இதை புரிந்து கொள்ளவோ, இச்சத்தியத்தின் ஆழங்களை அறிந்து கொள்ளவோ முடியாது. தான் கிறிஸ்துவுடனே கூட மரித்து அவருடனே கூட எழுப்பப்பட்டிருக்கிறான் எனும் சத்தியத்தை அவன் புரிந்து கொள்ளும் போது, அவன் நியாயப்பிரமாணத்திற்குக் கீழானவன் அல்ல என்பதை அறிந்து கொள்கிறான்.

சர்தை சபையை கர்த்தரானவர் ஒதுக்கிவைத்த போது ஆவியானவர் அதனுடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டதையும்

கிறிஸ்துவானவர் சிலுவையில் செய்து முடித்த பணியின் பரிபூரணத்தைத்தான் வெளிப்படுத்தினார். ஏனெனில் எலிமெலேக்கின் சுதந்திரத்தை அச்சபைக்கு திரும்ப அளிக்க முடியும். சபைகளுக்கு முன்னோடியாக பவுலினால் தனது நிருபத்தில் வருணிக்கப்பட்ட பிரகாரமாய் சபைகளுக்கு முன் மாதிரிப்படியாக இருந்த எபேசுசபை தனக்கு உடைமையாக்கியிருந்த அனைத்தையும் அவை திரும்ப சபைக்கு அளிக்க முடியும். இதுவே பிலதெல்பியாவின் தொடக்கம். கிறிஸ்தவ நிலைமையும் (அல்லது கிறிஸ்தவனின் நிலைமையும்) சபையின் நிலைமையும் விபரணை யச் செய்யும் வண்ணம் மகிமை பொருந்தியதும், இறுதி நிலை காணவியலாத மகிழ்ச்சியை நல்குவதாயும் உள்ளன. மெய்யாகவே நாம் உன்னதங்களில் ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறோம் (எபேசியர் 1:3) கிறிஸ்துவுக்குள் நாம் உலகத்தோற்றத்துக்கு முன்னே தெரிந்து கொள்ளப்பட்டோம். மேலும் அவருடைய மகிமைக்கு புகழ்ச்சியாய் இருக்கும் படி அவருடைய தீர்மானத்தின் படியே "கிறிஸ்துவுக்குள்ளே" அவருக்கு சுதந்திரம் ஆகும்படி தெரிந்து கொள்ளப்பட்டோம். (எபேசியர் 1:10-3) தேவன் "கிறிஸ்துவின் மூலமாக" தமக்கு சுவிகார புத்திரர் ஆகும் படி முன் குறித்திருக்கிறார். (எபேசியர் 1:6) கிறிஸ்துவுக்குள் நாம் உன்னதங்களிலே உட்காரவைக்கப்பட்டிருக்கிறோம். சபையானது கிறிஸ்துவானவரின் சரீரமாகவும் மணவாட்டியாகவும் இருக்கிறது (எபேசியர் 1:23;5:25:27).

## பிலதெல்பியா சபையின் நிலைமையும் மேன்மையும்

போவாஸ் சுதந்திரத்தை மட்டுமல்ல ரூத்தையும் விலைக்கு வாங்கினான். அவள் தனக்கு அடிமையாயிருக்கும்படி அல்ல தான் அரவணைக்கப் போகும் துணைவியாக அவளை வாங்குகிறான். இனி அவள் கதிர் பொறுக்குகிறவளோ, கெஞ்சுகிறவளோ அல்லது கனவுகள் கலைந்து போன விதவையும் அல்ல. இனி அவள் போவாஸின் பக்கத்தில் அவனுடைய வீட்டில் ஏன்? அவனுடைய இதயத்தில் இருக்கப்போகிறவள். அறுவடை செய்யும் வேலைக்காரர்கள் சிந்தவிட்ட கதிர்கள் அவளுக்கு விலை உயர்ந்ததாக இருந்தன. ஆனால் இப்பொழுதோ முழு அறுவடையும் அவளுடைய உடைமை ஆகிவிட்டது. எலிமெலேக்கு, மக்லோன், கிலியோன் இவர்களது சுதந்திரத்திற்கு மட்டுமன்றி போவாஸின் சொத்துக்கள் முழுமைக்கும் அவள் சொந்தக்காரி ஆகிவிட்டாள். இப்பொழுது போவாஸே அவளுடைய கைக்குள் ஆகிவிட்டான். இதுவே பிலதெல்பியா சபையின் நிலைமை.

வெளிப்படுத்தின விசேஷம் 3:7,13 வசனங்களில் வாசிக்கும் பொழுது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சகல வற்றையும் தம்மமோடு இணைத்துக் கொள்ளுகிறார் என்று நாம் காணவில்லையா? இதர சபைகளோடு ஒரு குறிப்பிட்ட நிலைமையில் மாத்திரம் தன்னை இணைத்துக்கொள்ளும் இணைப்பை நாம் பிலதெல்பியா சபையில் காணவில்லை. பிலதெல்பியா சபைக்கு அவர் "இருக்கிறவராக" தம்மை வெளிப் படுத்துகிறார். (வெளி 3:7) மேலும் அவர் தம்மை "பரிசுத்த முள்ளவரும் சத்தியமுள்ளவராகவும் பிலதெல்பியா சபைக்கு வெளிப்படுத்துகிறார். அது அவருடைய வசனம் அவர்கள் அவருடைய நாமத்தை மறுதலியாமல் கைக்கொள்ளுகிறார்கள். அவர்கள் அவருடைய பொறுமையைக் குறித்து சொல்லிய வசனத்தைக் காத்துக்கொண்டார்கள். "அவர்" ஒரு திறந்த வாசலை அவர்களுக்கு முன்பாக வைத்திருக்கிறார். அவர்களது சத்துருக்கள் அவர்களது பாதங்களுக்கு முன்பாக வந்து பணிந்து அவர்கள் மேல் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து அன்பாய் இருக்கிறார். என்பதை அறிந்து கொள்ளுவார்கள். இறுதியாக ஜெயங்கொள்ளுகிறவனை அவருடைய தேவனுடைய ஆலயத்திலே தூணாக்குவார். அதினின்று அவன் ஒருக்காலும் நீங்குவதில்லை.

பிலதெல்பியா சபையின் ஆவிக்குரிய ஐசுவரியம் நம்மை உணர்ச்சியில் ஆழ்த்துகிறதாய் இருக்கிறது. ஒரு நூற்றாண்டுக்கு முன் வெளிப்பட்டதுபோல தேவனுடைய நினைவுகள் அப்போஸ்தலருடைய நாட்களில் போலும் வெளிப்படுத்தப்படவில்லை. அப்போஸ்தலனாகிய பவுலிற்கும் வேறு சில அப்போஸ்தலருக்கும் இச்சத்திய வெளிச்சம் கிடைத்திருந்தது. ஆனால் பொதுவாக அனைத்து விசுவாசிகளுக்கும் இச்சத்தியம் நன்கறிந்த ஒன்றாக இருக்கவில்லை. ''சத்திய வசனம்'' முழுமையாகக்கிடைக்கப்பெற்ற பிறகும் அனேக ஆண்டுகளுக்கும் ஆவிக்குரிய தளர்ச்சிகாணப்பட்டது. அனேகசபைகளுக்குச் சொந்தமான ஒரு புதிய ஏற்பாடுகூட இல்லாமல் இருந்தது. சில சபைகளில் வேதாகமத்தின் சில பகுதிகள் மட்டுமோ அல்லது நிருபங்கள் மட்டுமோ காணப்பட்டது. ஆனால் இன்றோ நாம் ஒவ்வொருவருக்கும் சொந்தமாக அனைத்து வசனங்களையும் உள்ளடக்கிய வேதாகமம் உண்டு. சில ஊழியக்காரர்களுக்கு மட்டும் வெளிப்படுத்தப்பட்ட வேதரகசியங்கள் இன்று ஆயிரக்கணக்கான மனிதர்கள் கைகளில் அச்சடிக்கப்பட்ட புத்தகமாக தவழ்கிறது. ஒரு நூற்றாண்டுக்கு முன்பு இருந்ததைவிட ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவோடு தனிப்பட்ட முறையில் விசுவாசிகளுக்கு உள்ள உறவு

இன்று வலுவடைந்து வருகிறது. விசுவாசக்கூட்டங்களில் பிரசங்கிக்கப்படும் முக்கிய நபர் கிறிஸ்துவே!! பிலதெல்பியா சபையின் தொடக்க நாட்களில் சகோதரர்களால் எழுதப்பட்ட புத்தகங்களில் இருந்து இதை அறிந்து கொள்ளலாம்.

## பிலதெல்பியாவின் தொடக்கம்

பிலதெல்பியா சபை எவ்வாறு தொடங்கிற்று! இச்சபையிலுள்ள சகோதரர்கள் வேதவசனங்களை ஆராய்ந்து பார்ப்பதில் அதிக வாஞ்சையும் வைராக்கியத்தையும் காட்டினார்களா? அவ்வாஞ்சை தான் அவர்களுக்கு சத்திய வெளிச்சத்தை காண உதவிற்றா? ஆம்! அவர்கள் தேவனையே சார்ந்து கொண்டு ஜெபத்தோடு வேதவசனங்களை ஆராய்ந்தனர். இவ்வனுபவம் இன்று காணப்படாதது துக்கத்திற்குரிய காரியமே.அப்போஸ்தலருடைய நாட்களுக்கு பிறகு வந்த மற்ற விசுவாசிகள் அனேக நூற்றாண்டுகளாக வேதத்தை ஆராயவில்லையா? மெய்யாகவே அவர்கள் அதிக உண்மையோடும் உத்தம இருதயத்தோடும் வேதத்தை ஆராய்ந்தனர். அவர்களது உண்மையுள்ள மனநிலையைப் பார்க்கும் பொழுது நாம் வெட்கத்தால் தலைகுனிந்து நிற்க நேரிடும். இடைநிலைக் காலத்தில் வாழ்ந்த விசுவாசிகளும் அதிக உண்மையோடும் உத்தம இருதயத்தோடும் அவர்களுக்கு கிடைத்த வெளிச்சத்தில் நடந்தனர்.

பிலதெல்பியாவின் தொடக்கத்திற்கு மனிதன் காரணம் அல்ல. அது மீட்பரின் பணியே சிலுவையின் மேல் தாம் சிந்திய இரத்தத்தால் நம்மை அவர் மீட்டுக்கொண்டார். ஆனால் தமது வல்லமையால் அவர் எவ்வாறு நம்மை மீட்டுக்கொள்ளுகிறார் என்பதை பிலதெல்பியா சபைகாட்டுகிறது. தேவன் இஸ்ரவேலையும் இவ்வுலகத்தையும் முழு பிரபஞ்சத்தையும் கூட மீட்டுக்கொள்வார். பிரபஞ்சத்தின் அனைத்து தீமைகளும், அக்கிரமங்களும் அன்று அகற்றப்படும். பழைய ஏற்ப்பாட்டில் உள்ள தீர்க்கதரிசன நூல்கள் இக்கருத்தைத்தான் வலியுறுத்துகின்றன. ஆனால் பிலதெல்பியாவின் மீட்பு வித்தியாசமானது. தேவனுடைய ஆவியானவரின் வல்லமையின் மூலமாகக்கிடைத்த மீட்பும் விடுதலையும் அதிலே வெளிப்படுகிறது. ஒரு புதிய "விதையை" தருவதற்கு ஒப்பானது அது. மரணம் இருந்த இடத்தில் ஜீவனைத்தரும் செயல்தான். அது போவாஸ் ரூத்தை பகிரங்கமாக மீட்டுக்கொண்டதைப்போல தேவனும் பிலதெல்பியாவை மீட்டுக்கொண்டார்.

எலிமெலேக்கும், மக்லோனும், கிலியோனும் ஜீவனுக்குள் ஆகும் படி மறுபடி விலைக்கு வாங்கப்படவில்லை. அதுபோலவே சரீரத்தையும் தியத்தீரா எபேசுவின் நிலைமைக்கு மறுபடியும் உயிப்பிக்கப்படவில்லை. அவை கர்த்தரால் உயிப்பிக்கப்பட்ட குழுக்களாக கிறிஸ்தவ மதத்திற்குள் நிலை நின்றன. இன்று லவோதிக்கேயா சபையையும் இக்குழுவில் அங்கமாக்கிக் கொள்ளலாம். பிலதெல்பியாவும் ஆரம்ப நாட்களில் இருந்ததைப்போல இன்று இல்லை. தேவன் தமது நீதியுள்ள ஆளுகையின் படி மோசே கானானுக்குள் பிரவேசிப்பதைத் தடைசெய்தார். எனினும் கர்த்தருடைய ஐக்கியத்துடன் அவருடைய கண்கள் மூலமாக வாக்குத்தத்தம் பண்ணப்பட்டகானானை முழுமையாக அவனால் காண முடிந்தது. கானானுக்குள் பிரவேசித்த எந்த, ஒரு இஸ்ரவேலனும் காண முடியாதவைகளை அவன் கண்டான் *(உபாகமம் 32:52; 34:1-4)* பிலதெல்பியாவின் காரியத்திலும் இப்படித்தான் நடக்கிறது. பிலதெல்பியா ஆதிநிலைக்கு ஏகவில்லை. ஏகப்போவதும் இல்லை. இது தேவனுடைய நீதியுள்ள ஆளுகையின் விளைவாகும். நாம் கானானுக்குள் பிரவேசிக்காதபடிக்கு தடை செய்யப்பட்டாலும் கர்த்தருடைய ஐக்கியத்துடன் அவர்கண்கள் வாயிலாக அதின் முழு அழகையும் காண முடிகிறது. சபையை அதின் மெய்யான பண்புகளோடு காணக்கூடிய உரிமையை நாம் பெற்றுக்கொண்டோம். அவளுடைய ஆசீர்வாதங்களோடும், மணவாளனோடும், சபையின் தலையாகிய கிறிஸ்துவேடும் அவளுக்குள்ள ஒன்றிப்பையும் நாம் காண முடிகிறது. அவளது தெய்வீக கிரயமும் எதிர்காலமும் எப்படி இருக்கும் என்பதையும் நம்மால் காண முடிகிறது. எதிர் காலத்தில் அவள் எவ்வளவு மகிமை உள்ளவளாய் இருப்பாள் என்பதையும் உணர முடிகிறது. அப்பழுக்கற்றவளாய் அவர் அவளைத் தமக்குச் சொந்தமாக்கிக் கொள்வார். அப்பொழுது அவள் பரிசுத்தமுள்ள வளாக குற்றமற்றவளாக இருப்பாள். அவரோடு நாம் பூரண ஐக்கியத்தில் இல்லாவிடினும் தமது எல்லையற்ற அன்பினிமித்தம் அவர் இவைகளை கிருபையாய் நமக்கு காண்பிக்கிறார். ஆ கர்த்தாவே நீர் எப்படிப்பட்ட இரட்சகர்.

## ரூத்திற்கு கிடைத்த ஆசீர்வாதம்

அப்பொழுது ஒலிமுகவாசலில் இருக்கிற சகல ஜனங்களும் மூப்பரானவர்களும் அவனை நோக்கி நாங்கள் சாட்சிதான் உன்

வீட்டிலே வருகிற மனைவியைக் கர்த்தர் இஸ்ரவேல் வீட்டைக் கட்டுவித்த இரண்டு பேராகிய ராகேலைப் போலவும் லேயாளைப்போலவும் வாழ்ந்திருக்கச் செய்வாராக. நீ எப்பிராத்தாவிலே பாக்கியவானாயிருந்து பெத்லகேமிலே புகழ் பெற்றிருக்கக்கடவாய்.

போவாஸ் ஒலிமுக வாசலில் இருந்த ஜனங்களோடும் மூப்பர்களோடும் பேசியிருந்தான். ஆளுகை செய்யும் குழுவினராக மூப்பர்கள் திகழ்ந்தனர். சட்டப்பூர்வமான தீர்ப்புகளின் காரியம் வரும்பொழுது அவர்கள் குறிப்பிடப்படுகின்றனர். (ரூத் 4:2) அல்லது ஜனங்களைக் குறித்து சொல்லப்படும் போது மூப்பர்கள் முதலாவதாகக் குறிப்பிடப்படுகின்றனர். (ரூத் 4:9) ஆனால் போவாஸின் உரிமைகள் நிலைநிறுத்தப்பட்டுவிட்ட படியால் ஜனங்கள் முதலிடம் பெறுகின்றனர். அவன் செய்வதை அவர்கள் எடுத்துக்கொண்டு உறுதிப்படுத்துகின்றனர். ஒரு மகத்துவம் உள்ள காரியத்தைக் சொல்லி அவனது செயலை வாழ்த்துகின்றனர். மூப்பர்களும் அவர்களோடே இணைத்துக் கொள்ளுகின்றனர். ஆம், அப்பத்தின் வீடாகிய பெத்லகேமியர் தான் போவாஸைக்குறித்து சாட்சி பகர்கின்றனர். ஏனெனில் அவர்கள் தான் தினந்தோறும் அவனது பிரசன்னத்தில் இருந்து அவனது பட்டணத்தின் ஆசீர்வாதங்களை அனுபவித்தவர்கள் அவன் செய்வதெல்லாம் [illegible]த்தான். அவன் தனது அன்பின் நிமித்தமும் கிருபையின் நிமித்தமும் ரூத்திற்கு மேலான இடத்தை நல்கிய போது அவர்கள் அதை ஏற்றுக்கொண்டனர்.

தினந்தோறும் தேவனோடு உறவாடும் பிலதெல்பியாவின் நிலைமையில் நாம் வாழ்வோமேயாயின் நாம் இந்நிலைக்கு வரும்படி மற்றவர்களையும் வரவேற்கமாட்டோமா. ஓர் அற்புதமான நிலையல்லவா அது. அவரோடு தம்மை இணைத்துக்கொள் பவர்களை ஆசீர்வதிக்கும் அக்கிருபையை எண்ணி நாம் வியப்படையாமல் இருக்க முடியாது.

### ஜனங்களின் வாழ்த்துக்கள்

ஜனங்களுடைய வார்த்தைகள் எவ்வளவு உட்தெளிவு நிறைந்தவைகளாகவும் தீர்க்கதரிசனத்தன்மை உடையவையாகவும் உள்ளன. இங்கே ஒரு புதிய துவக்கத்தை அவர்களால் பகுத்தறிய முடிகிறது. ஒரு விதத்தில் பார்த்தால் மெய்யாகவே இஸ்ரவேல் வீட்டாரின் தொடக்கத்திற்கு காரணமான ராகேலும் லேயாளும்

ஒதுக்கப்படுகிறார்கள். யாக்கோபோடு அவர்களுக்குள்ள உறவு இஸ்ரவேலுக்கும் ஜாதிக்கும் மாதிரிப்படிவமாக அமைகிறது (ஆதி 29) ராகேல் யாக்கோபினால் நேசிக்கப்பட்டவள். ஆனால் அச்சமயம் லேயாள் 6 பிள்ளைகளுக்கு தாயாய் இருந்த போதிலும் இவளோ மலடியாய் இருந்தாள். ராகேல் பிள்ளைகளைப் பெற்றெடுக்கிறாள். இவ்விருவரில் மூத்தவன் யோசேப்பு. இவன் சொந்த சகோதரரால் புறக்கணிக்கப்பட்ட ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவிற்கு மாதிரியாக அமைகிறான். புறக்கணிக்கப்பட்ட வேளையிலே அவன் ஜாதிகளை ஆளும் அதிகாரத்தைப் பெறுகிறான். (சங்கீதம் 21 சங் 8, எபிரெயர் (20:23) இரண்டாவது மகனாகிய பென்யமீன் யாக்கோபிற்கு "வலது கையின்" மகனாக திகழும் போது ராகேலுக்கோ துக்கத்தின் மகனாக விளங்குகிறான். பென்யமீன் இஸ்ரவேலையாளும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவிற்கு மாதிரியாக அமைகிறான். பென்யமீன் பிறப்பு மாம்சத்தின்படி பழைய இஸ்ரவேல் வீட்டாருக்கு ஓர் முற்றுப் புள்ளியை வைத்தது. ஆனால் பென்யமீனும் யோசேப்பும் இணையும் பொழுது ஆயிர வருட அரசாட்சிக்கு மாதிரியாக அமையும் சமாதானமும் செழிப்பும் நிறைந்த வாழ்க்கை தொடங்குகிறது. லேயாள் ஜாதிகளுக்கு மாதிரியாக அமைகிறாள். யாக்கோபினால் விரும்பப்படாவிடினும் அவள் கர்த்தரால் ஆசீர்வாதத்தைப் பெறுகிறாள். ராகேல் மலடியாக இருந்த பொழுது லேயாள் பலன் தருகிறவளாக விரும்புகிறாள். (ஆதி 29:30, 31) அவளது கர்ப்பப்பிறப்பு கர்த்தரை ஆராதிக்க மற்றவர்களை நடத்துகிறதாக அமைகிறது யூதா என்றால் "அவர் துதிக்கப்படுவாராக" என்று பொருள்.

## ரெபேக்காளும், சபையும்

இஸ்ரவேல் ஒதுக்கப்பட்ட செயலை ரெபேக்காளின் அழைப்பிலும் காணலாம். ஏனெனில் ரெபேக்காள் சபைக்கு மாதிரியாக அமைகிறாள். அவள் மரித்துப் போன சாராளின் கூடாரத்தில் தனது வாழ்க்கையைத் தொடங்குகிறாள். சாராள் இஸ்ரவேலுக்கு மாதிரிப் படிவமாக அமைகிறாள். இஸ்ரவேல் பகிரங்கமாகப் புறக்கணிக்கப்பட்டபோது தான் சபையானது ஸ்தாபிக்கப்பட்டது. (அப்போஸ்தலர் 2:1) 1 கொரி 12:13), கர்த்தருக்கு சாட்சியாக சபை விளங்கினபோது இஸ்ரவேல் ஒதுக்கப்பட்டது. ஆனால் ரூத்தின் காரியத்தில் வேறொரு முன்னேற்றத்தைக் காண்கிறோம். இங்கே லேயாளும் ஒதுக்கப்பட்டு விடுகிறாள். ஜாதிகளும் தேவனுடைய ஆசீர்வாதத்தை புறக்கணித்து அவரைப் பொறுத்த மட்டில் பலனற்றவையாக மாறிவிட்டன. நியாயத்தீர்ப்பு

இன்னும் வரவில்லை. (ரோமர் 1:;13, 22) எனவே தான் இங்கே மூப்பர்கள் பேசாமல் ஜனங்கள் பேசுகின்றனர். தேவனுக்கென்று ஜாதிகளிலிருந்து விளங்கின சாட்சிகூட ஒதுக்கப்பட்டு விடுகிறது. (எபேசு முதல் தியத்திரா வரையும் சர்தை சபையும் இதற்கு மாதிரியாகும்) ஒரு புதிய தொடக்கம் ஆரம்பமாகிறது. ரூத் ஒரு மோவாபியப் பெண் தான் எனினும் மீட்பரின் கிருபையாலும், வல்லமையாலும் இக்காரியம் நிறைவேறுகிறது. அவரது கையில் தாவீதின் திறவுகோல் உண்டல்லவா.

## பதமும் பொருளும்

ராகேலும் லேயாளும் இஸ்ரவேலின் வீட்டைக்கட்டினவர்கள். இஸ்ரவேல் என்றால் "தேவனுடைய பிரபு" அல்லது தேவனுடைய யுத்தங்களை நடத்துகிறவன் என்று பொருள். தேவனுடைய மெய்யான பிரபுவும் அவரது "யுத்த மனுஷனும்" கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே என்பதை நாம் அறிவோம். உலகத்தையும், சாத்தானையும் ஜெயித்த அவர் இப்பொழுது சகலவற்றிற்கும் தலையாக திகழ்கிறார். அவரது வீடு கட்டப்படவேண்டும் (எபிரேயர் 3:6) பிலதெல்பியாவைக்குறித்து கர்த்தருடைய உள் நோக்கம் இதுவே. அப்பெயர்கூட இக்கருத்தைத் தான் வலியுறுத்துகிறது. பிலதெல்பியா என்றால் 'சகோதர அன்பு' என்று பொருள். சகோதர அன்பல்லவா அவர்கள் பரிபூரண கட்டினால் இணைக்கப்பட்டிருக்கிறார்கள். எனும் நினைவைத்தருகிறது. ஆனால் அவர்களை ஒன்றாக இணைத்தது சகோதர அன்பல்ல. அவர்கள் அனைவரும் பரிசுத்த ஆவியானவரால் ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்னானம் பண்ணப்பட்டவர்கள் அல்லவா (1 கொரி 12:13) நாம் காத்துக் கொள்ளவேண்டிய ஆவியின் ஒருமை இதுவே! (எபேசியர் 4:3) ஆனால் சகோதர அன்பு இவ்வொருமையைக்குறித்த உணர்வைத் தருகிறது. சபையானது 'அவருடைய சரீரம்' தேவனுடைய வீடு எனும் சத்தியத்தை செயல் முறையில் ஒத்துக்கொள்ளும் தனிச்சிறப்பைப்பிலதெல்பியா பெற்றுள்ளது. கிறிஸ்துவின் சரீரத்தின் அனைத்து விசுவாசிகளும் அவயவங்களாக இருக்கின்றனர். மேலும் பரிசுத்த ஆவியானவர் தங்கும் "தேவனடைய வீடாகவும்" அது திகழுகிறது. அங்கே கிறிஸ்து வானவரின் அதிகாரத்தின் கீழில் பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலின் படி தெய்வீக ஒழுங்கு வெளிப்படுகிறது.

எப்பிராத்தா என்றால் "பலனுள்ள இடம்" என்று பொருள் படும். பெத்லெகேம் என்றாலோ அப்பத்தின் வீடு என்று பொருள்.

எனவே தேவனுடைய நகரத்தில் வசிப்பவர்கள் போவாஸ், ரூத்துடன் இணைக்கப்பட்டபடியால் அவன் பலனுள்ள இடத்திலே அப்பத்தின் வீட்டில் தன் பேரை விளங்கப்படப்பண்ணவேண்டுமென்று வாழ்த்துகின்றனர். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைச் சுற்றிலும் பிள்ளைகள் கூடும் இடம் மட்டுமே இவ்வுலகில் பலனுள்ள இடமாக உள்ளது. அங்கே அவர்கள் அவரை நோக்கிப்பார்த்து அவரையே சார்ந்து கொள்கின்றனர். அங்கே அவரது அதிகாரம் அங்கீகரிக்கப்படுகிறது. "ஆண்டவரே நாங்கள் என்னச் செய்ய சித்தமாயிருக்கிறீர்." என்று நாமும் கேட்கிறோம். ஆவியானவரின் வழி நடத்துதலுக்கும், ஒழுங்கிற்கும் நம்மை இவ்விடத்தில் தான் ஒப்புக் கொடுக்கிறோம். ஆவியானவரே கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் அதிகாரத்தைச் சபையில் செயல் படுத்துகிறார்.

## தேவன் நல்கிய மாதிரி

இச்சத்தியம் இஸ்ரவேல் சரித்திரத்தில் யாத்திராகமம் 40 முதல் எண்ணாகமம் 10 முடிய வெளிப்படுத்தப்படுகிறது. தேவனுடைய எண்ணத்தின்படி ஆசரிப்புக்கூடாரமாகிய தேவனுடைய வீடு நிறுவப்பட்டபோது தேவனுடைய மகிமை அதை நிறைத்தது. (யாத் 40:16, 34) உடனே தேவன் தமது அற்புதமான ஆலோச னைகளையும் நினைவுகளையும் வெளிப்படுத்தத் தொடங்கினார். லேவியராகமம் 1 முதல் எண்ணாகமம் 10 வரை அவற்றை நாம் காணவியலும் தமது நினைவுகளை ஜனங்கள் தங்களது அறிவுக்கிணங்கப் புரிந்து கொண்டு பலன் தரவேண்டுமென்று தேவன் விரும்பினார். எண்ணாகமம் 7ஆம் அதிகாரத்தில் விலையேறிய பலிகளைக் காண்கிறோம். ஜனத்தின் பிரபுக்கள் அக்காணிக்கைகளையும் பலிகளையும் செலுத்துகின்றனர். எண்ணாகமம் 8ஆம் அதிகாரத்தில் குத்து விளக்கைக் குறித்துக் காண்கிறோம். அதற்குப் பிறகு ஜனங்களின் பிரதிநிதிகளாக லேவியர் அசைவாட்டும் பலியாக அவர் முன் கொண்டுவரப்படுகின்றனர். அவர்கள் கர்த்தருடைய ஊழியத்தைச் செய்ய வேண்டியவர்கள் அதைத்தொடர்ந்து பஸ்காவைக்குறித்துக் காண்கிறோம். இறுதியாக அவர்கட்டளைக்கிணங்க அவர்கள் மேகஸ்தம்பத்தைப் பின்பற்றிப் போகும் முழுமையான கீழ்ப்படிதலைக் காண்கிறோம். வனாந்திரத்தில் அவர்களுக்கு வழிகாட்டிய மேகஸ்தம்பம் பரிசுத்த ஆவியானவருக்கு மாதிரியாக அமைகிறது (எண்ணாகமம் 9).

நம் பரம போவாஸிற்கு நம்மிடையே நம் மீது அதிகாரம் உண்டா? நம்மோடு அவர் தம்மை இணைத்துக் கொண்டதன் மூலம்

தமது நாமத்தை அவரது அப்பத்தின் வீட்டில் விளங்கப்பண்ணமுடிகிறதா? இதைத்தான் அப்பத்தின் வீட்டில் இருந்த ஜனங்கள் போவாஸின்வாழ்வில் நிறைவேற விரும்பினார்கள். அது தான் தேவனுடைய ஆவியானவரின் வாஞ்சையும், விருப்பமும் இதுதான். அவ்வாஞ்சையை ஜனங்களின் உள்ளத்தில் எழச் செய்து அவர்களே அதைக் கூறும்படிச் செய்கிறார். இவ்வாஞ்சை போவாஸோடு தன்னை இணைத்துக் கொள்ளும் ஒவ்வொரு தனி மனிதனின் வாஞ்சையாக இருக்க வேண்டும்.

"இந்தப் பெண்ணிடத்திலே கர்த்தர் உனக்கு அருள்செய்யப்போகிற சந்தானத்தினாலே உன் வீடு தாமார் யூதவுக்குப் பெற்ற பேரேசின் வீட்டைப் போல அது ஆகக்கடவது என்றாள்.

## பேரேசின் வீடும் தாமாரும்

இங்கே யூதாவின் வீடு என்று குறிப்பிடப்படவில்லை. பேரேசின் 'வீடு' என்று கூறப்படுகிறது. யூதாவிற்கு முக்கியத்துவம் தரப்படாமல் தாமாருக்கு முக்கியத்துவம் தரப்படுகிறது. யூதா என்றால் "அவர் துதிக்கப்படுவாராக" என்றும் பொருள். ஆதியாகமம் 38ல் அவள் எவ்வாறு தன்னை யூதாவோடு இணைத்துக்கொண்டு பேரேசைப் பெற்றெடுத்தாள் என்று கூறப்படுகிறது. இச்செயலுக்கு முன்கை எடுத்தவள் அவள் தான். ஆதியாகமம் 38ல் வெட்கப்படக்கூடிய விதத்தில் அவளது பெயர் குறிப்பிடப்பட்டிருப்பினும் இங்கே மிகுந்த மரியாதையோடு கையாளப்படுகிறது. சேலாவிற்கு ஒரு மீட்பனைத் தர யூதா மறுத்தபோது அவனுடைய பேரை நிலை நிறுத்த தாமார் தனது கனத்தையே தியாகம் செய்தாள். இதன் பலனாக இரட்டைப்பிள்ளைகள் பிறந்து அவ்விருவரும் இருகுடும்பங்களுக்குத் தலைவர்கள் ஆனார்கள். (எண்ணாகம் 26:21) மனிதனுடைய பார்வையில் இரண்டாவதாக பிறந்தவனைப் போலத்தோன்றினாலும் அவனே முதற் பேரானவனாகக் கருதப்பட்டான். பாரேஸ் என்றால் 'பிளவு' என்று பொருள் படும். அவனிலும் தாமாரிலும் ஒரு தெய்வீக வல்லமையை காண்கிறோம். நம் மூலமாக நம்மில் தேவனுடைய நாமத்தை மகிமைப் படுத்தும் விதத்தில் கனிகளை உண்டாக்கும் வல்லமையே அது (கொலோசெயர் 1:9,11) ஜனங்கள் ரூத்தைக்குறித்துப் பேசும்போது "இந்தப் பெண்ணை" எனக்குறிப்பிடுகின்றனர். ஆங்கில வேதாகமத்திலும் மூல மொழியிலும் "இவ்வாலிபப்பெண்ணை" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ரூத்தைப் போல போவாஸின்

இடத்தில் வருகிற அவரால் மீட்கப்படுகிற ஒவ்வொரு விசுவாசியும் வாலிபத்தையும், பலத்தையும் பெற்றுக் கொள்ளுகிறான். அவரது பிரசன்னத்தில் கனியற்றவர்களாகவோ இருப்பதில்லை.

## குப்பையிலிருந்து உயர்த்தப்பட்ட குலமகள்

போவாஸ் ரூத்தை விவாகம் பண்ணினான். அவள் அவனுக்கு மனைவியானாள்; அவன் அவளிடத்தில் பிரவேசித்தபோது அவள் கர்ப்பந்தரித்து ஒரு ஆண் பிள்ளையைப் பெறக்கர்த்தர் அனுக்கிரகம் பண்ணினார்.

போவாஸ் என்ன செய்தான் என்று பாருங்கள் சொத்துரிமைகள் ஏதும் இல்லாத ஒரு மோவாபியப்பெண்ணை அவன் தனக்கென்று உரிமையாக்கிக்கொண்டான். அவளது தாழ்வில் இருந்து அவளை உயர்த்தி அவன் ஜனங்களோடு "மோவாபிய ஸ்திரியான ரூத்தை எனக்கு மனைவியாகக்கொண்டேன். அதற்கும் இன்றைய தினம் நீங்கள் சாட்சி." எனக்கூறுகிறான். தனம் பெருத்தவனாகிய அவன் பிச்சைக்காரியைப் போன்ற ஏழைப் பெண்ணைக் குறித்து "அவளை எனக்கு மனைவியாகக் கொண்டேன்." என்கிறான் ஆங்கில வேதாகமம் "அவளை" எனக்கு மனைவியாக விலைக்கு வாங்கிக்கொண்டேன் எனக்கூறுகிறது. மற்ற சுதந்திரவாளி தன்னுடைய பாதரட்சையை கழற்றிப் போட்டான். போவாஸ் மூப்பர்கள் ஜனங்களுக்குமுன்பாக தான் அவளை மீட்டுக்கொள்வதாகக்கூறுகிறான். இவ்வாறு அக்காரியம் இறுதியாக நிறைவேற்றப்படுகிறது. அச்செயலை யாரும் அவமாக்க முடியாது.

தான் உயர்த்தப்பட்ட நிலைமைக்கு தக்கதாக நடந்துகொள்ள வேண்டியது இனி ரூத்தின் பொறுப்புதான். போவாஸின் மணவாட்டியாக அவனுக்குத தகுதியானபடி அவள் நடந்துகொள்ள வேண்டும். ரூத் தனது மணவாளனைக்குறித்து எப்பொழுதாவது வெட்கப்படுவாள் என்று உங்களால் ஊகிக்க முடியுமா? மற்றவர்களுக்கு முன்பாக அச்செல்வம் படைத்த மனிதன்தான் தன்னுடைய மணவாளன் என்று அறிக்கையிட அவள் வெட்கப்படுவாளா? அதனால் ரூத்தைப் போவாஸ் மணக்கப்போவதாக தீர்வு செய்ததற்கும் திருமணத்திற்குமிடைய நடந்த காரியங்கள் குறிப்பிடப்படவில்லை. அவ்வண்ணமாகவே வனாந்திர வழியாக ரெபேக்காள் செய்த பயணத்தைக் குறித்து நாம் ஒன்றையுமே வாசிப்பதில்லை. அவள் ஈசாக்கை சந்தித்தாள் என்று மாத்திரமே வாசிக்கிறோம். (ஆதியாகமம் 24:61-67).

சபையின் நம்பிக்கை என்ன? உங்களது நம்பிக்கை என்ன பரலோகத்திலே நீங்கள் எதைப் பார்ப்பீர்கள் என்று நினைக்கிறீர்கள்? ஒரு வீட்டையா? வீட்டை விடப்பெரிய ஒன்றை நாம் காணப்போகிறோம். அதற்காக நாம் அவருக்கு நன்றி சொல்லுவோமாக. சுத்தப்பொன் வீதியையும் வச்சிரக்கற்களால் கட்டப்பட்ட மதில்களையும் காணப்போகிறோமா? (வெளிப்படுத்தல் 21:18-21) அவையா நமது நம்பிக்கை? இல்லை. துதிக்குப்பாத்திரமாகிய கர்த்தராகிய இயேசுவே நமது நம்பிக்கை. நமக்கு ஒரு அழகான வீட்டைத்தருவதில் தேவ கிருபை திருப்தியடைவதில்லை. தம்மையே நமக்குத் தருவதில் கிறிஸ்துவானவர் திருப்தியடைகிறார். "என்னில் அன்பு கூர்ந்து எனக்காகத்தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவகுமாரன்" (கலாத்தியர் 2:20) என்று வேதாகமம் கூறுகிறது.

நமது சிந்தனைக்கு

சகோதரனே சகோதரியே சற்று சிந்தித்துப்பார் விரைவில் நாம் கர்த்தரோடே கூட இருப்போம். நம்மை நாமே ஜீவ பலியாக அர்ப்பணம் செய்து இவ்வுலகில் வாழுவதற்கு இது போதாதா? உலகத்தோடு "உன்னோடு எனக்கு ஒரு சம்மந்தமும் இல்லை நான் உலகத்தான் அல்ல, உன்னுடைய துர்க்கிரியைகளுக்கு விரோதமாகவே நான் சாட்சி சொல்லுவேன்." என்று நாம் கூற வேண்டும். இதற்கு விருதாக நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் 'புன்முறுவலோடு கூடிய இவ்வார்த்தைகளைக் கேட்போம்" நல்லது உத்தமும், உண்மையும் உள்ள ஊழியக்காரனே கொஞ்சத்திலே உண்மையாய் இருந்தாய் அனேகத்தின் மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன்; உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி: (மத்தேயு 25:21) சகோதரியே அவர் சீக்கிரமாக வரப்போகிறார். நீ அவருக்காக மாத்திரம் வாழுகிறாயா? சகோதரனே கர்த்தர் வேகம் வருகிறார். நீ அவருக்காக மாத்திரம் வாழ்கிறாயா?

துதிக்குப் பரத்திரமாகிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைக்குறித்து நீ ஒருக்காலும் வெட்கப்படாதே. அவரது வருகை இன்றே கூட நிகழலாம். அவரது உரிமைகளை புறக்கணித்து தனக்கென்று வாழும் இவ்வுலகில் நீ அவருக்கென்று வாழும் சிலாக்கியத்தை இழந்துவிடாதே. அவரது வருகைக்குப்பிறகு இப்படிப்பட்ட சிலாக்கியம் உனக்குக் கிடைக்காது. ரூத்தின் மீட்பு முற்றுப் பெற்று விட்ட படியால் ஆழமான தேவ ரகசியங்கள் வெளிப்படுத்தப்படுகின்றன. போவாஸின் வயல்களில் இனி அவள்

கதிர் பொறுக்குபவள் அல்ல தனம் பெருத்தவனாகிய போவாஸின் சகல உடைமைகளும் அவளுக்கும் சொந்தமாயிற்று. நம்பிக்கை இழந்த ஒரு விதவையாக அல்ல, போவாஸினால் மீட்கப்பட்ட அவனுடைய மனைவியாக அவள் திகழுகிறாள். அதிகாரத்தோடு ஜீவித்திருக்கும் ஒருவனோடு தன்னை அவள் அடையாளப்படுத்திக் கொள்கிறாள். கடந்த காலத்தில் மோவாபிலே தனக்கிருந்த உறவுகளை எல்லாம் அவள் துண்டித்துக்கொண்டாள். அவர்கள் மரித்துப்போனவர்கள். ஜீவனற்றவர்கள் அவர்கள் மோவாபில் இருந்து வந்த அறிமுகமற்ற பெண்மணி இஸ்ரவேலின் தாய்மார்கள் கூட்டத்தில் முதன்மையாகத்திகழுகிறாள். ராகேலும், லேயாளும் இனி மறக்கப்படலாம். ஏனெனில் அவர்களுடைய இடத்தில் இஸ்ரவேலின் வீட்டைக்கட்டுவதற்கு வேறொருத்தி வந்து விட்டாள். தாவீது ராஜாவிற்குப் பாட்டனான ஓபேதை அவள் பெற்றெடுத்தபடியால் அரச பரம்பரையில் அவளும் ஓர் அங்கமாகிவிட்டாள். தாவீதிலிருந்து மாம்சத்தின்படியாக சகலவற்றிற்கும் வாரிசான இம்மானுவேலாகிய கிறிஸ்து தோன்றினார். கிருபை எனும் சிற்றோடை ரூத்தின் வாழ்விலே இப்பொழுது ஒரு பெருங்கடலாக மாறுவதைக் காணமுடிகிறது. நித்திய மகிமை என்னும் அப்பெருங்கடல் ஜீவனுள்ள தேவனால் மோவாபிலுருந்து உண்டாக்கப்பட்டது. மோவாபிலுள்ள ஒரு ஏழை விதைவையின் வாழ்க்கையில் அவர் தொடங்கிய கிரியை அல்லவா அதற்குக் காரணம்.

## ஸ்திரீகளின் வாழ்த்து

அப்பொழுது ஸ்திரீகள் நவோமியைப் பார்த்து: சுதந்தரவாளி அற்றுப் போகாத படிக்கு இன்று உனக்கு தயை செய்த கர்த்தருக்கு ஸ்தோத்திரம். அவன் பேர் இஸ்ரவேலிலே பிரபலமாகக்கடவது.

இதுவரை ரூத் மலடியாய் இருந்தாள். மக்லோனுக்கு மனைவியாயிருந்த காலத்தில் அவள் அவனுக்கு மக்களைப் பெற்றெடுக்கவில்லை. ஆனால் அவள் போவாஸோடு இணைக்கப்பட்ட பிறகு மலடியாய் இருக்கவில்லை. இது ஒவ்வொரு விசுவாசிக்கும் பொருந்தும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சொல்லுகிறார், என்னில் நிலைத்திருங்கள் நானும் உங்களில் நிலைத்திருப்பேன். கொடியானது திராட்சைச் செடியில் நிலைத்திராவிட்டால் அது தானாய் கனி கொடுக்க மாட்டாது போல நீங்களும் என்னில் நிலைத்திரா விட்டால் கனி கொடுக்கமாட்டீர்கள். என்னையல்லாமல் உங்களால் ஒன்றும்

செய்யக்கூடாது. (யோவான் 15:4.5) ஒவ்வொரு தனிப்பட்ட மனிதனுக்கும் இது பொருந்தும். இதுமாத்திரமல்ல ஒட்டு மொத்தமாக சபைக்கும் பொருந்தும் உலகத்தை அடைக்கலமாகக் கொண்ட சர்தைசபை கனி கொடுக்கமுடியாத நிலைமையில் இருந்தது. அவளது கிரியைகள் அவளது மரணத்திற்கே சாட்சியாக அமைந்தன. அவரைப்புறக்கணித்த இவ்வுலகத்தோடு தன்னை இணைத்துக்கொண்ட அவள் அவருக்கு சாட்சியாக வாழ முடியுமா? ஒருக்காலும் முடியாது அவரையும், உலகத்தையும் சேவிக்க முடியுமா? ஒருக்காலும் முடியாது. பரலோகத்தின் பண்பும் உயிர்தெழுதலின் வாழ்க்கையும் நிறைந்த கனிகளை அவளால் உருவாக்க முடியுமா? அவரே சபைக்குத்தலையானவர் மகிமைப்படுத்தப்பட்ட நிலையில் அவர் பரலோகத்தில் இருக்கிறார் எனும் உண்மையை உணர்ந்த பிறகேசபையானது கனிகொடுக்க முடியும். (எபேசியர் 1:22,23) ''அவர் முன்னதாக ஆயத்தம் பண்ணியிருக்கிறார் நற்கிரியைகள் அவரோடேகூட எழுப்பப்பட்டு உன்னதங்களிலே அவரோடேகூட உட்கார்ந்திருக்கும் விசுவாசிகள் அவள் முன்னதாக "ஆயத்தம் பண்ணியிருக்கிற" கிரியைகளைச் செய்து அவருக்குள் நடந்துகொள்ளும்போது அவள் கனி கொடுப்பாள் (எபேசியர் 2:7, 10).

மேற்கூறியபடிதான் ரூத்தின் காரியத்திலும் நிகழ்கிறது. போவாஸ் ரூத்தோடு இணைக்கப்பட்டபிறகு கர்த்தர் அவளுடைய கர்ப்பத்தை திறக்கிறார். அவள் அவனுக்கு ஒரு மகனைப் பெற்றெடுக்கிறாள். ஒரு காரியத்தை கவனியுங்கள் இதற்குப் பிறகு ரூத்தின் பெயர் இப்புத்தகத்தில் குறிப்பிடப்படவே இல்லை. இவ்வுலகில் அவள் தனது மெய்யான நிலைமையை அடைந்து விட்டாள். 'ரூத்' என்றால் திருப்தி அடைந்தவள் என்று பொருள். அவள் அடைந்த இந்நிலைமையிலேயே திருப்தியடைந்தவளாக இருக்கிறாள். பரலோகத்தில் நிரந்தரமாக தான் இணைக்கப்படப்போகும் மணவாளனோடு இப்பொழுதே தனக்கு உறவுண்டு எனும் எண்ணமே மணவாட்டியாகிய சபைக்கு திருப்தியைத் தருகிறது. இவ்வுண்மை உணர்ந்தவேளையில் தான் பிலதெல்பியா வெளிப்பட்டது. பிறகு கனிகள் வெளிப்பட்டன. அதற்குப் பிறகு சபையின் மெய்யான நிலையைக் குறித்த பரிசீலனை நிறுத்தப்பட்டது. தேவன் செய்ததை தங்களது வாழ்வில் செயல் படுத்தும் கிரியையே அதைத்தொடர்ந்தது.

## நம்பிக்கை அற்ற நிலையில் நம்பிக்கை நல்கும் விடிவெள்ளி நட்சத்திரம்

மோவாபை விட்டு வெளியேறும்போது ரூத்தும் நகோமியும் நம்பிக்கை இழந்து இருந்தனர். ஓர்பாளோடும், ரூத்தோடும் நகோமி பேசியபோது மரித்துப் போனவர்களுடைய பெயரை நிலைநிறுத்துவதற்கோ சுதந்திரத்தை மீட்பதற்கோ வாய்ப்பே இல்லாததுபோல பேசினாள். ஆனால் தேவனைப்பொறுத்தவரையில் முடியாத காரியம் ஒன்றுமே இல்லை. அவரால் பொய் சொல்ல முடியாது. தகுதியற்ற முறையில் நடந்து கொள்ள முடியாது. நமது பெலவீனங்களைக்குறித்து நாம் நன்றாக அறிந்திருக்க வேண்டும். ஆனால் தேவனுடைய வல்லமையையும், அன்பையும் மட்டுப் படுத்துவது அனுமதிக்க முடியாத அதிகப்பிரசங்கித்தனமாகும்.

சில வேளைகளில் நாம் தாழ்த்தப்படுவது நியாயமாகவும் நன்மையாகவும் இருக்கலாம். ரூத்தின் பிள்ளையைத் தன்மடியில் வைத்து வளர்த்தபோது நகோமியின் மகிழ்ச்சி கொஞ்சமாக இருந்திருக்குமா? 150 ஆண்டுகளுக்கு முன்பு கத்தோலிக்க புராட்டஸ்டண்டு சபைகளின் ஆவிக்குரிய வழச்சியையும் ஊழலையும் கண்டவர்கள் சபையில் கர்த்தருடைய சாட்சி மீண்டும் நிலைநிறுத்தப்படும் என்று எண்ணிப்பார்த்திருப்பார்களா? ஆனால் தேவன் அச்செயலைச் செய்தார். சபையின் மெய்யான நிலைமையைக் குறித்த அறிவு சிலருக்கு வெளிப்படுத்தப்பட்டது. அவர்கள் பெயர்கிறிஸ்தவ சபைகளை விட்டு வெளியேறினர. இவ்வுலகில் அவர்கள் அந்நியரும், பரதேசியுமாய் இருக்கிறார்கள் என்பதை செயல் முறையில் அறிக்கையிட்டனர். அவர்களது குடியிருப்பு பரலோகத்திலுள்ளது என்பதையும் செயல்முறையில் நிரூபித்தனர்.

## அறியாமையில் கிடக்கும் விசுவாசிகள்

ரூத்தைப் போலவே அனேக விசுவாசிகளுக்கு தேவன் தந்திருக்கும் சபைக்கு தந்திருக்கும் ஐஸ்வர்யத்தையும், மகிழ்ச்சியையும் குறித்து தெரியாது. சிலர் நகோமியைப் போல மோவாபிற்கு திரும்பிச்செல்ல தீர்மானித்திருக்கலாம். இப்படிப்பட்ட விசுவாசிகளுக்கு நாம் மறுபடியும் சொல்ல விரும்புவது இது தான் மீட்பரிடம் மீண்டும் திரும்பி வருவதற்கான வாசல் எப்பொழுதும் திறந்திருக்கிறது. அவர்கள் விட்டுச் சென்ற மகிழ்ச்சியையும், ஆனந்தத்தையும் திரும்பத்தருவதே உயிர்த்தெழுந்த ஆண்டவருக்கு மகிழ்ச்சி.

அநேக விசுவாசிகள் சுதந்திரத்தை அனுபவிக்காமல் இருப்பதற்குக் காரணம் என்ன? அவர்கள் அச்சுதந்திரத்திற்கு சொந்தக்காரர்கள் என்ற உண்மை கூட அவர்களுக்குத் தெரியாது. நகோமி இருதயத்தில் காணப்படும் ஆவிக்குரிய பயிற்சிகள் அவர்களிடம் இல்லை. தங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட்டது என்று அவர்களுக்குத் தெரியும்! இவ்வுலகவாழ்வைப் பொறுத்தவரை தேவன் தங்கள் தேவைகளை சந்திப்பதில் உண்மையுள்ளவர் என்பதையும் அவர்கள் அறிவார்கள். ஆனால் ஆவிக்குரிய அளவுகோலின்படி இவ்வறிவு போதுமானதல்ல. அவர்கள் இப்பொழுதே எவ்வளது ஆவிக்குரிய ஐசுவரியங்களை அனுபவிக்க முடியும் என்பதை அறியாமலிருக்கிறார்கள். குறைவான, தவறான போதனைகள் ஓரளவில் இதற்குக் காரணமாகும் ஆனால் கர்த்தருடைய காரியங்களில் அவர்களுக்கு அதிக அக்கரை கிடையாது என்பதுதான் சரியான உண்மை. தங்களைக் குறித்தும் தங்களது சொந்த விருப்பங்களைக் குறித்துமே அவர்கள் அதிக அக்கரை உடையவர்களாய் இருக்கிறார்கள். மகிமைப் படுத்தப்பட்ட கர்த்தர் அவர்களுடைய இருதயத்தின் குறிக்கோள் ஆகும் பொழுது நமது கண்கள் அவர் மீது பதியும்பொழுது தமது ஐசுவரியங்களை அவர் நமக்குக் காண்பிக்கிறார். அப்பொழுது நம்முடைய இருதயங்கள் அவர் அன்பால் இழுக்கப் படுகின்றன. பிறகு ரூத்தையும் நகோமியையும் போல கிறிஸ்துவானவர் நமது சுதந்திரத்தை முழுமையான மகிழ்ச்சியையும் திருப்தியையும் தர முடியும் என்று நாம் அறிந்துகொள்ளுகிறோம். நமது உன்னத அழைப்புக்கிணங்க நடந்துகொள்ள அவர் நம்மைத் தகுதிப்படுத்துகிறார். அவர் நமக்குத்தந்த ஆவியானவரின் மூலமாக இதைச் செய்கிறார். தேவன் தம்முடைய ஜனங்களுக்குத் தந்த சகலவற்றையும் அவரே திரும்பத்தர வல்லவர் என்பதையும் அவரே சகலவற்றிற்கும் உறைவிடமானவர் என்பதையும் இவ்விசுவாசிகள் அறிந்துகொள்ளுகின்றனர். சகலமும் அவருக்குள் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருக்கிறது.

## ஸ்திரீகளுடைய வாழ்த்தின் தொடர்ச்சி

அவன் உன் ஆத்துமாவிற்கு ஆறுதல் செய்கிறவனும் உன் முதிர் வயதிலே உன்னை ஆதரிக்கிறவனுமாயிருக்கிறான். உன்னை சிநேகித்த ஏழு குமாரரைப் பார்க்கிலும் உனக்கு அருமையாயிருக்கிற உன் மருமகள் அவனைப் பெற்றாளே! என்றார்கள்.

ஸ்திரீகள் நகோமியைப் பார்த்து ரூத்தின் மகன் அவளுடைய

ஆத்துமாவுக்கு ஆறுதல் செய்கிறவனாய் இருக்கிறான். எனக்கூறுவதைப் பாருங்கள். "சகலவற்றையும் திரும்பத்தருகிறவன் என்று ஆங்கில வேதாகமத்தில் வாசிக்கிறோம். முந்தின தியானங்களில் நாம் கண்டதைப் போல் அல்லாமல் "சகலவற்றையும் திருப்பிக்கொடுப்பவனின்" கிருபை சற்றே வேறுபாடானது. போவாஸில் நாம் மீட்பளித்து சகலவற்றையும் திரும்பத்தரும் கிறிஸ்துவைக்கண்டோம். கிறிஸ்துவானவரை நாம் மீட்பராகவும் விடுவிப்பவராகவும் கண்டோம். சாட்சி அற்றுப்போன இடத்தில் சுதந்திரத்தை மீண்டும் நிலைநிறுத்துகிறவராகவும் மரித்தோரிலிருந்து புது ஜீவனை நல்குகிறவராகவும் நாம் கண்டோம். ஆனால் உயிர்த்தெழுந்து மகிமைப் படுத்தப்பட்ட கர்த்தரோடு நம்மை இணைத்துக் கொள்வதால் உண்டாகும் கனியை நாம் ஒபேத்திலே காண்கிறோம். இதன் விளைவாக இழந்து போன சுதந்திரம் திரும்பக் கிடைக்கிறது.

ஸ்திரீகள் உன் ஆத்துமாவிற்கு ஆறுதல் செய்கிறவன் என்று ரூத்தின் மகனைக் குறித்து கூறுகிறார்கள். இதுவரை நாம் தியானித்துக் கொண்டு வந்த காரியங்களை இது உறுதிப் படுத்துகிறது. ஒரு நூற்றாண்டுக்கு முன்பாக விசுவாசிகள் ஆதியில் இருந்த அன்புடன் தேவனிடத்திற்குத் திரும்பியபோது அது அவர்களுடைய நடைமுறை வாழ்விலும் வெளிப்பட்டது. சபையின் பரலோகத்தன்மையையும், பரலோகத்தில் அதற்கு இருக்கும் நிலைமையையும் அவர்கள் உணர்ந்து கொண்ட போது இவ்வுலகத்தில் இருந்தும் பெயர்க்கிறிஸ்தவர்கள் சபையை விட்டும் பிரிந்து வேறுபட்டனர். தியத்தீரா, சர்தை, சபைகளை விட்டுப் போனவர்களில் மாத்திரமல்ல அவர்களது ஆவிக்குரிய கனிகளால் கவருண்ட அனைத்து கிறிஸ்தவர்களுக்கிடையேயும் கனி தரும் வாழ்வு காணப்பட்டது. அவர்களது மனந்திரும்புதலும் வேறுபாடும் கிறிஸ்தவர்களில் ஏராளமானோரைக் கவர்ந்தது. தேவன் திட்டமிட்டிருந்ததும் இதுவே.

## முதிர் வயதில் ஆறுதல் ஆத்துமாவிற்கு ஆறுதல்

இஸ்ரவேல் ஜனங்கள் காதேசில் வந்த பொழுது 40 வருட வனாந்திர யாத்திரையின் முடிவில் இருந்தார்கள். அப்பயணம் நீண்டதாகவும், சோர்வடையச் செய்வதாகவும் இருந்தது. அவர்களுக்கு ஆறுதலாய் இருந்த உதவிகளின் ஆற்றலும் குறைந்து போயின. ஆராதனை தீர்க்கதரிசனத்தின் ஒலியாய் இருந்த மிரியாமும் மறைந்து போனாள் (எண்ணாகமம் 20.1) அப்பொழுது

மேலும் முழுவதும் கன்மலையிலிருந்து தண்ணீரைத்தந்தார். தேசம் சேர்ந்து போகுமட்டுக்கு அப்படிச்செய்தார்.

1 ராஜாக்கள் 1ம் அதிகாரத்தில் தாவீதினுடைய வாழ்க்கையின் முடிவைக் காண்கிறோம். தாவீது ராஜா வயதுசென்ற விருத்தாப்பியனானபோது வஸ்திரங்களினால் அவனை மூடினாலும் அவனுக்கு அனல் உண்டாகவில்லை. அப்பொழுது அவனுடைய ஊழியக்காரர் அவனை நோக்கி ராஜசமூகத்தில் நின்று அவருக்குப் பணிவிடை செய்யவும் ராஜாவாகிய எங்கள் ஆண்டவனுக்கு அனல் உண்டாகும்படி உமது மடியிலே படுத்துக்கொள்ளவும் கன்னியாகிய ஒரு சிறு பெண்ணை எங்கள் ராஜாவாகிய ஆண்டவனுக்குத் தேடுவோம் என்று சொல்லி இஸ்ரவேலின் எல்லையெல்லாம் அழகான ஒரு பெண்ணைத் தேடி சூனேம் ஊராளாகிய அபிஷாகைக்கண்டு அவளை ராஜாவினிடத்தில் கொண்டு வந்தார்கள் *(1 ராஜாக்கள் 1:1-3)*.

பழைய ஏற்பாட்டில் காணப்படும் இவ்விரு உதாரணங்களும் ரூத் நகோமியில் "ஆத்துமாவிற்கு ஆறுதல் செய்கிறவனாகவும், முதிர் வயதிலே அவனைத் தாங்குகிறவனாகவும் இருப்பான்" என்று ஸ்திரீகள் கூறியதன் பொருளை விளக்குகின்றன. சபையானது முதிர் வயதிலே போஷிக்கப்படும் படிக்கும் ஆதி அன்பிற்கு அதைத்திரும்ப கொண்டுவருவதற்கும் தேவன் பிலதெல்பியாவைக் கொடுத்தார். முழுச்சபைக்கும் பிலதெல்பியாவைத்தந்தார். "முழுச்சபை" என்பது முழு விசுவாசிகள் எங்கே இருந்தாலும் அவர்களது கூட்டத்தைக் குறிக்கும் பிலதெல்பியாவின் நிலைமைக்கு கொண்டுவரப்பட்ட நம்முடைய கடமை எவ்வளவு பெரிது என்று பாருங்கள் பிரிவினை வாதங்களைவிட்டு நாம் விசுவாசிகளுக்கு செய்யவேண்டிய கடமையின் மேல் கண்ணாயிருப்பது மிக முக்கியமான செயலாகும். நாம் மரித்துக் கொண்டிருக்கும் சாட்சிக்கு அனலூட்டவும், சேவைசெய்யவும் வேண்டுமென்று தேவன் விரும்புகிறார். தாவீதிற்கு அபிஷாகு எப்படி அனலூட்டி சேவை செய்தாளோ அதைப்போலவே பிலதெல்பியாவில் உள்ள நாம் இதர விசுவாசிகளுக்குச் செய்யவேண்டும். "ஓபேத்" எனும் வார்த்தைக்கு ஊழியக்காரன் என்று பொருள். பிலதெல்பியாவின் பண்பும் இப்படிப்பட்டதே ரூத்தைக்குறித்து ஸ்திரீகள் நகோமியிடம் "உன்னைச்சிநேகித்த ஏழுகுமாரரைப் பார்க்கிலும் உனக்கு அருமையாய் இருக்கிற உன் மருமகள்" என்று கூறுகிறார்கள். இஸ்ரவேல் ஸ்திரீகளைப்பொறுத்தமட்டில் 7 குமாரர்கள் முழுமையான ஆசீர்வாதத்திற்கு அடையாளமாய் இருக்கிறார்கள் *1 சாமுவேல் 2:5)*.

## அங்கீகரிக்கும் அயல்வீட்டுக்காரிகள்

"நகோமி அந்தப் பிள்ளையை எடுத்து தன்மடியில் வைத்து அதை வளர்க்கிற தாயானாள். அயல் வீட்டுக்காரிகள் நகோமிக்கு ஒரு ஆண்பிள்ளை பிறந்ததென்று வாழ்த்தி அதற்கு ஓபேத் என்று பேரிட்டார்கள். அவன் தகப்பனாகிய ஈசாவின் தகப்பன்."

நகோமி அந்தப்பிள்ளையை தன் சொந்தப்பிள்ளையாக ஏற்றுக்கொண்டாள். அயல் வீட்டுக்காரிகளும் அதை அங்கீகரித்து அப்பிள்ளைக்கு பேரிடுகின்றனர். இங்கே "ஸ்திரீகள்" என்று கூறப்படாமல் அயல்வீட்டுக்காரிகள் என்று கூறுவதைக்கவனியுங்கள். உறவின் வட்டம் சுருங்கி உட்காட்சி பெறுகிறது. இவ்வண்ணமாகவே ஆண்டவரைக் குறித்த அறிவும் அவர் அருளும் வெளிச்சமும் பெருகப்பெருக தேவ ஜனங்களின் மேலும் தேவனால் தரப்பட்ட மீட்பரின் மேலும் நமது கவனத்தைச் செலுத்துகிறோம்.

## ஓபேத்

அந்தப் பிள்ளைக்கு "ஓபேத்" என்று பெயரிடுகின்றனர். அச்சொல்லுக்கு ஊழியக்காரன் அல்லது ஆராதிக்கிறவன் என்று பொருள். இவ்விருப்பொருள்களும் தேவனோடு சம்பத்தப்பட்டவை. தேவனோடு ஒவ்வொரு மனிதனுக்கும் உள்ள கடமை இதுவே. ஒவ்வொருவரும் அவரை ஆராதிக்கிறவர்களாகவும் அவருக்கு ஊழியஞ்செய்கிறவர்களாகவும் இருத்தல் அவசியம். *(உபகமம் 6:13)* மத்தேயு *4:10* இப்படிப்பட்ட ஒரு வாழ்க்கை வாழும் போது நாம் எப்படிப்பட்ட கனி தருபவர்களாக இருப்போம். அவர் ஊழியஞ்செய்வதற்கு இவ்வுலகத்தில் வந்தார். என்றென்றைக்கும் அடிமையாக இருக்க விரும்பும் எபிரேய அடிமையின் காது துளைக்கப்பட்டதுபோல் *(யாத்திராகமம் 21 5,6)* ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் கைகளும், கால்களும், துளைக்கப்பட்டன. சிலுவையின் மரணபரியந்தம் அவர் பணிவிடைக்காரன் ஆனார். இப்பொழுதும் ;பரிந்து பேசும் ஊழியத்தைச் செய்கிறார். அவர் ராஜாவாக சிம்மாசனத்தில் வீற்றிருக்கும் பொழுதும் நமக்கு ஊழியம் செய்வார். ஏனெனில் அவர் "என் எஜமானனையும், என் பெண் ஜாதியையும் என் பிள்ளைகளையும் நேசிக்கிறேன்." நான் விடுதலைப் பெற்றுப்போக மனதில்லை என்று கூறினாரே.

ஜென்ம சுபாவமுள்ள மனிதன் தேவனுக்கு ஊழியஞ்செய்து ஆராதிக்கவேண்டும். ஆனால் அவன் அப்படிச்செய்யவில்லை. செய்ய இயலாது என்று நாம் அறிவோம். தேவனைத்தேடுகிறவன்

ஒருவனுமில்லை. எல்லாரும் வழிதப்பிப்போனார்கள். நாம் ஊழியக்காரர்களாகவும் ஆராதிக்கிறவர்களாகவும் இருப்போமேயாயின் நாம் விடுவிக்கப்பட்டிருக்கிறோம் என்பதற்குச் சான்றாகும். கர்த்தாவே நான் உமது அடியான்; நான் உமது அடியாளின் புத்திரனும் உமது ஊழியக்காரனுமாயிருக்கிறேன். என் கட்டுகளை அவிழ்த்து விட்டீர் (சங்கீதம் 116:16) எல்லாக்காலங்களுக்கும் இது பொருந்தும். இஸ்ரவேல் எகிப்தில் இருந்தபோது அவள் தேவனையல்ல பார்வோனையே சேவித்தாள். (யாத்திராகமம் 2:23, 25) 3:15; 5:1!) 8:1, 8, 20, 27, 28) அவிசுவாசிகளைப் போலல்ல ரோமர் 7ல் காணப்படும் விசுவாசிகளை போலதான் அவள் இருந்தாள். பஸ்காவின் அடிப்படையில் எகிப்திலிருந்து தேவ வல்லமையால் மீட்கப்படும்வரை அவள் உலகத்திற்கும் பாவத்திற்கும் ஊழியஞ்செய்தாள். எனினும் அவள் தேவ ஜனத்தோடுதான் இருந்தாள். மீட்கப்பட்டபிறகே அவள் தேவனை ஆராதிப்பவளாகவும் தேவனுக்கு ஊழியஞ்செய்பவளாகவும் மாறினாள். (யாத்திராகமம் 15) எதிர்காலத்திலும் இஸ்ரவேலின் காரியம் இப்படித்தான் இருக்கும். எதிரிகளின் கைகளில் இருந்து தப்புவிக்கப்படும்போது அவள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை ஆராதிப்பவளாகவும் அவருக்கு ஊழியஞ்செய்கிறவளாகவும் இருப்பாள். (சங்கீதம் 22:26, 31 110:3) ஆனால் மீட்பரோடு இணைக்கப்பட்டு மீட்கப்பட்ட மக்கள் பரிபூரண ஆராதனையும், ஊழியத்தையும் செய்கிறவர்களாக இருப்பார்கள்.

## மெய்யான ஆராதனையும் ஊழியமும்

உண்மையாய்த் தொழுதுகொள்ளுகிறவர்கள் தேவனை ஆவியோடும், உண்மையோடும் தொழுதுகொள்ளும் காலம் வரும் அது இப்பொழுதே வந்திருக்கிறது. தம்மைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் இப்படிப்பட்டவர்களாயிருக்கும்படி பிதாவானவர் விரும்புகிறார். தேவன் ஆவியாயிருக்கிறார். அவரைத்தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும், உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ளவேண்டும். ஆம். பிதாவானவர் ஆராதிப்பவரையும் ஊழியக்காரர்களையும் தேடுகிறார்.

நாம் மெய்யாகவே ஆராதிப்பவர்களாகவும், ஊழியஞ்செய்கிறவர்களாகவும் இருக்க விரும்பினால் பாவம், மரணம் இவற்றின் வல்லமையில் இருந்து நாம் விடுவிக்கப்படவேண்டும். மாமிசத்தின் மேல் நம்பிக்கை வைப்பவன் தேவனுக்கு ஊழியஞ்செய்ய முடியாது. ரோமர் 7ல் மறுபடியும் பிறந்த அனுபவம்

உள்ள ஆனால் தேவனுக்கு ஊழியஞ் செய்யாமல் பாவத்திற்கு ஊழியம் செய்யும் மனிதனைக்காண்கிறோம். (ரோமர் 7:15,18,19, 23, 24) "ஏனெனில் மாம்சத்தின்மேல் நம்பிக்கையாயிராமல் ஆவியினாலே தேவனுக்கு ஆராதனை செய்து கிறிஸ்து இயேசுவுக்குள் மேன்மைபாராட்டுகிற நாமே விருத்தசேதனமுள்ளவர்கள். ஆராதனை ஊழியத்திற்கு இந்த கிரேக்க பதம் அப்போஸ்தலர் 7:42; 26:7; லூக்கா 1:74; 2:37 ஆகிய வசனங்களிலும் பயன்படுத்தப்பட்டுள்ளது. கடந்த காலத்தில் தன்னை கட்டி நெருக்கிய அனைத்திலுமிருந்து விடுதலைபெறாத யாராவது தேவனை கனம் பண்ணி அவரை ஆராதிக்க முடியுமா? தன்னைக் கட்டியிருந்த கட்டிலிருந்து விடுவிக்கப்பட்டவன் வீட்டாரின் காரியங்களில் தன்னை ஈடுபடுத்திக்கொள்ள சுதந்திரமுள்ளவனாய் இருக்கிறான். நாம் ஆராதிக்கிறவரின் மேன்மைகளோடு மாத்திரம் முகமிட்டு கொடுப்பதே ஆராதனை யாரும் பயபக்தியையும் அவருடைய கிரியைகளைக்குறித்து நாம் வியந்து போவதையும் தெரிவிப்பது தான் அது.

அவ்விதமான ஆராதனை ரோமன்கத்தோலிக்க சபைகளிலோ, மறுமலர்ச்சி சபைகளிலோ காணப்படவில்லை. ரோமன் கத்தோலிக்க சபைகளில் உள்ள ஆராதனை ஆவியிலும், சத்தியத்திலும் உள்ள ஆராதனை அல்ல. கிறிஸ்துவினால் மீட்கப்பட்டவர்கள் உயர்த்தப்பட்ட அற்புதமான நிலைமைக்கு உகந்த ஆராதனை இல்லை. அது உலகப்பிரகாரமான பொருட்களோடு சம்பந்தப்பட்டதும், ஜென்ம சுபாவத்தை திருப்தி படுத்துகிறதுமான ஆராதனை அது. இஸ்ரவேலுக்கு இப்படிப்பட்ட ஆராதனை உண்டாயிருந்தது. ஆனால் அது தேவனால் புறக்கணிக்கப்பட்டது. மறுமலர்ச்சி சபைகளுக்கு ஆராதனையும், ஊழியத்தையும் குறித்து ஒன்றுமே தெரியாது. அவர்கள் பிரசங்கத்தை ஆராதனையாகக்கருதிவிடுவார்கள். ஒரு பெரிய வேறுபாட்டை அவர்கள் காண்பதில்லை. தேவனுடைய சார்பில் ஒரு மனிதன் சபைக்கு ஒரு உபதேசத்தையோ, அல்லது ஆலோசனையையோ கூறலாம். ஆனால் இது ஆராதனை அல்ல. பிதாவானவரோடு பேசி, அவர் செய்த அனைவற்றிற்காகவும் அவருக்கு துதியையும், வணக்கத்தையும் செலுத்துவதே ஆராதனை. மட்டுமன்றி அதிசயமானவராகிய மீட்பரை குறித்து தியானிக்கும் பொழுது நம் உள்ளம் வியப்பினாலும் ஆராதனையினாலும் நிறைகிறது. நாம் அவரை ஆராதிக்கும் பொழுது இவ்வுலகத்திற்கேற்றபடி இவ்வுலகத்தின் பொருட்களோடு ஆராதிப்பதில்லை. நமது ஆராதனை ஆவியோடும் உண்மையோடும் இருக்கிறது. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தம்மை எப்படி

வெளிப்படுத்தியிருக்கிறாரோ அதற்கேற்ப நாம் அவரை ஆராதித்து அவருக்கு ஊழியம் செய்கிறோம். நமது தேவன் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை சொந்த ரட்சகராக ஏற்றுக்கொண்ட அனைவருக்கும் பிதாவாய் இருப்பது மட்டுமன்றி மிகப்பெரிய வள்ளலாகவும் இருக்கிறார். அவற்றை உணர்ந்து அவரை தொழுது கொள்ளுவதே ஆவியோடு அவரைத்தொழுது கொள்வதாகும். தேவனுடைய பண்புகளுக்கிணங்கவும் நாம் அவரை ஆராதிக்கிறோம். கடந்த நாட்களிலே இஸ்ரவேலர் செய்ததுபோல சாதாரணமான உலகப்பொருள்களின் அடிப்படையில் அமைந்ததல்ல அது! *(எபிரேயர் 13:15; யோவான் 4:10, 21, 24)* இதுவே அவரை ஆவியோடு தொழுது கொள்வதாகும்.

ரட்சிப்பு, பரிபூரண விடுதலை போன்ற சத்தியங்களின் மூலம் தேவன் தமது கிருபையால் அனேகருடைய உள்ளங்களில் எழுப்புதலைத்தந்தபோது ஆராதனையையும், பூர்வநாட்களில் இருந்ததுபோல ஆதி நிலைக்கு ஏகச்செய்தார். உள்ளத்தில் தாழ்மையுள்ளோர் உண்மைகளை உணர்ந்தபோது அது நடந்தது பிதாவானவருக்குத்துதியையும், வணக்கத்தையும் செலுத்துவற்கென்றே பின்னர் விசுவாசிகள் கூடத்தொடங்கினர். பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலுக்கிணங்க பிதாவானவரையும், குமாரனையும் துதித்துக்கொண்டனர்.

## ஆராதனைக்கு முடிவில்லை

பரலோகத்தில் நமக்கு யாரும் உபதேசிக்கவோ, ஆலோசனைக்கூறவோ வரமாட்டார்கள். அங்கே யாரும் நம்மை ஆறுதல் படுத்தவோ, பெலப்படுத்தவோ, பக்திவிருத்தியை உண்டாக்கவோ சரிப்படுத்தவோ, ஞானத்திலும், அறிவிலும் நாம் வளரும் படி உபதேசிக்கவோ தேவையில்லை. *(1 கொரி 13:3, 12)* ஆனால் பரலோகத்தில் கூட துதிப்பதற்கும் நன்றி கூறுவதற்கும், பிதாவானவரை வணங்குவதற்கும் முடிவே இராது. அங்கே அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவரைச்சுற்றிலும் திருச்சபையானது கூடி பரிபூரண ஆராதனையை செய்யும் நமது சபைக்கூடுகைகளில் நாம் செய்யக்கூடிய மிகப்பெரிய ஊழியம் ஆராதனையே என்பது இதிலிருந்து விளங்குகிறதல்லவா? நம்மைக்குறித்து தேவனுடைய நினைவும் இதுவே.

பலவீனர்களாய் நாம் இவ்வுலகில் உள்ளவரை அவர் தொடர்ந்து நமக்கு உபதேசித்துப் போதிப்பார். வெளிப்படுத்தின

விசேஷம் 5ஆம் அதிகாரத்தில் அடிக்கப்பட்ட வண்ணமாயிருக்கிற ஆட்டுக்குட்டியானவரைச் சுற்றிலும் கூடியிருக்கும் பரிசுத்தவான்கள் எவ்வாறு அவருக்கும் பிதாவானவருக்கும் துதியையும் செலுத்தித் தொழுதுகொள்ளுகிறார்களோ அதே நிலைமையில் இப்போதே அவர் நம்மை வைக்க விரும்புகிறார். அவரை அறிந்தவர்கள் பரலோகத்தை ருசித்திருக்கிறார்களே.

இவ்வுலகிலிருந்து பிரிந்திருக்கும் அவர்களது ஊழியம் கர்த்தாவே. அவ்வுலகில் அவர்கள் பெறப்போகும் இளைப்பாறுதலுக்கு முன்னோடியல்லவா? என்கிறார் ஒரு கவிஞர்.

ஒரு ஆவிக்குரிய பயிற்சி எனும் முறையில் இப்படிப்பட்ட ஆராதனையை நாம் செய்வோமேயாயின் அது நமது நடை முறையில் வெளிப்படும். ஓபேத் ஈசாயைப்பெற்றான். ஈசாய் என்றால் "இருக்கிறவராகிய அவர்" அல்லது யேகோவா இருக்கிறார்" என்று பொருள். பிதாவானவரை ஆராதிப்பதிலும், ரட்சகராகிய கிறிஸ்துவானவரின் ஆள்தன்மை கிரியைகள் போன்றவற்றிலும் நமது மனதைச் செலுத்தும் போது அவை நமது வாழ்வில் ஊடுருவி நமது தன்மையையும் மாற்றும். எல்லாவற்றையும் பிதாவின் கரத்திலும், குமாரனின் கரத்திலும் காணலாம்.

இப்படிப்பட்ட ஆராதனையும் ஊழியமும் நமது வாழ்வில் காணப்படுமானால் பிதாவானவரின் குமாரனையும் அவர்களுடைய அற்புதமான அழகிலும், வல்லமையிலும் அன்பிலும் நம்மைக்காணச்செய்யும் இவ்வனுபவம் நம்மை பூமிக்குரிய சூழ்நிலைகளில் இருந்து உயர்த்தும். தேவனுடைய அழகும் வல்லமையும், அன்பும் நித்திய காலமாக மாறாதவைகள் (எபிரேயர் 13:8) பிதாவின் அனுமதியின்றி நமது வாழ்க்கையில் ஒரு காரியமும் நடைபெறாது என்பதை நாம் அறிந்து கொள்ளவும் இப்படிப்பட்ட ஆராதனை உதவும். நம் தலையிலுள்ள மயிரெல்லாம் எண்ணப்பட்டிருக்கிறதே.

## விலையேறிய ஆராதனை

நமது ஆராதனையும், ஊழியமும் பிதாவானவருக்கும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவிற்கும் விலையில்லாதவைகளாக இருக்கும் என்று நீங்கள் கருதுகிறீர்களா? ஈசாய் தாவீதின் தகப்பன். தாவீது என்றால் "நண்பன் அல்லது பிரியமானவன் என்று பொருள் படும் மெய்யான ஆராதனையில் நாம் அவருக்கு நண்பர்களாகவும், பிரியமானவர்களாகவும் காணப்படுவோம். தாவீதின் குமாரன்

பிதாவுக்குப்பிரியமானவரல்லவா? (எபேசியர் 1:5) அவ௱ பிதாவினுடைய அன்பின் குமாரன் (கொலோசெயர் 1:13 என்றும் அழைக்கப்பட்டுள்ளார். பிதாவானவர் தமது குமாரனில் மனமகிழ்ச்சியாயிருந்தார். மெய்யான ஆராதனையும், ஊழியமும் நம்மைப்பிதாவோடும் குமாரனோடும் ஐக்கியம் கொள்ளச் செய்கின்றன. (1 யோவான் 1:3) தமது எண்ணங்களைப்பிதாவானவரும் குமாரனும் நமக்கு அறிவிக்கத்தக்க இவ்வுறவு எவ்வளவு அற்புதமானது. (யோவான் 15:5).

## வம்சவரலாற்றின் சிறப்பு

பேரேசுடைய சந்ததியின் வரலாறு. பேரேஸ் எஸ்ரோனைப்பெற்றான். எஸ்ரோன் ராமைப்பெற்றான். ராம் அம்மினதாபைப்பெற்றான். அம்மினதாப் நகசோனைப்பெற்றோன். நகசோன் சல்மோனைப்பெற்றான். சல்மோன் போவாசைப் பெற்றான். போவாஸ் ஓபேதைப்பெற்றான். ஓபேத் ஈசாயைப் பெற்றான். ஈசாய் தாவீதைப் பெற்றான் (ரூத் 4:8-22).

வசனம் 17ல் ரூத்தின் புத்தகம் முடிவடைகிறது. மெய்யான நிலைமையை அங்கே அவர்கள் அடைந்து தீர்ந்தாயிற்று. உயிர்த்தெழுந்து மகிமைப்படுத்தப்பட்ட கிறிஸ்துவானவருக்கு நிழலாய் இருக்கும் போவாஸுடன் ஒன்றாக இணைக்கப்படுவது தான் அந்நிலைமை. வேறு விதமாகக்கூறின் செயல் முறையில் பிதாவோடும் அவரை ஆராதிப்பவர்களாக மாறுவதே அந்நிலைமை. 18ம் வசனத்தில் இருந்து காணப்படும் வம்சவரலாறு ஒரு பிற்சேர்க்கைதான் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வம்ச வரலாற்றில் ரூத் இடம் பெறுகிறாள் என்பதை காட்டுவதற்காகவே இப்பகுதி சேர்க்கப்பட்டுள்ளது. இவ்வுண்மை மத்தேயு 1ஆம் அதிகாரத்தில் அறுதியிட்டு உறுதியாகக்கூறப்பட்டுள்ளது. ஆவிக்குரிய விதத்திலும் இவ்வம்சவரலாறு முக்கியத்துவம் வாய்ந்ததே அச்சத்தியத்தை அறிந்து கொள்ள நாம் அதில் இடம் பெற்றுள்ள நபர்களின் பெயர்களுக்கான பொருளை அறிந்துகொள்ளவேண்டும்.

## கனிகளை உண்டாக்கும் தேவ வல்லமை

செயல்முறையில் பிலதெல்பியாவின் சபையின் மெய்யான நிலையை நாம் சென்றடைவது எவ்வளவு அற்புதமான செயல். ஆனால் நாம் அனுபவத்தில் இருந்து மந்தநிலையை அடைவது எவ்வளவு எளிது என்பது அறிவோம். பிலதெல்பியா சபையோடு

தேவன் கூறுவது என்ன? ஒருவனும் உன் கிரீடத்தை எடுத்துக்கொள்ளாதபடிக்கு உனக்குள்ளதைப்பற்றிக்கொண்டிரு என்பதே (வெளி 3:11) இவ்வாறு பற்றிக்கொள்பவர்கள் தேவனால் ஜெயங்கொள்ளுகிறவர்கள் என்று அழைக்கப்படுகின்றனர். பிலதெல்பியா சபைக்கு தேவனால் கொண்டு வரப்பட்டவர்களும் கொண்டுவரப்படுகிறவர்களும் எபேசு சபையில் இருந்த கிறிஸ்து இயேசுவுக்குள் விசுவாசிகளாயிருக்கிற பரிசுத்தவான்களை பார்க்கிலும் மேம்பட்டவர்கள் அல்ல. தேவன் நம்மைக் கொண்டு போய் சேர்த்த நிலைமையில் நிலைத்திருப்பது நமது கடமையாகும். இக்கடமை சீனாய் மலையில் கொடுக்கப்பட்ட நியாயப்பிரமாணத்தைக்கைக்கொள்ளுவதை விட கடினமான செயலாகும். எனினும் தேவன் நமக்குத்தந்த நிலையில் நம்மை நிலைத்திருக்கச்செய்யும் ஒரு வல்லமை உண்டு "வழுவாதபடி உங்களைக்காக்கவும் தமது மகிமையுள்ள சந்திதானத்திலே மிகுந்த மகிழ்ச்சியோடே உங்களை மாசற்றவர்களாய் நிறுத்தவும் வல்லமையுள்ள (யூதா 24) தேவனுடைய வல்லமையே அது. நாம் விசுவாசத்தைக் கொண்டு தேவனுடைய பலத்தினாலே காக்கப்பட்டிருக்கிறோம். (1 பேதுரு 1.5) இவ்வல்லமையால் உலகத்தை ஜெயிக்க முடியும். (1 யோவான் 5:4) நமக்குள் கிரியை செய்து கனிகளை உண்டாக்கும் தேவவல்லமைக்கு பேரேஸ் நிழலாய் இருக்கிறான். என்று முன்னரே கண்டோம் அல்ல பா. நமக்குள் அவர் உருவாக்கும் கனிகளாலே தேவனுடைய நாமத்தை மகிமைப்படுத்தமுடியும். (எபேசியர் 3:16, 20; கொலோசெயர் 1:10, 11) இவ்வம்ச வரலாற்றில் பேரேஸின் வம்சம் நமக்கு முன்பாக வைக்கப்படுகிறது. நாம் எவ்வாறு ஜெயம் கொள்ளுகிறவர்களாக மாறமுடியும் என்பதை இதிலிருந்து அறிந்து கொள்ளலாம்.

## பத்துப்பெயர்களும், பொருளும்

தேவ வல்லமை நமக்குள் கிரியை செய்வது உண்மைதான். ஆனால் இவ்வல்லமை நமது கடமையோடு இணைக்கப்பட்டுள்ளது. இவ்வுண்மையை வலியுறுத்த 10 பெயர்கள் இவ்வம்ச வரலாற்றில் இடம் பெறுகின்றன. 5 பெயர்கள் எகிப்தோடும், வனாந்திர யாத்திரையோடும் இணைக்கப்பட்டுள்ளன. இதர 5 பெயர்கள் வாக்குத்தத்த நாட்டில் வாசம் செய்வதோடு இணைக்கப்பட்டுள்ளன. மனிதன் ஒரு சிருஷ்டி எனும் நிலையில் 5 எனும் எண் கடமையைக் காட்டுகிறது. அவனுக்கு தேவனுடைய துணையும் உண்டு. அவரது கட்டுப்பாடும் உண்டு. இங்கே 5 எனும் எண் இருமுறை பரிசுத்த ஆவியானவரால் வலியுறுத்தி கூறப்பட்டுள்ளது. 10 பெயர்கள் (2X5)

மட்டும் இடம் பெறும் விதத்தில் சில பெயர்கள் வம்ச வரலாற்றில் இடம் பெறவில்லை. இதுவும் ஆவியானவருடைய செயலே. இஸ்ரவேலர் எகிப்திலிருந்து வெளியேறி 590 வருடங்களுக்குப்பிறகு சாலொமோன் அரசாட்சிக்கு வந்தான் என்றும் தாவீது இறந்தான் என்றும் நாம் சரித்திரத்தின் வாயிலாக அறிந்து கொள்கிறோம். வேறு விதமாய்ச் சொன்னால் வாக்குத்தத்த நாட்டில் வாசம் பண்ணத்தொடங்கினதற்கு 550 வருடங்களுக்குப்பிறகு சாலமோன் அரியணையில் அமருகிறான். வம்ச வரலாற்றின் இறுதிப் பகுதியில் இடம் பெறும் 5 நபர்களும் இந்த 550 வருட கால அளவில் வாழ்ந்தவர்களே. தமது நினைவுகளை நமக்கு அறிவிக்கும் படிக்கு ஆவியானவர் இவ்வைந்து நபர்களின் பெயர்களையும் எடுத்தாளுகிறார் என்று கூறினால் இது மிகையாகாது பேரேஸ் என்றால் பிளவு என்று பொருள். நமக்குள் கிரியை செய்யும் தேவவல்லமையின் விளைவை பேரேஸின் பிறப்பு நமக்கு வெளிப்படுத்துகிறது. நாம் மறுபடி பிறந்த பொழுது புதிய ஒரு சுபாவம் நம்மில் சிருஷ்டிக்கப்பட்ட போதும் பழைய சுபாவமும் நமக்குள் தான் இருக்கிறது. என்பதைப் பேரேஸும் அவன் சகோதரனாகிய சேராவும் நமக்குத்தெரியப்படுத்துகிறார்கள். அல்லவா? *(ஆதி 38:27,30)* ஆகிலும் ஆவிக்குரிய சரீரம் முந்தினதல்ல ஜென்ம சரீரமே முந்தினது. ஆவிக்குரிய சரீரம் பிந்தினது. ( *1 கொரி 15:46)* சேராகையை நீட்டியபோது மருத்துவச்சி அவன்தான் முதலில் பிறப்பான் என்று நினைத்தாள் ரோமர் 7ஆம் அதிகாரத்தில் கூறப்பட்டுள்ள மனிதன் மறுபடி பிறந்தவன்தான் எனினும் அவன் சேராவிற்கு நிழலாய் இருக்கிறான் ஆனால் ஆவியானவருடைய ஒத்தாசையுடன் நடந்துகொள்ளும் மனிதனைக்குறித்து ரோமர் 8ஆம் அதிகாரத்தில் வாசிக்கிறோம்.

பேரேஸ் இவனுக்கு நிழலாய் இருக்கிறான். தனக்குள் கிரியை செய்யும் தேவ வல்லமையினால் அவன் நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றுகிறான் தனது பழைய சுபாவம் மரித்துப்போனதாகவும் கணக்கிடுகிறான். அவனுக்குள் கிரியை செய்யும் பரிசுத்த ஆவியானவர் அவனது புதிய சுபாவத்தில் நிலைத்திருக்கச் செய்கிறார்.

## எஸ்ரோன் ராம்

மேற்கூறப்பட்ட செயலின் விளைவு எஸ்ரோன் ஆகும். எஸ்ரோன் என்றால் சுற்றிலும் அடைத்துப் பாதுகாக்கப்பட்டவன் என்று பொருள் கர்த்தர் எருசலேமைக்குறித்து நான்

அதற்குச்சுற்றிலும் அக்கினி மதிலாய் இருந்து அதின் நடுவில் மகிமையாயிருப்பேன் என்று கூறுகிறார் (சகரியா 2:5) பர்வதங்கள் எருசலேமைச் சுற்றிலும் இருக்குமாப்போல் கர்த்தர் இது முதல் என்றென்றைக்கும் தம்முடைய ஜனத்தை சுற்றிலும் இருக்கிறார். (சங்கீதம் 125:2) கர்த்தருடைய தூதன் அவருக்குப் பயந்தவர்களைச் சூழப் பாளயமிறங்கி அவர்களை விடுவிக்கிறார். (சங்கீதம் 34:7) யோபுவையும், அவனுடைய வீட்டையும் அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் சுற்றி வேலியடைத்திருப்பதாக சாத்தான் கர்த்தர் மேல் குற்றஞ்சாட்டுகிறான். (யோபு 1:9:10) கர்த்தருடைய வல்லமை செயல்படும்படி நாம் அவருக்கு முழுச்சுதந்திரத்தையும் அளிப்போமானால் அவர் சத்துரு நம்மைத் தொடராதபடி நம்மைச் சுற்றிலும் வேலி அடைத்து காத்துக்கொள்கிறார். அதற்குப்பிறகு ராம் பிறக்கிறான். ராம் என்றால் உயர்ந்த அல்லது உயர்ந்தவன் என்று பொருள். அப்பொழுது நாம் கர்த்தருடைய மகிமையையும், இரக்கத்தையும் நீடிய பொறுமையையும் கண்ட மோசேயைப் போல் இருப்போம். அவன் 40 நாட்கள் மலையின்மீது இருந்துவிட்டு இறங்கியபோது தேவனுடைய மகிமையையும் இரக்கத்தையும் பிரதிபலித்தானே (யாத்திராகமம் 34:4.7, 29, 30; 2 கொரி 3:18).

## அம்மினதாப்

ராம் அம்மினதாபைப்பெற்றான். அம்மினதாப் என்றால் "கொடுப்பதற்கு மனமுள்ளவரின் ஜனம்" அல்லது மனமுள்ள மக்கள் என்று பொருள். இச்சித்திரம் உன்னதப்பாட்டு 6-12ல் வெளிப்படுகிறது. நினையாததற்கு முன்னே என் ஆத்துமா என்னை அம்மினதாபின் இரதங்களுக்கு ஒப்பாக்கிற்று. இப்பெயருக்கு முதலாவதாக கொடுக்கப்பட்டிருக்கும் பொருள் எவ்வளவு சரியானது. தேவனோடு உன்னதங்களிலே இருக்கும் பொழுது அவரை மிகப்பெரிய கொடையாளியாக நாம் அறிந்து கொள்கிறோம். அங்கே அவரது கொடையின் விளைவாக நமக்குக்கிடைக்கும் ஐசுவரியங்களைக்குறித்து சரியாகப்புரிந்து கொள்ளமுடிகிறது. நமது இதயம் அவ்விடத்தோடு ஒட்டிக் கொள்ளுகிறது. அவ்விடத்திலே அவரோடுகூட இருப்பது எவ்வளவு நல்ல செயல்.

## நகசோன்

அம்மனதாப் நகசோனைப்பெற்றான். நகசோன் என்றால் பின்னர் நடக்கப்போகும் காரியங்களை முன்னரே தரிசிக்கிறவன்

என்று பொருள். மோசேயைப் போல பர்வதத்தின் உச்சியில் இருந்து தேசம் அனைத்தையும் அதின் அழகையும் மகிமையையும் நம்மால் காண முடிகிறது. உபாகமம் 34:1-4) அத்தேசம் அனைத்தையும் நாம் சுதந்தரித்துக் கொள்ளுவோம் என்ற நிச்சயமும் நமக்கு உண்டு. நாம் தேவனோடு ஐக்கியம் உள்ளவர்களாய் வாழும் போது பரிசுத்த ஆவியானவர் பரிசுத்த வேதாகமத்தில் நமது எதிர்காலத்தைக்குறித்து சொல்லப்பட்டுள்ள அனைத்து ரகசியங்களையும் எடுத்துரைக்கிறார். பிலதெல்பியா சபையின் நிலையில் நாம் நீடித்திருக்கும் பொழுது கர்த்தரும் இதோ நான் சீக்கிரமாய் வருகிறேன் என்பார். நமது வனாந்திர வாழ்க்கையில் இறுதியாக நாம் கேட்கும் வார்த்தைகள் இவைதான்.

### சல்மோன்

நகசோன் சல்மோனைப் பெற்றான். சல்மோன் என்றால் ஆடை அல்லது வஸ்திரம் என்று பொருள். மத்தேயு 1:5 ன் படி சல்மோன் ராகாபை மணக்கிறான். இவ்வுண்மை நம்மை வாக்குத்தத்த தேசமாகிய கானானிற்குள் கொண்டு செல்கிறது. அங்கே நாம் அருமையான வஸ்திரத்தால் உடுத்துவிக்கப் படுகிறோம். அங்கே நாம் "பிரியமானவருக்குள்" ஏற்றுக்கொள்ளப்படுகிறோம் (எபேசியர் 1:5-6) இந்தவஸ்திரம் என்ன என்பதையும் நாம் பின்னர் அறிந்து கொள்ளுகிறோம். அவ்வஸ்திரம் நமக்குப்பிரியமானவராகிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே (கலாத்தியர் 3:27; ரோமர் 13:14) அவருடைய கிருபையின் ஐஸ்வர்யத்தின் படியே அவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் உண்டாயிருக்கிறது. (எபேசியர் 1:7) நமக்காக ஜீவனைத் தந்தவரும் அவரே. மகிமைப்படுத்தப்பட்டவராக பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறவரும் அவரே.

### நமக்காக கிரியை செய்யும் வல்லமை

எனவே நாம் இரட்சிக்கப்பட்டவர்கள் மட்டுமல்ல. நமக்காக ஒரு வல்லமைக்கிரியை செய்வதையும் காணமுடிகிறது. (போவாஸ் என்றால் அவரில் பெலமுண்டு என்றல்லவா பொருள்) இவ்வல்லமையே நமக்காக மரித்தவரை உயிரோடு எழுந்திருக்கச் செய்தது. எல்லாத்துரைத்தனத்துக்கும் அதிகாரத்துக்கும், வல்லமைக்கும், கர்த்தத்துவத்திற்கும் இம்மையில் மாத்திரமல்ல மறுமையில் பெயர்பெற்றிருக்கும் எல்லா நாமத்திற்கும் மேலாய் அவர் உயர்ந்திருக்கத்தக்கதாக பிதாவானவர் அவரை

உன்னதங்களில் தம்முடைய வலதுபாரிசத்தில் உட்காரும்படி செய்தார். (எபேசியர் 1:18:23) நாமும் கிறிஸ்துவுடனேகூட உயிர்ப்பிக்கப்பட்டோம் உன்னதங்களிலே அவரோடேகூட உட்காரவைக்கப்பட்டோம். (எபேசியர் 2:5, 7) இச்சத்தியங்கள் அனைத்தையும் நாம் புரிந்து கொள்ளும் பொழுது நாம் அவரை சரியான முறையில் ஆராதித்து அவருக்கு ஊழியஞ்செய்ய முடியும். செயல் முறையில் நாம் பிதாவோடும், குமாரனோடும் ஐக்கியம் கொள்ள முடியும் அப்பொழுது நாம் அவரது அன்பிற்கும் பிரியத்திற்கும் இலக்கானவர்கள் என்பதையும் உணர முடிகிறது. இவ்வுண்மையை நாம் ஓபேத், ஈசாய் தாவீது எனும் பெயர்களின் பொருள்களில் காணமுடிகிறது. தேவன் நமக்குத்தந்த அனைத்தையும் நாம் கெடுத்துப்போட்டாலும் அவரது கிரியையை கெடுக்க முடியாது என்பதையும் நாம் அறிந்துகொள்ள முடிகிறது.

**ஈசாய்**

ஈசாய் என்றால் யெகோவா இருக்கிறார் என்று பொருள். இது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராய் இருக்கிறதையும் (எபிரேயர் 13:8) காட்டுகிறது. அவர்.... என் சபையைக் கட்டுவேன் பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை. (மத். 16:18) என்று கூறினார். அவர் சபையில் கறைதிரை முதலானவைகள் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாகத்தமக்குமுன் நிறுத்திக்கொள்வார். (எபே 5:27) நாம் அவர் வந்து தமது சபையைத் தம்மோடு சேர்த்துக்கொள்வதற்கான வருகைக்குக்காத்திருக்கிறோம். தமது பிதாவின் வீட்டில் நம்மை அவர் அறிமுகப்படுத்துவதற்கும் நாம் காத்திருக்கிறோம். அப்போது நமது மனச்சாட்சிக்கு மட்டுமன்றி நமது சரீரங்களுக்கும் இளைப்பாறுதல் கிடைக்கும். அப்போது தான் நாம் பின் வரும் பாடலை முழுமையாக அறிந்து கொள்ள முடியும். தேவரீர் புத்தகத்தை வாங்கவும் அதின் முத்திரைகளை உடைக்கவும் பாத்திரராயிருக்கிறீர். ஏனெனில் நீர் அடிக்கப்பட்டு சகல கோத்திரங்களிலும், பாஷைக்காரரிலும், ஜனங்களிலும், ஜாதிகளிலுமிருந்து எங்களை தேவனுக்கென்று உம்முடைய இரத்தத்தினாலே மீட்டுக்கொண்டு எங்கள் தேவனுக்கு முன்பாக எங்களை ராஜாக்களும், ஆசாரியர்களும் ஆக்கினீர். நாங்கள் பூமியிலே அரசாளுவோம். (வெளி 5:9,10).

இவ்விதமாகவே நாம் நமக்குள்ளே கிரியை செய்கிற தேவ வல்லமையினால் தேவன் நம்மைக் கொண்டு வந்து சேர்த்த

நிலைமையிலே வைக்கப்பட்டுள்ளோம். ஆனால் இந்த வல்லமை நமக்குள்ளும், நம் மூலமாகவும் கிரியை செய்ய நாம் அனுமதிக்க வேண்டும்.

இப்பொல்லாத பிரபஞ்சத்தின்மேல் (*I யோவான் 5:4*) வெற்றி கொள்ளும் படி தேவன் நம் விசுவாசத்தை வர்த்திக்கச் செய்வாராக! வரப்போகிற உலகிற்குக் காத்திருக்கவும் கிருபை செய்வாராக! இப்பொல்லாத உலகம் தேவ குமாரனைப் புறந்தள்ளிவிட்டது. ஆனால் வரப்போகிற உலகிலோ அவர் அங்கீகரிக்கப்படுவார். இப்பொல்லாதீ பிரபஞ்சம் (கலா 1:4) அவரைமுப்பது வெள்ளிக்காசிற்கு விற்றுவிட்டது. இவ்வுலகம் அவரைச் சிலுவையில் அறைந்தது. இவ்வுலகின் ஜீவனத்தின் பெருமையும் ஐசுவரியத்தின் மயக்கமும் ஒருவரால் ஒருவர் மகிமையை ஏற்றுக்கொள்ளும். தன்மையும், விற்கலும், வாங்கலும் கட்டலும், நாட்டலும், புசிப்பும், குடிப்புமே அவரைச்சிலுவையில் அறைந்தன. இவ்வுலகத்தாரால் மேன்மையாகக் கருதப்படுபவையே அவரைச்சிலுவையில் அறைந்தன. அவையே அவரது ஆளுகையையும், வரவையும் விரும்பாதவை! ஆனால் இரவிலே திருடன் வருவதைப்போல அவருடைய நாள் வரும்.

## இறுதியாக சில வார்த்தைகள்

பிரியமானவர்களே உலகத்திலும், உலகத்திலுள்ளவைகளிலும் அன்பு கூறாதிருங்கள். லோத்தின் மனைவியை நினைத்துக்கொள்ளுங்கள் கிறிஸ்துவுடனே கூட மரித்து. அவரது சிலுவையை மாத்திரம் மேன்மை பாராட்டும் கூட்டத்தாரோடே காணும்படி விரும்புங்கள். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தை விலையேறியதாக மதிக்கும் கூட்டத்தாருடன் கலந்திருக்க விரும்புங்கள். இவ்வுலகம் அவரை இரத்தம் சிந்த வைத்தது. அதற்கான கணக்கை அது ஒப்புவிக்க வேண்டும். அவரோடுகூட நாமும் இவ்வுலகத்தால் புறக்கணிக்கப்படத்தயாராக இருப்போமாக. அதன் விளைவாக நமது தகுதியில்லாத பெயர்களை அவர் ஒருநாள் தேவதூதர் முன் அறிக்கையிடுவார். நாமும் அவர்முன் கறைதிரையற்றவர்களாக, மிகுந்த மகிழ்ச்சியுடனும் அளவற்ற ஆனந்தத்துடன் காணப்படுவோம்.

நித்திய நித்திய காலமாக அவரது தகுதியுள்ள நாமம் துதிக்கப்படுவதாக! மகிமைப்படுவதாக ஆமென்!! ■